# நக்கீரம் '99

# NAKKEERAM '99



## LAW STUDENTS' HINDU MAHA SABHA

2306
SLIPR

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

# நக்கீரம்

இதழாசிரியர்

செல்வி மதிவதனி நடராஜன்

கணை : 03 வெளியீடு : 12-06-1999


இலங்கை சட்டக்கல்லூரி
244,ஹல்ப்ஸ்டோ.்.ப் வீதி,
கொழும்பு 12.

Sri Lanka Law College,
244, Hulftsdorp Street,
Colombo 12.



## ஸ்ரீ விநாயகர் வழிபாடு

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம்
சதுர்புஜம் ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தயே.



# சமர்ப்பணம்

இரத்தத்தில் தேடி என்ன

வியர்வையில் தேடி என்ன

வேற்றுமை காணா மனிதகுலத்தில்

இனம்வேறு சாதிவேறு மதம்வேறு என்ற

அநியாயச் சமர்களில் சிக்குண்டு

உயிர் நீத்த அப்பாவி மக்களுக்கும்

ச்ர்வமத ஒற்றுமைக்காய் உழைத்த

உயர்ந்தோர்க்கும் இந்நூல் சமர்ப்பணம்

# நக்கீரம் நல்குபவை.....

பக்கம்

1. இதழாசிரியரின் எழுதுகோலிலிருந்து
2. சுவாமி ஆத்மகணானந்தாஜி அவர்களின் ஆசிச்செய்தி
3. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி
4. Message from the Chief Justice
5. Message from the Principal Guest
6. Message from the Principal of Law College
7. தலைவரின் இதயத்திலிருந்து
8. முகப்புக்கவிதை
9. Law Students' Hindu Maha Sabha – Executive Committee

**நீதிமன்றமும் சட்டமும்**

10. சட்டமும் சமயமும் — 01
 நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் B.A. (Lon)., LLB(Cey)
 மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி

11 Call of Social Justice — 07
 Mr. S. Sharvananda B.A. (Lond). LL.B (Lond)
 Former Chief Justice of Sri Lanka

12. இந்துசமய அறநிலையங்களின் சொத்துக்கள் பரிபாலனத்திற்கு விசேட சட்டம் ஒன்றின் அவசியம் — 09
 திரு. ந. யோகசிகாமணி - நீதிபதி.

13. தமிழ் தேசிய இனத்தின் அவலநிலை — 12
 திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், சட்டத்தரணி

14. Cheedanam (dowry) in Thesawalamai as Consideration of Marriage — 15
 Mrs. K. Nagendra B.A.(Cey) LL.B. (Cey)

15. சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்படலாமா? — 19
 Mrs. F. R. C. Thalayasingam LLM.
 Senior Assistant Legal Draftsman

16. **இந்துமதமும் சர்வதேசச் சட்டமும்** 23
திரு. வி. ரி. தமிழ்மாறன்
முதுநிலை விரிவுரையாளர்
சட்டபீடம், கொழும்புப் பல்கலைக் கழகம்

17. பிள்ளைகளுக்கான நீதிமன்ற அமைப்பு 35
Mr. Thurairaja L.L.B., L.L.M., D.F.M.S.,
Attorney-at-Law, State Counsel

18. நீதிமன்றங்களும் தமிழ்மொழியும் 39
திரு. க. ஜெயகிருஷ்ணன், சட்டத்தரணி

19. "Laws Delay" - Labour Tribunals 41
Mr. V. Wimalarajah
Attorney-at-Law, Retd. President, Labour Tribunal

20. An Interview with Dr. Radhika Coomaraswamy 44
United Nations Special Rapporteur on Violence Against Women, including its causes & consequences

**சர்வ மதங்களும் அதன் தத்துவங்களும்**

21. Religious amity 46
Dr. Baptist Croos FSC

22. இந்து சமயமும் சர்வமதங்களும் 48
திரு. டி. எம். சுவாமிநாதன்
சட்டத்தரணி,
அறங்காவலர், ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்,
கொழும்பு.

23. The Concept of Justice in Theravada Buddhist ethics 50
Ven. Dr. Kandegoda Wimaladhamma Thera
B.A., M.A., Ph. D. (Ioanina - Greece)
Senior Lecturer, University of Kelaniya Dept. of Philosophy

24. இஸ்லாம் - ஒரு விளக்கம் 52
எம். எச். எம். நாளிர்
B.A. (Hons.) Dip-in-Ed.

## இந்து சமயமும் அதன் கோட்பாடுகளும்

25 Jurisprudence from the Perspective of Hindu Philosophy 55
Dr. H. J. F. Silva

26. எண்ணியது முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும் 59
கலாநிதி. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா

27. தண்டனை தொடரும்....... 61
"சிவத்திரு" டாக்டர் இரா. சிவ அன்பு

28. வேதாந்த கண்ணோக்கில் ஆன்மா தத்துவம் 63
திரு. ஜே. எம். சுவாமிநாதன் LLM., M.Phil.
சிரேஷ்ட சட்டத்தரணி

29. சனாதன தர்மம் 64
திரு. ராம். பாலசுப்பிரமணியம்
Solicitor (England & Wales), Attorney-at-Law &
Notary Public

30. The Sadhana of Meditation 67
Mr. Murugesu
Senior Lawyer

31. ஓம் என்னும் மந்திர செபத்தின் தெய்வீகம் 70
திரு. ம. நாகரத்தினம் - சட்டத்தரணி
தலைவர் - திவ்ய ஜீவன் சங்கம், தேவாரப்பண்ணிசை மன்றம்.

32. சைவசித்தாந்தமே உலகின் முதற் சமய சாஸ்திரம் 72
திரு. அ. குமரகுரு - சட்டத்தரணி

33. வாழ்வின் உயிர்நாடி சமயச்சார்பு 75
திரு. குமாரசாமி சோமசுந்தரம் M.A., Dip-in-Ed.

34. இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களுடன் ஓர் நேர்காணல்.... 79

## மாணவர் ஆக்கங்கள்

35. தமிழ் ஈ(வீ)ரத்துள் (கவிதை) 83
தயாள் ச. செபநாயகம் - பயிலுனர் ஆண்டு

36. இந்து மதத்தின் தத்துவம் 84
செல்வி க. ஆனந்தி - பயிலுனர் ஆண்டு

37. கோயிலில்லா ஊர் (சிறுகதை) 86
க. பிரபாகரன் - பயிலுனர் ஆண்டு

38. இலங்கை ஒரு பௌத்த நாடா? அன்றேல் சர்வமத நாடா? 91
அ. பிரேமலிங்கம் - பயிலுனர் ஆண்டு

39. இந்துமதம் நிறுவனமயப்படுத்தப் படவேண்டியதன் அவசியம் 95
சு. நிலக்ஷன் - இறுதியாண்டு

40. தூதுவராண்மை (Diplomatic Immunity) 98
செல்வி. அ. சந்திரவதனி - இறுதியாண்டு

41. தேசவழமையில் முன்வாங்குரிமை 100
வி. சசிதரன் - இறுதியாண்டு

42. மனித வாழ்வில் சட்டமும் சமயமும் 102
க. ஜெயநிதி - இடைநிலை ஆண்டு

43. சிந்துவெளி நாகரிகம் மீதான கண்ணோட்டம் 106
செல்வி சி. மஞ்சு - இடைநிலை ஆண்டு

## அரங்கேறும் பதக்கங்கள்

44. Late Miss Kalanithi Kandiah Memorial Award 109

45. மகத்தான சாதனையாளர் விருது 111

46. ஆறுமுகநாவலர் புலமைப்பரிசு '99 112

47. அன்னை ஸ்ரீ சாரதாதேவி புலமைப்பரிசு 113

48. இந்து மகா சபையை வழிநடத்திய பெருந்தகைகள் 114

49. Members of the Law Students' Hindu Maha Sabha '99 115

50. இதழ் படைத்த இதழாசிரியர்கள் 116

51. இந்து மகா சபைப் போட்டி முடிவுகள் - 1999 117

52. சட்டமாணவர் இந்து மகாசபை பொதுச் செயலாளர் அறிக்கை - 1999 118

53. நன்றி ! நன்றி!! நன்றி!!!

# இதழாசிரியரின் எழுதுகோலிலிருந்து ....

இன மத மொழியால் வேறுபட்டவர்கள் ஒன்று கூடி படிக்கும் வாய்ப்பு சட்டக்கல்லூரியில் நமக்கு கிடைத்துள்ளது. நட்புணர்வையும் புரிந்துணர்வையும் வளர்த்துக்கொள்ள இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட எமது சிறிய முயற்சி தான் இந்த நக்கீர மலர் வெளியீடாகும்.

எம்மதமும் சம்மதம் என்ற கருத்தினடிப்படையில் நான்கு மதங்களின் தத்துவங்களையும் உள்ளடக்கி முதன் முறையாக நக்கீரம் வெளியாகியுள்ளது.

நாடு வாழ்ந்தால் தான் வீடு வாழ முடியும் இன்று நாடு இருக்கும் நிலையில் நமக்குத்தேவை நம்மிடையே புரிந்துணர்வும் சகிப்புத்தன்மையே. மதத்தலைவர்களும் சங்கங்களும் புத்துயிர் பெற்று முழுமனதுடன் பெருந்தன்மையுடன் பொதுநல நோக்குடன் செயலாற்ற வேண்டிய தருணம் வந்து விட்டது.

சர்வ மதங்களின் ஒற்றுமை இத்தருணத்தில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழிவகுக்கும் என்ற நம்பிக்கையில் சர்வமத ஒற்றுமையும் அவற்றின் தத்துவங்களையும் மையமாக வைத்து இவ்வருடம் சட்டக்கல்லூரி இந்து மாணவ மன்றம் நக்கீர மலரை வெளியிட்டுள்ளது.

கட்டுக்கோப்பான சமுதாய அமைப்புக்கு சமயமும் சட்டமும் இன்றியமையாதன என்ற கண்ணோட்டத்துடன் சமய தத்துவங்களையும் சட்ட நுணுக்கங்களையும் உள்ளடக்கி கட்டுரைகளைக் கொண்ட கன்னி முயற்சியின் வெளிப்பாடே இவ்வருட நக்கீரம்.

"இவ்வுலகில் முரணான கருத்துக்களும் எண்ணங்களும் அச்சத்தினின்றே எழுந்துள்ளன. ஆகவே, அஞ்சாதீர்கள், அஞ்சாதீர்கள் என்று நான் கூறுகிறேன்" என்றார் சுவாமி விவேகானந்தர்.

"நாச அணுகுண்டால் - நமக்கு
நன்மை ஏற்படுமோ?
நேசமாய் நிதமும் - அஹிம்சை
நெறியைப் போற்றுவோமே"

என்றார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. நேடோ (NATO) விமானத்தாக்குதலால் உலகச் சமாதனத்திற்கு பங்கம் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில பாரதியின்

"அச்சமில்லை அமுங்குதலில்லை
நடுங்குதலில்லை நாணுதலில்லை
பாவமில்லை பதுங்குதலில்லை
ஏதுநேரினும் இடர்படமாட்டோம்"

என்ற கீதை மொழிபெயர்ப்பை மனதில் இருத்தி எத்தகைய நெருக்கடியிலும் வாடிப்போகாது நம்பிக்கையுடன் கடமையைச் செய்ய சமயம் என்ற அகக்காவலும் சட்டம் என்ற புறக்காவலும் அவசியம் என்பதை மறவாதிருப்போமாக!

' சாதியமைப்புத் தகரட்டும்
சண்டை சச்சரவு நீங்கட்டும்'
சமத்துவம் நீதி ஓங்கட்டும்
சர்வமத ஒற்றுமை நிலைக்கட்டும்!



Ramakrishna Mission
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Wellawatta,
Colombo 6.



# வாழ்த்துச்செய்தி

சுவாமி ஆத்மகணாநந்தா

இலங்கை சட்டக்கல்லூரியின் 'சட்ட மாணவர் இந்து மகா சபையினர்', ஒவ்வொரு ஆண்டும், 'நக்கீரம்' என்னும் பெயரில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அங்ஙனம், இவ்வாண்டு அவர்கள் வெளியிடவுள்ள சிறப்பு மலர் 'சர்வமத ஒற்றுமை' என்னும் கருத்தை மையமாகக் கொண்டு அமைய உள்ளது என அறிகிறோம். காலத்தின் தேவையை உணர்ந்து அவர்கள் இவ்விடயத்தைத் தேர்ந்தெடுத்தது மிகவும் வரவேற்கத்தக்கதே.

ஒவ்வொரு சமயத்திலும் இரு வகைப் பிரிவுகள் அல்லது நிலைப்பாடு இருப்பதைக் காணலாம். ஒரு பிரிவில் சடங்குகள், வழிபாட்டுமுறைகள், விழாக்கள், விரதங்கள் முதலியன இடம் பெறுகின்றன. மற்றொரு பிரிவில், உலகம் முழுமைக்கும் பொதுவான, அவசியமான, நற்பண்புகள் இடம் பெறுகின்றன. சடங்கு, விழா, வழிபாட்டுமுறை முதலியன சமயத்திற்கு சமயம் வேறுபடுகின்றன. ஆனால் அன்பு, தூய்மை, தியாகம் போன்ற நற்பண்புகள், அனைத்து சமயங்களுக்கும் பொதுவானவை. முதற் பிரிவில் அடங்கும் விழாக்கள், விரதங்களின் நோக்கம், இரண்டாம் பிரிவில் காணப்படும் நற்பண்புகளை வளர்ப்பதற்கே. எனவே, சமயங்கள் அனைத்தின் நோக்கமும் ஒன்றே என்பதை விளங்கிக்கொண்டால், சமயங்களுக்கி டையே, வழிபாட்டுமுறைகளின் அடிப்படையில் காணப்படும் வேற்றுமைகள், மக்களிடையே பிரிவுகளையும், ஒற்றுமையின்மையையும் ஏற்படுத்தமுடியாது. சமயங்களுக்கிடையே காணப்படும் வேற்றுமைகளைப் பொருட்படுத்தாது, அவற்றிற்கிடையே நிலவும் ஒற்றுமையை வலியுறுத்துவதே அனைத்து சமயங்களின் இன்றைய முக்கிய கடமையாகும். இது ஒன்றே இவ்வுலகில் ஒற்றுமையையும் அமைதியையும் தோற்றுவிப்பதற்கான ஒரே வழி.

நூறு ஆண்டுகளுக்கு முன்பே இக்கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார் சுவாமி விவேகானந்தர். 1897 ஆம் ஆண்டு, அமெரிக்காவில், சிக்காகோ நகரில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் அவர் ஆற்றிய உரையிலிருந்து சில கருத்துக்களை இங்கு முன் வைப்பது பொருத்தமே. "இந்த சர்வமத - மாநாடு உலகத்திற்கு எதையாவது எடுத்துக் காட்டியுள்ளது என்றால் அது இதுதான்: தெய்வீகம், தூய்மை, கருணை முதலியன எந்த ஒரு சமயத்திற்கு மாத்திரம் சொந்தமல்ல. (அனைத்து சமயங்களுக்கும் உரியன) ஒவ்வொரு சமயமும் இப்பண்புகளில் சிறந்து விளங்கிய ஆண்களையும், பெண்களையும் தோற்றுவித்திருக்கிறது. இந்த சான்றுகளுக்கு முரணாக, தன் சமயம் மட்டும்தான் வாழும், பிற சமயங்கள் அழிந்து விடும் என்று யாரேனும் கனவு காண்பார்களாயின், அவரைக்குறித்து நான் என் இதய ஆழத்திலிருந்து பச்சாதாபப்படுவதோடு விரைவில் ஒவ்வொரு சமயத்தின் கொடியிலும், 'உதவி செய், சண்டையிடாதே', 'ஒன்றுபடுத்து, அழிக்காதே', 'சமரசமும், சமாதானமும் தேவை, வேறுபாடு நீங்குக' என்று விரைவில் எழுதப்படுமென்பதை அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேற்காணும் சுவாமி விவேகானந்தரின் கூற்று எந்த அளவிற்கு விரைவில் மெய்ப்பிக்கப்படுகின்றதோ அந்த அளவிற்கு இவ்வுலகில் சாந்தியும் சமாதானமும் நிலவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சட்டமாணவர் இந்து மாணவர் சபையினர் எடுக்கும் இந்த நன்முயற்சி வெற்றி பெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம். சபையின் உறுப்பினர் அனைவருக்கும் பாராட்டுதல்கள்!



உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



## அருளாசிச் செய்தி

ஆதீன முதல்வர் : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

அன்புசார் பெருந்தகையீர்!

சட்ட மாணவர் இந்து மகாசபையினர் ('99) நக்கீரம் எனும் நூலை வெளியிடுவதனையறிந்து மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த நாட்டில் பல மலர்கள் மலர்ந்து கொண்டிருக்கின்றன. அம் மலரில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் சட்ட மாணவர்களால் வெளிக்கொணரும் இம் மலர் சமயம், சட்டம் சார்ந்தது. மனிதன் மனித நேயத்துடன் வாழ்வதற்கு மதங்கள் இன்றியமையாதது. அம்மதங்களில் மூத்தது இந்துமதம். இந்துமதக்கடமைகள் யாவும் நடைமுறைக்கு கஷ்டமாக இருந்தாலும் வாழ்வுக்கு வளம் சேர்ப்பது. இந்து மதத்தின் பெருமையை காலத்திற்கு காலம் அறிவாளிகள் தோன்றி கருத்துக்களால் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அக்கருத்துக்களை மக்கள் ஜீரணித்துக் கொள்வது கடினமானதொன்று. அக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் வகையில் நக்கீரம் எனும் மலர் வழங்கிக் கொண்டு இருக்கின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் தன்னகத்தே கொண்டது இந்துமதம் அதற்கு ஆதாரம் நக்கீரரது வரலாறு. தவறு விடுபவரைத் தண்டிக்கவும் திருத்தி அவனைப் பூரணமாக வாழவைக்கவும் நமது மதத்தில் கோட்பாடுகள் உண்டு. இறைவனுடைய அவதாரங்கள் தவறு விடுபவரை தண்டிப்பதற்கே. இதற்கான பல ஆதாரங்கள் புராண இதிகாசங்களாக இன்றும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன.

இவ்வகையான நல்ல கருத்துக்கள் எல்லாம் நக்கீரம் எனும் மலரிலே நல்ல கட்டுரைகளாக பிரசுரிப்பது இந்து மக்களுடைய வாழ்வை ஒழுங்குள்ளதாகவும் சட்ட வழிவகைகளை வகுத்துத் தருவதாகவும் அமைந்துள்ளது. சட்டத்தை பயின்று நாட்டில் ஒழுங்கையும் நீதியையும் நிலைநாட்ட விளைந்திருக்கும் சட்ட மாணவர் இந்து மகாசபையினருக்கும் இம்மலரை பயனுள்ளதாக படைத்து தரும் மலராசிரியருக்கும் நன்றி கலந்த நல்லாசிகள்.

தங்கள் பணியை இறைவன் ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

Chief Justice's Chambers
Supreme Court
Colombo 12.

අග්‍රවිනිශ්චයකාර මැදිරිය
ශ්‍රේෂ්ඨාධිකරණය
කොළඹ 12

May 26, 1999

## *Message form the Chief Justice*

*For the past eight years I have had the pleasure of sending a "message" to the Law Students Hindu Maha Sabha. In this, my last year in office, let me wish every one of you " All the Best" in the years to come.*

*G. P. S. de Silva,*
*Chief Justice.*

Judge's Chambers,
Corut of Appeal of Sri Lanka.
Colombo 12.

ශ්‍රී ලංකා අභියාචනාධිකරණය.
විනිශ්චයකාර මැදිරිය.
කොළඹ 12.

## *Message from the Chief Guest*

*Hinduism is based on the concept of Duties and not of Rights. It reiterates the need for each member of a society to perform his or her individual duties for the betterment of that society. Co-relatives of Duties are Rights. Performing our duties properly brings in its wake the fulfilment of our rights.. This idea is now coming to the forefront with his world having seen two world wars in this century and presently being at the gateway of a third.*

*The Hindu Maha Sabah of Law College has a duty to perform. It must research into the adequacies of the Law as it obtains today from a global perspective and assert and advise on the changes that should take place to usher in a global legal jurisdiction. Thanks to the calamities of the past and present, Hindus are now scattered in large numbers all over the world. May be divinity had a purpose in doing so because Hinduism does not preach parochialism nor fundamentalism Human beings, it must be noted cannot hereafter live isolated. Each of us need the other for our well being as well as the other's well being.*

*Let us therefore use the principles inunciated in the oldest living religion of this world to revolutionise and restate the thinking of Modern Man who has sunk to the depths of depravity due to selfishness, egoism and arrogance.*

*May I wish every member of the Sabah the very best in their legal education and in life!*

*Justice C. V. Wigneswaran*
*Judge of the Court of Appeal*

ශ්‍රී ලංකා නීති විද්‍යාලය
இலங்கைச் சட்டக் கல்லூரி
**SRI LANKA LAW COLLEGE**


## *Message from the Principal*

*It gives me great pleasure to once again send my greetings on the occasion of the publication of "Nakkeeram" by the Law Students' Hindu Maha Sabha.*

*I also wish to express my appreciation of the untiring efforts, dedication and commitment of the members of the Sabha, who though few in member have accomplished quite a formidable task.*

*I wish them all success in their future endeavours too.*

*Dr. H. J. F. Silva*
*Principal.*


244, අළුත්කඩේ වීදිය, කොළඹ 12
244, புதுக்கடைத் தெரு, கொழும்பு 12.
244, Hulftsdorp Street, Colombo 12.

# தலைவரின் இதயத்திலிருந்து ......

ஒளிமயமான இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி நாம் காலடி வைத்துக் கொண்டிருக்கிறோம். அவசரமான இவ் யுகத்தில் போர் மூட்டங்களினாலும், மேலைத்தேய நாகரீக கலப்பாலும் பொருளாதார சுமைகளாலும் நாம் நம், தனித்துவத்தை இழந்தது மட்டுமன்றி எமது சமயத் தத்துவங்களையும் அரிய உயரிய பண்பாடுகளையும் இழந்து சமயத்திற்காக சண்டைபிடிக்கிறோம்.

இதற்கு யார் காரணம்? நாம் நாமேதான் ஏனெனில் உயரிய மதம் யாது எனும் வினாவில் என்னுடையது மட்டும் தான் உயர்ந்த மதம் என சுயநலமாய் சிந்திக்கிறோம். ஒவ்வொருவரும் நான் ஒரு இந்து, நான் ஒரு கிறிஸ்தவன், நான் ஒரு பௌத்தன், நான் ஒரு முஸ்லிம் என பெருமை கொள்ளும் அதே வேளையில் மற்றைய மதங்களையும் மதிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அதன் மூலமே ஒரு சர்வமத ஒற்றுமையை மட்டுமன்றி பரிபூரண உலக ஒற்றுமையை நாம் பேண முடியும்..

உலகிலுள்ள சகல சீவராசிகளுள் உயர்வானது ஆறறிவுடைய மானிடப் பிறவியாகும். இவ்வுலகில் பிறக்கும் யாவரும் இறப்பது திண்ணம். உலகில் எதுவுமே நிலையற்றது. எனவே, நிலையற்ற வாழ்வுடைய நாம், நான் பெரியவன் நீ சிறியவன் என ஏன் சண்டையிட்டு இறக்கவேண்டும்?

எனவே போட்டி பொறாமை, சுயநலம், தீண்டாமை போன்றவற்றை நாம் எம்மிடையே ஒழித்து ஒளியை ஒளித்து விட்டு இருளில் மூழ்கியிருக்கும் எமது சமுதாயத்திற்கு சர்வமத ஒற்றுமைக்கு யாவரும் பாடுபடுவோமாக! எனும் ஒரு ஒளிவிளக்கை இங்கு ஏந்தி வந்திருக்கிறோம். இந்த சிறு முயற்சியின் பெரிய வெற்றி உங்கள் கைகளிலேயே இருக்கிறது. வாருங்கள் அனைவரும் சேர்ந்தே தேடுவோம் வெற்றியை.

எமது இந்து மகாசபையை இனிதே வழிநடத்த என்னுடன் கைகோர்த்த இந்துமகாசபை உறுப்பினர்கள் நண்பர்கள் உதவிக்கரம் நீட்டிய அனைத்து இனிய உள்ளங்களுக்கும் எனது நன்றியை சிரந்தாழ்த்தி தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாழ்க நக்கீரம்! வளர்க என்றுமே!**


செல்வி சந்திரவதனி அருச்சுனராஜா
இந்துமகாசபை '99

# முகப்புக்கவிதை

ஒன்று குலம் ஓரிறைவன் ஒன்றுபுவி ஓருலகு
ஒன்று மத மென்றெண்ணி எல்லோரும் ஒன்றாகில்
இன்னலது இவ்வுலகில் வாராதே, இன்பமொடு
என்னாளும் நாம் வாழ எது தடை ஏன் கவலை.

எம்மதமும் சம்மதமாய் எவ்வுயிரும் நம்முயிராய்
நம்மனத்தில் நாமிருத்தி நல்வழியில் சென்றாலே
இம்மண்ணில் இடரழிந்து இன்பமழை பெய்திடுமே
தம்மதமே தக்கதெனும் தர்க்கநெறி தேய்ந்திடுமே

ஒற்றுமையே நமதுபலம் சிறுதுளியே பெருவெள்ளம்
கற்றிடவே பலவுண்டு நாம்வாழும் இயற்கையிலே
சுற்றிவரும் புறாகாக்கைகளும் சாற்றிடுமே ஒற்றுமையை
பெற்றிடலாம் வெற்றியினை சர்வமத ஒற்றுமையால்



## Law Students' Hindu Maha Sabha
## Executive Committee '99

| | | |
|---|---|---|
| *Senior Treasurer* | : | *Mrs. K. Nagendra* |
| *President* | : | *Miss. A. Chandravathani* |
| *Vice President* | : | *S. V. R. Vethanayagam* |
| *General Secretary* | : | *K. Selvendiran* |
| *Asst. Secretary* | : | *B. Kathirkamanathan* |
| *Treasurer* | : | *Miss. S. Manju* |
| *Auditor* | : | *S. Thavagunarajasingam* |
| *Editor* | : | *Miss. N. Mathivathani* |
| *Committee Member* | : | *N. Kandeepan* |

# Law Students' Hindu Maha Sabha Executive Committee 1999



**Seated ( Left to Right)** : Mrs. K. Nagendra (Senior Treasurer), Hon. G. P. S. de Silva (Chief Justice) Miss. A. Chandravathani (President), Mr. H. J. F. Silva (Principal), K. Selvendiran (General Secretary)

**Standing (Left to Right) :** Miss. N. Mathivathani (Editor), S.V.R. Vethanayagam (Vice President), Miss S. Manju (Treasurer)

**Absent :** B. Kathirkamanathan (Asst. Secretary), S. Tharagunarajasingam (Auditor), N. Kandeepan (Committee member)

# நீதிமன்றமும் சட்டமும்



# சட்டமும் சமயமும்

மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி
நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் B.A.(Lon)., LLB(Cey)

ஆதிமனிதன் வாழ்வில் சட்டம், பழக்க வழக்கங்கள், சமயம் ஆகியன பிரித்துப்பகுக்க முடியாது பின்னிப் பிணைந்திருந்தன. உண்மையில் விதிமுறையான சட்டம் (Formalised Law) என்பது சமயத்திலும், பழக்கவழக்கங்களிலும் இருந்து காலக்கிரமத்தில் வந்ததொன்றே.

ஐரோப்பாவில் சமயச் சட்டம் வேறாகவும், உலகியல் நடைமுறைச் சட்டம் வேறாகவும் வெவ்வேறு சட்ட மன்றங்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தன. பின்னர் சமயச் சட்டமானது உலகியற் சட்ட மன்றங்களால் சேர்த்துக் கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

தெற்காசியாவில் இந்துச் சட்டம், முஸ்லிம் சட்டம் ஆகியன நடைமுறைச் சட்டதிட்டங்கள் மீது பெரிதும் செல்வாக்கு செலுத்தியிருப்பதை அவதானிக்கலாம். இப்பொழுதும் அவை செல்வாக்கு செலுத்துவதை நாம் கண்கூடாகக் காணலாம்.

இந்த சிறிய கட்டுரை சமய ஆதிக்கம் எவ்வாறு சட்ட நோக்கைப் பாதித்தது என்று ஆராய்கிறது.

கிறிஸ்தவ சமயமே மேலை நாடுகளில் 20ம் நூற்றாண்டுக்கு முன் ஆதிக்கம் செலுத்திய முக்கிய சமயம். கிறிஸ்தவ சமயத்தில் தியாகம், உதவிபுரிதல், பொதுப்பணி செய்தல் ஆகியன முக்கிய இடம் பெறுகின்றன. இந்தப் பண்புகளின் பரிணாம வளர்ச்சியை உற்று நோக்கினோமானால் சில முக்கிய சட்டக் கருத்துக்களின் தோற்றம் கிறிஸ்தவ மதம் வலியுறுத்தும் மேற்படி பண்புகளில் இருந்து எழுந்திருக்கலாம் என்று கொள்ள இடமிருக்கிறது.

கடவுளுக்கும் மனிதனுக்கும் இடைப்பட்டவர் இயேசுகிறிஸ்து. அவர் பாவிகளின் பாவங்களைத் தான் ஏற்று அவர்களுக்காகத் துயரம் அடைந்து அவர்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டு அவர்கள் தவறுகளுக்காகப் பரிகாரம் செய்தார், ஈடுகொடுத்தார்.

அதனால் கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்துவுக்கு நன்றிக் கடன் பட்டு, இயேசுகிறிஸ்து இறைவனின் மகனானதால் அவருக்கு உலக ரீதியில் எதுவும் தேவையில்லையாதலாலும், அவருக்கு எதனையும் பிரதி உபகாரமாகச் செய்ய முடியாததாலும் அதன் பொருட்டு மற்றைய உயிர்களுக்கு நன்றிக்கடன் செலுத்த முன் வந்தனர். ஆகவே கிறிஸ்தவ மதப்படி இறைமகன் இயேசு கிறிஸ்து மனித குலத்தில் இருந்து தனியாக ஒதுங்கி நின்று பாவிகளான மனித குலத்தவரின் சார்பாக தண்டனை ஏற்றார். அவ்வாறு அவர் செய்தபடியால் அவருக்கு நன்றிக் கடன் செலுத்துதல் உசிதமாயிற்று. இயேசுகிறிஸ்துவுடன் ஆன்மீக ரீதியாக ஒன்றெனக் கலக்க வேண்டும் என்றில்லாது அவர் செய்த தியாகத்திற்கு பிரதி உபகாரமாக அவருக்கு ஏதேனும் நன்மை செய்ய வேண்டும் என்று மக்கள் எண்ணினர். எல்லாம் வல்ல, எல்லாம் உள்ள இறைமகனுக்கு நாங்கள் எதனைக் கொடுக்க முடியும் என்ற கேள்வி எழுந்தது. அதனால்தான் நாதியற்றவர்களுக்கு, நொந்து போனவர்களுக்கு, வறியவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று எண்ணி பாரிய வைத்திய சாலைகளைக் கட்டினார்கள், கல்விக் கூடங்களை உருவாக்கினார்கள், அநாதை விடுதிகளையும் வகையற்றோர் இல்லங்களையும் அமைத்தார்கள். கிறிஸ்துவின் பேரில் அவர்களுக்கு இருந்த

பேரன்பும் நன்றியுணர்வுமே இப்பேர்ப்பட்ட கைங்கரியங்களில் அவர்களை ஈடுகொள்ள வைத்தது. கிறிஸ்துநாதரின் தன்னலமற்ற அன்புக்குப் பிரதி உபகாரமாக மனித சேவைகளில் இறங்கினார்கள். கிறிஸ்தவர்கள், அவ்வாறு சேவைகளில் ஈடுபட்ட போது தாமாகவே தியாக உணர்வை வளர்த்துக் கொண்டார்கள். தம் நிலை மறந்து, தங்கள் அலுப்புக்களைப் பொருட்படுத்தாமல் தங்கள் அசௌகரியங்களுக்கு மத்தியில் உயிர் சேவை செய்ததால் இயேசுகிறிஸ்துவுக்கு வேண்டியவர்கள் ஆனார்கள். இறைவனின் ஆன்ம சாம்ராஜ்யத்தில் நாங்கள் எங்கெளுக்கென்று ஒரு இடம் பிடித்து விட்டோம் என்று கிறிஸ்தவர்கள் புளங்காகிதம் அடைந்தார்கள். இதன் பிரதிபலிப்புத்தான் "நான்" என்ற உருவகம். சட்டத்தில் "நான்" "என்னுடைய" என்ற பதங்கள் முக்கியமானது. உதாரணமாக ஆதனச் சட்டத்தில் உரிமையுடைமை, உடைமையுரித்து, காலாவதிச் சட்டஉரித்து போன்ற பதங்களும். ஒப்பந்தச் சட்டத்தில் ஒருவருக்கும் இன்னொருவருக்கும் இடையில் ஏற்படும் உறவுமுறையும் உரித்துக்களும், தீங்கியற் சட்டத்தில் நஷ்டஈடு சம்பந்தமான கருத்துக்களும், தனி மனித உரித்துக்களையே வலியுறுத்துகின்றன. அடிப்படை உரிமைகள் பற்றிப் பேசும் போது ''நான்'' ''எனக்கு'' ''என்னுடைய'' என்ற அஸ்திவாரங்களை வைத்துக்கொண்டு தான் சட்டக்கருத்துக்கள் எழுப்பப்படுகின்றன. "இக்காணி எனக்குரியது ஆகவே உன்னை அக்காணியில் இருந்து வெளியேற்ற வேண்டும் " என்று கூறும் போது எனக்குரியதை எடுத்துத் தர சட்டம் உதவுகிறது. தனி மனித உரித்து பேணப்படுகிறது. தனிமனிதன் பணபலத்துடன் மேலும் மேலும் காணிகளை வாங்கி, சட்டம் அவனுக்குக் கொடுக்கும் உரித்தையும் உதவியையும் வைத்துத் தன் உரிமைகளை நிலை நிறுத்துகிறான்.

மேற்குலகில் மனித இன பரிணாம வளர்ச்சியானது மனித மனத்தின் கீழைய படியின் துரித விருத்திக்கு வழிவகுத்தது. விஞ்ஞான வளர்ச்சிக்கு அடிப்படையே இந்தக் கீழ் மனந்தான். அது திண்மமான, கெட்டியான கண்ணுக்குப் புலப்படும் பொருட்கள் பற்றியது. பகுத்தறிவு, தருக்க முறை ஆகிய கருவிகள் மூலமாக வளர்ச்சி அடைந்தது. இதனால் தனிமனித எண்ணமும், வாழ்க்கையில் நாம் வேறு எங்களைச் சுற்றியுள்ள சூழல் வேறு, "இது என்னுடையது அது உன்னுடையது'' என்று பிரித்துப் பாகுபடுத்தும் மனப் பக்குவம் வளர்ந்தது. தனி மனித எண்ணமும் பிரிவினை அடிப்படையிலான நோக்கும் வளர்ச்சி அடைந்தன. இதனால் மேற்குலக தத்துவ விஞ்ஞானிகள் தனிமனித வாதத்தை வெகுவாக வளர்த்தனர். "தனி மனிதனுக்கு உரித்துக்கள் இருக்கின்றன; அவை யாவை?" என்று அலசி ஆராய்ந்து மனிதனின் உரித்துக்கள் எவை என்று பட்டியல் போடத் தலைப்பட்டார்கள்.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வெகுவான உரித்துக்கள் உண்டெனில் அப்பேர்ப்பட்ட பலதரப்பட்ட மனிதர்கள் பலர் வாழும் ஒரு சமுதாயத்தை எப்படி கொண்டு நடத்துவது என்ற கேள்வி எழுந்தது. அதற்குப் பதிலாகவே "சமுதாய ஒப்பந்தம்" (Le contrat social) என்ற நூலை வழங்கினார் ஜான் ஜாகுவே ரூசோ (Jean Jacques Rousseau) என்ற பிரான்சிய தத்துவஞானி.

மனிதன் கட்டுப்பாடற்ற சுதந்திரத்துடன் பிறக்கிறான். ஆகவே அவனை எவரும் அவனின் சம்மதம் இல்லாமல் அடக்கி ஆள முடியாது. அவனுக்குத் தேவையானதை எடுக்கவும் கொள்ளவும் பாவிக்கவும் அவனுக்குப் பூரண உரித்துண்டு. பலந் தான் உரித்து. பலமிக்கவன் தேவையானதைத் தனக்கெனக் கொள்ள முடியும். பெரிய மீன்கள் சின்ன மீன்களை விழுங்குவது போல் பலம் மிக்கவன் பலம் அற்றவர்களை அடக்கி ஆளமுடியும் என்று எண்ண ஆரம்பித்து சில தருணங்களில் பலம் மிக்கவனும் பலம் அற்றுப் போகிறான், வருத்தத்தைத் தழுவுகிறான், வயது முதிர்ந்து பலம் குன்றிப் போய் விடுகிறான் என்று கண்டு, பலமிக்கவன் பலம் குன்றிய தருணங்களில் தன்னைப் பாதுகாக்க என்ன செய்யவேண்டும் என்று ஆராய்ந்து அதற்குப்

பதிலாகவே சமுதாய ஒப்பந்தம் என்ற கொள்கையை வெளியிடத்தலைப்பட்டார்கள். அதாவது இயற்கையாகவே தான்தோன்றித் தனமாக நடந்து கொள்ளாத், தனக்கிருக்கும் உரித்துக்களில் சிலவற்றை மனிதன் இழக்க முன்வந்து அதற்குப் பதிலாக மற்றைய தனது உரித்துக்களுக்கு சமுதாயத்திடம் இருந்து உத்தரவாதம் பெறுதலே சமுதாய ஒப்பந்தம் ஆகிற்று. எனவே பலம் மிக்கவன் தன் பலத்தைப் பிரயோகித்து மற்றவர்களிடம் இருந்து பிடுங்காது விட்டானானால் பலமுள்ளவன் பலம் குன்றிய தருணங்களிலும் அவனுக்கிருக்கும் ஆதனங்கள் மீது உடைமையும் உரித்தும் கொண்டாடவும் அவற்றை நுகர்ந்து மகிழ்ச்சி அடையும் விதத்திலும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என்று கூறப்பட்டது. ஆகவே என்னிடம் இருப்பதை வேறொருவன் கவரக்கூடாது "கவர்தல் களவு" என்றும், என்னுயிரை இன்னொருவன் பறிக்கக் கூடாது, "அவ்வாறு கொள்ளுதல் கொலை" என்றும் சட்டங்கள் வளர்ந்தன. ஆகவே "கவர்தல் களவு" என்றால் இன்னொருவன் என்னிடம் இருந்து கவரக் கூடாது களவு எடுக்கக் கூடாது என்று கூறி களவெடுக்கப் படாமல் இருக்க எனக்கு உரித்துண்டு அந்த உரித்தை சமுதாயம் பாதுகாக்க வேண்டும் என்று சட்டம் வளர்ந்தது. அவ்வாறு நான் களவெடுக்கப் பட்டால் நான் சமுதாயத்திடம் முறையிட அந்தச் சமுதாயம் களவெடுத்தவனைத் தண்டிக்கும் அல்லது தண்டிக்க வேண்டும் என்று மேலைத்தேய தத்துவ விஞ்ஞானிகள் மனித வளர்ச்சியையும் சட்டத்தையும் இப்பேர்ப்பட்ட ஒரு நெறிப்படுத்தலுக்கு உட்படுத்தினார்கள்.

மேலைத்தேய ஜனநாயக கோட்பாடும் இதே அடிப்படையில்தான் வளர்ந்தது. தனிமனிதனை மற்றவர்கள் அவனின் சம்மதம் இன்றி ஆளமுடியாது. ஆகவே ஒரு சமுதாயத்தின் கூடிய மக்கட்தொகுதியினரின் அங்கீகாரத்தைப் பெற்றே அரசாங்கம் நடத்த முடியும் என்று வாதிடப்பட்டது.

18ம் நூற்றாண்டின் கடைக்கூறிலேயே இப்பேர்ப்பட்ட எண்ணங்கள் மேலைநாடுகளில் உருவாகின. ஐக்கிய அமெரிக்க நாடுகள் தாய் நாடான பிரித்தானிய முடியாட்சியில் இருந்து பிரிந்து வாழ இந்த எண்ணங்களும் கோட்பாடுகளும் பெரிதும் உதவின தொமஸ் பேயின் என்பவரின் "தனிமனித உரித்துக்கள்" என்ற நூல் இந்த எண்ண வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. இதே போல பிரான்சியப் புரட்சி, பிரித்தானிய ஜனநாயகம் ஆகியவற்றிற்கும் மேற்கண்ட நூல் பெரிதும் உதவி புரிந்தது.

ஆகவே மேற்குலகில் தனிப்பட்ட, சுதந்திரமான, பலமான, தன்னம்பிக்கை கொண்ட மனிதன் உருவாக அங்கு வேரூன்றிய மதமும் தத்துவக்கோட்பாடுகளும் உதவிபுரிந்தன. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது உள்ளார்ந்த உரித்துகளுடன் பிறக்கிறான் என்பதே அவர்களின் சித்தாந்தம். அவ்வுரித்துகளுக்குப் பங்கம் ஏற்படுத்த எவருக்குமே உரித்தில்லை என்பதும் அவர்களின் சித்தாந்தம்.

ஆகவே செயல் சுதந்திரமும் தனிமனிதத் தத்துவமும் மேற்குலக சமயத்தாலும் சட்டத்தாலும் வலியுறுத்தப்பட்டன என்று கூறலாம். இதற்கு எதிர் மாறாக இந்திய நடைமுறை அமைந்தது.

இந்து தர்ம விதிகளின் படி தர்மம் அல்லது கடமை என்பதே முக்கியகருத்தாக விளங்கியது. உலகம் ஒன்று. உயிர்கள் யாவும் அதனுள் இயங்குவன. எவ்வளவு வேற்றுமைகள் உயிர்களிடையே காணப்பட்டாலும் அவை யாவும் ஒரு நெடிய அடிமரத்தின் கொப்புகளும் விழுதுகளும் போன்றதே என்றும் ஒவ்வொரு உயிரும் உலக இயக்கத்திற்கு அத்தியாவசியமான ஒரு உறுப்பே எனவும் இந்து மதம் போதித்தது. பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் இதனை வலியுறுத்தி "எல்லா உயிரும் என்னிடத்தே உற்பத்தியாவன" என்றார். இதே கருத்தை இன்றைய விஞ்ஞான உலகம் வலியுறுத்துவதையும் நாங்கள் கவனிக்க

வேண்டும். உலகம் என்பது ஒரு பின்னிப் பிணைந்த சிலந்தி வலை போன்றது என்பதே இன்றைய பௌதிகவியல் விஞ்ஞானிகளின் கருத்தாகும். இந்து மதக் கோட்பாட்டின் படி மனிதன் தனித்த, சுதந்திரமான, தனிப்பலமுள்ள ஒரு அலகு அல்ல. அவன், ஒன்றுக்கொன்று இணைந்த, ஒருவருக்கொருவர் சார்புடைய, உறவுடைய ஒரு ஒழுங்கு முறையின் அங்கம் என்பதே இந்து மதக் கோட்பாடு. அவன் சுதந்திரமாகப் பிறப்பதும் இல்லை. பிறக்கும் போதே பலவிதமான கடமைப்பாடுகளுடன் பிறப்பது மட்டுமல்லாமல் காலஞ் செல்லச் செல்ல மேலும் மேலும் கடன்களை ஏற்றுக் கொள்கிறான். சமுதாயம் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமானால் தனிமனிதன் மகிழ்வுடன் இருக்க வேண்டுமானால் வெவ்வேறு அங்கங்கள் ஒன்றுடன் ஒன்று சுமுகமாகவும் பொறுப்புடனும் நடந்து கொள்வதிலேயே அடங்கியிருக்கிறது என்று இந்து மதம் கூறிற்று. உயிர்கள் யாவுமே உலகத்தின் அங்கங்கள். ஆகவே உலக நன்மைக்காக, உலக ஒற்றுமைக்காக, உலக நலனுக்காக ஒவ்வொரு உயிரும் தன் பங்கை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தனிமனிதன் தன் சுகத்துக்காக மட்டும் வாழ்தல் இந்து தர்மத்தில் நிராகரிக்கப்பட்டது. சமுதாய நன்மையே பிரதானம். அதற்கு அமையவே தனிமனித வாழ்க்கை அமைய வேண்டும் என்பதே இந்து தர்ம கோட்பாடு. விரல் ஒன்று தனக்கு மட்டுமல்லாமல் முதலில் கை முழுவதற்கும், பின்னர் முழு உடலுக்குமாகவும் தான் இருக்கிறது. தான் தோன்றித்தனமாக ஒரு விரல் கருமமாற்ற முடியாது என்பது போலத்தான் தான் தோன்றித்தனமாக எந்த மனிதனும் நடக்க முடியாது. முழு உலகின் ஒரு அங்கமே மனிதன். அவன் தனக்கென்று உரித்துக்களை கவர்ந்து விடமுடியாது. ஆகவே மனிதன் கடமைகளைப் புரிந்து நடக்க வேண்டும் என்பதே இந்து தர்மம். மனிதன் சுதந்திரமாக இயங்க வேண்டும் என்பதல்ல இந்து மதக் கோட்பாடு.

ஆகவே உரித்துக்களையும் உரிமைகளையும் கோராமல் உலக நன்மைக்காக கடமைகளையும் கடப்பாடுகளையும் தெரிந்து, புரிந்து, உணர்ந்து அவற்றை ஆற்றவேண்டும் என்றே இந்து மதம் போதித்தது.

எதையும் துறந்த முனிவர்களும் ரிஷிகளுமே சமுதாய ஒழுங்கு முறையினை எடுத்து விளம்பினார்கள். ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் வகுக்கப்பட்டிருக்கும் கடப்பாடுகள் எவை என்பவை பற்றி ஆராய்ந்து நடப்பதே மனிதனின் பொறுப்பாக அவர்களால் வலியுறுத்தப்பட்டது.

இந்த அடிப்படையில்த் தான் சமுதாயம் ஆசிரியர் (பிராமணர்), (மக்கள்) ஆதரவாளர் (சத்திரியர்) ஆதனவாளர் (வைசியர்) அமைவாளர் (சூத்திரர்) என்று நான்வகைப் படுத்தி அவர்களுக்கென்று கடமைகளும் வலியுறுத்தப்பட்டன. உரித்துகள் பற்றி இந்து தர்மம் குறிப்பிடவில்லை. கடமைகளையே வலியுறுத்தியது. எல்லோரும் தத்தமது கடமைகளைச் செவ்வனே செய்தால் உரித்துக்கள் தாமாகவே ஒருவனை வந்தடையும் என்பதே இந்து மத விளக்கம். சட்டத்திலே உரித்துக்களும் கடமைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையவை. இரண்டும் ஒன்று தான் என்று கூடக் கூறலாம். "இது என்னுடையது; ஆகவே எனக்கு அதன்மேல் உரிமை உள்ளது" என்கிறான் ஒருவன் "இது உன்னுடையது; ஆகவே என் கடமைப்படி அதை உன்னிடம் கையளிக்கிறேன்" என்கிறான் இன்னொருவன். ஆனால் இரண்டிலும் இருக்கும் வித்தியாசம் அவரவர்களின் உளப்பாங்கிற் தான் புலப்படும். "உரிமை" யைக் கோருபவன் தன்னைத் தனிமைப்படுத்தி, ஆக்ரோஷமாக அடிதடிகளில் இறங்குவது போல் நடந்து கொள்கிறான். கடமையைச் செய்பவன் அமைதியின் அடிப்படையில் ஒற்றுமையின் அடிப்படையில் நடந்து கொள்கிறான். முன்னையது இரஜச குணத்தின் பிரதிபலிப்பு. பின்னையது சாத்விக குணத்தின் பிரதி பலிப்பு.

கடமை என்னும் அத்திவாரத்தில் நிலைநாட்டப்படும் சமுதாயத்தில் கடமையைச் செய்யாத ஒருவனுக்குக் கூட நாங்கள் எங்கள் கடமையைச் செய்யவேண்டும் என்றிருக்கிறது. அதாவது ''அவன் தனது கடமையைச் செய்யவில்லை. ஆகவே நான் ஏன் எனது கடமையைச் செய்யவேண்டும். நானும் வாளாதிருக்க எனக்கு உரிமை இருக்கிறது" என்று அடம் பிடிக்க முடியாது. இன்றைய உலகில், அதாவது மேலைத்தேயத் தத்துவங்களினால் ஆட்கொள்ளப் பட்டிருக்கும், ஆண்டுவரப்படும் இன்றைய உலகில் உரித்தின் அடிப்படையில் "அவன் அப்படி நடந்து கொண்டான்; ஆகவே நான் இப்படி நடக்க எனக்குரித்துண்டு'' என்றும் "என்னைப் பற்றி விமர்சிக்க இன்னாருக்கு என்ன உரித்துண்டு?" என்றும் கேள்விகளைக் கேட்கத் தலைப்படுகிறோம். நாங்கள் சரியாக, முறையாக நடக்காமல் இருப்பதற்கு மற்றவனைக் காரணம் காட்டித் தப்பித்து விட எண்ணுகிறோம்.

ஆனால் கடமையில் நிர்மாணிக்கப் பட்டிருக்கும் ஒரு சமுதாயத்தில் "அவன் எப்படி நடந்து கொண்டால் என்ன; நான் என் கடமையைச் சரியாகச் செய்ய வேண்டாமா?" என்றே குடிமகன் ஒருவன் கேட்கத் தலைப்படுகிறான். மற்றவனைக் குறிப்பிட்டு அவன் தன் கடமையைச் சரியாக ஆற்றவில்லை என்றால் ''அவனின் பாவம் அவனுக்கு. என்னை விடுங்கள் என் கடமைவழியில் செல்வதற்கு'' என்று கூறி விடுகிறான். அதாவது கடமையைச் செய்யத் தவறுபவன் காலக் கிரமத்தில் அதற்கான கரும வினைப் பயனை அனுபவிக்கிறான். என்பதே இப்பேர்ப்பட்டவர்களின் வாதம். எந்த ஒரு கடமையையும் நாங்கள் சரியாகச் செய்யாவிட்டால் காலக்கிரமத்தில் அது ஒரு எதிர்மாறான விளைவை இயற்கையாக ஏற்படுத்துவதை அவதானித்திருக்கிறோம். அப்பொழுது நாங்கள் அங்களாய்ப்பது ''பாழும் என் விதி! நான் என்ன செய்ய'' என்று. ஆனால் கடமைகள் அந்தந்த நேரத்தில் முறையாக இயற்றப்பட்டால் விதியும் சரியாகவே அமையும் என்பதே இந்திய மதக் கோட்பாடு. அதாவது கடமையை செவ்வனே செய்பவன் இறைவன் வகுத்த விதிப்படி நடக்கிறான். மற்றையவன் இயற்கைக்குமாறாக நடக்கிறான் என்பது இந்து தர்மக் கோட்பாடு.

அப்படியானால் இன்றைய உலகில் உரித்தின் அடிப்படையில் எழுந்த நாடுகளே உயர்ந்து நிற்கின்றன, கடமை வழிநாடுகள் பட்டினியும் பஞ்சமும் கொண்டு திண்டாடுகின்றனவே என்று கேட்கலாம். உரிமை, உரித்து போன்றவற்றை வற்புறுத்துவதால் மட்டும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று கூற முடியாது. அவற்றை வலியுறுத்தும் அதே நேரத்தில் கடமைகளை மறக்காது செயலாற்றும் நாடுகள் நல்ல நிலையை அடைய வாய்ப்பிருக்கிறது. மேற்குலக நாடுகள் இரஜச நிலையில் செயற்படும் அதே நேரத்தில் தமது நாட்டுக்குத் தாம் ஆற்றவேண்டிய கடமைகளை மறக்கவில்லை. இதனால் பொருளாதார விருத்தி நிலையை அவர்கள் அடைந்துள்ளார்கள். ஆனால் இரண்டு உலக யுத்தங்களுக்கும் தற்பொழுது மூன்றாம் யுத்தம் ஒன்றிற்கும் அவர்கள் வழிவகுத்துள்ளார்கள். கீழைய நாடுகள் கடமை பற்றி பேச்சளவில் கூறிக்கொண்டு கடமையிலும் கண்ணாயிருக்காது உரிமைகள் சம்பந்தமாகவும் போதிய சிரத்தை காட்டாது இருப்பது தான் இந்தியா இலங்கை போன்ற நாடுகள் அபிவிருத்தியடைய காலதாமதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜப்பான் உரிமையையும் கடமையையும் இரு கண்களாக ஏற்றதால் பொருளாதார விருத்தி கண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் தனது உள்ளார்ந்த பலத்தையும் பண்பையும் உணர்ந்து செயலாற்றினால் பல பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்கலாம்.

மேற்குலக நாடுகளிலும் கீழைத்தேசங்களிலும் சட்டமும் மதமும் வித்தியாசமாக வளர்ந்து வந்துள்ளன. அவர்களின் நோக்கும் போக்கும் வேறுபட்டு வளர்ந்துள்ளன. அதே நேரம் கீழைத்தேயங்கள் மேற்குலக நாடுகளின் அடாவடித்தனத்திற்கும் உக்கிரமான

போராட்டப் போக்கிற்கும் இது வரைகாலமும் ஈடுகொடுக்க வேண்டியிருந்தன என்பதையும் நாங்கள் மறக்கக் கூடாது. ஆனால் அன்மைக் காலங்களில் விஞ்ஞானத்தின் துரித வளர்ச்சி காரணமாக மேற்குலக நாடுகள் தங்கள் தான்தோன்றித்தனமான போக்கைக் கைவிடத் தொடங்கியுள்ளன. விஞ்ஞானமானது ஒற்றுமையையும் ஒன்றுபட்டால் உண்டுவாழ்வே என்ற தத்துவத்தையும் வலியுறுத்தி வருகிறது என்று பிரபல விஞ்ஞானி ஃபிரிட்ஜொஃப் கப்ரா அவர்கள் "த டாஓ ஓஃப் ஃபிஸிக்ஸ்" (The Tao of Physics) என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பரிணாம வளர்ச்சியில் மக்கள் யாவும் ஒரே இனம் என்ற உண்மையை விஞ்ஞானம் போதித்துள்ளது. பிறக்கும் போதே மனிதன் குறிப்பிட்ட சில பல சூழ்நிலைகளுக்கு எற்ப ஒருவருக்கு ஒருவர் தொடர்புடைய ஒரு சமுதாய அமைப்பின் அங்கமாகப் பிறக்கிறானே ஒளிய பிறந்தபின் ஒப்பந்தங்களில் இறங்கவில்லை என்று காணத் தொடங்கியுள்ளார்கள். அந்த சூழ்நிலைகளை அவதானித்து அனுசரித்து நடக்காவிடில் அவன் அழிய வேண்டியிருக்கும் என்றும் விஞ்ஞானம் கண்டுள்ளது. மேலும் இயற்கையானது சுதந்திரத்தை ஏற்காது என்பதையும் அவதானித்துள்ளார்கள். இயற்கையின் சட்டமானது இயற்கை போகும் போக்கில் சகலரையும் அதன் அதிகாரத்தினுள்ளும் ஆதிக்கத்தினுள்ளும் கொண்டு வருவதையே செய்கிறது. மனிதன் மட்டும் தனித்து நின்று நான் சுதந்திரமானவன் என்று கூறமுடியாது என்று விஞ்ஞானம் அவதானித்துள்ளது. அப்படி இருக்க நினைத்தால் அவனை இயற்கை வீழ்த்திவிடுவான் என்றும் விஞ்ஞானம் கண்டுள்ளது.

ஆகவே உரித்துக்களின் அடிப்படையில் உலகம் என்ற அகந்தைக்கு அடிகோலும் மேலை நாட்டுத் தத்துவக் கோட்பாடுகள் போய் கடமை வழியே சிறந்தது என்று கருதும் காலம் அண்மித்துவருகிறது. 21ம் நூற்றாண்டு கடமைகளுக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுக்கும் அருளாட்சிக் காலமாக அன்பாட்சிக் காலமாக மாறப்போகின்றது. ஆனால் அதற்குமுன் அகந்தை அழிய வேண்டும் என்பதால் பெரும் அழிவுகள் உலகம் நோக்கப் போகிறது.

மஸீனி என்ற இத்தாலிய விடுதலை வீரர் கடமைகளை வலியுறுத்தி உரிமைகளைக் கீழ்ப்படுத்தி எழுதியுள்ளார். இவ்வாறு மேலை நாடுகள் புதிய சிந்தனைகளுக்கு இடம் அளிக்கும் அதே நேரத்தில் கீழைத்தேசங்கள் கடப்பாடுகளைச் சுருக்கித் தமது காலாகால மரபினை மாற்றி வருவதையும் நாம் காணக் கூடியதாக இருக்கிறது. எங்களுள் உள்ள நல்லவற்றை மேற்குலகம் தமக்கு சாதகமாகப் பாவிக்க அங்குள்ள கெட்டனவற்றை நாங்கள் எடுத்து எமக்குத் பாதகமாகப் பாவிக்கத் தலைப்பட்டுவிட்டோம்.

ஆகவே மற்றவர்களுக்குக் கடமை செய்தலே மனித குலப் பண்பு என்னும் கீழைத்தேயப் பண்பு புத்துயிர்பெற்று விளங்கவேண்டும். வருங்காலம் கிழக்கிற்கோ மேற்கிற்கோ உரிய ஒன்றல்ல. சமயமும் சட்டமும் தனித்து இயங்கமுடியாமல் உலகம் சிறிதடைந்துள்ளது. 100 வருடங்களுக்கு முன் வட்டுக்கோட்டையில் இருந்து ஃபொஸ்டன் என்ற அமெரிக்க நகரத்திற்கு அமெரிக்க மிஷன் அலுவலர்கள் சென்று வர 6 மாதங்கள் ஆகிறது. அதாவது 2-3 மாதங்கள் கப்பலில் செல்லவும் 2-3 மாதங்கள் திருப்பிவரவும் இத்தனை காலம் சென்றது. இன்று 1/2 நிமிடத்தில் டெலிபோனில் பேச முடியும். கிழக்கு, மேற்கு என்ற பேதங்கள் மறைந்து உலக குடும்பம் என்ற எண்ணம் இன்று மேலோங்கி வருகிறது. விஞ்ஞான ரீதியில் சமுதாயங்களை மாற்றியமைத்து கிழக்கு மேற்கு என்ற பேதங்களை மறந்து பொதுவானதொரு உலக கலாசாரத்தை 21ம் நூற்றாண்டு உருவாக்கப் போகின்றது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கடமை வழியில் அன்பும் அருளும் அப்புதிய உலகத்தில் மேலோங்குவதாக!



# CALL OF SOCIAL JUSTICE

***S. Sharvananda***
B.A. (Lond), LL.B. (Lond)
Former Chief Justice of Sri Lanka.

The finest moment of legal justice comes when it attains social justice. The focus of social justice is social inequality. It seeks the abolition of the injustices produced by such inequality.

The Directive Principles of State Policy set out in Chapter VI of our Constitution are designed to secure social justice. Those principles lead us to the achievement of the goals of social justice. Though those principles are not enforceable by the courts, and confer no legal rights and create no legal remedies they are general recommendations addressed to Parliament and the Executive for the enactment of laws and the governance of the country for the establishment of a just and free society. These fundamental axioms of State Policy, though of no direct legal effect, lay down the end to be achieved in making laws. Art. 27 (2) (d) provides that the state is pledged to establish in Sri Lanka a democratic socialist society, the objective of which includes the promotion of the Welfare of the People, by securing and promoting as effectively as it may, a social order in which justice (Social, Economic and Political) shall guide all the institutions of the national life. Art 27 (2) (6) provides that the state shall ensure equality of opportunity to citizens; 27 (2) (7) mandates that the state shall eliminate Economics and social privileges and disparity and the exploitation of man by man or by the State. Thus, the end of the state is clearly that of a Walfare state ( as distinguished from a mere Police State) which aims at social welfare and the common good. No longer is the State merely the policeman who keeps law and order; its business is now positively to promote the welfare of all its citizen. It has become a positive agent for the promotion of social welfare. Not only should the government provides social services such as social security, medical treatment, education and welfare facilities but these should go beyond the provision of bare minimum towards ensuring that all have equal opportunities so far as the States resources allow. The welfare State is the product of the assumption by the State of responsibility for the basic well-being of all its members. The modern State today performs increasingly important functions. The first of these is the function of the State as the dispenser of social services. The promotion of social justice has become an important concern of the State, Social Justice means the promotion of the welfare of the People. The State today assures a life of dignity for all, especially the poor and the needy. We are all participants in the quest of aiding the less fortunate of our countrymen for a more decent existence and for a life of dignity. They

must be given equal opportunity to grow, and to give their best to society. Absence of equal opportunities is a denial of equal participation in the affairs of society and of equal membership. Those who are disadvantaged, by heredity or circumstances, must be put in a position to compete with others on as equal terms as can be attained. Special opportunities for educational, economic and cultural growth must be given to these groups so as to enable them to catch up with those who are ahead of them. It is not enough just to open the gates of opportunity. All our citizens must have the ability to avail themselves of the opportunity-the opportunity must be meaningful opportunity to the competitor. Equality of opportunity means effective material equality. You do not take a person who for years has been hobbled by chains, free him, bring him up to the starting line of a race and then say "you are free to compete with others". Thus, it is not enough just to open the gates of opportunity. It is not sufficient that the rich and that poor are equal before the law and ignore the stark reality of a economic bargaining power. Anotale France cynically observed "The law, in its majesty, equally forbids all men to sleep under bridges, to beg on the streets and to steal bread, the rich as well as the poor". The State should adopt such affirmative action as to uplift the backward classes of citizens to levels of equality with the rest of the citizens. Special opportunities for educational, economic and cultural growth so as to enable them to catch up with those who are ahead of them. To bring about equality between unequals, it is necessary to adopt positive measures, to equip the disadvantaged and the handicapped in order to bring them to the level of the advantaged.

The principle of social justice is inherent in the idea that all men shall have equal claim to the necessities of life, health food, shelter etc and also equality of opportunity for both work and enjoyment. Equality of opportunity is the essence of social justice. Provided that all men have equal opportunities, distribution should be made according to desert.

Social justice has to face challenges of varied nature which may arise out of the greed for amassing wealth, by a few, to the detriment of large segments of have-nots. The resource limitations of a developing country may not allow it to meet, to the full, the demands of social justice as adequately as the fully developed and industrialized countries have met. Because of the scarcity of resources needed to fulfill substantially the rising expectations, developing countries are facing social tensions.

However, it is necessary for the government to take all efforts to deliver social justice to the large masses of deprived sections of society and assure a life of dignity for all, especially, the poor and the needy and convert the have nots into haves and effectively meet the challenge of social justice mandated by our constitution.

In this context of social justice it is well worth keeping in mind the following premonition of Lord Macmillan "Gentlemen, I appeal to you for once, lift your eyes from your table, look beyond the windows of your Chamber. You will see the common man staring at you. He raises a question mark. The question mark raised by this common man may be silent and invisible today, but it may be vociferous and visible tomorrow".



# இந்துசமய அறநிலையங்களின் சொத்துக்கள் பரிபாலனத்திற்கு விசேட சட்டம் ஒன்றின் அவசியம்.

என். யோகசிகாமணி
நீதிபதி

எமது நாட்டில் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவ மதங்கள் சம்பந்தமான அறநிலையங்கள், சொத்துக்கள், வருமானங் களைப் பரிபாலிப்பதற்காக முறையே பௌத்த சமய அறநிலையங்களின் சொத்துக்கள் வருமானங்கள் சட்டம், பள்ளிவாசல்களினதும் முஸ்லிம் அறக்கட்டளைகளினதும் அல்லது வாவ்ப் (Wakuf) பரிபாலனச் சட்டம், மற்றும் வெற்வேறு கிறிஸ்தவ திருச்சபைகள் சம்பந்தமான கூட்டிணைப்புச் சட்டங்கள் ஆகியன இருக்கின்றபோதிலும், இந்து அறநிலையங்கள் சம்பந்தமான தனியொரு சட்டம் இல்லாமை பெரிய குறைபாடாகும். இந்து அறநிலையங்களில் ஏற்படும் துஸ்பிரயோகம், முகாமைத்துவக் குறைபாடுகள் மற்றும் ஊழல் சம்பந்தமாக முறையீடு செய்வதற்கு 1917ம் ஆண்டின் 9ம் இலக்க நம்பிக்கைச் சொத்துச் சட்டத்தின் கீழ் 101, 102ம் இலக்கப் பிரமாணங்களின் கீழ் உள்ள ஏற்பாடுகளே தற்சமயம் காணப்படுகின்றன.

மேற்படி 101, 102ம் இலக்க நம்பிக்கைச் சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகள் சாதாரண நாட்களில் அறங்காவலர்கள் மேற்படி அறநிலையங்கள் நன்மை பெறுவோர்க்கு (Beneficieries) கட்டாயமாகப் பதில் சொல்லும் பொறுப்புடைய ஒரு நிலையில் இல்லை.

1.இந்து அறக்கட்டளைகளை முக்கியமாக கோவில்களைப் பரம்பரை பரம்பரையாகப் பதவியேற்கும் அறங்காவலர்கள்.

2.வழிபடுநர்களால் தெரிவு செய்யப்படும் அறங்காவலர்கள். என இருவகைப்பட்ட அறங்காவலர்கள் நிருவகித்து வருகின்றனர்.

இவற்றில் 1ம் வகைக்கு உட்பட்ட நிர்வாகத்தால் பரிபாலிக்கப்படும் கோயில்கள் மற்றும் அறநிலையங்கள் சம்பந்தமாக யாரும் அந்த அறநிலையங்களில் நன்மைபெறுவோர்க்குக் கணக்குக் கொடுப்பதற்கோ (Accountable) அல்லது பதில் சொல்லும் கடமைப்பாடு உள்ளவர்களாகவோ இருப்பதில்லை. இந்த அறக்கட்டளைகள், இது தமக்குக் கிடைக்கும் பதில் கூறக் கடமையில்லாத ஒரு வரப் பிரசாதம் என்ற போக்கில அறநிலையங்கள் நடாத்தப்படுவதேயன்றி இவை அறக்கட்டளைகள் தாமோ என்று ஐயுறும் வண்ணம் தனிப்பட்ட சொத்துக்களாகவே கருதப்பட்டு குறித்த அறக்கட்டளைகள் ஏதேச்சையான விருப்பு வெறுப்புக்கு அமைய ஆளப்பட்டு வருகின்றன. இவ்வகைக்கு உட்பட்ட கோயில்கள் மற்றும் அறநிலையங்கள் இலங்கையில் கிட்டத்தட்ட 70 வீதமானவை உள்ளன.

இரண்டாவது வகைக்கு உட்பட்ட அதாவது வழிபடுநோரால் தெரிவு செய்யப்பட்ட சபை ஒன்றினால் நடாத்தப்படும் கோயில்கள் மற்றும் அறக் கட்டளைகள் பெரும்பாலும் சமீபகாலத்தில் தோன்றிய ஸ்தாபனங்களாகக் காணப்படுகின்றன. இக்காரணங்களால் இவ்வகைக்குட்பட்ட அறநிலையங்களில் அசையாச் சொத்துக்களும், அசையும் சொத்துக்களும் முதல் கூறிய அறநிலையங்களோடு ஒப்பிடும்போது குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன.

இரண்டாவது வகை அறநிலையங்களில் வருடாவருடம் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் மற்றும் செயற்குழுக் கூட்டங்களில் கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதாய் இருப்பினும், சில

அறநிலையங்களில் காலக்கிரமத்தில் கபடத்தனம் வாய்ந்த அறங்காவலர்கள் குறித்த கோயில் அல்லது அறநிலையங்களில் தமக்குக்கீழ் வேலை செய்யும் ஊழியர்கள் அல்லது இவ்வறநிலையங்களுக்கு உரிய அசையாச் சொத்துக்களில் குடியிருப்போர்களை செயற்குழுவில் உள்ளடக்கி தம்மை எதிர்த்து வகைகூறும்படி கேட்க முடியாத சூழ்நிலையில் இச் சொத்துக்களைக் கபளீகரம் செய்து வருகின்றனர்.

நம்பிக்கைச் சொத்துச் சட்டத்தின் பிரிவு 101, 102 இன் கீழ் இந்துக் கோயில்கள் அல்லது அறக்கட்டளைகளில் பணம் கையாடல், நிர்வாகச் சீர்கேடு, ஊழல் ஆகிய குற்றச்சாட்டு இருந்தால் மேற்படி பிரிவு 102ன் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முன்பதாக அந்த அறக்கட்டளையின் நிர்வாகம் அமைந்துள்ள அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம் செய்யப்படல் வேண்டும். அரசாங்க அதிபர் தான் உள்ளிட்ட அல்லது அப்படி அல்லாத ஒரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும். இந்த ஆணைக்குழு அந்த அறக்கட்டளை சம்பந்தமாக விசாரணை நடாத்தி ஒரு அறிக்கை சமர்ப்பித்து அதிலே வழக்குத் தொடுவதற்கு உரிய காரணங்கள் காணப்பட்டால் மட்டுமே இந்த வழக்குத் தொடரப்படலாம். அது மட்டுமல்லாமல் இந்த விசாரணைக்குரிய சகல செலவுகளும் இந்த முறைப்பாட்டைக் கொடுக்கும் ஐந்துக்குக் குறையாத வழிபடுநர்களால் பொறுப்பேற்க வேண்டிவரும். இதன் பின்பு நடைபெறும் வழக்கு விசாரணைச் செலவும் அவர்களே பொறுப்பேற்கவேண்டி வரும். அதே சமயம் அறக்கட்டளைகள் நேரடியாக அல்லது மறைமுகமாகவோ • இச் செல்வை அறநிலையத்திலிருந்து பெரும்பாலும் எடுத்து இவ்வழக்கு விசாரணைகளை நடாத்துகின்றனர். இக்காரணங்களால் இலட்சக்கணக்கான ருபாய்களும், சொத்துக்களும் வீணே துஸ்பிரயோகம் செய்யப்படுவதை அனேகமாக எல்லா இந்துக்களும் அறிந்திருந்தும் இதில் தலையிடுவதற்குத் தற்றுணிவு ஏற்படுவதில்லை. செலவு ஒருபுறம் இருக்க இவ்வழக்கின் தன்மை காரணமாக இவ்வழக்குகள் முடிவடைவதற்குப் பல வருடங்கள் செல்வதும், இவ்விடயங்களில் வழிபடுநர் தலையிடாமலிருப்பதற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

இது சம்பந்தமாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விசேடக்குழு ஒன்று நம்பிக்கைச் சொத்து சட்டத்தின் பிரிவு 101, 102 கீழ் உள்ள ஏற்பாடுகள் திருப்தியற்றவையாக இருப்பதாக அறிக்கை செய்துள்ளது. இதற்குரிய காரணம் இவ்வேற்பாடுகளில் உள்ள நடைமுறைகள் மிகவும் பளு உள்ள ஏற்பாடுகளாக இருப்பதும் முறைப்பாடு செய்வோர் செலவைப் பொறுப்பேற்கவேண்டியிருப்பதாலும் இவ்வழக்குகள் பலகாலம் இழுத்தடிக்கப்படுவதும் ஒரு வழக்கு முடிவுற்றபின்னரும் அந்த முடிவை அமுலாக்கம் செய்வதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாமையும் ஆகும். ( இலங்கை அரசாங்க 1951ம் வருட 5ம் இலக்க கூட்டமர் இருக்கைக்குரிய காலத்திற்குரிய அறிக்கை SESSIONAL PAPERS No. 5 of 1951) இந்து அறநிலையச் சொத்துக்கள் வருமானங்கள் பரிபாலனச் சட்டவாக்கம் ஒன்று இக்குழுவால் பிரசுரிக்கப்பட்டு இருந்தபோதிலும் அது (இலங்கை அரசாங்கம் 1951ம் ஆண்டின் 38ம் இலக்க கூட்டமர் இருக்கைக்குரிய காலத்திற்குரிய அறிக்கை - (Sessional Papers No. 58 of 1951) அதிகார நலக்குழுக்களால் (ஏநளவநன ஐடீ-வநசநளவள) காட்டப்பட்ட எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

பௌத்தமத அறநிலையச் சொத்துக்கள் வருமானங்கள் சட்டத்தினாலும் முஸ்லிம் பள்ளிவாசல் அறக்கட்டளை அல்லது வாவ்ப் சட்டத்தின் கீழும் காலத்திற்குக் காலம் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமான அறிக்கை முறையே பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கும் முஸ்லிம் அறக்கட்டளை பொறுப்புச் சபைக்கும் சமர்ப்பிக்கக் கடமையுள்ளது. இன்றய சூழலில் இப்படியான ஒரு ஏற்பாடு இருக்குமாயின் எத்தனையோ கோடி ருபாய்கள் தனியார் கைகளில் செல்வதைத் தவிர்த்து, இந்து அறநிலையங்கள் இந்துசமய விருத்திக்கும் அகதிகளாகவும், ஏழைகளாகவும்

உள்ள இந்துக்களுக்குச் சேவை செய்வதற்கும், அவை கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க இடமில்லை. ஆகவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் முன்முயற்சி எடுத்து கைவிடப்பட்ட இந்து அறநிலையச் சட்டவாக்கத்தை தற்போதைய தேவைக்கு அமைவாக திருத்தம் செய்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். முஸ்லிம்களின் பள்ளிவாசல், அறநிலையங்கள் அல்லது வாவ்ப் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்தவையாக இந்து சமயத்தின் பிரமுகர்களைக்கொண்ட ஒரு சபையை அமைத்து அந்தச் சபையின் கீழ் அரசாங்க நிர்வாகத் துரத்தில் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படும் அதிகாரிகளால் இந்துக் கோயில்கள் அறநிலையங்கள் பரிபாலிக்க ஏற்பாடு செய்யப்படலாம். இந்துப் பிரமுகர்கள் சபை சட்டத்தின் படி கூட்டமைக்கப்பட்ட இந்து அறநிலையங்களின் பிரதிநிதிகள் மற்றும் கல்விமான்கள், ஓய்வுபெற்ற நீதிச்சேவை. நிர்வாகச்சேவை, கல்விச்சேவை அதிகாரிகள் ஆகியோர் நியமிக்கப்படலாம். இவர்களின் கீழ் இயங்கும் மூன்று பேர் கொண்ட பரிபாலன சபை, இந்து சமயத்தைச் சார்ந்த அரசாங்க நிர்வாக அதிகாரிகளால் நடாத்தப்படலாம். (Career Administrators) அறநிலையங்கள் சம்பந்தமான இடைக்கால வருடாந்த பரிசீலிக்கப்பட்ட கணக்குகளின் பிரதிகள் அவர்களுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். அத்துடன் குறித்த கணக்குகள் சம்பந்தப்பட்ட கோயில்கள் அல்லது அறநிலையங்கள் அமைந்துள்ள உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும், கிராமசேவையாளர் காரியாலயங்களிலும் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படல் வேண்டும். இவ்வேற்பாடுகளுக்கு பரம்பரை அறங் காவலர்களும் விதிவிலக்காக இருக்கக்கூடாது. ஏனெனில் அவர்களால் பரிபாலிக்கப்படுவதும், அறக்கட்டளைகளேயன்றி (Public Charitable Trust) பணமீட்ட அமைக்கப்பட்ட தனியார் கம்பனிகள் அல்ல.

இதைத் தவிர பௌத்தசமய அறநிலையங்களின் சொத்துக்கள் சட்டத்தில் உள்ள 28 (1), 34 ஆகிய ஏற்பாடுகளுக்குச் சமமான ஏற்பாடுகள் செய்யப்பட்டால் இந்து அறநிலையங்கள் தமது ஆட்சியால் கைவிட்டுப்போன சொத்துக்களை மீளப்பெறவும் இந்த அறநிலையங்களின் சொத்துக்கள் ஆட்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளில் இருந்து (Prescription Ordinance)

விதிவிலக்கு அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படலாம். இவ்வேற்பாடுகளால் நிர்வாகச் சீர்கேட்டால் கைவிடப்பட்ட தனியார்வசம் சென்ற பல கோடிக்கணக்கான அசையாச் சொத்துக்களை மீளப் பெறவும் அதன் மூலம் இந்த அறக்கட்டளையின் ஸ்தாபகர்களின் அபிலாசைகளுக்கு உரிய மதிப்புக் கொடுப்பதற்கும் இதன் மூலம் பெறும் வருமானத்தால் இந்து சமுதாயம் பரந்தளவில் நன்மைபெறவும் வாய்ப்பு உண்டு.

காலத்தின் தேவையான இந்த மசோதாவை இதுவரை காலமும் நடந்தது போல் அதிகார நலக்குழுக்களின் (Vested Interest) செல்வாக்குக்கப்பால் செயற்படுத்துவதற்கு இந்து சமுதாயம் துணிவுடன் முன் முயற்சிகளை எடுக்கவேண்டும். அப்படிச் செய்வோமானால் தான் தமது பிற சந்ததியினரின் நலம் நோக்காது பரந்த அளவில் இறைபணி என்ற இலட்சியத்திற்காகத் தமது சொத்துக்களை விட்டுச் சென்ற எம்முன்னோரினதும், தற்காலத்தில் இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுக்கிறோம் என்னும் நினைப்பில் தமது பொருட்களை வாரிவழங்கும் அடியார்களது உள்ளார்ந்த எதிர்பார்ப்புக்களும் உரிய பலனை அடைய ஏதுவாகவிருக்கும்.

# தமிழ் தேசிய இனத்தின் அவலநிலை

தமிழ் தேசிய இனம் பெரும்பான்மையினராக வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், ஏனைய ஏழு மாகாணங்களில் சிறுபான்மையினராகவும் வசிக்கின்றார்கள். 1956ல் பண்டாரநாயக்காவின் தனிச்சிங்கள மசோதா அமுலுக்கு வந்ததும், தமிழ் தேசிய இனம் தங்கள் உரிமைகளை இழந்து ஒரு உரிமையும் இல்லாத இரண்டாம் தர பிரஜைகளாக மாற்றப்பட்டார்கள். இந்த நிலை தொடர்ந்து, அவர்கள் இந்த அரசாங்கத்தில் அனுபவிக்கும் கஷ்டங்களைப் போல் முன்பு ஒரு போதும் அனுபவிக்கவில்லை.

தற்பொழுது ஒவ்வொரு தமிழனும் பயங்கரவாதியெனச் சந்தேகிக்கப்படுகின்றான்.

பொலிசுக்கும் இராணுவத்துக்கும் ஒரு கட்டுப்பாடும் இல்லாத அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் எதையும் செய்யலாம், யாரையும் கைது செய்து தடுத்து வைக்கலாம். சித்திரவதை செய்யலாம். கொலையும் செய்யலாம்! காணாமல் போகவும் செய்யலாம்!

பொலிசுக்கும் படையினருக்கும் தமிழர்களைக் கைது செய்வதற்கு மூன்று சட்டங்கள் இருக்கின்றன. அவையாவன:

1.சாதாரணச் சட்டம்
2.அவசரகாலச் சட்டம்
3.பயங்கரவாதச் சட்டம்

**(1) சாதாரணச் சட்டம்**

ஒரு குற்றம் செய்தவரை சாதாரண சட்டத்தின் கீழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யலாம். அப்படிக் கைது செய்த பின்பு அவரைப் பிடித்து 24 மணித்தியாலம் முடியுமுன்பு விடுதலை செய்ய வேண்டும். அல்லது அவர் நீதவான் முன்பு ஆஜர் செய்யப்பட வேண்டும்.

**(2) அவசரகாலச் சட்டம்**

தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச்சட்ட விதிகள் 4.11.1994ல் வெளிவந்த 843/12 இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன. 19.06.1996ல் வெளியிடப்பட்டுள்ள 928/11 இலக்கத்தையுடைய வர்த்தமானி மூலம் விதி 19 (2) திருத்தப்பட்டுள்ளது. இந்த திருத்தத்தின் மூலம் கைது செய்யப்பட்டவரை 21 நாட்கள் வரை விசாரணைக்காக ஒரு காவல் நிலையத்தில் வைத்திருக்கலாம். இந்த திருத்தத்திற்கு முன்பு ஆக 7 நாட்கள் தான் விசாரணைக்காக பொலிசில் வைத்திருக்கலாம்.

அவசரகால விதி 18 (1) தான் கைது செய்வதற்கு யாரேனும் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது ஆயுதம் தாங்கிய படைகளின் யாரேனுக்கும் அதிகாரம் அளிக்கின்றது.

இதன் கீழ் ஏதேனும் அவசரகால ஒழுங்கு விதியின் கீழ் குற்றத்தைப் புரிகின்ற அல்லது புரிந்துள்ள அல்லது புரிவதற்காக அல்லது புரிந்துள்ளதாக ஐயுறுவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் ஒருவரை யாரேனும் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளின் யாரேனும் உறுப்பினர் கைது செய்யலாம்.

அப்படிக் கைது செய்யப்பட்டவரை வடகீழ் மாகாணத்தில் 60 நாட்களுக்கு விசாரணைக்காக பொலிஸில் வைத்திருக்கலாம். வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் கைது செய்யப்பட்டவரை ஆக 21 நாட்கள் மாத்திரம் பொலிஸில் விசாரணைக்காக வைத்திருக்கலாம். 21 நாட்கள் முடிவில் விடுதலை செய்ய வேண்டும். அப்படியான விசாரணை முடிவுபெறாவிடில் நீதவான் முன் ஆஜர் செய்து மறியல் வீட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டும்.

**(3) பயங்கரவாதச் சட்டம்**

பயங்கரவாதத் தடைச்சட்டம், விதி 6 (1) கைது செய்வதற்கு அதிகாரம் அளிக்கின்றது.

ஒரு பொலிஸ் அத்தியட்சகர் தரத்துக்கு குறையாத பதவியை வகிக்கும் எவரேனும் பொலிஸ் அலுவலர் அல்லது உபபரிசோதகர்

தரத்திற்குக் குறையாத பதவியை வகிப்பவர் அல்லது அவரால் அதற்கென எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவருமான வேறு எவரேனும் பொலிஸ் அலுவலர் எவரேனும் பிடியாணையின்றி எவரேனும் ஆளைக் கைது செய்யலாம். அப்படிக் கைது செய்யப்பட்டவரை மூன்று நாட்களுக்குள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் அல்லது பாதுகாப்பு மந்திரியால் அளிக்கப்பெற்ற தடுப்புக் காவல் பத்திரம் பெறவேண்டும்.

அவரசகாலச்சட்டமும் பயங்கரவாதச்சட்டமும் விசேட சட்டங்களாகும். அவசரகாலச்சட்டத்தின் கீழ் ஒருவர் வடகிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த வேறு இடங்களில் ஆயுதந்தாங்கிய படையினரால் கைது செய்யப்பட்டால் அவரை 24 மணித்தியாலத்துக்குள் கைது செய்யப்பட்டத்துக்கு அருகாமையிலுள்ள காவல் நிலையத்திற்கு பாரம் கொடுக்க வேண்டும். மற்றது கைதைப்பற்றி உடனடியாக மனிதஉரிமை ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் கைது செய்யப்பட்டவரின் நெருங்கிய உறவினருக்கு ஒரு பற்றுச்சீட்டும் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்யத்தவறின் அது தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும்.

**குற்ற ஒப்புதல் வாக்குமூலம்**

அவரசகாலச்சட்ட விதி 49ன் பிரகாரமும், பயங்கரவாதச்சட்ட விதி 16 (1) பிரகாரமும், ஒரு தூண்டுதலின்றி, சுயவிருப்பத்துடன் உதவி பொலிஸ் உத்தியோகத்தருக்கு அளிக்கும் வாக்குமூலத்தை கொடுத்தவருக்கு எதிராக சாட்சியாகப் பாவிக்கலாம். இவ்விதிகள் பொலிஸினால் மிகவும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. இச்சரத்துக்களைப் பாவித்து அனேகமான அப்பாவித் தமிழர்களை அவர்கள் ஒரு குற்றம் செய்யாமல் இருந்தும் கூட அவர்களை அடித்துத் துன்புறுத்தி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அவர்களுக்கு எதிராக மேல்நீதிமன்றங்களில் பொலிசாரால் வழக்குத்தாக்கல் செய்யப்படுகின்றன. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தையே தனிச் சாட்சியாக வைத்து ஒருவருக்கு 70 வருட மறியலும், இன்னுமொருவருக்கு 50 வருட கால மறியலும் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் (மூன்றாம் கோட்டில்) மறியல் தீர்க்கப்பட்டது.

தமிழ்மக்கள் சித்திரவதை செய்வதற்கு ஒரு காரணம். மேற்சொல்லிய சரத்துக்களின் பிரகாரம் குற்றஒப்புதல் வாக்குமூலம் எடுப்பதே. சித்திரவதைக்குப் பயந்து, செய்யாத குற்றங்களை ஏற்ற பல தமிழர்கள் உளர். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சம்பந்தமான பயங்கரவாத சட்டத்தின் கீழ் உள்ள சரத்து 16 (1)ஐயும், அவரசகாலச் சட்ட விதி 49 ஐயும் உடனடியாக நீக்க வேண்டுமென்று சர்வதேச மன்னிப்புச்சபை (Amnesty International) இந்த அரசாங்கத்தை இரு முறை கேட்டுள்ள போதிலும் கூட இந்த அரசாங்கம் அதற்குச் செவி சாய்க்கவில்லை.

இங்கிலாந்தில் இருக்கும் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவரை ஆக 7 நாட்களுக்கு மாத்திரமே பொலிஸில் வைத்திருக்கலாம். ஆனால் இங்கே அவசரகாலச் சட்டத்தில் விசாரணைக்காக 21 நாட்கள் மாத்திரமே வைத்திருக்கலாம் என்ற போதிலும் பொலிஸ் அவசரகாலவிதி 17 (1) ஐப் பாவித்து கைதுசெய்யப்பட்டவரை 3 மாதம் 21 நாட்கள் வைத்திருந்து, பின்பு சட்டத்தை இடைநடுவில் மாற்றி பயங்கரவாதச் சட்டம் 7 (2)ன் கீழ் நீதவான் முன் ஆஜர் செய்கிறார்கள். இப்படிச் செய்வதினால் அவசரகால சட்டத்தில் உள்ள நன்மைகளை அதன் கீழ்க் கைது செய்யப்பட்டவர் பெறாதிருக்க வழி அமைக்கிறார்கள்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்போது கைது சம்பந்தமாக சுப்பிரீம் கோட் இட்ட தீர்ப்பையோ அறிவுறுத்தல்களையோ நடைமுறைப்படுத்துகிறார்கள் இல்லை. அண்மையில் மனிதஉரிமை மீறல் வழக்கு இலக்கம் 652/98ல் 2.11ல் கலாநிதி சு. டீ. அமரசிங்க சுப்பிரீம் கோட் நீதிபதி நீர்கொழும்பு பொலிஸ் ஸ்டேசன் பொறுப்பதிகாரிக்கு சந்தேக நபர் திருநாவுக்கரசு சசிதரனை உடனடியாக நீதவான் முன் ஆஜர் செய்து விடுதலை செய்ய வேண்டும் அல்லது நீதவான் அவரை அங்கீகரிக்கப் பெற்ற மறியல் வீட்டில் விளக்க மறியலில் வைக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவு 5.11.98ல் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் பொறுப்பதிகாரி சந்தேகநபரை பொலிஸ்

ஸ்டேசனில் தொடர்ந்தும் வைத்திருக்கும் நோக்குடன் இடைக்கிடை நீதவான் முன் ஆஜர் செய்து திருப்பியும் பொலிஸ் ஸ்டேசனுக்கே கொண்டு போய் அவரை அடித்து 18.1.99ல் பலாத்காரமாக அவரின் கையெழுத்தை வாங்கி 21.11.99ல் தான் நீதவான் முன் பயங்கரவாதச் சட்டம் 7 (2)ன் கீழ் ஆஜர் செய்து அவரின் வழக்கு முடியுமட்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறாத ஒரே காரணத்தால் சுப்பிரீம் கோட்டின் உத்தரவையே உதாசீனம் செய்தார்கள். இந்த சந்தேக நபர் 2.10.98ல் ஒரு காரணமுமில்லாமல் அவசரகாலச்சட்ட ஒழுங்கு விதி 18 (1)ன் கீழ் கைது செய்யப்பட்டார். தற்போது அவருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் பலாத்காரமாக 18.01.99ல் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலமொன்றையே சாட்சியாக வைத்து வழக்கு வைத்தார்கள். இவர் தமிழனாகப் பிறந்ததல்லாமல் வேறு ஒரு குற்றமுமே செய்யாதவர். இப்படிக் குற்றமொன்றையும் செய்யாதவர் மீது இரு விசேட சட்டங்களையும் பாவித்து கைது செய்து, சித்திரவதை செய்து சுப்பிரீம் கோட்டு உத்தரவையே உதாசீனம் செய்து, வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். கைது செய்யப்படுகின்ற ஒவ்வொரு தமிழனுக்கும் நடக்கிறது இக்கதி தான். மனித உரிமை மீறல் வழக்குகள் 9/98, 10/98ல் கலாநிதி அமரசிங்க, உடனடியாக நீதவான் முன் ஆஜர் செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவை பொலிஸ் அமுல்படுத்தாமல் தட்டிக்கழித்தபடியால் சந்தேக நபர் இருவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு அவர்களை விடுதலை செய்வித்தார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தரைப்படையினரால் கைது செய்யப்பட்டு பின்பு குற்றவியல் விசாரணை இலாகா (C.I.D)வில் பாரம் கொடுக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பெற்ற விசயன் விமலேந்திரன் சார்பாக சட்டத்தரணி திரு. அ. விநாயகமூர்த்தி ஒரு மனித உரிமை மீறல் வழக்கை சுப்பிரீம் கோட்டில் வைத்தார். அந்தத் தீர்ப்பு (1997) 1 Sri Lanka. Part - 5 Page 113 - 140ல் அச்சிடப்பெற்றிருக்கிறது. இது ஒரு மிகவும் நல்ல சிறந்த தீர்ப்பு. இதிலும் குறிப்பிட்ட நபர் அவசரகால விதி-18 (1)ன் கீழ் படையினரால் கைதுசெய்யப்பட்டு, பலாத்காரமாக குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சுப்பிரீம் கோட்டில் வழக்கு வைத்த பின்பு அவரிடமிருந்து பெற்று, பிறகு பயங்கரவாத சட்டவிதி 7 (2)ன் கீழ் கோட்டில் பல மாதங்களுக்கு பின்பு ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பெற்றவர்.

இத்தீர்ப்பால் அவசரகாலச் சட்டவிதி 18 (1)ன் கீழ் கைதுகள் பற்றியும் பாதுகாப்பு காரியதரிசியினால் கொடுக்கப்படும் அவசரகாலச் சட்டம் 17 (1)ன் கீழ் கொடுக்கப்படும் தடையுத்தரவு சம்பந்தமாகவும் பல கோணங்களில் இருந்தும் துருவித் துருவி ஆராய்ந்து பின்பு அவசரகாலச்சட்டம் 18 (1)ன் கீழ் கைது செய்யப்படுபவர்கள் 24 மணித்தியாலத்தில் அல்லது 21 நாட்களின் பின் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும் அல்லது 21 நாட்கள் முடிவில் நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

பொலிசும் தரைப்படையும் இந்த தீர்ப்பை நன்றாகப் படித்து இனிமேலாவது அந்தத் தீர்ப்பில் சொன்ன விடயங்களை கவனத்தில் கொண்டு ஒழுகுவார்கள் என நம்புகிறேன்.

இவ்விரு விசேட சட்டங்களும் ஒரு நோக்கிற்காகவே தமிழர்களுக்க எதிராக பாவிக்கப்படுகின்றன. (படுமோசமான நிலையில்). ஆகையால் உடனடியாக பயங்கரவாதச் சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் பயங்கரவாதத்தை தடை செய்வதைவிட்டு பயங்கர வாதத்தை உருவாக்கி இருக்கின்றது.



# CHEEDANAM (DOWRY) IN THESAWALAMAI AS CONSIDERATION OF MARRIAGE

*Mrs. K. Nagendra*
B.A. (Cey), L.L.B (Cey)
Attorney-at-law

*Cheedanam* like dowry in its original form in Roman, Roman Dutch, Hindu, Kandyan or Muslim laws served as a means of sustaining the burdens of marriage. Coomarsamy writing about the origins of *Cheedanam* says that "When therefore a daughter of the early settlers (from Malabar coast) married she was according to the custom that prevailed among them in their former place of abode, Malabar, provided with a separate house, other landed property, implements of husbandry, household utensils etc suitable to her position in life". (Hindu organ 21/12/33)

The concepts have changed with the times. The *Thesawalamai* code quite loudly pronounces that,"it is by this means that most of the girls obtain husbands as it is not for the girls but for the property that most of the men marry". (Code 1:5) The judiciary accepted and followed the code for Judge Burleigh observed" , "Young men marry here (Jaffna) solely to obtain a dowry"- (Mutukishna's *Thesawalamai*). Dowry a consideration of marriage is not peculiar to *Thesawalamai*. It was regarded similarly in the Genéral law and other indigenous laws of Sri Lanka.

*Cheedanam* in *Thesawalamai* can be given very early before marriage, when marriage was not in contemplation. (*Thambapillai v Chinnathamby* 18 NLR 348 at 350) Ennes J had authority from the code when he held so far it says, "*Cheedanam* may be given "when the daughters are able to marry" (Code 1:11) and can be increased "in order that such bride makes a better marriage". Courts have followed the principle that it could also be given after marriage, long after the husband himself had died. (Pathmanathan V Aiyathurai 74 NLR 331) Alles J here declared the grant to be a subsequent fulfillment of an earlier obligation to dower and that it satisfied the requirements of being a consideration of marriage.

It is proposed to examine in this article the process by which this provision for a new household developed to become a consideration of marriage. This process can be conveniently considered in two perspectives. Firstly on a historical and ethnological standpoint and secondly as a conscious development.

To consider firstly from the historical and ethnological stand point, traditional accounts of the history of Jaffna speak of two colonizations of Jaffna.The first was from the Malabar coast, the areas which formed the ancient kingdom of Kerala.These earlier settlers were organized in a matriarchal society and governed mainly by the Marumakkalthayam. Their customs and usages formed the groundwork of the law of *Thesawalamai* and as mentioned earlier the origin of *Cheedanam* can be traced to the point when the daughter on marriage was made certain provisions with which she started the branching off of a Tarward (parents' communal property unit) into a Tavazhi illam with her

husband as Karnavan. (Coomarasamy Hindu organ 21.12.33)

The second wave of colonization in the middle of the 13th century was from the Coromendal coast when Aryachakravarty established a kingdom in Jaffna. (Coomarasamy, –Hindu organ 19-06-33) These Tamils from the Eastern coast followed rules of inheritance based on patriarchal descent largely due to Brahminical influence . When they came over to Jaffna they brought with them their custom and usages based on a patriarchal system of society. In the state of society where the woman was the common ancestress the man-the father or son- did not occupy a place of importance. But in the patriarchal system of society based on the joint family system and influenced by Hindu Law the man became the head and manager of the family thereby degrading woman to a subordinate position with the role of the preservation of the species through reproduction and care of the family. It should be also noted that the sift of emphasis from communal, or to be more precise, joint to private or individualistic property could have been condusive to the receipt and development of patriarchal values in Jaffna. With the marriage of a daughter the Tavazhi illam became the primary unit of production. Since the early Jaffna society was very largely agrarian the responsibility of production fell on the man and as a matter of course considerable authority was lodged on him. He therefore becomes the head and the manager of it. Male dominance is characteristic of the institution of patriarchy and it has been suggested by researchers that patriarchy became rooted in a society since the advent of agrarian societies. These subsequent colonists were not able and did not make an overall change in the matriarchal structure of society which had by then became firmly rooted. *Cheedanam* had become an accepted practice as shown in the in code which provides that the sons should not claim anything till the last daughter was married and that they can take from their parent's property only "if anything remains after dowrying the daughters (1:9). The importance placed on dowrying of daughters does not seem out, of place in a matriarchal society. It is interesting to note that even after the impact of patriarchal influence granting dowry to daughter continues to take precedence over the son's interests. All that the subsequent settlers could do was to adopt the customs and usages of the original settlers with certain alterations which suited their patriarchal instincts. It is pertinent to add here what Sir Pollock had to say about the maternal system coming into contact with the paternal system. He says, "So far as evidence has gone, the maternal system appears to be unstable when people who live under it come into contact with paternal families: in such cases the husband's predominance pretty soon begins to assert and reassert itself" (note written in Ancient Law by Sir Henry Maine (1920) at page 180).It needs to be stressed that the patriarchal system is perhaps the foremost institution to be inspired by male dominance and female inferiority. This feature is very true in the context of India and Sri Lanka where the manifestation of patriarchy is demonstrated in the demand for dowry as consideration of marriage. Thus what was originally a voluntary contribution by the parents became to be linked with something given to man for taking the woman as his wife.

The *Thesawalamai* code reflects the mood when it depicts dowry as a consideration of marriage (1:5) Rengan Sheel is of opinion that it is the Brahmin ideas which led to the preference for dowry marriage as against the Asura form of marriage based on brideprice where the person who gives the woman in marriage receives consideration for it. Dowry is essentially a bride-groom price and it became an essential ingredient of Hindu marriages.

(Institutionalization and expansion of dowry system incolonial India) This was so because the Brahmins arrogated to themselves exclusive privileges and when that happened women's freedom and status began to contract.

In Hinduism the wife is directed to walk behind the husband "in his shadow" and the son is believed to nuture the parent's soul. He is considered in dispensable in performing the funeral rites though the more overt forms of subjugation overt of Hindu women based on Brahmin ideas like widow seclusion prohibition on widow marriages, 'Sati', female infanticide and the like did not penetrate into the Jaffna society whose religious philosophy is Saivasim and not Brahmanical Hinduism on the Indian model. Quite a few Brahminic concepts like the superiority of the male species and their indispensability in certain rituals have found acceptance especially amongst the high caste Hindus.

Thus what originated in a matriarchal society as an onerous practice, without any coercive overtones intended for the well-being of the women and her family, has, developed to be an indispensable ritual in marriage alliances working very much to the detriment of the woman, her family and the society at large.

Secondly *Cheedanam* as consideration of marriage can be said to be a part of the process of conscious development. H.W.Thambiah using the words of Sir Henry Maine marking by example the earliest code of the Romans, the XII tables, states that once any system of law is codified a process of conscious development takes place. *Thesawalamai* had been subject to modifications during the time of the Portuguese (part1: 2 of the code) long before it came under the influence of the Roman Dutch Law. When the Dutch rulers found the customs not clear, or reasonable, or not provided for, they followed the Roman Dutch Law. This was even before the codification of *Thesawalamai*. Thus it appears that the law that was codified was not the original *Thesawalamai*, but one, which incorporated the modifications made during the Portuguese and Dutch times. (L.J.M.Cooray, An Introduction to the Legal System of Ceylon pg.139)

It is presumable that the concept of *Cheedanam* too would have undergone changes, for, what originated as a provision for the new household is shown in the code as a consideration of marriage. By the time of the codification patriarchal values and the hegemony of the man in the family had been established. It is not surprising that the Dutch codifies who were heirs to the patriarchal tradition of the Romans viewed marriage settlements made by the people of Jaffna as something similar to the dowry under Roman Dutch Law. Thus Dalton J remarked, "having regard to the auspisces under which the collection of laws and customs of Jaffna and by whom it was composed it is difficult to think that the provisions of the Roman Dutch Law did not exercise some influence..........". This view though expressed with regard to Thediathettanm in *Thesawalamai* is equally applicable to *Cheedanam*.

A part from the codifier's the judiciary too was subject to the foreign law influence, namely Roman Dutch Law and English Law.

The impact of foreign law influence, in the decision making process is amply testified by a whole range of judicial pronouncements, as in Thambapillai V Chinnathamby, Kandappa V Veeragathy, and Thesigar V Ganeshalingam, to name a few. We cannot lose sight of the fact that the Judiciary was, then totally, and now over whelmingly male dominated and thus Radhika Coomarasamy very aptly quotes thus "Judges have grown up in a patriarchal culture; their attitudes are inevitably shaped by their life

experience." (Towards a Theory of Law and Patriarchy pg. 120) It would therefore be not incorrect to state that the patriarchal values and principles evinced in Family Law are invariably the product of Sri Lankan courts. The Legislature too had its part in the process when the codified customs took statutory form as the *Thesawalamai* Regulations no.18 of 1806.

Dowry to be a gift in consideration of marriage has to be on a promise of marriage or on marriage itself.(Amarasinghe J-Ranaweera Menike V Rohini Senanayake 92 2SLR 180). Then the conveyance becomes an incentive to marriage and is not an act of mere generosity and liberality. Can *Cheedanam* be so placed? Is it a conveyance to 'tempt' the marriage or to say differently, is the transfer the condition of the marriage? To be so it has to be proved that the transfer was prompted by, or it brought about the marriage. When *Cheedanam* is given on marriage i.e. as consideration for a particular marriage it is easy to conclude it as a consideration of marriage. But *Cheedanam* can be given long before marriage, even before a marriage itself was contemplated (part 1:11 of the Code) or long after marriage even after the husband himself had expired. (Pathmanathan V Aiyathurai 74 NLR331) When given very early before marriage there can be no promise of marriage since no specific marriage itself had been arranged. When given long after though it can be regarded as a subsequent fulfillment of an earlier promise to dower, the person as recipient of the consideration is no more there to receive it. In this sense it is difficult to comprehend *Cheedanam* as a consideration of marriage in the literal sense. This is what perhaps prompted de Sampayo J to say that "he never understood dowry under *Thesawalamai* to mean the same thing as a marriage settlement" (Thambapillai V Chinathamby 18NLR)

Besides for *Cheedanam* to be a consideration of a marriage it must be a gift to the man for contracting the marriage. But *Cheedanam* then and dowry now, new remains the separate property of the wife. Thus *Cheedanam* as consideration is not supported by the proprietary rights that a married woman retains in her dowry. But the realties of the social viewpoint cannot be ignored. The accepted social practice is to identify dowry as a gift to the bridegroom even though it remains the separate property of the wife. The reason perhaps is because the husband derives advantages from the property settled on the wife and during marriage the question of separate property hardly arises. The property in actual fact is under his control and management. In this sense then it cannot be said that it has no valuable consideration for the husband.

Apart from identifying dowry as a gift to the husband we see the emergence of a new social trend, of the practice of giving "Donations" to the bridegroom. Unlike dowry it belongs to the husband and has more in common to the 'Varadakshena' of the Indian type. *Cheedanam* as a practice is despicable and should be rooted out. But it can be defended on the premise that it is a contribution to the support of the marriage and is a means of ensuring that the woman is not totally dependent on the man. But donation is neither. It is nothing more than a commercial transaction in which the parent who makes the highest bid gets the man as husband for his daughter. There is a crying need to prevent such commercialization of marriages. It can be done on the basis that it is contrary to public policy and that it violates the statutory requirements of free consent to contract a marriage.

# சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்படலாமா?

***Mrs. F.R.C. Thalayasingam*** LLM
Senior Assistant Legal Draftsman, Lecturer, Sri Lanka Law College.

தற்போதைய அரசியலமைப்புச் சட்டம் தனி மனிதனொருவரின் உரிமைகளைப் பாதுகாப்பதான பல ஏற்பாடுகளைத் தன்னகத்தே உடையதாக உள்ளது. உறுப்புரைகள் 10, 11, 12(1), 13 என்பன பிரஜைகளது உரிமைகளை மட்டுமல்லாது, தனிப்பட்ட ஒவ்வொருவரது உரிமைகளையும் பாதுகாத்து அவற்றை உத்தரவாதமும் செய்கின்றன. உறுப்புரை 13இன் கீழ் ஒருவரது உரிமை எங்ஙனம் பாதுகாக்கப்படுகிறதென்பதை விளக்கிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒருவர் எதேச்சதிகாரமாக கைது செய்யப்படாமலும், தடுத்து வைக்கப்படாமலும், தண்டிக்கப்படாமலும் இருப்பதை உறுப்புரை 13 உறுதி செய்கிறது. சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடபடிமுறைக்கிணங்கவன்றி ஒருவர் கைது செய்யப்படுதலாகாது என்பதுடன், ஒருவர் கைது செய்யப்படுவதற்கான காரணத்தையும் அறிவித்தல் வேண்டும் என்று உறுப்புரை 13 (1) குறிப்பிடுகின்றது.

ஒருவர் தான் போக விரும்பிய இடத்துக்குப் போக முடியாதவாறு ஒருவரைத் தடைசெய்தலும் உறுப்புரை 13(1) ஐ மீறுதலாகும் என மார்க் பெர்ணாந்து நீதியரசர்(i) கருத்துத் தெரிவித்துள்ளார். சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒருவர் ஏதேனும் குற்றத்தைப் புரிந்துள்ளார் என ஒருவர் கருத்துக் கொள்ளும்போது மட்டுந்தான் ஒருவர் கைது செய்யப்பட முடியும். எந்த வித சான்றுகளுமின்றி, வெறுமனே சந்தேகத்தினை மட்டுமே அடிப்படையாக வைத்து ஒருவர் கைது செய்யப்பட முடியாது. இது தொடர்பில் குலதுங்க நீதியரசர் Seetha Weerakoon(ii) வழக்கில் பின்வருமாறு குறிப்பிட்டார். ''கிளர்ச்சிச் செயற்பாடுகளின் போது, அவற்றைத் தடுக்கும் வண்ணம், தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதும், ஆட்கள் குழுவினரைக் கைது செய்வதும், விசாரணை நடைபெறும் வரை ஆட்களைத் தடுத்து வைத்தலும் அவசியமானதாக இருந்தபோதிலும் எந்த சாட்சியங்களும் இல்லாத ஒருவரை விரைவில் விடுதலை செய்வதும், மற்றவர்களை விரைவில் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டு வருவதும் கூட அவசியமாகும். இதே கருத்து முன்னர் சர்வானந்தா நீதியரசரால் Namasivayam(iii) என்ற வழக்கில் எடுத்துக் கூறப்பட்டது இவ்வழக்கில், பஸ்வண்டி ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த விண்ணப்பதாரர், எவ்வித காரணமும் குறிப்பிடப்படாது கைது செய்யப்பட்டு, பின்னர் பலவந்தமாக பொலிஸ் நிலையத்தில் கூற்றுக்களைச் செய்ய நிர்ப்பந்திக்கவும்பட்டார். அவர் தமது பிரயாணத்தைத் தொடர முடியாதவராக, சுதந்திரம் பறிக்கப்பட்டவருமாக விருந்தார். அரசியலமைப்புச் சட்டத்தினாலேயே அங்கீகரிக்கப்பட்ட இச்சுதந்திரத்துடன் ஒருவர் எப்படிப்பட்டவராகவிருப்பினும், ஏதேச்சாதிகார மாகவோ சட்டநியாயங்கள் இன்றியோ தலையீடு செய்ய முடியாது.

155 ஆம் உறுப்புரையின் பயனாக ஆக்கப்படும் அவசரகால ஒழுங்குவிதிகள் பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சாதாரண சட்டங்களின் செயற்பாட்டை நிறுத்தி வைக்கக்கூடிய அதிகாரத்தையும் கொண்டுள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள அவரசகால நிலையை எதிர் நோக்கியே இவ்வொழுங்கு விதிகள் ஆக்கப்படுகின்றன. இவையும் 'எழுத்திலான

i. Sirisena and Others vs Earnest Perera and Others – 1991 (2) SLR Pg. 97
ii. Seetha Weerakoon Vs Mahendran O.I.C. Police 1991 (2) SLR Pg 172
iii. Namasivayam Vs. Goonewarthan 1989 (1) SLR Pg 401.

சட்டம்' என்னும் வரைவிலக்கணத்துள் வருகின்றன. 'அவசரகால நிலை' என்ற போர்வையின் கீழ், உத்தரவாதம் செய்யப்பட்ட உரிமைகளுக்கு சாவுமணி அடிக்க முடியாது.

அவசரகாலநிலை ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படும் ஒரு செயலைச் செய்யும்போது, அச்சட்டத்தின் கீழ் அது தவறொன்றாகக் கணிக்கப்படும்போது மட்டுந்தான் ஒருவர் அதனை மீறுகிறார் என்ற எண்ணத்தில் ஒருவர் கைது செய்யப்படலாம். வெறுமனே 'சந்தேகம்' என்னும் போர்வையில் அப்பாவி மக்களைக் கைது செய்வதோ, தடுத்து வைப்பதோ, சித்திரவதை செய்வதோ, இயலாததும் நடைபெறக் கூடாததுமான ஒரு விடயமாகும். அங்ஙனம் செய்யப்படும் ஏதேச்சாதிகார செயல்களுக் கெதிராக, பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எமது நீதிமன்றங்கள் பாராட்டத்தகுவிதத்தில் செயற்பட்டுள்ளன.

'சந்தேகத்தின் பேரில்' கைது செய்தல் என்னும் எதிர்வாதத்தில் தங்க முனையும் பொலிசு மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கெதிராக, எமது நீதிமன்றத் தீர்ப்புக்கள் சாட்டையடிகளாக அமைந்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் மிக முக்கிய வழக்காக Vinayagamoorthy$_{(iv)}$ என்ற வழக்கு திகழ்கின்றது.

இவ்வழக்கில் 1994ஆம் ஆண்டு சனவரி மாதம் விண்ணப்பதாரர் சார்பில் சட்டத்தரணி ஒருவரால் 126ஆம் உறுப்புரையின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டது. இவ்வழக்கு பற்றி அறிக்கையொன்று சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் மனித உரிமைக் குழுவொன்றுக்கு பணிப்புரை செய்தது.

இவ்வழக்கில் விண்ணப்பதாரர் 1993 ஒக்டோபர் மாதம், 2ஆந் திகதி ஒரு விடுதியிலிருந்து இராணுவ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அவரது கண்களைக் கட்டி ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்று திசெம்பர் மாதம் வரை அங்ஙனம் கண்களைக் கட்டியே வைக்கப்பட்டார். பின்னர், அவர் இந்திய தூதரகத்துக்கும் பின் உள்ள ஒரு கட்டிடத்திலும் அதன் பின்னர் பனாகொட இராணுவ முகாமுக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து குற்றத் தடுப்புத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டார். அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதாக பிரதிவாதிகள் தெரிவித்தனர். ஆயினும் அரசியலமைப்புச் சட்டத்தின் 11ஆம், 13ஆம், 14ஆம் உறுப்புரைகளின் கீழான தமது அடிப்படை உரிமைகள் பிரதிவாதிகளால் (இராணுவ அலுவலர்கள்) மீறப்பட்டதாக விண்ணப்பதாரர் முறையிட்டார். அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் அவருக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறை பின்பற்றப்பட்டதா என்பதனை நன்கு ஆராய்தல் வேண்டும். பிரதிவாதிகளின் கருத்தின்படி 1993 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் மற்றும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட தவறுகளை விண்ணப்பதாரர் புரியவுள்ளார், புரிந்துள்ளார் மற்றும் புரிவதில் அக்கறையுடையவராயுள்ளார் என்பதனைச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் உண்டு என்னும் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்பதாகும். அவ்வொழுங்கு விதிகளின் 18ஆம் விதியின் படி "ஒருவர் ஒரு தவறைப் புரிந்துள்ளார் என அல்லது புரிய முனைகிறார் என சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் ஒரு இராணுவ அதிகாரி ஒருவர் பிடியாணையின்றி ஒருவரைக் கைது செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலில் ஒருவரைக் கைது செய்து விட்டு பின்னர் அதனை நியாயப்படுத்துவதற்காக விசாரணைகளை மேற்கொள்ள முடியாது. 'சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறை' என்பது "கைது செய்யப்படும் போது" ஒருவர் தவறொன்றைப் புரிந்து கொண்டிருந்தாரா அல்லது கைது செய்யப்படும் ஆள் தவறொன்றைப் புரிவதில் அக்கறை கொண்டுள்ளார் என சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தனவா என்பதைத் தீர்மானித்தல் அவசியம் என நீதியரசர் ஏ. ஆர். பி. அமரசிங்க கருத்துத் தெரிவித்தார். இவ்வழக்கின் விண்ணப்பதாரரைக்

---

iv. Vinayagamoorthy (on behalf of Vimalenthiran) Vs. The Army Commander & Others 1997 (1) SLR Pg 113

கைது செய்தபோது அவர் தவறைப் புரிந்து கொண்டிருந்தவராகவோ அல்லது புரிந்துள்ளாரென்ற தகவல் கைது செய்தவர் அறிந்தவராகவோ இருக்கவில்லை. அவர் தவறைப் புரியக் கூடுமென அல்லது புரிவதில் அக்கறையுடையவராகக் கூடுமென சந்தேகிப்பதற்கான நியாயமான காரணங்கள் இருந்ததாகவோ நீதிமன்றத்தின் முன்னர் நிருபிக்கப்படவில்லை.

உறுப்புரை 13(5) இன் கீழ் ஒவ்வொரு ஆளும் அவருக்கெதிரான குற்றம் நிருபிக்கப்படும் வரையில் குற்றமற்றவராக ஊகிக்கப்படுதல் வேண்டும் எனவே நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்தாத நியாயங்களைக் கொண்டு ஒருவர் கைது செய்யப்படுதலாகாது. அமரசிங்க நீதியரசரின் கருத்துப்படி வெறுமனே பொதுவான சந்தேகத்தின்மீது மட்டுமே விண்ணப்பதாரர் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் அதனை நியாயப் படுத்தலாமென்ற எண்ணத்தில் இங்கு கைது இடம் பெற்றுள்ளதேயொழிய ஏதேனும் நியாயமான காரணத்தினடிப் படையிலல்ல. எனவே 18ஆம் ஒழுங்கு விதியினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறையும் கைது தொடர்பில் பின்பற்றப்படவில்லை.

17ஆம் ஒழுங்கு விதியின் கீழ் ஆக்கப்பட்ட தடுப்புக் கட்டளைகள் விண்ணப்பதாரர் தடுத்து வைக்கப்படுவதற்கான எந்தக் காரணங்களையும் குறிப்பிடவில்லை. தேசிய பாதுகாப்புக் கருதியும் பொது ஒழுங்கு கருதியும் அவரைத் தடுத்து வைத்தல் அவசியம் என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒருவர் என்ன காரணத்துக்காகக் கைது செய்யப்படுகின்றாரோ அல்லது தடுத்து வைக்கப்படுகின்றாரோ என்பது பற்றி அங்ஙனம் செய்யப்படுபவருக்கு அறிவிக்கப்படும்போதுதான் 'ஏற்படக்கூடிய சந்தேகத்தை அகற்றக் கூடியதாக இருக்கும்.

விண்ணப்பதாரர் என்ன காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டார் என்பதோ பின்னர் தடுத்து வைக்கப்பட்டார் என்பதோ அத்தகைய செயல்களைப் புரிந்த இராணுவ உத்தியோகத் தருக்கோ பொலிசு உத்தியோகத்தருக்கோ தெரிந்திருக்கவில்லை. எனவே சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறை பின்பற்றப்படாததனால் 13(1)ஆம் உறுப்புரையின் கீழ் விண்ணப்பதாரரின் அடிப்படை உரிமை, பிரதிவாதிகளால் மீறப்பட்டதென நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

இவற்றுக்கு மேலதிகமாக, 18(1) ஆம் ஒழுங்கு விதியில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க, விண்ணப்பதாரரை அண்மையில் உள்ள பொலிசு நிலையத்துக்குப் பாரப்படுத்தாமல் இராணுவ கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்ததும் சட்ட விரோதமான செயலாகும். 19(4) என்னும் ஒழுங்கு விதியின் கீழ் **அதிகாரமளிக்கப்பட்ட** ஓர் இடத்திலேயே ஒருவர் தடுத்து வைக்கப்பட முடியும். ஆயினும், 19(3) ஆம் ஒழுங்கு விதியின் கீழ் விதித்துரைக்கப்பட்ட காலத்தினுள் விண்ணப்பதாரரை நீதவான் முன்னர் கொண்டு செல்லாததும், அதிகாரமளிக்கப்படாத இடமாகிய பனாகொட இராணுவ முகாமில் தடுத்து வைத்தது உறுப்புரை 13(2) ஐ மீறும் செயலாகும் எனவும் நீதிமன்றம் தீர்த்தது.

வெறுமனே ஜனாதிபதியைக் கொலை செய்ய விண்ணப்பதாரருக்கு எண்ணம் இருந்தது என்னும் கூற்றும் அதன் அடிப்படையில் அவரைத் தடுத்து வைப்பதற்கான கட்டளையை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஆக்கத் துணிந்ததும் கண்டிக்கப்படத்தக்க செயல்களாகும். இது தொடர்பில் நீதிமன்றம் மிகக் கடுமையான கண்டனங்களை அமைச்சுச் செயலாளர் தொடர்பில் பின்வருமாறு எடுத்துக் கூறியது "பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொலிஸின் பணிப்பின் கீழ் செயற்படும் இறப்பர் இயந்திர முத்திரையொன்றாகவும், ஒவ்வொரு வழக்கிலும் தனிப்பட்ட தீர்வுக்கு வராமலும் தடுப்புக்கட்டளைகளை கைச்சாத்திடுவதன் மூலமும் செயல்படுவதனால் 17ஆம் ஒழுங்கு விதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதாகச் செயல்படக் கூடாதெனவும், அவரே தமது சொந்த அபிப்பிராயத்தில் ஒரு முடிவுக்கு வரக்கூடியதாயிருக்க வேண்டும். என்று உயர் நீதிமன்றம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கு நினைவுபடுத்தியுள்ளது." எனவே வெறுமனே அவர் திருப்தியடைந்துள்ளார் என்று கூறி இயந்தர வடிவில் தடுப்புக்கட்டளைகளைக் கைச்சாத்திட

முடியாது. அத்துடன் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படாது, விண்ணப்பதாரர் சட்ட விரோதமாக 142 நாட்கள் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டிருந்தார்.

1993 ஆம் ஆண்டு யூன் மாதம், அவசரகாலநிலை ஒழுங்குவிதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆட்களின் பாதுகாப்பை உறுதி செய்வதினைக் கருத்திற்கொண்டு பல வரவேற்கத்தகு ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வொழுங்கு விதிகள் பின்பற்றப்படவேண்டியது அவசியமாகும். பொதுமக்களின் அடிப்படையான பாதுகாப்புக்களைப் பேணுவதற்காக கடுமையாக அவை பின்பற்றப்படுதலும் வேண்டும் அடிப்படை உரிமை மீறலுக்கான நிவாரணம் இங்கு வழங்கப்பட்டது சந்தேகத்தின் மீது வீணே அப்பாவிப் பொதுமக்களைப் கைது செய்து அவர்களை மனிதாபிமானமற்ற முறையில் நடாத்தி, தமது தான்தோன்றித்தனமான அதிகாரத்தை வேரூன்ற முனையும் அரச மற்ற பொலிஸ், இராணுவ உத்தியோகத்தர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்பதை உணர்த்துவதில் இவ்வழக்கு ஒரு திருப்புமுனையாக உள்ளது.

மிக அண்மைக்கால வழக்கான துழரசடிநவெ புயெறயவால ஏள ஆடைவையசல Officer & others$_{(iv)}$ என்னும் வழக்கு பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தும் இன்னொரு முக்கிய வழக்காகும். இவ்வழக்கின் நிகழ்வுகளின்படி பொறியியலாளரான விண்ணப்பதாரர் தனது அலுவலகத்துக்குப் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது சோதனைசாவடி ஒன்றில் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டார். தேசிய அடையாள அட்டையையும் சருவதேச சட்ட கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையையும் விண்ணப்பதாரர் காண்பித்தார். அவரிடம் பொலிஸ் நிலையப் பதிவு ஆவணம் இருக்கின்றதா என வினவப்பட்டது. அதற்கு விண்ணப்பதாரர், பொலிசுப் பதிவைக் காண்பிக்க வேண்டிய சட்டத்தேவைப்பாடு தமக்கு இல்லை என்று கூறினார். இதனால் ஆத்திரமடைந்த இராணுவ உத்தியோகத்தர் அவரை மேற்கொண்டு பிரயாணம் செய்ய அனுமதிக்காது, ஒரு மணி நேரத்தின் பின்னர் அங்கு வந்த இரு பொலிஸ் உத்தியோகத்தரிடம் ஒப்படைத்தனர். பின்னர் பொலிசு கட்டுக்காவலில் விண்ணப்பதாரர் வைக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் நீதவான் முன்னர் கொண்டு வரப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு, அடுத்த நாள் தான் விடுதலை செய்யப்பட்டார்.

அவரது அடிப்படை உரிமைகள், உறுப்புரைகள் 12(1), 13(1), 13(2), என்பவற்றின் கீழ் பிரதிவாதிகளினால் மீறப்பட்டதாக விண்ணப்பதாரர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இவ்வழக்கிலும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க விண்ணப்பதாரர் கைது செய்யப்படவில்லை. பொலிசு பதிவு அறிக்கையை ஒருவர் கொண்டு செல்ல வேண்டும் என்பது விதியல்ல. அப்படி ஒரு சட்டம் நடைமுறையில் இல்லை. நீதிமன்றம் 50,000/- ரூபாவை நட்ட ஈடாக விண்ணப்பதாரருக்கு வழங்கியது. அதில் 7,500/- ரூபா இரண்டாம் பிரதிவாதியால் செலுத்தப்பட வேண்டுமெனவும் அதுவும் மூன்று மாதங்களுக்கிடையில் செலுத்தப்பட வேண்டுமெனவும் மேலும் கட்டளையிடப்பட்டது.

மேற்கூறப்பட்ட வழக்குகளை ஆராயும்போது சட்டம் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு இருந்து வருவதையும், எமது நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை பெருகி வருவதையும் அறியக்கூடியதாக உள்ளது. இருந்த போதிலும் இன்று ஒருவருக்கு அநீதி விளைவிக்கப்படும்போது பல்வேறு காரணங்களுக்காக மக்கள் நீதிமன்றங்களின் துணையை நாடத் தயங்குகின்றனர். மேற்கூறப்பட்ட வழக்குகள் அத்தகையோருக்கும், ''சந்தேகத்தின் பேரில் ஒருவர் அவசரகாலநிலையின் போது கைது செய்யப்படமுடியும்'', பொலிசு பதிவு அறிக்கையைக் கட்டாயமாக எடுத்துச் செல்ல வேண்டும், என்று எப்போதுமே பயத்துடன் வாழும் மற்றையோருக்கும் ஒரு திறவு கோலாக இருக்கட்டும்

v. 1999 ம் ஆண்டு மே மாதம் 11ந் திகதி தேசிய ஆங்கில 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் அறிக்கையிடப்பட்டது.



# இந்து மதமும் சர்வதேசச் சட்டமும்

வி. ரி. தமிழ்மாறன்
முதுநிலை விரிவுரையாளர் . சட்டத்தரணி
சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

1998 மே மாதம் 11, 12ஆந் தேதிகளில் இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்தி லுள்ள பாலைவனப் பகுதியான பொக்ரன் பிரதேசத்தில் இந்தியா தனது அணுவெடிப் பரிசோதனைகளை நடாத்தியது. இந்தியா என்றால் இந்து மதமும் காந்தியின் அஹிம்சையும் நேருவின் பஞ்சசீலமுமே ஞாபகத்துக்கு வரும் வெளியுலகினரால் இந்தச் சோதனைகளை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. தர்மத்தை, அஹிம்சையைப் போதிக்கும் தத்துவவழி வந்த நாடொன்று அணுக்குண்டுகளுடன் யுத்தத்துக்குத் தயாராக இருப்பதா? கிழக்குக்கேயுரிய அந்த 'மனிதாபிமானம்' எங்கே போயிற்று என்று மேற்கில் எழுந்த குரல்கள் இந்திய தத்துவஞானத்தின்பால் பலரின் கவனத்தையும் மீளவும் திருப்பிற்று. அதன் விளைவுதான் இந்தக் கட்டுரை.

இந்திய ஞானிகளும் தத்துவவியலாளர்களும் ஆண்டாண்டு காலமாக சமாதானத்தையும் சகவாழ்வையும் போதித்து வந்தார்கள் என்பதும் இதன் விளைவாக 'அமைதிவிரும்பி' என்ற நற்பெயரை இந்தியா பெற்றிருந்தது என்பதும் என்னவோ உண்மைதான். ஆனால், இந்தியாவின் அரசியல் சிந்தனைகள் ஆராயப்பட்டால் அவை தொடர்ச்சியான, சமாதானத்தை மேம்படுத்தும் கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்டவையாக இருந்து வந்தன என்று கூறமுடியாது. இதற்கு மாறாக, உதாரணத்துக்கு "இராஜாதிராஜன்" என்ற பதத்தை எடுத்தால், இந்தியாவைப் பொறுத்தளவில் இது "உலகை வெற்றி கொளல்" (sarvabhuma) என்ற கருத்தால் உந்தப்பட்டதாகவும் இதன் இறுதி இலக்கு ஒருவகைப் பேரரசை ஸ்தாபிப்பதாகவும் விளங்கிக் கொள்ளப்பட்டது. அங்ஙனமே சமூகநலன் அல்லது லழபயமளாநஅய றநடகயசந என்பது இந்திய அரசியலில் சமாதானம் (sama) அத்துடன் கடுமுழைப்பு (vyayama) என்ற இரட்டை மூலகங்களின் மொத்த விளைவென்றே விளங்கிக் கொள்ளப்பட வேண்டியிருந்தது. இங்கே கடுமுழைப்பு என்பது சாத்தியமானால் இராஜரிக வழியிலும் (diplomatic way) தேவைப்படின் யுத்தத்தின் மூலமும் ஆட்சியை விஸ்தரித்தல் என்பதையே சுட்டி நிற்கின்றது.

ஒருவன் ஆட்சியாளனாக வந்ததும் அவன் முன்னால் வைக்கப்பட்டுள்ள இலட்சியங்கள் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அந்த இலட்சியங்கள் எப்போதும் முன்னேறத் துடிக்கும் ஒரு மன்னனுடையதாக இருக்கும். தன்னுடைய ஆள்புலத்தை எப்போதும் விஸ்தரிக்கும் இலட்சியமும் தனது அதிகாரத்தை இன்னும் கூடுதலான இடங்களுக்குப் பரப்புவதுமே அவனது கனவாக இருக்க வேண்டும். இதற்குத் தேவைப்படுவன கடும் பிரயாசை, கூடுதல் சக்தி, தந்திரம், தேவையான வளங்கள் என்பனவாகும். வெற்றி கொள்ளும் இந்த இலட்சிய தாகம்

(vijigishu) செயலுருப் பெறுவதற்கு ஆட்சியாளன் மூவகைத் தத்துவங்களைப் பிரயோகிக்க வேண்டும். மந்திரம் என்ற புலமைத் தத்துவம் (intellectual powers), பிரபு என்ற நிதித் தத்துவங்கள் (financial power), *utsaha* துணிச்சல் மற்றும் இராணுவ பலம் (bravery and military power) ஆகிய மூன்று தத்துவங்களும் இந்து அரசியல் நூல்களில் முத்தத்துவக் கோட்பாடு என்று (trishakti) நன்கு அறியப்பட்டுள்ளன.[1]

இன்றைய பதப் பிரயோகத்தை இவற்றுக்குப் பாவிப்பின் இவற்றை ஓர் அரசின் பிரதான வலுக்கள் எனக் கூறலாம்: அரசியற் புலமை, நிதிவள நிறைவு, இராணுவ வல்லமை எனக் கூறலாம். அத்துடன் இம்மூன்றுக்கும் அடிப்படையாக அமைவது Kosha என்ற நிதிவள வல்லமையாகும். ஏனெனில் இதுவன்றி முறையான புலனாய்வுத் துறையையோ இராணுவப் பலத்தையோ தொடர்ச்சியாக வைத்திருக்க முடியாது.[2]

சமாதான முறையில் மன்னன் தனது இலட்சியங்களை ஈட்டுவதை இந்து அரசியல் நூல்கள் கூறும் விதத்தை வைத்துத்தான் புலமைத் தத்துவம் அல்லது இராஜ்யத்திறன் என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். இயன்றளவுக்கு அமைதிவழியில் இராஜ்ய விஸ்தரிப்பை மேற்கொள்வதே இதன் தாற்பரியமாகும். அதாவது, இயன்றளவுக்கு இராஜரீக முறையைப் பாவித்து யுத்தத்தைத் தடுத்தல் என்று பொருள். இது தொடர்பில் தேவகுருவான பிரகஸ்பதியின் கருத்துக்களை ஆதரிப்பதாக மகாபாரதம் அமைந்து கூறுகையில் அரசியல் இலட்சியங்களை எய்துவதில் இயன்றளவுக்கு யுத்தத்தைத் தவிர்த்து மற்றைய மூன்று உபாயங்களையும் பாவிக்க வேண்டும் என்கிறது. புத்திசாலியானவன் ஏனைய வழிகள் பயனற்றபோது மட்டுமே நாலாவது உபாயமான யுத்தத்தை நாடுவான் என்கிறது சாந்திபர்வம் (69.23).

உபாயங்கள் (upayas) நான்கு வகைப்படுகின்றன. இராமாயணத்தில் சுந்தர காண்டத்திலும் மனுவின் தர்மஸாத்திரத்தின் ஏழாவது அத்தியாயத்திலும் சுக்ரநீதியில் நான்காவது அத்தியாயத்திலும் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த நான்கு உபாயங் களும் காலம், இடம் அறிந்தும் எதிரிகளின் தன்மை அறிந்தும் பாவிக்கப்பட வேண்டி யவையாகும்.[3] நான்காவது உபாயமான ஆக்கிரமிப்பு (இது யுத்த வகைப்படும்) என்பதைத் தவிர்த்துப் பார்த்தால் எஞ்சியுள்ள மூன்றும் சாம, தான, பேதம் என்று அழைக்கப்படும். (*Sama*, *dana* and *bheda*).

சாம என்பதன் தற்காலப் பொருள் இணக்க ரீதியிலான பேச்சுவார்த்தை என்பதாகும். ஐ. நா. பட்டயத்தின்கீழ் அரசுகள் கட்டாயமாக சமாதான வழியிலேயே தமது பிணக்குகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் அதற்கான வழிவகைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.[4] இந்த வழிவகைகளில் முதலில் வருவது பேச்சுவார்த்தை தான் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பேச்சுவார்த்தையில் ஐந்து பிரதான விடயங்கள் அடங்கியுள்ளன.

(1) சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் தங்களுக் குத் தாங்கள் செய்து கொண்ட முன்னைய நல்ல விடயங்களை நினைவு கூரல்

(2) வசப்படுத்தப்பட வேண்டிய நபர்களின் தராதரங்கள், செயல்கள் என்பவற் றைப் புகழ்ந்துரைத்தல்

(3) பேச்சுவார்த்தையிலீடுபட்டுள்ள திறத்தவர் களுக்கிடையில் நெருங்கிய உறவினைப் பிரகடனப்படுத்துதல் (இரண்டாம் உலகப் போரின்போது நேச அணி நாடுகள் பேச்சிலிறங்கிய போது பிரிட்டிஷ் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சிலும் அமெரிக்க

ஜனாதிபதி ஃபிராங்ளின் ரூஸ்வெட்டும் உறவினர்கள் என்பது கண்டறியப்பட்டதாம்)

(4) பரஸ்பர எதிர்கால நல்வாழ்வுக்கு வாழ்த்துதல்

(5) விசுவாசத்துக்கும் நட்புறவுக்கும் உறுதியளித்தல்.

தான அல்லது இராஜரீக கொடைகளை வழங்கல் என்பதும் தங்களுக்கிடையில் ஏற்கனவே வைப்பிலிடப்பட்ட பொருட்களை உரியவாறு திருப்பி ஒப்படைத்தலும் முன்னர் உடன்பட்டபடியே ஒழுங்காகத் தவணைக் கட்டணங்களைச் செலுத்தி வருதலுமாகும்.

பேத என்பது கருத்து வேறுபாட்டினால் வேறுபட்டு நிற்றலைக் காட்டுவதாகும். இந்த வேறுபாடு பல்வேறு வழிகளில் ஆழமாக்கப்பட முடியும். எதிராளியின் அமைச்சர்கள், இளவரசன், பிரபுக்கள் மற்றும் உயரதிகாரிகளுக்கு இலஞ்சம் அல்லது அன்பளிப்புகளை வழங்கல், எதிராளிக்கும் அவரது அமைச்சர்கள், பிரசைகளுக்கும் இடையில் அவநம்பிக்கையை உருவாக்குதல், இதற்கென உளவாளிகளையும் கூலியாளர்களையும் பயன்படுத்தல் என்பன இவற்றுள் சிலவாகும். இது தொடர்பில் எதிராளியின் நாட்டிலுள்ள வலிமைமிக்க கூட்டுத்தாபனங்கள் அவற்றின் பிரதானிகள், பேராசை அல்லது விரக்தியுற்றிருக்கும் தனிநபர்கள் என்பவர்கள் இதற்காகப் பயன்படுத்தப்படலாம்.[5]

ஆக, இந்து அரசியல் அறிஞர்கள் மிகவும் யதார்த்தமாகச் சிந்தித்தார்கள். எனவேதான் சமாதானம், சகவாழ்வு என்பவற்றைப் பேணுவதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுவது ஒருபுறமிருக்க, முரண்பாடான நலன்கள், நேசசக்திகளையும் பிரபுக்களையும் பாதுகாக்க வேண்டிய அவசியம், வெகுஜனங்கள் கொடுக்கும் அழுத்தம் மற்றும் காரணங்களால் அரசானது யுத்தத்தில் இறங்க வேண்டியதாக இருக்கும். எனவே அரசனுக்கு வழங்கப்படும் அறிவுரை யாதெனில் அவன் எப்போதும் தனது ஆள்புலங்களைச் சுற்றியுள்ள அரசுகள் பற்றி மிக விழிப்பாக இருக்க வேண்டும். தனது அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கான எல்லா முயற்சிகளையும் கண்டிப்பான முறையில் மேற்கொள்வதுடன் யுத்தத்தைத் தவிர்க்கும் தந்திரத்துடனும் நடந்து கொள்ளல் அவசியம். இதனை mandala கோட்பாடு என்று இந்துமத அரசியல் தத்துவம் கூறும்.

**மண்டலக் கோட்பாடு - அதிகாரச் சுற்றுவட்டம்**

சந்திரகுப்த மௌரியனின் பிரதம அமைச்சரான கௌடில்யன் இந்த மண்டல கோட்பாட்டை முன்வைத்தார்.[6] இக்கோட்பாட்டின் படி, *naya* அல்லது சிறந்த கொள்கை என்ற மரமானது 72 மூலங்களை அல்லது *prakritis* ஐக் கொண்டிருக்கும். இதற்கு அடிப்படையாக அமைவது அயனெயடய அல்லது அதிகாரச் சுற்றுவட்டம் என்பதாகும். இச்சுற்றுவட்டத்துள் 12 அரசுகள் இருத்தல் வேண்டும். இப்போது இந்த ஒவ்வோர் அரசும், saptanga கோட்பாட்டின்படி ஏழு மூலங்களைக் கொண்டிருக்கும். இவற்றுள் ஆட்சியாளன், அமைச்சர்கள், மக்கள், தலைநகர், திறைசேரி, இராணுவம் என்ற ஆறுமே சர்வதேச உறவுகளில் அல்லது இராஜரீக உறவுகளில் விறுவிறுப்பாகச் செயற்படுபவையாகும். எனவே அதிகாரவட்டம் 12 அரசுகளைக் கொண்டிருப்பின் அந்த மண்டலத்தில் உள்ள மூலங்களின் மொத்தம் 72 ஆகும். இதை மறுவிதமாகச் சொல்வதானால் விஸ்தரிப்பு இலட்சியத்தோடு கூடிய ஒவ்வோர் அரசும் தன்னைச் சுற்றி 11 அரசுகள் அல்லது 11 வகையானோர் தன்னை நோக்கியவாறு உள்ளனர் என்பதை எப்போதும் ஞாபகத்தில் கொண்டிருக்க வேண்டும்.

மேற்சொன்ன 11 அரசுகளில் ஏழு முன்னரங்கத்திலும் நான்கு பிற்பகுதியிலும்

அமைந்திருக்கும். இங்ஙனம் முன்னரங்கிலுள்ள ஏழும் *ari* (எதிரி), *mitra* (நண்பன்), *ari-mitra* (எதிரியின் நண்பன்), *mitra-mitra* (நண்பனின் நண்பன்), *ari-mitra-mitra* (எதிரியின் நண்பனின் நண்பன்), *udasina* (நொதுமலன்), *madhyama* (நடுநிலையாளன்) என்று பெயரிடப்பட்டுள்ளன.

பின்னரங்கிலுள்ள நான்கும் parshnagraha (பின்னாலிருந்து தாக்குபவன்), akranda (உதவிக்குரல் கேட்டு துணைக்கோடி வருபவன்), parshnagrahasara (பின்னாலிருந்து தாக்குபவனின் நண்பன்), akrandasara (உதவிக்கு வருபவனின் நண்பன்) என்பனவாகும்.

இங்கே முன்னரங்கம், பின்னரங்கம் என்பவற்றின் பொருள் என்ன? எதிரி, நண்பன், நடுநிலையாளன் என்று வகைப்படுத்துவதற்கு அடிப்படையாக அமையும் கோட்பாடுகள் என்ன? என்பவை விளங்கிக் கொள்ளப்படல் அவசியமாகின்றது.

திசைகளைப் பொறுத்தளவில், குறிப்பிட்ட ஓர் அரசு குறிப்பிட்டதொரு சந்தர்ப்பமெதிலும் பல அரசுகளால் சூழப்பட்டிருக்கும் சாத்தியம் எப்போதும் உண்டல்லவா. இந்நிலையில், எந்த அரசுடன் நட்புறவு முறிவடைந்து அதனுடன் இராணுவ மோதல் அவசியமாக வந்துவிட்டதோ அந்த அரசு இச்சந்தர்ப்பத்தில் நமது பேரரசனின் முன்னரங்கில் முதலாவதாக உள்ளதாகும். இது திக்விஜயம் புறப்படுபவனின் *ari* (பகைவன்) என்று கொள்ளப்படும். அவனுக்கு வேறு பகைவர்கள் இருக்க முடியாதென்று பொருளல்ல. ஆனால் *ari* முன்னாலுள்ளவன் என்பதுடன் முதன் முதலில் தாக்குதலுக்கு இலக்காகப் போகின்றவனாகவும் இருப்பான்

இந்த விவரிப்புக்குப் பின்னர் மண்டல அமைப்பு முறையில் ஏனையவற்றின் திசைகளைக் கண்டறிவதில் சிரமமிருக்காது எனலாம். எதிரிக்கு அடுத்ததாக நண்பன், அதனையடுத்து எதிரியின் நண்பன், நண்பனின் நண்பன், அதனையும் அடுத்து எதிரியின் நண்பனின் நண்பன் என்ற அதிகார வட்டம் அமைகிறது.

இனி எதிர்ப்பக்கத்துக்கு எமது கவனத்தைத் திருப்பினால், *யசை* என்பதற்கு நேர் எதிர்ப்பக்கத்தில் உள்ளது parashnagraha ஆகும்.

| | | |
|---|---|---|
| | Ari Mitra-Mitra | |
| | Mitra – Mitra | Udasina |
| | Ari – Mitra | Udasina |
| | Mitra | Udasina |
| Madhyama | Ari | |
| | **Vijigishu** | |
| | Parshnagraha | |
| | Akranda | |
| | Parshnagrahasara | |
| | Akrandasara | |

இது உண்மையில் எதிரி அரசே என்றாலும் சிறப்புப் பெயர் (பின்னாலிருந்து தாக்குவது) பாவிக்கப்படுவதற்கு விசேட காரணம் உண்டு. இந்த அரசு திக்விஜயம் புறப்படுபவனை நேரடியாகத் தாக்காமல் தகுந்த தருணம் வரும்வரை காத்திருந்து தாக்கும் கபட அரசாகும். இந்தத் தகுந்த தருணம் என்பது திக்விஜயஞ் செய்பவன் வேறு அரசுகளுடன் இராணுவ நடவடிக்கைகளிலீடுபட்டுத் தனது இராணுவ பலத்தைப் பல திசைகளிலும் பரவலாகச் செயற்படுத்தும் வேளையில் வந்து சேருவதாக இருக்கும். இந்த அரசுக்கு அப்பாலுள்ளது arkanda என்பதாகும். இதன் பின்னால் எதிரியின் நண்பனான parashnagrahasara வும் அதற்கும் அப்பால் arkanda வின் நண்பனும் இருப்பார்கள்.

Mandala என்பதில் இன்றும் இரு பதங்கள் இங்கே கவனத்துக்குரியன. அவையாவன madhyama, udasina என்பனவாகும். Madhyama

அரசு என்பது திக்விஜய அரசின் எல்லைகளுடனும் *ari* அரசுடனும் பொதுவான எல்லைகளைக் கொண்டதாக இருக்கும். அத்துடன் இது திக்விஜய அரசுக்கும் *ari* அரசுக்கும் மிக அண்மித்ததாக உள்ளதால் இரண்டுக்கும் உதவி செய்யக் கூடியதாகவும் தேவையேற் படின் இந்த இரண்டில் எதனையும் தனித்தனி எதிர்க்க வல்லதாகவும் இருக்கும். ஆனால் udasina என்பது திக்விஜய அரசுக்கு மிக அப்பால் ari, madhyama அரசுகளையும் கடந்து உள்ளதாகும். ஆனால் மனுநீதிபற்றி கௌடில்யன் கூறுகையில்- udasina வின் ஆள்புலம் எங்கே அமைந்திருக்கிறது என்பது அயனெயடய முறைமையில் அதன் வகையைத் தீர்மானிப்பதில் முக்கியமற்றது என்கிறார். இங்கே எது அவசியம் எனில் திக்விஜய அரசனைப் பொறுத்தளவில் இவனின் நடத்தை எப்படிப்பட்டது என்பதேயாகும்.

திக்விஜய அரசன் பற்றி எவ்வித சலனமுமின்றி இருப்பவன் எப்போதாவது முன்னையவனால் பயன்படுத்தப்படலாம். எனவேதான் இவன் நொதுமலனாகக் கருதப் படுகின்றான். இதுவே மண்டல முறைமையில் அரசுகள் அமைந்திருக்கும் விதமாகும்.

**வெளியுறவுக் கொள்கையும் கேந்திர முக்கியத்துவமும்**

இனி, எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் இந்த அரசுகள் வகைப்படுத்தப் படுகின்றன எனப் பார்ப்போம். மேலே நாம் விவரித்தவற்றிலிருந்து 'புவியியல்' தான் அடிப்படையாக அமைகிறது என ஊகித்திருப்போம். ஆயினும், புவியியல் காரணிகள் முக்கியமானவைதான் என்றாலும் ஏனைய அரசுகளைப் பொறுத்தளவில் தனது நடத்தையைத் தீர்மானிப்பதற்கு இதை மட்டுமே ஒரேயொரு காரணியாகக் கருதப்படு மென்பதில்லை. தன்னுடைய சொந்த நலன்கள் எவையோ அவற்றை வைத்தே இந்த உறவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே, அரசொன்றின் பக்கத்திலுள்ள நாடானது அந்த அரசுக்குப் பகையாக அல்லது போட்டியானதாக இருப்பினும், பொருளாதாரம், கேந்திர முக்கியத்துவம், மற்றும் நலன்கள் என்பன அவ்விரு அரசுகளையும் நண்பர்களாக மாற்றிவிடலாம்.

கௌடில்யனின் வகைப்படுத்தலானது சாத்தியங்களின் அடிப்படையில் கணிப் பிடப்பட்டதாகும். இராஜரீக உறவுகள் என்பதற்கு அவன் புவியியல் காரணிகளையே அடிப்படையாகக் கொண்டான். அதிகாரச் சமநிலை என்ற கோட்பாட்டை முன்வைத்த அரசியல் தத்துவத்தில் புவியியல் காரணிகளே முக்கியத்துவம் பெற்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையானது அந்நாட்டின் புவியியலமைப்பு அடிப்படையில் அமைய வேண்டும் என்பதை மேற்கில் நெப்போலியனே முதன்முதலில் அறிமுகப்படுத்தினான். இக்கொள்கை இன்றுங்கூட முக்கியத்துவம் இழக்காமலேயே இருந்து வருகின்றது.

புராதன இந்தியாவின் கொள்கையாக இருந்து வந்தது யாதெனில் நாட்டின் வெளியுறவுக் கொள்கையானது எத்துணைதான் சமாதான அடிப்படையிலமைந்த தாயினும் அது இராணுவ பலத்தைப் பின்னணியாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். அப்படியாயின் தான் அந்த வெளியுறவுக் கொள்கை பயன்வலுக் கொண்ட தாக இருக்கும். அத்துடன் யுத்தந்தான் அரசுகளுக்கிடையிலான பிணக்குகளின் இறுதி நடுவராக (arbiter) இருக்கவும் முடியும் எனப்படுகின்றது.[7]

எனவேதான் கௌடில்யன் முச்சக்தி (trishakti) என்ற கோட்பாட்டையும் ஆறு யுத்த தந்திரங்கள் (*shadgunas*) என்ற கோட்பாட்டையும் ஒன்றாக இணைத்துக் கொண்டார். இந்த ஆறு யுத்த தந்திரங்களும் வருமாறு: ***Shandhi***

(நாட்டிடை உடன் படிக்கைகள் - இதில் 16 வகைகள் உண்டாம்) *vigraha* (பகைமை நடவடிக்கைப் பிரகடனம்) *asana* (எவ்வித அக்கறையும் இல்லாமல் அல்லது நொதுமல் நிலையில் இருத்தல்) *yana* (தாக்குதலுக்குத் தயாராதல்) *samshraya* (அதிசக்தி வாய்ந்த அரசொன்றுடன் கூட்டுச் சேருதல்) *dwaidhibhava* (ஒருவருடன் சமாதானஞ் செய்து கொண்டு மற்றவருடன் யுத்தத்தைப் பிரகடனப்படுத்தல் அல்லது இராணுவத்தை இரு பிரிவுகளாகப் பிரித்தல்).

மேற்கூறப்பட்ட கோட்பாடு ஒவ்வொன்றும் பிரயோகிக்கப்பட வேண்டியதான சந்தர்ப்ப சூழ்நிலைகளை கௌடில்யன் மேலும் விளக்குகிறார்.[8] இவரின் கருத்துப்படி இராணுவ பலத்தில் குறைந்த அரசானது எப்போதும் சமாதான உடன்படிக்கையையே நாட வேண்டும் (*shandhi*) இராணுவ வலிமை கொண்ட அரசானது யுத்தத்தி லிறங்கலாம் (*vigraha*) எதிரி தன்னைத் தாக்க முடியாதென்றும் அதேவேளை எதிரியை அழிக்க வல்ல பலம் தன்னிடம் இல்லை என்றும் கருதும் ஓர் அரசு அலட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும். அல்லது நொதுமலாக இருக்க வேண்டும். எதிரியின் ஆள்புலத்துக்குள் படை நடாத்த வல்ல பலமும் வழிவகைகளும் உள்ள அரசானது அங்ஙனமே செய்யலாம் தேவைப்படும் பலம் குறைவாக உள்ள அரசு பலம்வாய்ந்த அரசொன்றுடன் கூட்டுச் சேரவேண்டும். இரட்டை வேடமே பயன்தரும் என்பது சூழ்நிலைகளிலிருந்து தெரியவரின் அங்ஙனமே இரட்டை வேடம் போட வேண்டும். (எதிரியை எவ்விதத்திலும் ஏமாற்றலாம் என்றும் இதற்குப் பொருள் கூறப்படுவதுண்டு.

அதிகாரச் சமநிலை (mandala) என்ற கோட்பாட்டை முச்சக்திக் (trishakti) கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி அவற்றை ஆறுவகைத் தந்திரங்களுடன் (shadgunas) ஒன்றிணைத்த பெருமை மௌரியப் பேரரசின் மதியூகியான கௌடில்யனையே சாரும். இவரின் கருத்தில் அரசியல் தந்திரம், நிதிவளங்கள், மற்றும் இராணுவ வலிமை என்ற மூன்றும் மேற்சொன்ன ஆறு வழிவகைகளில் எது அதிகூடிய பயனைத் தருமோ அதனைப் பின்பற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். பெரும்பாலும் பேரரசனாகும் விருப்புடன் செயற்படுபவனுக்கு இந்த அறிவுறுத்தல்கள் அவசியமாகின்றன.[9]

தற்காலத்தில் இதனைப் பிரயோகிப் பதானால் ஐ.நா. பட்டயத்தின் ஏழாம் அத்தியா யத்தின் கீழ் பாதுகாப்புச் சபைக்கு வழங்கப் பட்டுள்ள தத்துவங்கள் யுத்தமே அல்லது ஆயுதப் பாவிப்பே இறுதி நடுவராகும் என்பது வெளிப்படையாகவே வலியுறுத்தப் பட்டுள்ளதைக் கூறலாம். மேலும் இன்றுள்ள நிலையில், இராஜரீகச் செயற்பாடுகள் வெற்றியடைய வேண்டுமாயின் குறிப்பிட்ட நாட்டின் இராஜரீக தகவல் வலிமை, நிதி மற்றும் இராணுவ வளங்கள் என்பவற்றைக் கவனத்திலெடுத்தும் அதிகாரச் சமநிலை (mandala) யில் தனது நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் கணக்கில் எடுத்தும் சம்பந்தப்படும் அரசு செயற்படவேண்டும். எனவே நாட்டின் வெளியுறவுக் கொள்கை (சமாதானம், யுத்தம் அல்லது நொதுமல்) என்பது அந்நாட்டின் புவியியல் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டே வகுக்கப்படுவதன் முக்கியத்துவம் புலனாகின்றது.

சமாதானத்துக்கான புவியியல், யுத்தத்துக்கான புவியியல் என இன்று இராஜதந்திரிகள் வெளியுறவுக் கொள்கையை அலசிப் பார்க்கின்றனர். சமாதானப் புவியியல் என்பது பொருளாதார தங்கியிருப்பை (dependence) அடிப்படையாகவும் யுத்தப் புவியியல் என்பது "அயலானே பெரும்பாலும் அடிக்கடி எதிரியாவான்" என்ற தெளிவுரையிலும் தங்கியுள்ளது.[10]

இராஜரீக சிந்தனையின் வரலாற்றைப் பொறுத்தளவில் முதன் முதலாக, வெளியுறவுக் கொள்கையில் அயனெயடய கோட்பாடானது-வலியுறுத்தி நிற்பதாக ஒரு விடயம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அது யாதெனில், நண்பன்-பகைவன் உறவு (friend – foe relation) என்பதே சர்வதேச உறவுகளை ஒழுங்குபடுத்தும் கோட்பாடா கிறது என்பதே. இந்த உறவு மண்டல அமைப்பிலிருந்து பெறப்படுவதனை மேலே பார்த்தோம். தரப்பட்டுள்ள வரைபடத்தில், கௌடில்யன் எவ்வளவு தூரம் நுணுக்கமாக இந்த நண்பன் - பகைவன் - நொதுமலன் உறவைப் புரிந்து கொண்டிருந்தார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. கௌடில்யன்தான் இக்கோட்பாட்டின் தந்தை என்பதை மேற்குலக அரசியலறிஞர் Schumann தனது நூலில் ஒத்துக் கொண்டுள்ளார்.[11]

**அரசின் உயரிய நலனெது?**

கௌடில்யனின் கோட்பாடுகளை ஊன்றிப் படிப்பவர்களுக்கு உறுதியாகும் விடயம் யாதெனில் அவர் அதிகாரங்கள், உபாயங்கள், கொள்கைகள் என்பவற்றை ஒருங்கிணைத்து அதிலிருந்து ஒன்றிணைந்த சேமநலக் கோட்பாடு ஒன்றை உருவாக்க விரும்பினார் என்பதேயாகும். முறையாகவும் சாதுரியமாகவும் ஒருங் கிணைக்கப்படும் அதிகாரங்கள், உபாயங்கள், கொள்கைகள் என்பன அரசின் சேமநலனுக்குத் தோற்றுவாயாக அமைந்திருந்ததை வரலாறு கண்டிருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு காலத்தில் அரசின் இறுதி இலக்குகள் என்பன சேமநலனின் தரத்தினை அல்லது வகையினைத் தீர்மானிக்கின்றன. எத்தகைய சேமநலனை ஆட்சியாளன் விரும்புகின்றான் என்பதே அவனது அதிகாரங்கள் எத்திசையில் பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்றது.

சில வேளைகளில் அரசின் இறுதி இலக்கு "சமாதானம்" என்றிருக்கலாம். அப்படியாயின் முச்சக்திகளும் மூன்றுவித சமாதான வழிவகை களின்பால் திருப்பப்படும். (sama – dana – bheda). இந்தக் கட்டத்திலேயே இராஜதந்திர விளையாட்டு முழுமையாகச் செயற்படவல்லதாகின்றது.

இங்ஙனமே அரசொன்றின் இறுதி இலக்கு சில சந்தர்ப்பங்களில் 'யுத்தம்' என்பதாக இருக்கலாம். அப்படியிருப்பின் அரசின் முச்சக்திகளும் ஆறுயுத்தக் கோட் பாடுகளை அல்லது யுத்த தந்திரங்களை (gunas) நோக்கித் திருப்பப்பட வேண்டும். கௌடில்யனின் mandala கோட்பாடு இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது.

இந்து அரசியல் தத்துவத்தின் உன்னதம் வெளிப்படும் இடமானது எதுவெனில் இந்து அரசறிவியலாளர்கள் எவ்விடத்திலேனும் எப்போதாயினும் 'நிரந்தர சமாதானம்' என்ற மாயையின் பாற்பட்டவர்களாகச் செயற்பட்ட தில்லை என்பதிலேயே யாகும். இது • நடைமுறைச் சாத்தியமான இலக்கு அல்ல என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். மறுபுறத்தில், அவர்கள் யுத்தமே அடிக்கடி நிகழும் அவசிய முடையது எனத் தேர்ந்திருந்தனர். அதற்குக் காரணம் இல்லாமலில்லை. தன்னைத் தானே பாதுகாத்தல், தனது நலன்களுக்காக வாதிடல் என்பன காரணமாக அரசொன்று வரலாற்றில் தான் இடம்பிடிப்பதற்காக ஆக்கிரமிப்பு மற்றும் விஸ்தரிப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தேயாக வேண்டிவரும். அப்படி வரும்போது யுத்தமும் தவிர்க்க முடியாததாகிவிடும். அரசுகளைப் பொறுத்தளவில் அன்றிருந்த மாற்றீடு என்பது விஸ்தரி அல்லது அழிந்துபோ (expand or extinct) என்பதேயாகும். எனவே துணிச்சலும் ஆசையுமுள்ள ஆட்சியாளனின் கனவும் நனவும் 'விஸ்தரிப்பு' பற்றியதாகவே இருக்கும். எனவே இதற்காக அவன் யுத்தக் கலையில் தேறியேயாக வேண்டும்.

ஆனால், யுத்தம் என்பது இந்து அரசியல் தத்துவத்தின்படி ஓர் உயிரியல் மற்றும் அரசியல்

அவசியத் தேவையாக இருந்தது. இதனை இயன்றளவுக்கு மனிதாபிமானத்துடன் நடாத்தவே அவன் முனைந்தான். இராணுவ மோதலுக்கென அவ் வேளையில் இரண்டு விடயங்கள் நியாயப்படுத்தலுக்காகத் தேவைப்படுத்தப்பட்டன. அதாவது யுத்தத்தின் நோக்கம் தர்மவிஜயமாக (dharmavijaya) இருக்க வேண்டும் என்பதுடன் அது ஒரு தர்மயுத்தமாகவும் (dharmayuddha) பொருதப்பட வேண்டும் என்பதாகும். இது மேற்குலகில் பின்னர் just war என அறியப்பட்டது.

தர்மவிஜயம் என்பது வெற்றி ஒன்றை அல்லது வெற்றிக்கான முயற்சிகளைக் குறிக்கின்றது. இது ஏனைய ஆட்சியாளர்களைக் கேவலப்படுத்தவோ அல்லது கொடுமைப்படுத்தவோ நடாத்தப்படுவதல்ல. திசைகளை வெற்றிகொள்ளல் என்பது சட்ட ஆட்சியை (dharma) நாகரீக உலகின் கடைசிக் கோடிவரை விஸ்தரிக்க எடுக்கப்படும் முயற்சியே என விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும். சாதாரண ஆட்சியாளன் ஒருவன் தனக்குள்ள பணவேட்கை, அதிகார வெறி என்பன காரணமாக மேற்கொள்ளும் படையெடுப்புகளும் தர்மயுத்தமும் வேறானவையாகும். இவற்றுக்கிடையிலான உண்மையான வேறுபாடு வெற்றியின் நோக்கம் என்ன என்பதில் தங்கியுள்ளது. தர்மத்தை விஸ்தரித்தல் என்றால் அதுவும் அதனை நாகரீகக் குறைவுடைய நாடுகளுக்கு விஸ்தரிப்பதாயின் பொருத்தமாவதுடன் கீழ்நிலையிலுள்ள அல்லது பலங்குறைந்த மக்களைச் சுரண்டுவதாயின் பொருத்தமின்றி அமைகின்றது.

### தர்மயுத்தம் நடக்கத்தான் வேண்டும்!

சட்ட ஆட்சியின் அல்லது *Dharma* வின் ஆளுகை எல்லையை விஸ்தரிக்கும் அவசியம் என்பது Dharma என்ற எண்ணக்கருவின் உள்ளார்ந்த பொருளாகும். அறவியற் சட்டம், நீதி என வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் பொருள் ஒன்றே தான். எப்படி எனப் பார்ப்போம்.

ஒரு சிலருக்கு மட்டும் நீதி கிடைக்கச் செய்துவிட்டு ஏனையவர்களுக்கு அதை மறுப்பது அநீதியான நடத்தையாகும். எனவே தர்மம் பரவ வேண்டுமானால் அல்லது சட்ட ஆட்சி பரவவேண்டுமானால் அல்லது எல்லோருக்கும் நீதி கிடைக்க வேண்டுமானால் அரசன் தன் ஆளுகையை விஸ்தரித்துக் கொண்டே போகவேண்டும். அரசொன்று தோன்றுவதற்கான அறவியற் பரிணாமமும் அதனது நியாயாதிக்க விஸ்தரிப்பும் ஒன்றோடொன்று இயைந்து செல்வன என்பதுடன் ஒன்றிலொன்று தங்கியதுமாகும். இதன்படி பார்க்கின் எமது அறவொழுக்கம் மேம்பட மேம்பட எமது ஏற்கை அல்லது இணைவு உணர்வும் (affiliation) தனது எல்லைகளை விஸ்தரிக்கின்றது என்றாகும்.

இதன் விளைவாக, உயர்ந்துவிட்ட எமது அறவியல் உணர்வு எமக்குச் சொல்வதென்ன வெனில் குறுகிய மனமுடையதாயிருத்தல் ஒழுக்கக் கேடானதாகும் என்பதையே. எமது சொந்தப் பிரசைகளான ஒரு சிலருக்கு மட்டும் நீதியாக இருத்தல் அநீதியானதாகும். எனவேதான் அரசு தேவைப்படுகின்றது. அதன் விஸ்தரிப்பும் அவசியமாகின்றது. அரசு தனது செயற்பாட்டுப் பரப்பளவை விஸ்தரித்துக் கொண்டு போய் முழு மானுடத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட வேண்டும். இதுவே அரசு என்ற எண்ணக்கருவில் உள்ளார்ந்த அம்சமாக மிளிர்வதாகும். அரசு என்ற கருத்தின் தர்க்கரீதியான வளர்ச்சி உலகளாவிய அரசொன்றை உருவாக்கும் கருத்தை நோக்கியதாகவே செல்லும். சமாதானம் என்ற ஒரு வெண்குடைக் கீழான முழு உலகம் Ekachchatra என்று பொருள்படும். இதுவே இறுதி இலக்கான அரசாக அமையும்.

ஐ.நா. பட்டயத்தின் இறுதி இலக்கும் இதுதான். அதுமட்டுமன்றி சட்ட ஆட்சி நிலவும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக அரசுகள்

வன்முறையைப் பாவிப்பதும் பட்டயத்தின் கீழ் அனுமதிக்கப்படுகின்றது. தென்னாபிரிக்கா, சிம்பாவே, நமீபியா, பாலஸ்தீனம் போன்ற நாடுகள் வன்முறையின் துணை கொண்டே சுதந்திரம் பெற்றன. ஆனால் அவை ஜனநாயகத்தை நிலைநாட்டும் முயற்சி என்பதால் ஐ.நா.வின் முழு ஆதரவையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், அமெரிக்கா தான் மேற்கொண்ட படையெடுப்புகள் சிலவற்றை (கொரியா, வியட்நாம், கியூபா, நிக்கரகுவா, பனாமா, கிரனடா, குவைத்) நியாயப்படுத்த- ஜனநாயகத்தை ஸ்தாபித்தல் என்ற வாதத்தை முன்வைத்தமையும் ஞாபகமிருக்கலாம்.

தர்மவழியிலான யுத்தத்தை மேற்கொண்டு வெற்றியீட்டுவதை இந்துமதம் ஊக்குவிக்கின்றது. அதையே அரசனுக்கு இலட்சணமாகவும் இந்துமதம் கூறுகிறது. ஆனால் 'தர்மவழி' என்பதில் காலப்போக்கில் கருத்து வேறுபாடுகள் தோன்றின. யுத்தமும் வெற்றிகொளலும் அரசின் அவசியமான பணிகளாகக் கருதப்படினும் வெற்றியை நியாயப்படுத்துவதிலும் கொண்டாடுவதிலும் சில நிபந்தனைகள் முன்வைக் கப்பட்டன. இதில் முதலாவது நிபந்தனை வெற்றியாளன் (vijigishu) தோற்றுப் போனவனின் ஆள்புலத்தைத் தனது நாட்டுடன் இணைக்கக் கூடாது. அத்துடன் அவன் குடும்பத்தை அழிக்கவோ அல்லது அந்த ஆள்புலத்துக்குள் குழப்பங்களை உருவாக்கவோ கூடாது.[12]

**உயர்வுதரும் ஒழுக்கமெது?**

உண்மையில், வெற்றியாளனின் மேலாண்மையை (suzerainty) முறைப்படி அங்கீகரித்தல் மட்டுமே வெற்றியாளனைத் திருப்திப்படுத்த வேண்டும். அதுவே அவனது முயற்சிக்குக் கிடைத்த விருதுமாகும். தோற்கடிக்கப்பட்டவன் தனது கீழ்ப்படிவைக் காட்டுவதற்காக காலத்துக்குக் காலம் வெற்றியாளனுக்கு சிறுதொகைப் பணம் செலுத்திவரல் வேண்டும்.[13] ஆள்புலத்தை இணைத்தல் அவசியமாக இருக்கையில் அல்லது எதிரியின் ஆள்புலத்தை ஆக்கிரமித்திருக்கும் போது வெற்றியாளன் அந்த ஆள்புலத்தின் சட்டத்தையும் உள்ர் வழக்காறுகளையும் மதித்து நடக்க வேண்டும். மக்களைக் கொடுமைப் படுத்தவோ சொத்துக்களை நாசப்படுத்தவோ கூடாது. குறிப்பாக பெண்குலத்தை அவமானப்படுத்தக் கூடாது.[14] அங்ஙனம் நடப்பின் அது mandala அல்லது அதிகாரச் சமநிலையை சீர்குலைத்து விடும் என்று கௌடில்யன் எச்சரிக்கின்றார்.

திக்விஜயம் பற்றிய இந்து தத்துவத்தின் இரண்டாவது நிபந்தனையானது யுத்தத்தின் அநாவசிய விளைவுகளை இயன்றளவுக்குக் குறைத்து விடும் நோக்கிலான தாகும். இதன்படிக்கு, திக்விஜயமானது இயன்றளவுக்கு மனிதாபிமான முறையில் கொண்டு நடாத்தப்படவும் நிறைவேற்றப்படவும் வேண்டும். முற்றிலுமே அமைதி விரும்பியான அரசனாக இருத்தல் என்பது நடைமுறையில் சாத்தியமாகாது என்பதை முதன்முதலில் இந்து தத்துவமே நிறுவியது. அசோகச் சக்கரவர்த்தி (கி. மு. 237) இதற்கு விதிவிலக்கானவர் எனச் சிலர் கருதுகின்றனர். ஆன்மீகத் தலைவர்களே ஆயுத குருவாகவும் இருந்ததைப் புராண, இதிகாசங்களில் பார்க்கின்றோம் அல்லவா. அவர்கள் ஆன்மீகத்தின் பெயரால் எதைத் துறந்தாலும் ஆயுதபலத்தைத் துறக்காதவர் களாகவே இருந்துள்ளனர். (உ+ம்: பரசுராமன், வீட்டுமர், துரோணர், கிருபாச்சாரியார், விதுரன் ஆகியோர்). யுத்தம் நடாத்தப்படவே வேண்டும் என முதன்முதலில் வலியுறுத்திய மக்கள் இந்திய மக்களாகத்தான் இருக்க முடியும் என்பது வரலாறு. ஆனால் கௌரவம், தீரம், மனிதாபிமானம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டே யுத்தத்தை நடாத்த வேண்டும் என்றே இந்து மதம் போதித்தது.

இங்ஙனமாக, தர்மயுத்தத்துக்கான இலட்சியங்களுடனேயே இந்து மன்னர்கள் ஆட்சி நடாத்தியுள்ளனர். இந்து மரபு வழியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலட்சியங்களி லிருந்து விலகி நின்று மன்னன் யுத்தம் நடாத்தினால் மக்கள் அதை ஏற்கமாட்டார்கள். இருப்பினும், ஏமாற்று, கொடூரம், நியாயமற்ற வழிமுறைகள் என்பவற்றின் மூலம் யுத்தம் நடாத்தப்பட்டுள்ளது என்பது இரகசியமல்ல. உண்மையில் புராதன இந்தியாவில் இத்தகைய *Kutayuddha* ஊக்குவிக்கப்படாவிட்டாலும் சகிக்கப்பட்டமைக்குச் சான்றுகளுள.[15] தர்மயுத்தத்தில் கூறப்படும் விதிகளும் மட்டுப்பாடுகளும் இங்கே கைவிடப்படுகின்றன. மிகவும் இக்கட்டான நிலையிலும் சுயபாதுகாப்புக்காகவும் இம்முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எப்படியிருப்பினும், தோற்கடிக்கப்பட்ட பகைவரை நடாத்தும் விதம் தொடர்பான திட்டவட்டமான விதிகள் இருந்துள்ளன. கொள்ளையிட்ட பொருட்களைப் பகிர்ந் தளித்தல், காயப்பட்டோரையும் பலவீனமானோரையும் பராமரித்துப் பேணல் என்பன இந்து அரசியற் சிந்தனையின்பால் உதித்த அதீத யோசனைகள், நாகரீகம், சகிப்புத் தன்மை என்பவற்றிலிருந்து பிறந்தவைதான். மகாபாரதத்தின் பீஷ்மபர்வத்தில் தர்மயுத்தத்தின் இலட்சியங்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. வெற்றியாளர்கள் தமது இராணுவத்தின் மூலமும் திறமையின் மூலமும் மட்டுமன்றி சத்தியத்தன்மை, கொடூரத்திலிருந்து விடுபட்டிருத்தல், தர்மத்தை அனுஷ்டித்தல், மற்றும் சக்திவாய்ந்த செயல்கள் என்பன மூலமும் வெற்றியைக் குவிக்கின்றனர் என பீஷ்மபர்வம் குறிப்பிடுகின்றது.[16] இதே இதிகாசம் கூறுவதாவது 'தர்ம' விதிகளின்படி யுத்தஞ் செய்து இறப்பது கபடத்தனமாகவும் பாவச் செயல்களினாலும் வெற்றி பெறுவதை விடச் சாலச் சிறந்ததாகும்.[17]

**மனிதாபிமானச் சட்டம் இதுதான்**

புராதன இந்தியாவில் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட யுத்த விதிகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

(1) எதிராளியும் ஒரே விதமாக ஆயுதந் தரித்தும் இராணுவ தளபாட வசதியுங் கொண்டிருத்தல் வேண்டும். (அதாவது காலாட்படை வீரன் எதிரியின் காலாட்படை வீரனுடன் மட்டுமே மோத வேண்டும்- குதிரைப்படை வீரன் குதிரைப்படை வீரனுடன் மட்டுமே மோத வேண்டும்).[18]

(2) யுத்தத்தின் போது ஒருவன்:

- (அ) ஏற்கனவே மற்றொருவனுடன் யுத்தத்திலீடு பட்டுள்ள ஒருவனை
- (ஆ) யுத்தத்திலிருந்து மீண்டு செல்லும் ஒருவனை
- (இ) ஆயுதமின்றி அல்லது குடிநீரின்றித் தவிக்கும் ஒருவனை
- (ஈ) தன்னை மன்னித்து விடும்படி கைகூப்பி இரந்து நிற்கும் ஒருவனை
- (உ) தலைமயிர் குலைந்து தலைவிரி கோலத்தில் உள்ள ஒருவனை
- (ஊ) களைத்துப் போய் உட்கார்ந்து கொண்டு 'நான் உன்னுடையவன்' என்று கூறும் ஒருவனை
- (எ) தப்புவதற்காக ஓடிப்போய் மரத்திலேறியிருக்கும் ஒருவனை
- (ஏ) தன்னை ஒரு பிராமணன் எனப் பிரகடனப்படுத்தும் ஒருவனை
- (ஐ) பார்வையாளனாக நிற்கும் ஒருவனை
- (ஒ) தூதுவன் அல்லது தகவல் பிரதிநிதியாக உள்ள ஒருவனை
- (ஓ) பெண், தேர்ச்சாரதி, பிள்ளை, வயோதிபன் ஆகியோரை

(ஔ)நிர்வாணமாக அல்லது ஆயுதமிழந்து அல்லது பயந்துபோய் அல்லது காயப்பட்டு நிற்கும் ஒருவனை

கொல்லவே கூடாது என்று இராமாயணத் திலே கூறப்பட்டுள்ளது.[19]

(3) மோதலிலீடுபடாதவர்கள் மானபங்கப்படுத் தப்படாது தத்தமது சொந்த வேலையை அமைதியான முறையில் தொடர அனுமதிக்கப்பட வேண்டும். அயலில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது உழுதுகொண்டு நிற்பவன் தொடர்ந்தும் உழுவதற்கு வழியிருக்க வேண்டும். எத்தகைய அச்ச உணர்வும் அவன் மனதில் எழக்கூடாது. ஏனெனில் மோதலில் ஈடுபட்டுள்ளவர்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களைத் தாக்கிச் சீரழிக்கமாட்டார்கள்.

(4) பொதுவாகக் கூறுவதாயின் சூரியன் மறைந்த பின் யுத்தம் புரிதல் தடைசெய்யப் பட்டிருந்தது. இது தொடர்பிலும் மகாபாரதம் தெளிவான விளக்கந் தருகின்றது. இருள் கவிந்ததும் கௌரவர் பாசறைக்குப் போன குந்தி சேனாதி பதியான கர்ணனைச் சந்தித்து அவனை அவனது சகோதரர்களுடன் (பாண்டவர்கள்) இணைந்து விடுமாறு தூண்டுகிறாள்.

(5) துரோகத்தனமான அல்லது இரகசியமான ஆயுதங்களைப் பாவிப்பதை மனு தடுக்கின்றார். முள் பொறிக்கப்பட்ட, நச்சுத் தன்மை வாய்ந்த, நெருப்புக் கக்கும் ஆயுதங்களும் அவரால் தடுக்கப்பட்டிருக்கின்றன.[20]

(6) எதிரி வீரனாயினும் அவன் காயப்பட்டு விட்டால் அவனுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும். காயங்கள் ஆறியதும் அவன் விடுவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.[21]

(7) சிகிச்சை நிலையங்கள், உதவிச் சேவைகள் என்பனவும் புராதன இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. இவை இந்து மதம் கூறும் யுத்த நெறிகளில் முக்கிய இடம்பெற்றிருந்தன.

ஆனால் கௌடில்யன் கூறுவதன்படி மருத்துவர்கள் சத்திர சிகிச்சை கருவிகள், மருந்துகள், சுகமாக்கும் எண்ணெய்கள், மருந்து கட்டும் துணிகளைக் கையில் ஏந்திய வண்ணமும் பெண் தாதிகள் படையினரது உணவு, குடிநீர் என்பவற்றைக் காவிக்கொண்டும் படையினருக்கு உற்சாகமளிக்கும் வார்த்தைகளைப் பேசியவண்ணம் அவர்களைப் பின்தொடர வேண்டும். இவர்கள் ஆயுதந் தரித்திருக்கக் கூடாது என்பதுடன் போர்வீரர்களால் மானபங்கப் படுத்தப்படவும் கூடாது. வீதிகள், பாலங்கள், கிணறுகள், இயந்திரங்கள், மிருக உணவுகள் என்பவற்றை உரிய விதத்தில் யுத்தம் நடக்கும் இடத்தில் வைத்திருப்பதற்காகக் கூலியாட்களும் வேலைக்கமர்த்தப்படலாம். இவர்கள் காயப்பட் டோரைக் களத்திலிருந்து அப்புறப்படுத்தவும் உதவலாம்.

**முடிவுரை**

ஆக, இந்து தத்துவத்தின்படியான சர்வதேச உறவுகள், சர்வதேசச் சட்டம், இராஜரீகம் என்பவை குறிப்பிட்ட சில உயரிய இலக்குகள், மனிதாபிமான நடைமுறை கள் என்பவற்றைப் பேணுவதற்கு இயன்றளவு முயற்சித்திருப்பதை உதாரணங்களுடன் பார்த்தோம். இவற்றில் மிக உயர்வான சிந்தனைப் போக்கும் அபரிதமான சுயத்துவமும் புதைந்து கிடப்பதைப் பார்க்கலாம்.

மாறாக, மேற்குலகச் சிந்தனைப்படியான சர்வதேச உறவுகள், சட்டம், இராஜரீகம் என்பன 16ஆம் நூற்றாண்டின் பின்பே கிளைத்தவையாக

இருப்பதையும் வேறுசில இந்த நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் வளர்க்கப்பட்டவையாகவும் இருப்பதை அவதானிக்கலாம். ஐ. நா. அமைப்பு மூலம் அனைத்துலக மட்டத்திலான செயற்பாடும் அதற்கு ஜனநாயகத்தை முன்னிறுத்திப் போரிடுவதும் 1945க்குப் பிற்பட்ட செயற்பாடு கள். மனிதாபிமானச் சட்டங்கள் 1949இன் ஜெனிவாச் சமவாயங்கள் (Conventions) மூலமும் 1977இன் பின்னேடுகள் (Protocols) மூலமுமே அறிமுகமாகின. இவை அச்சொட்டாக கௌடில்யனும் மனுவும் விதித்திருந்ததையே சட்டமாக விளம்பி நிற்கின்றமை ஆச்சரியங்கலந்த பெருமையையே தருகின்றது எனலாம்.

**முடிவுக் குறிப்புகள்:**

1 Kautilya, *Arthashastra*, VI-2.

2 *Arthashastra* IX.1.

3 *Vishnudharma Sutra* – III, 38.

4 Articles 2(3), 33 of the UN Charter.

5 *Arthashastra* XI.1. and 1.14, *Sukranithi* IV.1. 25 54.

6 *Arthashastra*, VI-2, *Manusmiti* VII, 154 - 211.

7 Kautilya VII.1; Manu VII.160.

8 *ibid.*

9 *Arthashastra* VIII.3.

10 *ibid.*

11 Schumann, ***International Politics*** (1948), p. 379.

12 *Vishnudharma Sutra* III, 42 at 47-49.

13 *Shukraniti* IV, 7.373.

14 *Yajnavalkiya* I. 342-343.

15 *Mahabharata* XII. 140, *Kautilya* X.3.

16 *Bhisma Parva*, 21.10.

17 *Shanti Parva* 95, 17-18.

18 *Mahabharata Bhisma Parva* I. 27-32.

19 *Ramayana* VI.18. 27-28,31.

20 *Manu* VII. 90-93.

21 *Shanthiparva* 95. 13-14.

## ஒருமைப்பாடு

பேத உயர்வினால் தான், உலகில் பயமும் பகைமையும் வளர்கின்றன. பயமற்ற அன்பு வாழ்க்கையில்தான் இன்பம் இருக்கிறது. அந்த இன்பத்தை அடைவதற்கு ஆன்மநேய ஒருமைப்பாடு ஒன்றைத்தவிர இரண்டாவது வழி இல்லவேயில்லை.



# பிள்ளைகளுக்கான நீதிமன்ற அமைப்பு

எஸ். துரைராஜா L.L.B., L.L.M., D.F.M.S.
Attorney-at-Law, Lecturer of Law, State Counsel

அண்மைய கால கட்டத்தில் பிள்ளைகள் துஷ்பிரயோகம் என்பது உலகமெங்கிலும் பாரிய உணர்வலைகளை தோற்றுவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை, 1924ஆம் ஆண்டு சிறுவர்கள் உரிமை தொடர்பாக எழுப்பப்பட்ட பிரகடனங் களைக் கருத்தில் கொண்டு 1959ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி பிள்ளைகள் உரிமை பட்டயத்தை நிறைவேற்றியது. அதன் பின்னர் பல நாடுகள் இந்த உரிமைப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டு பங்குதாரர் களாகியன. இலங்கையும் இதில் பங்குதாரர் ஆகியதோடு மாத்திரமல்லாமல் அது தொடர்பாக அந்த உரிமைப் பிரகடனத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஏற்றுக் கொண்டது.

பிள்ளைகள் துஷ்பிரயோகம் என்பது இன்று நேற்று நடக்கும் ஒரு புதிய குற்றமல்ல. சுமார் 2500 வருடங்களுக்கு முன்பதாக புத்த பிரான் காலத்தில் பொறாமை கொண்ட ஒரு மாற்றாந் தந்தை பிள்ளையை மயானத்தில் ஓநாய்கள் தின்பதற்காக உயிருடன் கட்டி வைத்த சம்பவத்தைக் குறிப்பிடலாம். ஹரப்பா, மொகஞ்சதாரோ காலத்தில் கூட சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டமைக்கும் சிறுமிகள் காம அபிலாசைகளை நிறை வேற்றுவதற்குப் பயன்படுத்தபட்டமைக்கும் சான்றுகள் உள்ளன. சரித்திரம் இவ்வாறிருக்கும் பொழுது திடீரென அண்மைக் காலத்தில் பிள்ளைகள் பற்றிப் பேசுவதற்கு பல காரணங்கள் உள்ளன. பரிணாம வளர்ச்சியினால் குழந்தைகள் அறிவு வளர்ச்சி கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஏனைய கல்வி, சமுதாய, வளர்ச்சியினால் பிள்ளைகளின் முக்கியத்துவம் பெரியோர்களால் புரிந்துணரப் பட்டது. இதன் காரணத்தினால் பிள்ளைகள் தொடர்பான புரிந்துணர்வும் விழிப்புணர்வும் காலத்தின் கட்டாயமானது.

உலகத்தின் பல நாடுகள் தங்களது சட்டங்களை முழுவதுமாக மாற்றி அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது அவ்வாறு மாற்றியமைத்து பிள்ளைகளின் உரிமைகளை ஏற்றுக் கொண்டன. உலகளாவிய நாடுகளில் ஏற்பட்ட இந்த அத்தியாவசிய தேவை மாறுதல் இலங்கையையும் ஆட்கொண்டது.

இலங்கை பிள்ளைகளின் உரிமைப் பட்டயத்தை பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொண்டதிலிருந்து அதனை கொள்கை ஆவணமாகக் கொண்டு ஏனைய சட்டங்களைத் தேவையான அளவிற்கு மாற்றங்கள் செய்தது. முக்கியமாக பிள்ளைகளுக்கு எதிராக செய்யப்படும் குற்றங்கள் தொடர்பாக கடுமையான தண்டனைகள் தண்டனைச் சட்டக் கோவையில் அறிமுகப்படுத்தப்பட்டன.

இன்றைய எமது தண்டனைச் சட்டக் கோவையையும் அதனைச் சார்ந்த சட்டங்களையும் ஏனைய நாட்டுச் சட்டங்களோடு ஒப்பு நோக்கும் போது தரம் வாய்ந்ததாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது. எமது சட்டங்களை மாத்திரம் வாசிக்கும் ஒருவர் எமது பிள்ளைகள் பூரண சுதந்திரத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்வதாகவே கருதுவர். ஆனால் ஏதேனும் பாதிப்புக்குள்ளான ஒரு பிள்ளையிடம் இது உண்மைதானா எனக் கேட்டால் அதற்கு

முற்றிலும் மாறானதொரு பதிலே எமக்குக் கிடைக்கும்.

உதாரணமாக ஒரு சிறுமி கற்பழிக்கப் பட்டாள் என எடுத்துக் கொள்வோம். தற்போது இருக்கும் நடைமுறையின்படி அச்சிறுமி படும்பாடை கீழ்வருமாறு விபரிக்கலாம்.

- முதலாவதாக கற்பழிக்கப்பட்ட வேதனைக்கு உள்ளாகிறார்.
- அடுத்ததாக அதனை அவள் தனது தாயிடமோ (பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தாய் வீட்டில் இருப்பதில்லை) அல்லது தாயின் தாயிடமோ கூற வேண்டி இருக்கும்.
- சிறுமியின் தாயோ அல்லது மற்றைய பெண்மணியோ முறைப்பாடு செய்ய சிறுமியை அழைத்துச் செல்லுவதற்கு வீட்டில் இருக்கும் அல்லது பக்கத்து வீட்டிலிருக்கும் ஆண் துணை தேவைப்படுகின்றது. அந்த நேரத்தில் அவருக்கும் நடந்த சம்பவத்தை மீண்டும் கூற வேண்டி இருக்கிறது.
- இவர்களைக் கடந்து வழியில் அல்லது கிராமத்தில் யார் கண்ணிலும் படாமல் பொலிசுக்குச் சென்றால் அங்கு பொலிஸ் நிலையத்திற்கு செல்லும் பிரதான வாயிலில் உள்ள காவலருக்கும் தான் ஏன் பொலிஸ்நிலையம் வந்தேன் என்ற காரணத்தை அதாவது நடந்த சம்பவத்தைக் கூறவேண்டும்.
- வாயிலைக் கடந்து பொலிஸ் நிலையத்தினுள் சென்றவுடன் அங்கு வரவேற்பு மேசையிலிருப்பவருக்குச் சம்பவத்தைக் கூற வேண்டும்.
- வரவேற்பு மேசையிலிருப்பவர் பொலிஸ் குற்றப்பிரிவுக்கு அனுப்பி வைப்பார். அங்கிருக்கும் பொறுப்பதிகாரிக்கு நடந்த சம்பவத்தைக் கூற வேண்டும்.
- பின்னர் குற்ற பிரிவுப் பொறுப்பதிகாரி அவரது வாக்கு மூலத்தை பதிவதற்காக இன்னொரு பொலிஸ் உத்தியோகத்தரிடம் அனுப்பிவைப் பார். அவரிடம் குறைந்தது இரு முறைக ளாவது சம்பவத்தைப் பற்றிக் கூற வேண்டும்.
- இதன் பின்னர் பல வேளைகளில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கூற வேண்டும்.
- அதன் பின்னர் அவர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்படுவதற்கான சட்ட வைத்தியப்படிவம் விநியோகிக்கும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு அச்சம்பவத்தைப் பற்றிக் கூற வேண்டும்.
- வைத்தியசாலையில் வைத்தியசாலை அனுமதிப்பத்திரம் எழுதுபவருக்கு சம்பவம் பற்றிக் கூற வேண்டும்.
- அதன்பிறகு அங்கிருக்கும் தாதிக்கும் இது தொடர்பாக கூற வேண்டி இருக்கும்.
- அதன் பின்னர் வைத்தியரிடம் என்ன நடந்தது என்பதை விலாவாரியாகக் கூறுவதுடன் வைத்திய பரிசோதனைக்கும் உட்படுதல் வேண்டும்.
- சில நேரங்களில் இந்தச் சிறுமி நீதவான் முன் ஆஜர் செய்யப்படலாம். அவ்வாறான நேரத்தில் அவருக்கும் இது பற்றிப் பூரணமாகக் கூற வேண்டும்.
- மிக அண்மைய காலம் வரை இந்தச் சம்பவம் தொடர்பாக சுருக்க முறையற்ற விசாரணை நடைபெறும் பொழுது வழக்கினை நெறிப்படுத்தும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு திறந்த நீதிமன்றத்தில் பொதுவாக அனைவரின் முன்னிலையில் சம்பவத்தை விலாவாரியாகக் கூற வேண்டும்.
- இதன் பின்னர் சிறுமி குறுக்கு விசாரணையில் சம்பவம் தொடர்பாக பல நேரங்களில் பல விதமாக கேள்விகள் கேட்கப்படலாம். பொதுவாக சிறுமி தனது

வயதிற்கும் அனுபவத்திற்கும் மேலான பல கேள்விகளுக்கு பதில் கூற வேண்டி இருக்கும்.

இவரது கூற்றை நம்பினால் வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்படும். மேல் நீதிமன்ற விசாரணையின் போது மீண்டும் அரச சட்டவாதியினால் என்ன நடந்ததென முழுச் சம்பவமும் பகிரங்க நீதிமன்றத்தில் நெறிப்படுத்தப்படும்.

பெரும்பாலான நேரத்தில் திறமை மிகு, அனுபவம் மிக்க சட்டத்தரணிகளால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு சம்பவம் தொடர்பாக மீண்டும் மீண்டும் கேள்விகள் கேட்கப்படும்.

ஒரு முறை கற்பழிக்கப்பட்ட ஒரு சிறுமி தன் வாழ்க்கையில் என்றும் கண்டிராத அதிர்ச்சியைக் கண்டிருக்கிறார் என்பது உள வியல் நிபுணர்களின் கருத்து. ஆனால் மேற் கூறப்பட்ட உதாரணத்தைப் பார்க்கும் பொழுது ஒரு சிறுமி எத்தனை முறை பாரதூரமான மன உளைச்சலுக்கும் பாதிப்புக்கும் உள்ளாகி உள்ளார் என்பதை நீங்கள் பார்க்கலாம்.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நன்மை செய்கின்றோம் என்று நாம் மேற்கொள்ளும் நடவடிக்கை நன்மையை விட பாரிய தீமையையே விளைவிக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. மிக அண்மைய காலத்தில் இதை நிவர்த்திக்கும் முகமாக பல சீர்திருத்த நடவடிக்கைகளும் சட்ட திருத்தங்களும் மேற் கொள்ளப்பட்டன. உதாரணமாக பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் இவ்வாறான முறைப்பாடுகளைப் பதிவதற்கு பெண் பொலிஸார்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் குற்றவியல் நடவடிக்கை கோவையின் 453 (அ) பிரிவின் கீழ் இவ்வாறான வழக்குகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டார்' என்பது போல எமது சட்டத்தில் சிறந்த பல ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும் பிள்ளைகளுக்கு அவை கிடைப்பதில்லை. இதற்குப் பொலிசாரையோ நீதிமன்றங்களையோ அல்லது தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்களையோ குறை கூற முடியாது. பொலிசாரைப் பொறுத்த அளவில் நடைபெறும் பல குற்றங்களில் இதுவும் ஒன்று. நீதிமன்றத்தைப் பொறுத்தளவில் இருக்கும் பலநூற்றுக்கணக்கான வழக்குகளில் இதுவும் ஒன்று.

பிள்ளைகளுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்களில் சிலதே வெளிச்சத்திற்கு வருகின்றன. ஏனைய குற்றங்கள் வெளியில் வருவதில்லை. அவற்றிற்கு சில காரணங்கள் இருக்கின்றன. பெரும்பாலும் நாம் மேல் ஆராய்ந்த நியாயமற்ற மந்தமான சமுதாயப் போக்கே காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

பல ஐரோப்பிய நாடுகள் ஆரம்ப நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றம் வரை தமது கட்டமைப்புகளையே மாற்றி அமைத்துள்ளன. இலங்கையும் இவ்வாறு மாற்ற வேண்டிய ஒரு கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இருக்கும் சட்டங்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தாமல் பிள்ளைகளுக்கென நீதிமன்ற கட்டமைப்பு ஏற்படுத்துதல் தொடர்பாக நாம் ஆலோசிக்கலாம்.

- இரண்டு மாகாணங்களுக்கு ஒன்று என மேல் நீதிமன்றங்கள் நான்கு அமைக்கப்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு மேல் நீதிமன்றத்தின் கீழும் இயங்குவதற்கென நான்கு நீதவான் நீதி மன்றங்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு மேல் நீதிமன்றத்திற்கும் பின்வரும் உள்ளக கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

I. சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் தலைமையில் ஒவ்வொரு பொலிஸ்

நிலையத்திலும் பிள்ளைகள் முறைப்பாடு தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டு குறைந்தது 3 வருடங்களாவது அந்த நிலையங்களில் சேவையாற்ற அமர்த்துதல் வேண்டும்.

II. ஒவ்வொரு நீதவான் நீதிமன்றத்திற்கும் ஒரு பிள்ளை நலன்புரி உத்தியோகத்தர் நியமிக்கப்படுதல் வேண்டும் அவருக்குப் போதியளவு பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும்.

III. குறைந்த பட்சம் ஒவ்வொரு மேல் நீதிமன்றத்திற்கும் ஒவ்வொரு வைத்திய அதிகாரி இருத்தல் வேண்டும். அதில் பிள்ளைகள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர், மனோவைத்திய சிகிச்சை நிபுணர், சட்டவைத்திய அதிகாரி போன்றோர் அடங்கி இருத்தல் வேண்டும். இவர்கள் மாற்றீடு இல்லாமல் வேலை மாற்றம் செய்ய இயலாது. அதாவது குறித்த பதவிகள் எந்த நேரத்திலும் வெற்றிடமாக இருத்தலாகாது.

IV. ஒவ்வொரு நீதவான் நீதிமன்றத்திற்கும் ஒரு பிள்ளைகள் காப்பகம் இருத்தல் வேண்டும். அந்தப் பிள்ளைகள் காப்பகத்திற்குத் தேவையான வசதிகளை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். குறிப்பாக ஆசிரியர்கள், போக்குவரத்து, பாதுகாப்பு இருத்தல் வேண்டும்.

இந்த நீதிமன்றங்கள் பிள்ளைகள் தொடர்பான விடயங்களை மாத்திரமே கையாளுவதற்கான நியாயாதிக்கம் வழங்கப்பட வேண்டும். குறித்த நீதிமன்றங்களில் கடமையாற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விசேட பயிற்சி வழங்கப்பட வேண்டும். குறிப்பாக பிள்ளைகளைக் கையாள்வது எப்படி என்பது பற்றி பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான நீதிமன்ற சட்டங்கள் அமைக்கும் தருணங்களில் பிள்ளைகளின் மீதான அக்கறையை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நீதி மன்றங்களும் ஏனைய உள்ளக கட்டமைப்புகளும் பிள்ளைகளுக்கு ஏற்றதாகவும் பிள்ளைகளை பயமுறுத்தாது 'பிள்ளைகள் நெருங்கும்' தன்மையானதாகவும் இருக்க வேண்டும்..

இலங்கை போன்ற ஒரு வறிய நாட்டிற்கு இது போன்றதொரு கட்டமைப்பு தேவையா என்பது பலரது கேள்வி. மேலும் அவ்வளவு தொகையான வழக்குகள் இருக்கின்றதா என்பது மற்றுமொரு கேள்வி.

ஏற்கனவே நாம் கூறியது போல இப்பொழுது சிறிய அளவு குற்றங்களே முறைப்பாடு செய்யப்படுகின்றன. எமது கடுமையான சட்ட நடவடிக்கையினால் பலர் நடந்த பாதிப்பை தம்முள்ளே வைத்துக் கொண்டு முறைப்பாடு செய்வதில்லை. பிள்ளைகளுக்கேற்ற நீதிமன்ற மற்றும் சட்ட நடவடிக்கைகள் காணப்படுமாயின் இப்பொழுதிருக்கும் வழக்குகளைப் போன்று பல சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வந்து பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும்.

நாம் எவ்வளவோ விடயங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை செல வழிக்கின்றோம். அவற்றையே தேவை எனக் கருதும் நாம் எமது எதிர்காலத்தை நடாத்திச் செல்லப்போகும் எமது பிள்ளைகளுக்கு நியாயம் கிடைப்பதற்கு சிறிதளவு பணத்தைச் செலவழிப்பது தவறில்லை என்பதை விட கடமை என்றே கருத வேண்டும்.



# நீதிமன்றங்களும் தமிழ் மொழியும்

கந்தையா ஜெயகிருஸ்ணன்
சட்டத்தரணி

மேல் மாகாண மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தொடரும் தமிழ் பேசும் மக்களினதும் சிங்கள் மொழியிலேயே வழக்குரைகளைச் சமர்ப்பிக்கிறார்கள். வழக்கின் கட்சிக்காரர்கள் தமிழ் பேசும் மக்களாக இருந்தும் அவர்களது சட்டத்தரணிகள் தமிழ்பேசும் மக்களாய் இருக்கின்ற நிலையிலும் சட்ட வழக்குரைகள் சிங்கள மொழியிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றன. சிங்கள் மொழியை வாசிக்கவோ எழுதவோ புரிந்து கொள்ளவோ இயலாத தமிழ் பேசும் சட்டத்தரணிகளும் ஆங்கிலத்தில் தயாரிக்கப்படு கின்ற வழக்குரைகளை மொழி பெயர்ப்பாளர்கள் மூலம் சிங்களத்தில் மொழி பெயர்த்து தங்களுக்கு விளங்காத வழக்குரைகளை நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கிறார்கள்.

மொழி பெயர்ப்பாளர்கள் தவறுதலாக மொழி பெயர்த்தால் ஆங்கிலத்தில் முறையாகத் தயாரிக்கப்பட்ட வழக்குரைகள் சிங்களத்தில் பிழையாகத் தாக்கல் செய்யும் நிலையை அடைகின்றன. இந்த நிலை அவசியமா? தமிழில் வழக்குரைகளை ஏன் சமர்பிக்கப்படக்கூடாது? சமர்ப்பிக்க முடியாதா? அரசியலமைப்பில் தமிழ் மொழியில் வழக்குரைகளை தாக்கல் செய்யும் உரிமை தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதை நாம் ஆராய வேண்டும். அரசியலமைப்பின் 24ம் பிரிவும் அரசியலமைப்பின் 16ம் திருத்தமும் இவ்விடயம் சம்பந்தமாக எடுத்துரைக்கின்றன. அரசியல மைப்பின் 24ம் பிரிவின் 1ம் உபபிரிவு 16வது திருத்தத்தினை பின்வருமாறு கூறுகின்றது. "Sinhala Tamil shall be the languages of the Courts throughout Sri Lanka and Sinhala shall be used as the, language of the court situated all the areas of Sri Lanka except those in any area where Tamil is the Language of administration. The record and proceeding shall be in the language of the Court. In the event of an appcal from court records shall also be prepared in the language of the Court hearing the appcal. If the language of such court is other than the alnguane used by the court from which the appeal is preference"

Provided that the Minister in Charge of the subject of Justice may with the concurrence of the Cabinet of Ministers direct that the record of any court shall also be maintained and the proceedings conducted in a language other than the language of the court.

24வது பிரிவின் 2வது உப பிரிவு முக்கியமானதாகும். அரசியல்யாப்பின் 16வது திருத்தத்தின் பின் 24ம் பிரிவின் 2ம் உபபிரிவு பின்வருமாறு உள்ளது.

"Any party or applicant or any person legally entitled to represent such party or applicant may initiate proceedings and submit to court pleadings and other documents, and participate in the proceedings in court in either Sinhala or Tamil.

மேற் குறிப்பிடப்பட்ட அரசியலமைப்பின் பிரிவுகளிலிருந்து இலங்கையில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குரைகளை தமிழில்

சமர்ப்பிக்க முழு உரிமை உண்டு என்பது மிகவும் தெளிவாக விளங்குகிறது.

பலர் வடகிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் மட்டும் தமிழ்மொழியில் வழக்குரைகளை சமர்ப்பிக்கலாமென்ற தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளார்கள். இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் அனைத்திலும் தமிழ்மொழியில் வழக்குரைகள் தாக்கல் செய்யும் உரிமை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. அண்மையில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் திரு. எம். எஸ். செல்லச்சாமி சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மறுமொழி தமிழிலேயே தாக்கல் செய்யப்பட்டது. தமிழ் மொழியில் மறுமொழி தாக்கல் செய்ய முடியாது, என்று வழக்காளி தரப்பினர் வாதிட்டபோதும், தமிழில் மறுமொழி சமர்ப்பிக்கமுடியும் என்றே கொழும்பு மாவட்ட நீதிபதி கட்டளையிட்டார்.

தமிழ் மொழியில் வழக்குரைகள் சமர்ப்பிக்கும் உரிமையை அரசியல் அமைப்பு அளித்திருந்தும் தமிழ்ச் சட்டத்தரணிகள் தமிழ்க் கட்சிக்காரர்களுக்காக ஆஜராகும் போது தமிழில் வழக்குரைகள் சமர்ப்பிக்காதிருப்பது வருந்தத்தக்க விடயமாகும். அரசியலமைப்பில் வழங்கப்பட்ட உரிமைகளைக் கூட தமிழ்ச்சட்டத்தரணிகள் பயன் படுத்த ஏன் தயங்குகிறார்கள்? வழக்குரைகளை அவசியமின்றி சிங்களத்தில் மொழிபெயர்த்து மொழிபெயர்க்கப்பட்டதை வழக்குரையாகச் சமர்ப்பிப்பதால் கட்சிக்காரர்களுக்கு தேவையில் லாத மேலதிக செலவும் காலதாமதமும் ஏற்படுவதுடன் மொழிப்பெயர்ப்பாளர் தவறுதலாக மொழிபெய்ர்ப்பதால் ஏற்படும் பொருள் தீங்கும் கட்சிக்காரர்களுக்கு உண்டாகிறது.

இந்த நிலையில் தமிழ் பேசும் சட்டத்தரணிகள் தமிழில் வழக்குரைகள் சமர்ப்பிப்பது அவசியமாகும். இதைத் தமிழ் பேசும் சட்டத்தரணிகளும், தமிழ் மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிங்களம் தெரியாத தமிழ் பேசும் சட்டத்தரணிகளும் கூட நீதிமன்றங்களில் தமிழில் மொழி பெயர்ப்பு பெற்றும், தமிழில் தங்கள் சட்டவாதங்களை நிகழ்த்தவும் அரசியலமைப்பின் 24ம் பிரிவின் 3வது உப பிரிவு இடம் அளிக்கிறது. அரசியல் அமைப்பின் 24ம் பிரிவின் (3)வது உபபிரிவு 16ம் திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தின் பின் பின்வருமாறு கூறுகிறது.

"Any judge, jury, party or applicant or any person legally entitled to represent such party or applicant, who is not conversant with the language used in a court, shall be entitled to interpretation and to translation into Sinhala or Tamil, provided by the state, to enable him to understand and participate in the proceedings before such court, and shall also be entitled to oblain in such language, any such part of the record or a translation thereof, as the case may be, as he may be entitled to obtain according to law"

மேற்குறிப்பிட்ட அரசியலமைப்பின் உபபிரிவின் படி தமிழில் மொழி பெயர்ப்பும் பெறவும், தமிழில் வாதம் நிகழ்த்தவும் அரசியல மைப்பில் உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, சிங்களம் தெரியாத காரணத்தினால் தமிழ்ச் சட்டத்தரணிகள் நீதிமன்றங்களில் ஆஜராக முடியாத நிலை இல்லை என்பதை நாம் உணர வேண்டும் ஆங்கிலத்தில் சட்டவாதம் நிகழ்த்த முடியாதநிலை ஏற்படும்போது, தமிழில் நிகழ்த்த உள்ள உரிமைகளை பயன்படுத்தி நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தால் மன்று உரிமையை உறுதிப்படுத்தி அரசியல் அமைப்பின் படி செயற்படும்.

எனவே, அரசியலமைப்பில் நீதிமன்ற மொழி சார்பாக உரிய உரிமைகள் வழங்கப்பட்டிருந்தும் அதைத் தமிழ்ச்சட்டத்தரணிகள் பயன்படுத்தாத நிலை மாறவேண்டியது இன்றியமையாததாகும்.



# 'Laws Delay' — Labour Tribunals

*V. Vimalarajah*

Attorney at Law - Retd. President, Labour Tribunal

'Laws Delay' has always been the subject of endless discussions from time to time. This is a seasonal thing which appears and recedes into the background in course of time. Powerful Committees had deliberations and made recommendations long ago but the Reports are in cold storage. Nothing rankles in the human heart than a sense of long delay in justice. Delay produces a feeling of frustration and dissatisfaction to the dismissed workmen who applies to the Labour Tribunal for relief. The Industrial Disputes Amendment Act No. 62 of 1957 saw the birth of Labour Tribunals. The first Labour Tribunal was established on 2nd May 1959. The Labour Tribunals are forty years old today. The main purpose of introducing the Labour Tribunal machinery is spelt out in the speech made in parliament by the then Hon. Minister of Labour T. B. Illangaratne. He stated inter alia, as follows:

"This Bill seeks to improve some of the existing provisions of the Industrial Disputes Act and to introduce some new features the more important being the establishment of Labour Tribunals. These Amendments are designed to provide adequate machinery for speedy settlement of Industrial Disputes both collective and individual" Hansard 5th November 1957 Column 1004.

The main intention of the Legislature which introuced the Labour Tribunal machinery was granting of speedy relief to the dismissed workman. It is unfortunate that this intention or purpose of establishing Labour Tribunal machinery would not appear to have been achieved, although the Labour Tribunals are forty years old today.

It is always said that "Justice delayed is justice denied" but no definite practical solution has been worked out. Failure to analyse the root cause of delay will have to be taken as the main reason for not being able to work out a formula to solve the problem of 'Laws Delay'.

What are the issues pertaining to delay in Labour Tribunals would be the most pertinent question to be answered? The number of cases pending in Labour Tribunals in the year 1997 according to statistics made available by the Judicial Service Commision is II 388 which is fantastically high. This figure is increasing rapidly day by day and the backlog now is skyhigh. What is the main cause for this? Accusations are lightly made with the flexible tongue without any thought whatsoever. The first and foremost cause is analysed hereunder. The population in Sri Lanka is increasing rapidly. The number of factories and workplaces too is increasing day by day resulting in the number of persons employed going up high. With the increase of population and the number of employees the workload in Labour Tribunals would automatically go high. There are now eighteen Labour Tribunals in Sri Lanka, although there are twenty five districts in Sri Lanka. The number of Labour Tribunals is far too low when compared to the increase in the working population and workload. For eg. the Labour Tribunal at Negombo which has a Circuit Tribunal in Chilaw has nearly two thousand cases pending. This figure is the

highest among all the Tribunals spread out in the entire island. The backlog is increasing although the President works long hours without taking any leave. The area covered by this Tribunal is far too wide. It covers Free Trade Zone, Katunayake, Free Trade Zone, Biyagama and the Districts of Gampaha, Minuwangoda etc. The workload in Negombo Labour Tribunal can be reduced only by establishing a Labour Tribunal in Chilaw and an additional Tribunal in Negombo. I am in a position to comment on Tribunals in Negombo and Chilaw from my personal experience as President for several years and as a practitioner in the two Tribunals on my retirement for the last eight years.

It is considered appropriate to examine as to who is responsible for the delay in Labour Tribunals. The operation of the Judicial system is tripartite. There are three parties who play their respective roles in the judicial system in the Labour Tribunals. They are the President, the Trade Union or workman and the employer. The workman or Trade Union and the employer are represented by lawyers. The exact position is the working together of the lawyers on both sides (workman and employer) and the President. There are instances where the workman is represented by a Trade Union official or an authorised representative. In certain instances even employers are also represented by authorised representatives.

Who is responsible for the laws delay? is the next question to be answered.

(i). Is it the President?

(ii). Is it the Representative?

(iii). Is it the lawyer? Besides the above, there are other factors which make the Judicial System complete. The staff who work in the Labour Tribunals also play an important role. They can also cause delays. The fourth question would therefore be - Is the Tribunal staff responsible for delay?

Now that the fundamental aspects of laws delay are identified, it is necessary to deal with them one by one.

I) The President - He is required to control proceedings, According to Section 31 (c) (I) of the Industrial Disputes Act it shall be his duty to make all such inquiries and hear all such evidence as he considers necessary. He has wide powers and a greater degree of involvement in the conduct of the inquiry. When he is weak the lawyers will take him for a ride and consume a lot of time showing their skill in advocacy dealing with irrelevant matters. A President who does not know his work can contribute to laws delay by his indecisive attitude. Delay is ordinarily caused as a result of preliminary legal objections being raised. The objections would relate to -

i) Identity of employer

ii) Amendment of caption and the plea of prescription

iii) Absence of statutory declaration on the application

iv) Who is to begin the case.

v) Admission of Documents

vi) Substitution of a party

vii) An application made by a Union is withdrawn by it. The right of the workman to proceed with it.

viii) Recording evidence exparte and the right of the other party to participate thereafter.

ix) Vacation of Exparte order. there is fertility of preliminary legal objections. Arguments and counterarguments go on for a long time. Much depends on the skill and training of the President. If he is weak proceedings will get delayed. The President must therefore be given adequate training after identifying the

areas where he is weak.

II) The Representative or Trade Union official - In practice the Trade Union official or Representative does not take sufficient interest. They come unprepared and prove to be an impediment to the Tribunal. They lack knowledge in law and procedure. In view of the wide disparity between them and the lawyers the proceedings get delayed. There is no qualification specified in respect of a Representative. As it is anyone and everyone can appear before a Tribunal as Representative. Dealing with persons who have no knowledge or experience will be a difficult task for the Tribunal. Delay in such a situation is inevitable and unavoidable too. To strike a personal note, when I was President, a Representative who had not seen the inside of a Tribunal with no educational qualification appeared for a workman. Termination of employment was denied by the employer and the position of the employer was that the workman had vacated post. The workman was called upon to commence the case. The Representative in leading evidence of the workmen posed the first question - Why did you keep away from work? Before the answer was given by the workman, I had to intervene and record of the evidence of the workman by asking questions one by one. How could this be avoided? There must be minimum qualifications specified for a person to be a Representative. A panel of Representatives could be selected after screening. If this is done President will not have to face embarrassment and inconvenience and delay can be avoided.

III) Lawyer - Lawyer can assist the President in identifying the issues and making a just and equitable order. Lawyer also can delay the proceedings by raising frivolous technicalities and keep on dragging his feet. The President should be smart and alert otherwise the proceedings will be protracted and delayed too long. The President's skill hinges on how best he makes use of the lawyer. He has to do an exercise in filtering and take out what is best and apply for the case before him. This is the best way the President can avoid delay. The lawyer is obliged to realise the purpose for which the Tribunnal was established and assist the Tribunal in the expeditious disposal of the case.

Besides the foregoing delays are due to incompetent staff and poor quality stenographers. When the recording of proceedings is not properly done, Correction of proceedings takes plenty of time. Incorrect recording of proceedings would even result in taking the case de novo.

The clerical staff are required to take action on applications received by the Tribunal. If they do not take action promptly, there is delay. For eg. if the application is not registered and a number assigned and referred to the Employer for Submission of Answer, the case gets delayed. When the President makes certain orders the Secretary will have to take follow-up action. If follow-up action is delayed or not taken the case gets delayed.

Interpreters play a significant role in Tribunal proceedings. There are now in the Tribunals as a rule Interpreters who do not know interpretation at all. The Tribunals are thus handicapped. Work goes slow and it gets delayed. The solution to this is to appoint competent Interpreters, Stenographers and Clerks. It is also important that there should be adequate staff. If the foregoing issues identified as causes for delay are given consideration, delay can be reduced or even avoided.



# An Interview with Dr. Radhika Coomaraswamy

*— Interviewed by*
*Law Students' Hindu Maha Sabha*

United Nations Special Rapporteur on
Violence Against Women, including its causes & consequences

**Q : There is a growing tendency for women to be employed in government, Banking and Private Sectors. There are complaints of sexual harassment in work places. What is your view on this sexual harassment in work places?**

A : Sexual harassment in the workplace corrupts the environment and violates woman's physical integrity. It must be prevented. We in Sri Lanka through the Penal Code Amendment have criminalised sexual harassment and now women can go to the police and make a complaint. It is also important for women to have recourse to civil remedies, to bring action against the employer if he does nothing and gets compensation.

**Q : As a result of women being employed they are unable to carry on effectively their duties as housewives in their homes. This has resulted in friction and violence in their homes. How do we overcome this problem?**

A : Women should not be the only people to do "duty" in the household. If husband and wife jointly help each other, woman's double burden as wife and worker will be alleviated.

**Q : The incidents of rape are increasing and women are shy to bring to the notice of the authority when they are affected by the acts of rape. What is the best way by which this nature can be handled?**

A : Women must be made aware of the Penal Code Amendments and their duty to bring such cases before the authorities. In addition the police, the prosecutors and the judiciary should be sensitised on how to treat a rape case.

**Q : Child sex, homosex is now common what remedial action could be taken to prevent this abuse?**

A : I think a lot is already being done. Again the 1995 penal code amendments deal with this case. I think effective action is being taken with active NGOs such as PEACE pressing their cause.

**Q : Children, under 14 are employed in domestic service contrary to law. How**

**could this be arrested and what relief could be given to these poor children?**

A : Again, I think there should be prosecution of the offenders. In addition "rescue" parties of NGO activists should be organised to be vigilant about this issue and to rescue children being used as domestic labour.

**Q : Eventhough there are some provisions in the law to prevent child abuse and protect women's rights. Do you think these laws are applied sufficiently to ensure the child's interest and women's rights.**

A : I think, despite a few defects, the legal framework is adequate to deal with both women and children's rights. The issue is one of implementation.

**Q : Being the UNO's Special rapporteur for women's rights and protection, could you please share some of your experience with us.**

A : I have enjoyed being United Nations Special Rapporteur on violence against Women. In this capacity I have visited many countries and looked into women's rights problems. I have visited Japan,Korea on military sexual slavery, I have visited Poland on Trafficking, Ruwanda on armed conflict, Brazil on domestic violence, South Africa on the issue of rape, the U.S.A. on sexual misconduct in prisons and Indonesia and East Timor on the issue of collective violence.

**Q : Recently Penal Code was amended in order to protect the women's rights. Do you think it had been done in a satisfactory manner?**

A : I think the Penal Code amendments are an advancement and the amendments on rape, incest, child abuse, sexual harassment and trafficking of children are quite good. The problem is that it does not deal with marital rape, except if the spouses are judicially separated. It does not deal with the question of abortion or trafficking for prostitution. It also does not amend the Criminal Procedure Code to protect the rape victim during trial is available in other jurisdictions.

**Q : According to your view what are your further recommendations to ensure the rights of women & children.**

A : I think the Penal Code should be amended as suggested above. We also need better labour legislation to protect migrant workers and workers involved in home-base production. We also need to amend the Personal Laws to bring them in line with international standards. Finally we need an effective Commission to help resolve actual cases of violations of women's rights.



# Religious amity

*(A Christian Viewpoint)*

*Dr. Baptist Croos, FSC*

## Introduction

Religions have come to stay and they do play an important role in our lives, in shaping our destinies and forming our character. Hinduism, Jainism, Buddhism, Confucianism, Taoism, Catholicism, Islam, Seikhism, Protestantism, Anglicanism and a host of other religions have cropped up, especially during the last few years. Each religion proposes a way of life; it has its own rules and tenets, religious observances and ceremonies which add colour and grandeur plus a certain amount of mystery to the liturgical services. Men and women according to the various situations and circumstances are willy-nilly born into these religions, or drawn towards them later.

## The reality

Unfortunately these religions, however organized and fervent they may be, have not helped man to live in harmony and unity, Religions tend to divide and very often lead to hatred and bitterness, sometimes even destruction and death. Pitched battles and atrocious wars have been fought in the name of religions. Millions have lost their lives and millions have been displaced. Refugees galore and ethnic cleansing goes on unabatedly. How is it possible that such insensibilities and cruelties are taking place under the guise of religions?

## There are many reasons

Although these religions in themselves are supposed to be 'sacred', 'excellent', 'inspired' and 'god-given' very often they remain in the surface. The glittering ceremonies and endless rituals are conducted for the sake of doing them. They do not touch our lives. They do not enter our hearts. They do not give meaning to our existence. Preaching is one thing and practicing another. As a poet has tersely said.

Too many gods,
Too many creeds
Too many paths
That wind and wind
But the art of being kind
Is what the sad world needs.

## Kindness goes a long way

Religions should have helped mankind to live in peace and harmony. After all, we live in this world for a few years and why don't we live these years happily, doing good to others, tolerating, accepting and forgiving? Kindness goes a long way creating this atmosphere. The American writer Mark Twain had said, "Kindness is a language the dumb can speak, the deaf can hear and probably the blind can read." We cannot convince anyone that effectively through rhetoric and apologetics. We have to use a lot of kindness and goodness in our approach. As the saying goes, "You can catch more flies with a spoonful of honey, than with a barrelful of vinegar."

The "Acts of the Apostles," sums up the life of Jesus in just one sentence, "Jesus went about doing good" Acts 10:38 Yes, Jesus cured the sick, gave sight to the blind, gave the power of hearing to the deaf. He consoled the broken-hearted; touched and healed them. Today the whole Christian world rejoices at the

simplicity, humility and acts of kindness of its founder Jesus Christ. Hectic preparations are afoot to celebrate the two thousandth birth anniversary fo Jesus Christ.

"Have you had kindness shown?
Pass it on.
It was never meant for thee alone,
Pass it on.

Let it travel down the years.
Let it wipe another's tears
Till in heaven, the dead appears
Pass it on,"

## The importance of justice

In order to create religious amity a sense of justice is pivotal. A jewel of a sentence in the Old Testament, from the Book of Micah, puts us in the right frame of mind when we think of religious amity. If all the religions can follow that simple injunction, then living in harmony and unity may not be a problem. That sentence is, "Do justice, love kindness and walk humbly with your God." Micah 6:8

Peace is built on justice which is its surest foundation. Peace cannot exist without justice; they go hand in hand. As the Psalmist says,

"Mercy and faithfulness
have met,
Justice and peace
have embraced." Ps.85:10

If peace is not prevailing in a country, one has only to look at the amount of injustice that is taking place. Justice is the basic and fundamental aspiration of any man or woman. People yearn for justice all the time.

A lot of misunderstanding exists among the various religions because the element of justice is missing. People are hurt easily by acts of injustice and these hurt feelings may be carried through generations and generations resulting in bitterness and enmity. Historical facts stare at us menacingly.

An education towards justice and fairplay all around, can help us to live in peace and harmony. We must admire those teachers and instructors who courageously vinture forth to propagate and promote justice.

Their indefatigable services will be remembered for many years to come. As prophet Daniel wisely said, "They that instruct many unto justice, shall shine like stars for all eternity". Daniel 12:3

## Forgiveness: The heart of Christianity

The heart of Christianity and its central theme is FORGIVENESS. This was the message of Christ on the cross, "Father, please forgive them for they know not what they do," This theme of forgiveness, runs through the entire Bible like a Golden thread binding all the Chapters together. "How many times should I forgive my brother? Seven times?" asked Peter from Jesus who replied, "Not seven times, but seventy times seven," That means innumerable times. Love is an act of endless forgiveness.

Christian theologians portray God as a "Father" who is infinitely kind, merciful, loving, compassionate and forgiving. The parable of the prodigal son is a unique example of a father who is rich in mercy and abundant in forgiveness; it has been praised and extolled from time immemorial. Alexander Pope recognized the significance of forgiveness when he exclaimed, "To err is human, to forgive divine." We all say "Forgiveness is the noblest revenge."

Therefore, in order to create religious amity, we should learn to forget the past mistakes and blunders; forgive those responsible for these atrocities; make every effort to leap forward with optimism and hope, armed with a generous dose of forgiveness. Remember the admirable advice of St. Paul to the Ephesians, "Let not the sun go down on your anger." Ep. 4:26



# இந்துசமயமும் சர்வமதங்களும்

டி. எம். சுவாமிநாதன். சட்டத்தரணி.
அறங்காவலர்ஶ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்.
கொழும்பு.

ஆலயம் எனில் ஆ-ஆன்மா, லயம்-லயித்தல், கலத்தல் எனப் பொருள் உள்ளது. ஆகவே ஒப்பற்ற உயிர்களைப் பெற்ற மானிடப் பிறவி எடுத்த ஆன்மா ஆலயம் சென்று வழிபடுதல் இந்துசமயக் கோட்பாடு ஆகும். அதேபோல கோவில் எனின் கோ-இறைவன், இல்-இல்லம் எனப்படும். அதுவே கோயிலுக்குச் செல்லுங்கள் எனக்கூறப்படுவதாகும். இவைகளால்,

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனவும் 'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் தொன்மை மிக்க வாக்குகள் வரலாயின.

கோவில் மனித உடம்புக்கு ஒப்பானது. கோயிலின் கர்ப்பக்கிரகம்-மனிதனின் தலை எமது தலைக்கு மேலே ஒன்றும் இல்லை. தலை மூடப்பட்டுள்ளது. அதேபோல கர்ப்பக்கிரகத்தில் உள்ள மூர்த்தி உள்ள இடம் தலையைப்போல மூன்று பாகங்களும் மூடப்பட்டுள்ளன. கழுத்து-அர்த்த மண்டபம், மார்பு-மகாமண்டபம், வயிறு-ஸ்தம்ப மண்டபம், கால்கள்-உற்சவ மண்டபம், பாதங்கள்-கோபுர வாயில் ஆகும். ஆலயத்தில் இராஜ கோபுரம், தேர் என்பன கோவிலை ஒத்த நிலைப்பாடுகளை உடையவை.

ஆகவே நாம் கோவிலுக்குச் சென்று கடவுளை வழிபட வேண்டும். அதற்காகவே இறைவன் எமது உடம்பின் அங்கங்களைத் தந்துள்ளார். கண்-கடவுளின் திருவுருவைப் பார்த்து அதனை மனதில் இருத்தி வழிபட உள்ளது. செவி-அவரின் நாமங்களைக் கேட்க உள்ளது. நா-இறைவனின் திவ்விய நாமங்களைச் சொல்லி வழிபட ஏதுவாக உள்ளது. மனம்-அவனையோ சதாகாலமும் சிந்திக்கின்றது. கை-இறைபணி செய்யவும், இறைவனின் தாளை வணங்கவும் ஏதுவாகின்றது. உடம்பு-திருத்தொண்டுகள் பல செய்யவுள்ளது.

இவைகளையே நமது நாயன்மார், ஆழ்வார் செய்து இறைவனை அடைந்ததாக பெரியபுராணம், திவ்வியபிரபந்தம் என்பன கூறுகின்றன.

கோவிலை நோக்கி மூலமூர்த்தி சிவலிங்கத் திருமேனி கொண்டு விளங்க கோவிலின் தென்புறத்தை நோக்கிய அம்பாள் தீய சக்திகளை அழித்து, நல்வாழ்வு நல்குகின்றார். தெற்கு நோக்கிய ஸ்ரீ நடராஜர் பஞ்சகிருத்திய நாயகராக ஆன்மாக்களை நல்வழிப்படுத்துகின்றார். தென்முகக் கடவுள் ஸ்ரீ தட்சணாமூர்த்தியாக யோக நிலையில் இருந்துகொண்டு ஞானமார்க்கத்தை உபதேசிக்கின்றார்.

கோவிலின் மேற்கு புறத்தே லிங்கோற்பவர், பிரம்மா, விஷ்ணு எல்லோரும் இறைவன் ஜோதி வடிவினன் என்பதை ஏற்கின்றனர். இதனையே 'ஜோதியே சுடரே' என்றும் 'ஜோதிவானன்' என்றும் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி' என்றும் திருமுறைகள் கூறுகின்றன.

ஆகவே ஆலயம் சென்று வழிபடுவதால் ஆன்மாக்கள் ஒரு நிலைக்கு வர முடிகின்றது. அதுவே பக்தி நிலை. உடம்பில் உள்ள ஒவ்வொரு அங்கங்களுமே இறைவனுக்குத் தொண்டுகள் செய்து, இறைவனை, இறைவனின் நிலைப்பாட்டை உணர்ந்து கொள்கின்றன.

இந்த மாதிரியான நிலைப்பாடு சர்வ மதங்களிலும் உள்ளமையை நாம் காண்கின்றோம். எல்லா மதங்களும் வழிபாட்டுத்தலம் உள்ளது. அங்கே இறைவனை எல்லோரும் வழிபடுகின்றார்கள். பௌத்தர் பஞ்ச சீலத்தைக் கடைப்பிடித்து அரசமர வழிபாடு, புத்த பூஜை, பண என்பன மூலம் இறைவனை இறைஞ்சுகின்றனர். கிறிஸ்தவர் பைபிள் மூலம் அதன் கோட்பாடுகளை அனுசரித்து, உரிய வேளைகளில் தேவாலயங்களில் வழிபடுகின்றார்கள். முஸ்லிம்கள் புனித குர்ஆன் காட்டும் மார்க்க முறையில் பள்ளிவாசல்களில் ஐந்து முறை தொழுது அல்லாவின் கூற்றுக்களின்படி வாழ்கின்றார்கள்.

ஆகவே சர்வ மதங்களும் இறை வழிபாடுகளை ஏற்று அதன்வழி வந்து கொண்டே இருக்கின்றன. எல்லா மதங்களும் கூறுவது என்ன? இறைவன் உள்ளான், அவனை வழிபட வேண்டும், அவனை சேவிக்க வேண்டும் என்பதுவே.

இதனையே இந்துசமயமும் கூறுகின்றது. ஆறுகாலப்பூஜைகள், திருமுறை ஓதல், திருப்பணிகளைச் செய்து மும்மல நீக்கம் மூலம், யோக நிலையின் மூலம் ஞான வாழ்வு வாழ்ந்து இறைவனை அடைய வேண்டும் என்பதுவே இந்து மதத் தத்துவம் ஆகும். இதனையே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் 'நான் இந்த சரீரத்தைப் பெறாது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெற வேண்டும்' எனக் கூறுகின்றார்.

சர்வ மதக் கோட்பாடுகளும் இவைகளேயாகும்.

## கடவுள்

கடன் கொடுத்தவனுக்கும் கடன் பெற்றவனுக்கும் கோர்ட்டு வாசல் மிதித்துக் கொண்டிருந்தாலுங்கூட எப்படிக் கடைசிவரை பற்று, பிணைப்பு இருக்கிறதோ அப்படித்தான் நமக்கும் கடவுளுக்கும் கடைசிவரை பிணைப்பு இருக்க வேண்டும். அதுவும் பக்தியோடு இருக்கவேண்டும்.



# The Concept of Justice in Theravada Buddhist ethics

*Ven. Dr. Kandegoda Wimaladhamma Thera*
B.A., M.A., Ph.D. (Ioanina - Greece)
Senior Lecturer - Department. of Philosophy, University of Kelaniya

The word "justice" was often often used in Buddhism in a broad way, to embrace all the good acts sanctioned by law and custom. The virtuous actions are enjoined by law in best polis, justice is broadly conceived in lawfulness. Under the light of a peculiar scheme of causal relationships, a total consideration of subjects such as written law, equality, friendship, doctrine of mean is allowed for, relating ultimately to justice.

The Buddhist disciplinary law also known by some as buddhist ecclesiastical law is found in the section of *Vinaya* (general sense discipline, and in the special sense of the law and constitution) of these discourses, the group of discourses called the *Vinaya Pitaka* deal wiht the rules of discipline for socicty. It is a compendium of law, made for the monks and nuns, but there is no such law made for the benefit of the laity. *Dhamma* (doctrine of righteousness) and *Vinaya* are significant for the buddhist ideas about secular law. The conception of the "rule of righteousness" is extremely important ofr the Buddhist attitude to a conception of law. The first sermon has been called by the Buddha himself " the setting into motion of the supreme wheel of the law", which cannot be turned back by any religious teacher, angel, God or anyone in the world. The concept of *kamma* as a natural law in Buddhism is not different in principle from a law in the natural sciences.

We then review and investigate the origin of the doctrine of four *noble truths* in Buddhism and its central concern in man's nature, his suffering, the cause and the means or path to attain his liberation. The first *noble truth* is like a revealation that a physician has discovered a disease in his patient and points out the necessity that must be removed. It describes the symptoms and the need for healing, and diagnoses the nature of the illness: Wake up, says Buddha, you are ignorant, unenlightened and suffering. The second one is also diagnostic, but it focuses on the pathological condition whch causes the illness: You are attached to the pleasurable and to a false notion of what is good, says the Buddha. The third noble truth is a prognosis, it predicts the course and end of the disease and the outlook based on proper treatment: Your fever can be extinguished and your suffering with ends, says the Buddha, you can be free. The fourth one is the general treatment, it outlines the procedure and the steps necessary to cure the disease and remove its cause: Follow this path, says the Buddha, it is the path to freedom. The basis of the middle path, morality, concentration and wisdom also formed the basis of 'laws' devised for the layman found scattered in the buddhist tradition.

Of these discourses, the group of discourses called the Vinaga pitaka edal with the rales of disciplihe for the sociaty.

Buddhist doctrine advocates seeking a permanent state of freedom, or liberation, from *samsara*, a freedom form all bodily existence. Reincarnation must be transcended; the Buddhist refers to this as getting off the wheel - which represent the cyclic process of birth and death. Significantly, such experience for Buddhism, is not of primary concern. The

goal of Buddhism - enlightenment, liberation or the attainment of Buddhahood - is not a temporary condition or experience; rather, temporariness or impermanence is an essential characteristic of *samsara* - the antithesis of enlightenment. *Samsara* is causing suffering *(dukkha)*, it is impermanent *(anicca)*, as never to be what it was even a moment ago: and all persons, things or beings within it are totally without separate, individual self, devoid of any soul or substance *(anatta)*. Our life on earth is a life of continual rounds of birth, old age, decay, death, rebirth and so on. But the soul of man, like his body, must be cared for, and health is to the body as liberation to spirit. This is the essential message of the four truths, and in the *Malunkyaputta sutta* we find the Buddha applying this teaching.

The essence of particular justice, on the other hand, is fairness ans there are two kinds of it. One is *corrective justice*. Correcive justice rights the balance when one person gets more than his share in a voluntary exchange. The other form of particular justice is *distributive justice* and this, for Aristotle is the fair distribution of wealth and other goods to the citizens in accordance with their virtue. In case of mutual communication between the citizens of polis, Aristotle devises a third virtue of justice, *the reciprocal justice*, which is over and above the corrective and distributive justice and is used as compatible with equality berween people. The Buddha also emphasizes the role of duties and obligations in relevant contexts. The *Sigalovada Sutta* discusses the duties and rights of whole of the society. But what is described here are reciprocal relations of mutual obligation rather than any concept of human rights. First the Buddhist approach to duties and rights is more a humanistic than a legalistic one. Thus while concepts of duty and obligations, as well as of justice and righteousness.

Buddhism and the goal of Buddhist doctrine is to bring about liberation from human suffering. Any rational activity is made in service to this goal. And, this holds equally for Plato and Aristotle; their key concepts are named liberation and ultimate goal respectively. For them, metaphysical speculation and rational inquiry are performed solely in service to liberation. It is not suggested that the final goal of summum bonum are experientially identical or have the same metaphysical consequences (the end of life).

All associations of people are established for the purpose of attaining some good. So the first association is the union of male and female in order to successful reproduction possible. This is followed by the formation of a second association, that of the family. We saw in some suttas in Buddhism not only cooperation among family members but also equal attitude towards and respect to all human beings or fellow citizens and and all of neighbours in society. Therefore, there is not any difference between any human being. According to Buddhism all human beings are of the only one and the same category.

According to Buddhism Justice then in this sense of the word, is not a part of virtue, but the whole of it; and the injustice which is opposed to it is not a part of vice, but the whole of it.

One is a virtuous person, always because he is established on righteousness or a virtuous person is always established on righteousness. Like a mountain consisting of a compactly solid rock which is often compared to a rightous man, he will stand firmly without faltering amidst praise and blame (Dhammapada 81, Thera gathe 643, *Vinaya Pitaka* I. 185)

The ideal king according to Budhism is always described as a dhammika, dhammaraja or righteous Lord of righteousness. He rules over his people with justice and equality when he has conquared the earth to its oceanbounds he will be establieshed not by the scourge, not by the sword but by righteousness (Digha Nikaya III, 142). Laying aside the scourge and sword which are the symbols of violence, the righteous lord of righteousness will rule with righteousness and impartiality. (Samytta Nikaya I, P 116)

# இஸ்லாம் - ஒரு விளக்கம்

**எம். எச். எம். நாளிர்.** B. A. (Hons) Dip.in. Ed

எல்லாச் சமயங்களையும் போல, இஸ்லாத்தையும் ஒரு சமயமாகக் கருதி வருவோர் இன்று அதிகமாக உள்ளனர். சமயம் என்பது ஆன்மீகம் தொடர்பானது; இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலான உறவு தொடர்பானது. இஸ்லாம், ஆன்மீகத்தை மட்டும் முன்வைக்க வில்லை. அது உலகியலையும் விரிவாக விளக்கு கிறது; அரசியல், பொருளாதாரம், சமூக விவகார ங்கள் பற்றி நிறையப் பேசுகிறது. எனவே, இஸ்லாத்தை சமயம் என்று நோக்குவது பொருத்தமானதன்று. அது ஒரு நிறைவான வாழ்க்கை முறையாகும்.

இஸ்லாமிய வாழ்க்கை முறை நம்பிக்கை, செயற்பாடு என்ற இரு அம்சங்களையுடையது. இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும் ஒருவரே இஸ்லாமிய வாழ்க்கை முறையையும் ஏற்றுக் கொள்ளமுடியும். இறைவனுடன் தொடர்பான விடயங்களை உணர்த்தும் "தவ்ஹீத்", இறைதூதுவத்துடன் தொடர்பாக "ரிஸாலத்" மரணத்தின் பின்புள்ள மறுமைவாழ்வுடன் தொடர்பாக "மஆத்" ஆகிய மூன்று பிரதான கோட்பாடுகளையும் ஏற்று விசுவாசித்த ஒருவரே இஸ்லாமிய வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்ள முடியும். அவ்வேளை, அவர் ஏனைய எல்லா வாழ்க்கை முறைகளையும் களைந்துவிடுவதாக வாக்குறுதியளிப்பார். அவ்வாறான வாக்குறுதி, அவனை இஸ்லாமிய வாழ்க்கை முறையின் பால் தூண்டுகின்றது.

அவர், ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றுகிறார். ரமழான் மாதம் நோன்பு நோற்கிறார். ஸகாத் கொடுக்கவும், ஹஜ் செய்யவும் தகைமை பெற்றால் அவற்றையும் நிறைவேற்றுகிறார். இவை இஸ்லாத்தின் அடிப்படை வணக்கங்களாகும். இவற்றோடு இவை இஸ்லாத்தின் அடிப்படை வணக்கங்களாகும். இவற்றோடு இஸ்லாமிய வாழ்க்கை முறையைக் கற்றுக் கொள்வது அவரது கடமையாகும். இஸ்லாமிய செயற்பாடுகளை நிறைவேற்றும் அறிவையும், தான் ஏற்றுள்ள (இஸ்லாமிய) வாழ்க்கை முறைபற்றிய அறிவையும் அவர் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

மனிதன், உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றையும் உள்ளடக்கியவன். அவன் தனது முழுமையான ஆளுமையை வெளிப்படுத்த வேண்டுமாயின் இம்மூன்றும் சமநிலையில் வளர்க்கப்பட வேண்டும்; பக்குவப்படுத்தப்பட வேண்டும். சில வாழ்க்கை முறைகளில் உடலியல் தேவைக்கும், வேறு சில வாழ்க்கை முறைகளில் ஆன்மீகத் தேவைக்கும், மற்றும் சில வாழ்க்கை முறைகளில் அறிவுத் தேவைக்கும் முக்கியத் துவம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு ஒரு துறைக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து, எனைய துறைகள் புறக்கணிக்கப்படும் போது வாழ்க்கை முறையில் பல பாதிப்புக்கள் உண்டா கின்றன. எனவே தான், உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றிலும் சமநிலை பேணப்பட வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

மனிதன், வாழ்வு, பிரபஞ்சம் பற்றிய கோட் டுகள் ஒரு வாழ்க்கை முறையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கேற்கின்றன. அந்தவகையில் இஸ்லாம் மனிதனை சுதந்திரமானவனாக வாழ விட்டிருக்கின்றது. அவனை எல்லா அடிமைத் தளைகளிலிருந்தும் விடுவித்துள்ளது. அல்லாஹ் வைத் தவிர வேறு யாரையும் வணங்கவோ, வழிபடவோ, சட்டகர்த்தாக்களாக ஏற்கவோ கூடாது என்பதன் மூலம் இதனை உணர்த்து கின்றது. மனிதன் உலகில. அல்லாஹ்வின் பிரதி நிதியாக அமர்த்தப்பட்டுள்ளான். பிரபஞ்சத்தி லுள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்குச் சொந்தமா னவை. அவற்றை அவன் மனிதனுக்கு கட்டுப்பட வைத்துள்ளான். அவற்றைப் பரிபாலிக்கவும், பாதுகாக்கவும், மேற்பார்வை செய்யவும் மனிதன்

பொறுப்பாக்கப்பட்டுள்ளான்.

அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக மனிதனுக்கு அறிவும், சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளன. மனிதன் புலனறிவையும், பகுத்தறிவையும் பயன்படுத்தி உலகில் வாழ்கிறான். ஆனால், அல்லாஹ்வின் பிரதிநிதியாக வாழ்வதற்கு இவை போதா. ஆகவே நபிமார்கள் எனப்படும் தீர்க்கதரிசிகளுக்கு அருளப்படும் "வஹி" மூலம் "ரிஸாலத்" எனும் பெயரில் மற்றோர் அறிவு வழங்கப்படுகிறது. "ரிஸாலத்" மூலம் மனிதன் உலகில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக வாழும் முறையைக் கற்றுக்கொள்கிறான்.

உலகை எவ்வாறு கையாள வேண்டும், வாழ்க்கையை எவ்வாறு வழிநடத்த வேண்டும் என்பதை "ரிஸாலத்" காட்டிக் கொடுக்கிறது. அல்லாஹ் மனிதனுக்கு வழிகாட்டுவதற்காக மனிதர்களில் உத்தமமான சிலரைத் தேர்ந்தெடுக்கின்றான்; அவர்களையே நபி அல்லது ரஸூல் என்கிறோம். அவர்கள் மனிதனுக்கு அல்லாஹ்வை அறிமுகஞ் செய்கிறார்கள் நன்மையை ஏவுகிறார்கள்; தீமையை விலக்குகிறார்கள். அவர்களுக்குத் தேவையான அறிவுரைகள் வேதங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்பட்ட வேதங்களில் இறுதியானது அல்குர்ஆனாகும். அதனைப் போதித்த முஹம்மத் (ஸல்) அவர்கள் இறுதித் தூதராவார். ஆதலால மக்கள் முரண் வழி செல்லாதிருக்க அல்குர்ஆனையும், முஹம்மத் (ஸல்) அவர்களையும் வழிகாட்டியாக ஏற்றுப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு பின்பற்றி வாழ்பவர்களே வெற்றியடைவர்.

உலகிலுள்ள எல்லா மனிதர்களும் சமமானவர்கள். ஆதலால், எவரும் எவராலும் அநியாயத்துக்குட்படுத்தப்படக் கூடாது; எவரது உரிமைகளும் பறிக்கப்படக் கூடாது. வாழ்க்கை இவ்வுலகத்துடன் முடிவடைவதில்லை மரணத்தின் பின்பும் அது தொடர்கிறது. உலக வாழ்வு செயல்படும் களமாகவும், மறுமை வாழ்வு பேறுகளை அனுபவிக்கும் களமாகவும் அமைந்துள்ளது. ஆதலால் மறுமையை இலக்காகக் கொண்டே மனிதன் செயல்பட வேண்டும். மனிதன் தனது கடமைகளையும், பொறுப்புக்களையும் எந்தளவு தூரம் சரியாகவும், ஒழுங்காகவும் நிறைவேற்றுகின்றானோ அந்தளவு அவனுக்கு மறுமையில் பரிசு கிட்டும்; தவறிவிட்டால் தண்டனை கிடைக்கும்.

பிரபஞ்சத்தைப் பொறுத்தவரை அது தானாக உருவாகவில்லை. அல்லாஹ் அதனைப் படைத்துப் பரிபாலிக்கின்றான். பிரபஞ்சத்தின் ஓர் அங்கமான உலகும் மனிதன் வாழ்வதற்கான இடமாகும். அதனைத் துறந்து வாழுமாறு இஸ்லாம் கூறவில்லை. அதே நேரத்தில் உலகின் இன்பங்கள் அனைத்தையும் எவ்வித கட்டுப்பாடுமின்றி முழுமையாகத் துறப்பதையும் இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. மனிதன் பிறரது உரிமைகளைப் பறிக்காமல் தனது தேவைக்கேற்ப உலகத்தை அனுபவிக்க இஸ்லாம் இடமளித்துள்ளது. மனிதனுக்கு இபாதத் (வணக்க வழிபாடுகள்) கிலாபத் (உலக நிருவாகம்) இமாரத் (உலகை வளப்படுத்தல்) என்ற மூன்று பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இஸ்லாத்தின் வழிகாட்டலில் உலகை அனுபவிக்கும் போது அது வழிபாடாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. உதாரணமாக, திருமணத்தையும் குடும்ப வாழ்வையும் சுட்டிக்காட்டலாம். மனிதனின் பாலியல் உணர்வை அங்கீகரிக்கும் இஸ்லாம், அதனை நெறிப்படுத்தி, அதற்கூடாக பொறுப்புள்ள தலைமைத்துவத்துக்கான பயிற்சியை வழங்குகின்றது.

குடும்ப, சமூக வாழ்க்கையின் தலைமைத்துவத்தை இஸ்லாம் ஆண்களிடமே வழங்கியுள்ளது. இதன் கருத்து ஆண்கள் எசமான்களாகவும், பெண்கள் அடிமைகளாகவும் வாழ வேண்டும் என்பதல்ல. குடும்பத்திலும், சமூகத்திலும் இரு பாலாரும் சமபங்காளிகள்; பொறுப்பாளர்கள். அவரவர்களின் பங்குகள் சரிவர நிறைவேற்றப்படாத போது உலக வாழ்க்கை சீர்குலைகின்றது. இதற்குக் காரணமாக அமைந்தவர்கள் மறுமையில தண்டிக்கப்படுவார்கள். ஆண்கள், குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் செய்ய

வேண்டிய கடமைகளுக்கும் பொறுப்புக்களுக்கும், எவ்வாறான உரிமைகள் தேவையோ அவை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பெண்கள் நிறைவேற்ற வேண்டிய பங்களிப்புக்களுக்கும் எவ்வாறான உரிமைகள் தேவையோ அவை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சமத்துவம் என்பதை இஸ்லாம் வித்தியாசமாக நோக்குகிறது. ஆண்களுக்குரிய அதே உரிமைகள் அதே அளவில பெண்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கருத்தை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. சில இடங்களில் ஆண்களுக்கும், வேறு சில இடங்களில் பெண்களுக்கும் அதிக உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தவகையில் தான், இஸ்லாத்தின் ஒவ்வொரு விவகாரங்களும் சட்ட விதிகளுக்கு உட்படுகின்றன. அல்குர்ஆனும், முஹம்மத் ஸல் அவர்களின் போதனைகளும், வாழ்க்கைமுறையும் இஸ்லாத்தின் மூல ஆதாரங்களாக உள்ளன. அவைதாம் இஸ்லாமிய வாழ்க்கை முறையின் உரைக்கற்களாகும். அவையிரண்டும் வாழ்க்கை முறையின். அடிப்படைகளை வழங்க, கால தேச வர்த்தமான நிலைகளால் ஏற்படும் சமூக மாற்றங்கள் தோற்றுவிக்கும் ஐயப்பாடுகளை நீக்க, ''இஜ்திஹா்'' என்ற வழிமுறை காண்பிக் கப்பட்டுள்ளது. இதனால், இஸ்லாத்தில் நெகிழா அம்சங்களும், நெகிழ்ந்து கொடுக்கும் அம்சங்களும் இடம்பெறுகின்றன. எனவேதான், அது சர்வதேச, சர்வகால மயமானதாகக் கொள்ளப்படுகின்றது. அதனை எந்த நாட்டவரும், ஏந்த இனத்தவரும், அடுத் மொழியினரும், எந்த காலத்தவரும் ஏற்றுக் கொள்ள முடியும்.

இஸ்லாம், உலகில மனிதன் செலுத்த வேண்டிய கடமைகளை இரண்டாக வகுத்துக் காட்டுகின்றது. ஒன்றை "ஹக்குல்லாஹ்" என்றும், அடுத்ததை ''ஹக்குல் இபாத்'' என்றும் குறிப்பிடுவர். மனிதன் இறைவனுக்கு செலுத்த வேண்டிய கடமைகள், பொறுப்புக்கள் முதலாவதில் அடங்கும். மனிதன் இறைவனின் படைப்புக்களுக்கு செலுத்த வேண்டிய கடமைகளும், பொறுப்புக்களும் இரண்டாவது பகுதியில் அடங்குகின்றன. ஹக்குல்தலாஹ்வை விட ஹக்குல் இபாத் விரிவானது. அயலான், உறவினன், நண்பன், விருந்தினன் சமுதாயத்தில் நலிவுற்றோர், தேவையுள்ளோர் என எல்லா மக்களுக்குமான பொறுப்புக்களை அது விளக்குகிறது. அத்தோடு உயிர்ப்பிராணிகள், தாவரங்கள் முதலானவற்றுக்கும் மனிதன் செய்ய வேண்டிய பொறுப்புக்கள் உள்ளன. அவற்றை நிறைவேற்றும் போதுதான் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற பணி முழுமையடைகின்றது.

இஸ்லாம், தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமன்றி அதனை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் நன்மையையே நாடுகின்றது. அவர்களின் உரிமைகளை மதிக்கின்றது. இஸ்லாமிய வரையறைக்குள் அவர்களுடன் நேசம் கொள்ளவும், கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவும் இஸ்லாம் அனுமதித் துள்ளது. அவர்களை மனிதாபிமானத்துடன் நோக்குகிறது. மார்க்கத்தில் பலவந்தமில்லை என்பது இஸ்லாத்தின் கோட்பாடாகும். இதனால் தான் முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ''திம்மி''களைப் பாதுகாப்பது முஸ்லிம்களின் கடமை எனக் கூறுகின்றது.

சாந்தி, சமாதானம், சரணடைதல் என்ற கருத்துக்களைக் கொண்ட இஸ்லாம் என்ற பதம் மனிதன் முற்றாக இறைவனுக்கு சரணடைவதன் மூலமே அவனது உள்ளத்திலும், குடும்பத்திலும் சமுதாயத்திலும், வாழ்க்கையிலும், உலகிலும் சாந்தியையும், சமாதானத்தையும் நிலைநாட்டமுடியுமென்ற விளக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. இற்றை நாட்களில் இது பற்றிச் சிந்திப்போமாக.

# இந்து சமயமும் அதன் கோட்பாடுகளும்

# JURISPRUDENCE FROM THE PERSPECTIVE OF HINDU PHILOSOPHY

*Dr. H. J.F. Silva.*

Jurisprudence in Law Schools has always been discussed from the point of view of Western philosophy. The ideas of thinkers from classical Greek and Roman periods through Middles Ages to the modern times hold an important place in any standard text on Jurisprudence. The East, which is rich in ancient wisdom has not, unfortunately, received its just place in this important area of legal studies. Perhaps it may be because the writers were Anglo - American, but even when Asians wrote on Jurisprudence they have hardly made any reference to Eastern thought although a discerning writer could find many a parallel or even more advanced thinking in ancient Eastern classics. Only Henry Maine[2] as far as we know, has made any serious attempt at the study of Hindu laws and customs. He ' treated India as the "great repository of ancient juridical thought" insisting that it included " a whole world of Aryan institutions, Aryan customs, Aryan laws, Aryan ideas, in a far early stage of growth and development than any which survive beyond its borders."[3] One may not today agree with some of his conclusions and the above reference to Aryan origins, as Hinduism is now considered as the common faith of various peoples including Harappans.

This paper is an attempt to highlight some parallels between Hindu and Western philosophy, which could provide a common platform for discourse on jurisprudential issues. The word Hindu here is used in a broader sense to include not only spiritual but also secular thinking.

One of the thorny issues in Western philosophy has been whether the ultimate reality is 'matter' or 'mind', which debate has had its impact on legal thought. 'Matter' meaning the stuff of which physical things are made; the physical world and ' mind' denoting form, the faculty of reasoning, ideas, soul, and spirit. Thinkers like Plato believed that the Mind is the true reality and everything owes its form and essence to it. His disciple Aristotle too believed that Ideas gave the world of senses its form and life. There were others however, the materialists[4] who believed that the physical world was the ultimate reality. The discourse continued to the modern times adding many protagonists to each side. As one writer explains, ' The great basic question of all philosophy, especially of more recent philosophy, is that concerning the relation of thinking and being. The answers which philosophers gave to this question split them into two great camps. Those who asserted the primacy of spirit to nature ...comprised the camp of idealism. Others, who regarded nature as primary, belong to the various schools of materialism.'[5] This debate is reflected in jurisprudential thought as the dichotomy between "natural law' and 'positivism'

The 'natural law' thinkers believe that there are certain immutable principles discoverable through reason and that all man

made laws should conform to these higher principles[6]. The 'positivists' however deny that there is such an essential connection between these two and accept as law any rule formulated by lawmakers, irrespective of the moral content of such laws.[7]

This debate between mind and matter existed in Hindu philosophy, thousands of years before it made its appearance in Western world. The ancient Hindu sacred writings known as the Vedic literature is traditionally divided into four groups namely: 1. the Samhitas (hymns) 2. the Brahmanas,( significance of the hymns) 3. the Aranayakas,( interpretations) and 4. the Upanishads ( metaphysical dialogues). Samhitas are the most ancient whereas the other groups are commentaries on the Samihitas compiled at later times. The Samhitas consists of four collections - the Rigveda, Samaveda, Yarjurveda, and Atharvaveda. The Aranayakas and Upanishads are directly joined with either Samhitas or the Brahmanas and as such any given Samhita or Brahmana has Upanishads and Aranayakes of its own.

The Vedas are called Shruti, meaning that which is heard directly from the Gods. 'The elaboration of Vedic revelations which include the codes of law, is known as Smriti meaning that what is written down and remembered. Smitri is of secondary authority and if Smitri contradicts Shriti, the latter will take precedence. The codes of law consist of Code of Manu (Manu Smitri) and other codes such as codes of Yajnavalkya, Brihaspati, Narada and Parashara among others.

The Vedanta philosophy considers the universe around us as unreal (Mitya) and an illusion ( Maya) and Brahman, the absolute soul as the supreme reality. It therefore emphasises on spiritual values, of which righteousness or Dharma takes pride of place. The ' Ancient Hindu view that law is the command of God and not of any political superior (sovereign). The ruler is also bound to obey it and is under a duty to enforce it. Thus, law is part of 'Dharma'. This being the view about law, we find moral and religious injunctions mingled up with legal precepts. The idea of justice is always present in Hindu concept of law"[8]

Thus once could see an almost identical apprpach between Western natural law thinkers and the Hindu concept of law. Plato in his Republic poses the question what is the meaning of justice and explains how justice could be achieved by philosopher kings ruling the state and other classes in society performing their respective given roles.[9] The organisation of society to achieve Dharma or the spiritual progress is described as varnashrama dharma in the Rigveda. Free people with equal rights were divided into four groups or varnas namely Brahmana, Ksastriya, Vaisya and Sudra who were to play their respective roles in society. The brahmana varna consisted of priests, ksatriyas of mainly warriors, vaisyas farmers, artisans and traders and the sudras the lowest group in the social hierarchy. However, with the passage of time this classification degenerated into an oppressive stratification of social levels. Originally caste was not to be determined by hereditary but by virtue alone.' The dream of the sages was to organise the society into a co-operative hierarchy... But, over the time, this idealistic agenda gave way to unforeseen circumstances under which

individual genius had no scope, heredity assumed undeserved importance, and initiative was killed.'[10]

St. Augustine[11] in his famous work ' De Civitas Dei' or the City of God compares states without justice to bands of robbers[12]. St. Thomas Aquinas[13] stated that man made law or lex humana should conform to natural law or lex natura that derives its inspiration from the Holy Scriptures. He further urged that laws that violate natural law deserve no obedience from the subjects. A government or a ruler who abuses its authority by enacting unjust laws loses its legitimacy and the right to rule and justifies even rebellion.[14] Where injustice causes revolt is amply depicted in the story of Pattini and Kali. Pattini the virtuous woman was turned into Kali who is referred to in Wayne Morrison's 'Jurisprudence' as one ' who represents horrifying aspects of destructive forces. Descriptions portray her as bloodthirsty, ruthless and fierce.[15]

As opposed to the Vendanta school which was theistic, there emerged a materialistic school known as Lokayata. The word Lokayata means 'widespread among the people' and its principal exponent was considered to be a philosopher named Charavaka.[16] According to this school only this world (loka) exists, and there is no hereafter or life after death. They believed that true knowledge was obtained from sense organs (indriya) and this knowledge is called pratyaksa jnaya (empirical knowledge) In Western philosophy, empiricism and secularism became prominent with the writings of Hobbes, John Locke, and Rene Descartes[17] and the Rationalists. The Legal philosophers too viewed law from empirical point of view. Those of the Positivistic school led by Jeremy Bentham and John Austin emphasised the difference between 'law as it is' meaning law made by rulers and the 'law as it ought to be', the law that conform to higher principles. It was the contention of the positivists that there was no necessary connection between law and morals. As such law does not derive its legitimacy from any higher law and any law is valid provided it is properly enacted, irrespective of its moral content.

In this brief account an attempt was made to focus on certain parallels between Hindu philosophy and Western thought, which require further investigation and research. To make jurisprudence relevant and meaningful to present day students, who study this subject in Swabasha, teachers should attempt to link western jurisprudential knowledge with the traditional wisdom of the East. When certain jurisprudential terms are translated literally into local languages it is obvious they lose their true meaning, sometimes resulting in absurdity. If we are to think of teaching jurisprudence meaningfully to our students in the present circumstances, we will have to look for indigenous source materials.

1 Attorney at Law, Principal Sri Lanka Law college

2 Henry Maine served as Law member of the Council of Governor General of India between 1861 and 1869 and authored researched works; Ancient Law, Village Communities, Early History of Communities and dissertation of Early Law and Customs

3 Lloyd's Introduction to Jurisprudence, 6th Ed.p. 789

4 Anaximenes was a pupil of Anaximander.They believed that the world was composed of four elements namely fire, air, earth and water. The Charvakas too considered these four elements 'mahabuta' as the basis of all that is. In the West, materialistic views of the world became popular in the 18th century.

5 Brodov V, Indian Philosophy in Modern Times, citing Engels p.11

6 For various meanings of natural law see H L A Hart Concept of Law p.189

7 For a discussion on Positivism and the Separation of Law and morals see H.L.A.Hart in Llyod's Jurisprudence 6 Ed. P. 393

8 Mani Tripathi, Jurisprudence Legal Theory, p.92

9 In Plato's Republic each person belongs to one of the three social classes namely rulers, warriors and workers. In order to achieve justice all the three classes should work in harmony.

10 Hinduism : Myths and Facts

11 354 – 430 AD born in Algeria as it is known now, scholar, intellectual, who was converted to Christianity in later life, became a church father, Bishop of Hippo

12 'Remove justice, and what are kingdoms but gangs of criminals on a large scale?' City of God Bk IV,4

13 1225 – 1274, renowned Catholic thinker of the middles ages, synthesised Aristotle's idea with those of the Church.

14 'If the ruler goes beyond his competence and tyrannises the people, he oversteps his legitimate authority. As the rulers are also subject to natural law, the subjects can refuse obedience and may even be justified in starting a rebellion.' Summa Theologicae q96. a4

15 Morrison, Wayne, Jurisprudence: from the Greeks to the post-modernism. p.18. He is a rare writer who has referred to Indian philosophy in his writings on jurisprudence.

16 According to Sudheer Birodkar the legend says that Charavaka was burned at the orders of Yudhisthira after the Mahabarat war. His crime was apostacy in declaring that Vedas are not the ultimate in human knowledge.

17 'Cogito ergo sum' I think therefore I am. To him the only certainty is ones own consciousness of his own existence.



# எண்ணியது முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும்

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா

மக்கள் எண்ணுகிற எண்ணங்களே அவர்களை வாழவைக்கின்றது என்ற கருத்து வேத ஆகம புராண காலங்களில் இருந்து இக்காலம் வரை பலரும் எடுத்துக் கூறி வருவதாகும். நம் நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டில் வாழ்வோர் கூட இக்கருத்துடன் உடன்பட்டுப் பேசி வருகிறார்கள். ஒரு நாட்டின் சூழ்நிலை கெடுகிறது என்றால் அந்நாட்டு மக்களின் எண்ணங்களில் தவறு இருக்கிறது என்பதே கருத்தாகும். இதனையே தனிமனித நிலையில் வைத்து 'எத்பாவம் தத்பவதி' என்று வடமொழி கூறுகிறது. எண்ணத்தின் படியே வாழ்வு என்பது இதன் பொருள். 'நினைக்கத் தனக்கு' என்பதும் "மனம்போல வாழ்வு" என்பதும் இதன் கருத்தையே வலியுறுத்தும்.

மகாபாரதத்தில் இக்கருத்து நன்கு விளங்கப்படுத்தப்படுகிறது. பஞ்சபாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் இருந்துவிட்டு ஓர் ஆண்டு நாட்டிற்குள் மறைந்து வாழவேண்டும் என்ற உடன்படிக்கையின்படி விராடதேசத்தில் ஒவ்வொருவரும் மாறுவேடம் பூண்டு மறைந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் முடித்து நாட்டிற்குள் ஓர் ஆண்டு மறைந்து வாழ்கிறார்கள் என்பதை அறிந்த துரியோதனன் அவர்களை இச்சமயத்தில் கண்டுபிடித்து மீண்டும் வனவாசம் அனுப்பவேண்டும் என்று எண்ணுகிறான். அதனால் பாண்டவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைக் கண்டறியப்பலரைப் பல இடங்களுக்கும் அனுப்புகிறான். அவர்கள் கண்டுபிடிக்க இயலாமல் திரும்பி வந்துவிடுகின்றனர். அப்பொழுது பீஷ்மர் துரியோதனனைப் பார்த்து 'இப்படியெல்லாம் தேடினால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியுமா? எந்த நாட்டில் மக்கள் மகிழ்ச்சியோடும் வளத்தோடும் இருக்கிறார்களோ அந்தநாடே அவர்கள் வாழும் இடம் என்று கண்டு கொள்க' என்று அறிவுறுத்துகின்றார். துரியோதனனும் அதனைக்கேட்டு விராடதேசந்தான் வளத்தோடும் செழிப்போடும் இருக்கிறது என்பதனை அறிந்து அங்கே சென்று அவர்களைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கின்றான்.

இதிலிருந்து, நல்லோர்கள் வாழும் இடம் வளம் குன்றாமல் இருக்கும் என்பது உண்மையாகின்றது. இதனை திருமூலர் தம் திருமந்திரத்திலும் விளக்கி அருளுகின்றார்.

'இன்பமும் துன்பமும் நாட்டாரி டத்துள்ள
நன்செயல் புன்செய லாவந்த நாட்டிற்காம்
என்ப; இறைநாடி நாடோனும் நாட்டினின்
மன்பதை செப்பஞ்செயின் வையம் வாழுமே"

எனும் இப்பாடலில் ஒருநாட்டில் இன்பமும் துன்பமும் விளைவது அந்நாட்டின்கண் உள்ள மக்களின் நல்லசெயலாலும் அற்பச் செயலாலும் தான் என்று விளக்கியருளுகின்றார். மேலும் மக்களை ஆளுகின்ற மன்னனும் குறைவேண்டினார்க்குக் குறை தீர்த்தும் முறைவேண்டினார்க்கு முறை செய்தும் நன்முறையில் அனைவரையும் ஒப்பக்கருதி ஆட்சி செய்வானேயானால் வையம் வாழும் என்றும் கூறியிருக்கின்றார். ஆதலின் நெஞ்சில் எழும்

எண்ணங்களே எல்லோரையும் வாழவைக்கிறது என்பது தெளிவாகின்றது. வள்ளுவரும் "உள்ளத்தனையது உயர்வு" என்று அருளினார்.

'எது அவவேடம்' என்ற கருத்தமைந்த பாடல் 'அவவேடம்' என்னும் தலைப்பில் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளது. அவவேடம் என்றால் துறவிகள் கொண்டுள்ள வேடக்குறைவு என்பது மட்டும் பொருளில்லை. ஆசிரியர்கள் அவர்கள் நிலையில் தாழ்ந்து போனாலும் அதுவும் அவவேடமாகும். காவல் துறையினர் அவர்களின் தகுதியில் குறைந்து போனாலும் அதுவும் அவவேடமாகும். இதேபோன்று நீதிபதிகள் அரசியல் வாதிகள் இன்னும் அனைத்துத் துறையினரும் தங்கள் தங்கள் நிலையில் திரிந்தாலும் தாழ்ந்தாலும் அதுவும் அவவேடமேயாகும். எனவே எல்லாத்தரப்பிலும் தரங்குறையாமல் அனைவரும் நல்லமனம் கொண்டு வாழத் தலைப்பட்டால் வீடும் நாடும் வளம் பெற்றுத் திகழும் என்பது கருத்து.

யுத்தத்துக்கு வேண்டிய வெடிமருந்து களைத் தயார் செய்து கொள்ளை கொள்ளையாகப் பணம் திரட்டிய ஒருவர் யுத்தத்தைத் தடுத்துச் சமாதானத்துக்குப் பாடுபடுபவருக்கு பெருந் தொகையாகப் பரிசளிக்க முன்வந்தார் என்றால் விந்தையாக இருக்கின்றதல்லவா? ஆம், இன்று உலகிலேயே உயர்ந்த பரிசாகக் கருதப்படும் நோபல் பரிசை ஏற்படுத்தியவர்தான் அந்த வெடிமருந்து வியாபாரி.

சுவீடன் தேசத்தில் பிறந்த அல்பிரட் நோபெல் என்பவர்தான் அந்த மனிதர். அவருடைய தந்தையும் ஒரு வெடிமருந்து வியாபாரிதான். ஆனால் அவர் சாதாரண வெடிமருந்தையே செய்தார். மகனோ நைட்ரோகிளிசரீன் என்னும் பொருளையும் சேர்த்து சக்திமிக்க வெடிமருந்துகளைத் தயார்செய்தார். ஐரோப்பாவின் பலபாகங்களிலும் வெடிமருந்துக் கம்பெனிகளை உருவாக்கினார். கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்தார்.


அவருக்கு மனைவியுமில்லை மக்களுமில்லை. கல்யாணம் செய்து கொள்ளாமலேயே காலத்தை ஓட்டிவிட்டார். கடைசிக் காலத்தில் அவருக்கு ஒரு ஆசை ஏற்பட்டது. தாம் சேர்த்த செல்வத்தை நல்லவழிகளில் செலவிட வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. உடனே அவர் ஒரு முறி எழுதி வைத்தார். அதன்படி ஆண்டுதோறும் இலக்கியம், பௌதீகம், இரசாயனம், வைத்தியம், சமாதானம் என்ற ஐந்து துறைகளில் சிறப்பாகத் தொண்டாற்றியவர்களுக்கு இப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. அவருடைய நல்லெண்ணத்தினால் என்றும் போற்றப்படுகின்றார், அவர்பெயரும் நிலைத்து நிற்கிறது.

ஔவையார் என்ற தமிழ்ப்புலவர் ஒரு நாட்டினைப் பற்றிப் பாடும்போது ஒரு நாடு நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும் அதில்வாழும் மக்கள் நல்லவர்களாக வாழ்வார்களேயானால் அந்நாடும் வளமுற்றிருக்கும் என்று பாடுகிறார்.

நாடாகொன்றோ; காடாகொன்றே;
அவலா கொன்றோ; மிசையா கொன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்;
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

என்பது அப்பாடலாகும்.

எனவே மக்களின் மனப்போக்குக்கு ஏற்பவே வாழ்வும் தாழ்வும் அமையும் என்பதனை மகாபாரதமும் திருமந்திரமும் புறப்பாடலும் பிற அறிஞர்களின் கூற்றும் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. இதனை நன்குணர்ந்து நாடு வளம் பெறத்திட்டங்கள் பல தீட்டுவதோடு மனத்தையும் வாக்கையும், செயலையும் தீதின்றிப் பழக்கி வைத்துக் கொள்வதே தக்கதாகும். இக்கருத்தைச் சிந்திப்பதே இன்றைய சிந்தனையாகக் கொள்வோம்.



# "தண்டனை தொடரும்......."

"சிவத்திரு" டாக்டர் இரா. சிவ அன்பு
கதாப்பிரசங்கவாரிதி - திருமுருக கிருபானந்த வாரியாரின் சீடர்

உலகம் தோன்றிய நாள் தொட்டு மனிதனை நல்வழிப்படுத்த காலத்துக்குக் காலம் பல சமயப் பெரியார்களும் அவதார புருஷர்களும் தோன்றி அறத்தை நிலைநிறுத்தி நீதி வழுவாது காப்பாற்றிவந்துள்ளனர். எல்லா சமயங்களும் அறத்தைத்தான் வலியுறுத்துகின்றன. நல்லனவே செய்! நல்லதையே நினை!! நல்லவற்றையே பேசு!!! என்பன போன்ற பொன்னான நன்னெறிகளையே வற்புறுத்துகின்றன. இவற்றுள் இந்துசமயம் மிகவும் புராதனம் வாய்ந்தது. "சனாதன தர்மம்" என்ற சிறப்புப் பெயர் பெற்றது.

நீதியை நிலைநாட்ட மனுசாஸ்திரம் போன்ற சாஸ்திர நூல்கள், வேதத்தின் சாரமான உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் போன்ற பல தர்மப் பிரபந்தங்கள் உண்டாயின. அவையெல்லாம் காலத்திற்கு அப்பாற்பட்டவை எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய அரும்பெரும் பொக்கிஷங்கள் ஆகும். அவற்றை அறிந்து நடைமுறை வாழ்க்கையில் நாம் கடைப்பிடித்து நம் சந்ததியினருக்கு அரும் பெரும் பொக்கிஷங்களாக கையளிக்க வேண்டும். இது நாம் அனைவரும் எடுக்க வேண்டிய ஒரு சங்கல்பமாகும்.

நாம் ஒரு குற்றச்செயல் அல்லது பாவம் புரிந்தோமானால் கட்டாயமாக என்றோ ஒருநாள் அதற்குரிய தண்டனையை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ஒரு தாக்கத்திற்கு எப்போதும் ஒரு எதிர்த்தாக்கம் (நுளநசல யஉவழைெ ரயள ய சநயஉவழைெ) இருப்பது போல நாம் வாழ்கின்ற காலத்தினுள் எமக்கு என்று ஒதுக்கப்பட்ட வினைப்பயனை அனுபவிக்கிறோம். மேலும் நாம் சேகரிக்கின்ற வினைகளின் பயன்களை இப்பிறவியில் அனுபவிக்க முடியாது போனால் அது மறுபிறவியிலும் தொடரும். இது தர்ம சாஸ்திரங்கள் கூறும் வினை விதிப் பயன்களாகும். இதைக் கீழ்க்காணும் வரலாறு விளக்குகின்றது.

ஒரு அழகிய கானகத்தில் சோலை வனச் சூழலில் ஆசிரமம் ஒன்றில் ஒரு வயதுமுதிர்ந்த குரு (முனிபுங்கவரும்)வும் சில சீடர்களும் இருந்தனர். அங்கு பல யோக நெறிப் பயிற்சிகள், ஆன்மீகப்பயிற்சிகள் எல்லாம் பயின்றனர். அதில் ஒரு சீடன் மிகவும் சுறுசுறுப்பானவன் இளைஞன் ஆகவே அவன் தன் குருவின் அனுமதியோ, வழிகாட்டலோ இன்றி "பிராணாயாமம்" எனும் யோகப்பயிற்சியை செய்ய முற்பட்டான். இது மிக அவதானமாக ஒரு குருவின் வழிகாட்டலுடனேயே செய்யவேண்டிய ஒன்றாகும் இது சுவாசத்தை ஏற்றி இறக்கி, குண்டலினி சக்தியை எழுப்பி சுழுமுனை நாடி வழியாக ஆறு ஆதாரங்கள் ஊடாக மேற்கொணர்ந்து ஞானயோகம் பெறல். அந்த இளம் துறவி அவசரத்தில் மேற்கொண்ட முயற்சி அவருக்கே தீங்குவிளைவித்தது. விஞ்ஞானத்தில் கூட சில அணுக்களின் சேர்க்கைமுறை மாறுபட்டால் வெடித்துச் சிதறி அனர்த்தங்கள் நேர்வது போல இவருக்கு சுவாசம் இறுகி உடம்பு குறுகி, நிற்கவும் சக்தியற்று விழுந்துவிட்டார். குருநாதர் வந்து பார்த்ததும் திடுக்கிட்டார்! பரிதாபப்பட்டார் அந்த சீடனிடம் " நீ சென்று நரசிம்மமூர்த்தி உபாசனை செய்தால் இந்நோய் (அவர் தரிசனம் கிடைத்தவுடன்) அகலும் என்று புத்திமதி கூறினார். அவர்

திருவடிகளைத் தொழுது நரசிம்ம உபாசனைக்குரிய மந்திரத்தை உபதேசம் பெற்றுக் கானகம் சென்றார். ஒரு காலில் நின்று அன்ன ஆகாரம் இன்றி தவம்செய்தார். அந்தக் கானகத்திலே ஒரு கரிய, அழுக்கடைந்த, மேனியனாய், பரட்டைத் தலையுடன், கந்தல் துணியுடன், ஒரு வேடன் இருந்தான். "இந்த இளம் துறவி, இரண்டு மூன்று நாட்களாக அன்னம் தண்ணீர் இன்றி வாயில் ஏதோ முணுமுணுத்தபடி ஒரு காலில் நின்று, கஷ்டப்படுகிறாரே" என்று இரங்கி, அவரிடம் ஏனையா இப்படி கஷ்டப்படுகிறீர்? ஏதாவது சாப்பிடும்" என்று கூறினார் அதற்கு அந்தத் துறவி தான் நரசிம்மத்தைத் தரிசிக்காது சாப்பிடமாட்டேன் என்று அடித்துக் கூறினார். வேடன், தான் இந்தக் காட்டின் சக்கரவர்த்தி என்றும் இவர் குறிப்பிடுவது போல ஒரு சிங்கத்தை தான் இதுவரை பார்த்ததில்லை என்றும் கூறினார். அதாவது சிங்கமுகம், மனித உடல், தேவர் திருப்பாதம், பட்டுப் பீதாம்பர ஆடை உயர் அணிகலன்கள் இப்படி வர்ணனை நீண்டது வேடன் சொன்னான் "இந்தக் காட்டில் எனக்குத் தெரியாத இடமும் இல்லை; பிராணிகளும் இல்லை" "நீங்கள் குறிப்பிடுவது போல ஒரு சிங்கம் இங்கு நான் காணவே இல்லை" என்றார்.

இவருடைய பரிதாபம் பொறுக்கமுடியாது தானும் அந்த நரசிம்மத்தைத் தேடத்தொடங்கினார். கானகம் எங்கும் தேடி அலுத்துக் களைத்து ஒரு மரத்தடியில் ஓய்வுக்காகப்படுத்தார். அப்போது ஒரு அசரீரி கேட்டது நிமிர்ந்து பார்த்தார் மரத்தின் மேல் அதே வர்ணனையுடன் நரசிம்மமூர்த்தி கிளையின் மேல் இருந்தார். "ஓஹோ! நீ இங்குதான் இருக்கின்றாயா? அந்த சாமியார் எவ்வளவு கஷ்டப்பட்டு உன்னைக்காணத் துடிக்கிறார்! வா! என்று சொல்லி அங்கிருந்த கொடிகளினால் அவர் இடுப்பைச் சுற்றிக் கட்டி இழுத்துக்கொண்டு வந்தார். நரசிம்மரும் அவனால் கட்டுண்டு, இழுபட்டு வருகின்றார். கொண்டு வந்து "ஓய் சாமியாரே! இதோ நீங்கள் தேடும் சிங்கம்! நரசிம்மம்" என்று இழுத்துக் காட்டினாராம் அந்த முனிவர் திகைத்துப் போனார். நரசிம்ம மூர்த்தியைப் பார்த்து கண்ணீர் பெருகி, நெக்குருகி! "தேவதேவா! தேவாதி தேவர்கட்கும் காணக்கிடைக்காத நீங்கள் ஒரு கரிய வேடனிடம் கட்டுண்டு வந்தவாறெங்கனம்?" என்று கேட்டார்.

அதற்கு அவர் "அடேய்! அவனை சாதாரண வேடன் என்று நினையாதே! அவர்தான் போன பிறவியில் "பீஷ்மர்" என்றதும் இவருக்குத்தூக்கி வாரிப்போட்டது. "பீஷ்மருக்கா இந்தக்கதி! அந்த புண்ணியவாளன் குருதேவன்! தேவவிரதன்!! என்று புகழப்பட்டவன்! அவருக்கு இப்படி ஒரு பிறவியா? சுவாமி!" என்று கேட்டான். நரசிம்மமூர்த்தி "அவைநடுவே திரௌபதை மானபங்கப் படுத்தப்படும் போது, பார்த்திருந்தும், அது தவறு என்று தெரிந்திருந்தும், அவரின் வார்த்தையால் அந்தச் சம்பவத்தையே தடுத்து நிறுத்தும் வல்லமை இருந்திருந்தும் தலைகுனிந்து மௌனமாக இருந்தார். அந்தக் குற்றத்திற்கான தண்டனையாய் இப்பிறவி ஏற்க நேர்ந்தது." ஒரு பாவத்தில் 5பேர் சம்பந்தப் படுகிறார்கள். அதில் 5வது நபர் பார்த்திருந்தும் மௌனமாக இருந்தால் அவரும் பாபவாளியே! முனிபுங்கவர் அதிர்ந்து போனார்.

அது சரி! மாதவா! அந்த வேடன் கொடிகளினால் உன்னை இடுப்பைச்சுற்றி அழுக்குடம்பால் அணைத்துப் பற்றிக்கொண்டு வர நீங்கள் என்ன பாவம் செய்தீர்கள்? என்று கேட்டார்.

ஓ! அதுவா! அவன் போரிடும்போது ஒவ்வொரு அம்பைவிடும்போதும் "கிருஷ்ணார்பணம்" என்று சொல்லியே விட்டான். அதன்பலன் இந்தப் பிறவியில் அவன் என்னைத் தீண்டி, அணைத்துக் கட்ட நான்கட்டுப்பட்டேன் என்று பதில் கொடுத்தார்.

ஆகவே இந்த அறக்கதையிலிருந்து தெளிவாவது என்னவென்றால் நன்மையும் தீமையும் பிறர்தரவாரா என்பதுபோல அவையிரண்டும் பிறவிகட்டும் தொடரும் வலுவுள்ளவை நாம் செய்யும் பாபத்தின் தண்டனையை என்றோ ஒரு நாள் வேண்டுமானால் இன்னோரு பிறப்பு எடுத்தேனும் அனுபவித்தே ஆகவேண்டும் ஆகவே துன்பங்கள் வரும்போது இதை மனதில் கொண்டு சிந்தித்து தெளிவு பெறுவோமாக.



# வேதாந்த கண்ணோக்கில் ஆன்ம தத்துவம்

திரு. ஜே. எம். சுவாமிநாதன் LL.M., M.Phil
சிரேஷ்ட சட்டத்தரணி

இறைவன், ஆன்மா, உலகம் ஆகியவை பற்றித் தத்துவ ஞானிகள் பல கருத்துகளை வெளியிட்டுள்ளனர். இந்து சமயத்திலும், வேதாந்தத்திலும் சங்கரர், ஆன்மா பற்றித் தமது நூல்களில் விளக்கியுள்ளார்.

ஆன்மா என்றும் உள்ள பொருள். அது ஒரு பொழுதும் அழியாது. ஆன்மாவும் பிரம்மமும் ஒன்று என்ற கருத்து வேதாந்தத்திற் கூறப்படுகின்றது. இங்ஙனம் நோக்கும் பொழுது ஆன்மா பசி, தாகம் ஆகியவற்றால் பாதிக்கப்படமாட்டாது. ஆன்மா நன்மை, தீமை, இன்பம், துன்பம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டது. இத்தகைய ஆன்மாவை அறிவது தான் மனிதனின் உன்னத நோக்கு. இவ்வுயர் நிலையில் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்று என அறியப்படும்.

எனினும் இதற்கு சற்று கீழ் நிலையில், உலகத்தில் பல ஜீவாத்மாக்கள் உண்டு என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது உடலுடன் கூடிய ஜீவாத்மா இன்ப துன்பங்களுக்கு உட்படுத்தப்படும். உலகத்தில் கட்டுண்டதில் இவ் ஜீவாத்மா பிறப்பு இறப்பு ஆகியவற்றிலிருந்து விடுபட்டு முத்தி இன்பம் பெற விரும்புகின்றது. இங்ஙனம் வீடு பேறு பெற கருமயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய மார்க்கங்களை ஆன்ம நூல்கள் எமக்கு அறிவுறுத்துகின்றன. ஜீவாத்மா அதன் உண்மை நிலையை அறிந்தவுடன் விடுதலை அடையும். விருப்பு, வெறுப்பு ஆணவம் போன்ற குணங்களை ஆன்ம சாதன மூலம் வென்று தனது தெய்வீக நிலையை அடையும் பொழுது உலக பந்தங்களில் இருந்து ஆன்மா விடுபட்டு பேரின்பம் பெறும்.

பிரம்மம் மாயையுடன் கூடும் பொழுது ஈஸ்வரனாக விளங்குகின்றது. அதேபோல மாயையுடன் கூடும் பொழுது ஜீவாத்மாகவும் விளங்கும். எனினும் ஈஸ்வரனுக்கும் ஜீவாத்மாவுக்கும் இடையே பெரும் வேற்றுமை உண்டு. ஈஸ்வரனுக்கும், ஜீவாத்மாவுக்கும் உள்ள வேற்றுமை, சூரியனுக்கும் மின்மினிப்பூச்சிக்கும் உள்ள வேற்றுமையைப் போன்றது எனக் கூறுவர். மண்ணினால் செய்யப்பட்ட சிங்கமொன்றும், எலியும், இவை இரண்டும் மண்ணாக்கப்பட்டால் ஒன்றாவது போல உயரிய அத்துவத நிலையில் ஈஸ்வரனும், ஜீவனும் பிரம்மம் உடன் ஒன்றாகும்.

உபநிடத்தில் இக்கருத்து நன்கு விளக்கப்படுகின்றது. பரமாத்மாவும், ஜீவாத்மாவும் இரு பறவைகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. ஒரு பறவை மரத்திலுள்ள கனிகளை உண்கின்றது. மற்றைய பறவை கனிகளை உண்ணாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றது. இது போன்று ஜீவாத்மா அதன் உண்மை நிலையை அறிந்தவுடன், எல்லாத் துன்பமும் அற்றுப்போய், பேரானந்த நிலையை அடைகின்றது. இந்நிலையை "நானே அது" "ஆன்மாவும் பிரம்மமும் ஒன்று" போன்ற வேதாந்த மகா வாக்கியங்களை, உண்மை அறிகின்றது.

ஆன்மா மாயை உடன் சேர்ந்து ஜீவாத்மா ஆகின்றது. இந்நிலையில் நன்மை தீமைகளைச் செய்து, அதற்கேற்ப பல் வேறு உடல்களை பெற்று உலகங்கள் தோறும் உழழுகின்றது. ஜீவன் இந்நிலையில் இந்திரியங்களை மனம், பிராணன் ஆகியவற்றுடன் கூடி உள்ளது. இந்திரயங்கள் பத்து ஆகக் கருதப்படுகின்றது. இவற்றுள் ஐந்து கர்மோந்திரயங்கள் மற்றைய ஐந்தும் ஞானேந்திரயங்கள். மனம், புத்தி, அகங்காரம் என மனம் மூன்று வகைப்படும். இவை மூன்றும் சேர்ந்து சித்தம் எனவும் அழைக்கப்படும். பஞ்ச ஞானேந்திரயம், பஞ்ச கர்மேந்திரயம் பஞ்ச பிராணவம், மனம், புத்தி ஆகியவை சேர்ந்து சூக்கும சரீரமாகின்றது. தூல சரீரம் மரணத்துக்குப் பின் அழிகின்றது. எனினும் கன்மங்களின் உறைவிடமாக சூக்கும சரீரம் விளங்குகின்றது. தூல, சரீரத்துக்கு அப்பால் காரணசரீரம் உள்ளது. இது ஆழ்ந்த உறக்கத்தில் இயங்குகின்றது.

வேதாந்தம் பிரம்மம் ஏன்றே உள்ள பொருள் என்றும் உலகம் மாயை என்றும் கருதுகின்றது. கயிறு எங்ஙனம் பாம்புபோல தோன்றுகின்றதோ அதே போல அஞ்ஞானம் காரணமாக பிரம்மம் உலகமாகக் காட்சி அளிக்கின்றது. பிரம்ம ஞானம் அடைந்தவுடன் ஆன்மா பிரம்மம் ஒன்றே உண்மைப் பொருள் என்னும் பேருண்மையை அறிகின்றது. இதுவே வேதாந்தத்தின் உயரிய இலட்சியம்.



# சனாதன தர்மம்

திரு. ராம். பாலசுப்பிரமணியம்
Solicitor (England & Wales),
Attorney-at-Law & Notary Public
சிரேஷ்ட சட்டத்தரணி

இந்து சமயம் சனாதன தர்மத்தைக் குறிக்கும். இது ஒரு எல்லைக்குள் வரையறுக் கப்பட்ட சமயம் அல்ல "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டை உள்ளடக்கிய சமயம். சமயம் என்பது 'வழி' 'மார்க்கம்' உண்மையைத் தேடிச் செல்லும் மார்க்கம். உண்மை என்பது ஒன்றே இது பலரால் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இந்து சமயம் என்றும் பயத்தைப் போக்கும் சமயம் என்றும் சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகிறார். உண்மையை உணர்ந்தால் பயம் தானாக விலகும். ஆதிமனிதன் இயற்கையின் சீற்றத்தைப் பார்த்து அஞ்சினான். இயற்கையின் செயற்பாட்டை நன்கு அறிந்து அந்தச் செயற்பாட்டுக்கமைய இப்போது நிலவும் சாதி, சமயம் வேறுபாடுகள் கிடையா. இயற்கையில் செயற்பாட்டை மீறிச் செல்லும் பொழுதே உலகில் சஞ்சலங்கள் ஏற்படுகின்றன. ஆதியில் இருந்த ஞானிகள், யோகிகள் தியானமூலம் உண்மையை அறிந்து தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் எனும் பொருட்டு வகுக்கப்பட்டதே சனாதன தர்மம். இதுவே இந்து மதம். அதன் அடிப்படை அன்பே.

இந்த உண்மையைத் தேடித்தந்தவர்களில் திருமூலரும் ஒருவர். மெய்ஞ்ஞானத்திலும், விஞ் ஞானத்திலும், வாழ்விலும் பூரண வெற்றிகண்டவர். உண்மை, கால தேச வர்த்தமானங்களைக் கடந்து நிற்பது. உண்மையோடு ஒன்றித்து நின்று உயிர்களுக்கு அன்போடு பணிசெய்வதால் பெறப் படும் இன்பமே உண்மை இன்பம் எனக்கண்டவர் திருமூலர்.

உலகம், உடல், உயிர், மனித வாழ்வு என்பன பற்றிய உண்மை நிலைகளை தெளிவாக்கும் அதேவேளை இவ்வையகத்திற்கும் மேலாக, மனிதன் மனிதத் தன்மைகளோடு மனிதனாக வாழ்வதற்கு வேண்டிய உண்மை நெறி முறைகளையும், உலகில் வாழ்வாங்கு வாழும் வழிகள் பற்றி வாழ்வியல் நடைமுறை வெளிப்பாடு களையும், மனிதன் வேறுபாடுகளிலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திர மனிதனாகப் பூமியில் வாழ மேற்கொள்ள வேண்டிய உபாயங்களையும் திருமூலர் ஓர் வாழ்க்கை நூலான திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலர்
அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்னும் கோட்பாட்டிலேயே இப்பிரபஞ்சம் உருவாகியது. அன்புக் கோட்பாட்டிலேயே பிரபஞ்சம் இயங்குகிறது என்ற ஒரே முடிவுக்குக், உலகில் பல்வேறு பாகங்களிலும் தோன்றிய பல்வேறு ஞானிகள், யோகிகள் வந்தனர். அவர்களுக்கு ஒவ்வொரு உயிரினத்திலும் இறைவனே தென்பட்டது. இவர்கள் யாவரும் எல்லோரும் இன்புற்றிருக்கும் அன்புமார்க்கத்தைக் கூறினரேயன்றி ஒரு வரையறுக்கப்பட்ட ஸ்தாபனரீதியான மதத்தை ஏற்படுத்தவில்லை.

ஆனால், பின் வந்த மனிதர்களோ, மேற்குறித்த பெரியார்களின் போதனைகளைப் பிரசாரம் செய்வதாகக் கூறி வரையறுக்கப்பட்ட

ஸ்தாபனங்களை சமயத்தின் பேரில் ஏற்படுத்தி, ஒற்றுமைக்குப் பதில் வேற்றுமையை வளர்த்தார்கள். இந்து என்றால் 'பரந்த' என்ற பொருள்படும். சைவம் என்றால் "பூரணம்" எனப் பொருள்படும். எனவே இந்து என்றால் பரந்த மனப்பான்மையுடையவன் என்ற பொருள்படும் சைவன் என்றால் பூரணமானவன் எனப் பொருள்படும். அதாவது அன்பு மயமானவன் எனப்பொருள்படும். இதேபோன்றே கிறிஸ்தவன், பௌத்தன், இஸ்லாமியன் என்றால் அன்பு மயமானவன் என்ற பொருள்படும்.

மேற்குறிப்பிட்ட போதனைகளைச் செய்தவர்கள் ஒருவரும் ஓர் சமய ஸ்தாபனத்தை ஏற்படுத்தவில்லை. இயேசுநாதர் கிறிஸ்தவ மதத்தை ஏற்படுத்தவில்லை. புத்தர் புத்தசமயத்தை ஏற்படுத்தவில்லை. முகமதுநபி இஸ்லாம் என்று ஓர் சமயத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் இவர்களின் போதனைகளைப் பரப்பும் நோக்குடன் ஸ்தாபன ரீதியாகச் சமயங்கள் உருவாக்கப்பட்டன. அன்பின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட போதனைகள் அதிகார பீடங்களாக மாறின. இந்து வேறு, சைவன் வேறு, கிறிஸ்தவன் வேறு, இஸ்லாமியன் வேறு, பௌத்தன் வேறு என அன்புக்குப் பதில் வேற்றுமை வளர்க்கப்படுகின்றன. இந்த வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டதே சனாதன தர்மம். ஆனால் நடப்பதென்ன? சமயத்தின் பேரிலே கட்டிடங்கள் சேதமாக்கப்படுகின்றன, தீக் கிரையாக்கப்படுகின்றன. அப்பாவிகள் கொல்லப் படுகின்றனர்.

இது மட்டுமா, புத்தரின் போதனைகளைக் கேட்ட மாத்திரத்தே அசோக மன்னன் புத்தத்தைக் கைவிட்டான். மகிந்தனைக் கண்டமாத்திரத்தே வேட்டைக்குச் சென்ற மன்னன் தேவநம்பிய தீசன் வில்லையெறிந்தான். வேட்டையை வெறுத்தான். ஆனால் இதே புத்தமதத்தைப் பாதுகாக்கிறோம் என்ற பேரிலே எத்தனை கொலைகள் கொடுமைகள்.

உண்மையை நாம் உணர்ந்தால் இந்நிலை ஏற்படாது. திருமூலர் கூறுகிறார், சிவம் என்பது உண்மை. ஆத்மா ஒரு தத்துவம். இறைவி அருள் ஆகும். சைவம், மனித வாழ்வின் இலக்குகள், குறிக்கோள்கள் யாவையெனத் தத்துவத்தின் ஊடாக இனங்காண்பதற்கு மேற் கொள்ளப்படும் முயற்சிகளுக்கும், இவற்றை எய்துவதற்கும் ஆன தத்துவத்தின் செயற்பாடு ஆகும். சமயச் செய் திகள் வாழ்க்கையில் சாதனைகள் ஆகவேண்டும் என்பது அவரின் பெருவிருப்பு. சாதனைக்குரிய மிக இலகுவான வழியொன்றைப் பின்வருமாறு காட்டுகிறார்.

சகல உயிரினங்களினதும் அமைதியான, சாந்தமான வாழ்விற்குப் பிரார்த்தித்து

- இறைவனின் பாதங்களில் ஒரு பசுமையான இலையை வைத்து வழிபாடு செய்யுங்கள்.
- ஒரு பசுவிற்கு ஒரு பிடி புல் கொடுங்கள்.
- உண்ணும் உணவில் ஒரு கவளத்தை பசித்து வந்தோருக்குக் கொடுத்து உண்ணுங்கள்.
- எல்லோருடனும் அன்புகலந்த இனிய வார்த்தைகளையே பேசுங்கள்.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

இவற்றைச் செய்து வருதல் சிறந்த ஆத்ம சாதனையாகும்.

மனிதன் வாழ்க்கையில் ஆன்மிகத்தை வெளிப்படுத்த உதவுவது தவவாழ்வு. மனிதர்கள் ஆன்மிக வளம் கொண்டவர்கள்; ஆன்மிகச் செல்வர்கள். இந்தச் செல்வம் மனிதனுள் புதைந்து கிடக்கும் வரை பயன்படாது. ஆன்மிகம் வாழ்வில் வெளிப்படுதல் வேண்டும். உலகியலும்

ஆன்மிகமும் ஒன்றிற்கொன்று விரோதமானதல்ல. ஒன்றின் ஒழுங்கிற்கும் செம்மைக்கும் மற்றொன்று ஆதாரமாகவும் அனுசரனையாகவும் உள்ளது. உலகியலும் ஆன்மிகமும் மனித வாழ்வில் இணையும் போது, வாழ்வு சீரும் உயர்வும் பெறுகிறது. வாழ்வின் தரம் மேம்பாடு அடைகின்றது.

மனித குலத்தின் செம்மையான வாழ்வுக்குச் சமுதாயம் எவ்வாறு ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். சமுதாய உறுப்பினன் என்ற வகையில் ஒவ்வொரு மனிதனின் கடமைகள் பொறுப்புகள், உரிமைகள் யாவை? தனிமனித விவேகப் படைப்புச் சக்தியின் விருத்திக்கும், சமுதாய விருத்திக்கும் வளர்வுக்கும் மனிதனின் பங்களிப்பு என்ன? போன்ற வினாக்களுக்கு விடைகாணும் முயற்சிக்கு வழி காட்டுகின்றது திருமந்திரம்.

திருமூலரின் சமூக வெளிப்பாடு சர்வதேசியம் என்னும் உலகை ஒன்றாகக் காண்பதையே நோக்காகவும், உலகளாவிய மனித நேயத்தையே தளமாகவும்; உலக ஒருமைப்பாட்டுணர்வையே உணர்வாகவும்; உலகில் உள்ள அனைவரும் பேதமின்றி இன்பம் துய்த்தலையே பயன் ஆகவும் கொண்டுள்ளன. ஒவ்வொருவரும் சுய ஆளுமையை விருத்தி செய்வதன் மூலம் வாழும் சமூகம் ஆளுமை விருத்திபெறுகின்றது. இந்த வகையில் உலக ஆளுமையைக் கட்டியெழுப்புதல் அதன் இலக்காகும். பூமி ஒரு நாடு. அதற்கு ஒரே ஒரு வழிகாட்டியாகிய அன்பால் பூமியின் மக்களை அரவணைக்கும் அரசன் (அன்பு) ஒரே அரசியல் யாப்பு, ஒரே சட்ட நூல் (சனாதன தர்மம்) என்பன திருமூலர் இவ்வுலகிற்கு விடுக்கும் முக்கிய செய்தியாகும்.

இச் செய்தியை உலகமக்கள் உணர்ந்து வாழ்வாங்கு வாழ வைக்கவே இந்து மதத்தில் பலவிதமான வழிபாடுகளும் விழாக்களும் இடம் பெறுகின்றன. இந்த உண்மையை உணராது, செக்கிழுத்த மாடுபோல் மனிதன் சமயச் சடங்குகளுடன் நிற்கின்றான். இதே நிலைதான் மறு சமயங்களுக்கும் ஏற்பட்டுள்ளன. எனவேதான் இந்த வேற்றுமை முரண்பாடு கலவரங்கள் எல்லாம். மக்களைக் காப்பாற்றவே சமயங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது மனிதன் சமயத்தைக் காக்கவென்று மனிதனையே கொல்லப் பின்நிற்கவில்லை.

இந்நிலை மாற்றி சனாதன தர்மத்தை, அதாவது இயற்கை வழியில் வாழும் முறையை உலகுக்கு வாழ்ந்து காட்டி சாந்தியும் சமாதானமும் உலகில் நிலவ வைக்கவே இப்போது பகவான் பாபா அவதரித்துள்ளர். அவர் கூறும் மிகச் சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடியதொன்று. சிந்தனை, சொல், செயல் இம்மூன்றிலும் ஒற்றுமை வேண்டும். அதாவது சிந்திப்பதையே சொல்ல வேண்டும் சொல்வதையே செய்ய வேண்டும். இவை அன்பின் அடிப்படையிலிருந்து எழவேண்டும். இந்த வழியைக் கடைப்பிடிக்காமல், எத்தனை முறை கோவிலில் வலம் வந்தாலும் எத்தனை முறை சிலுவைக்குமுன் நின்று வணங்கினாலும் எத்தனை முறை பள்ளியில் தொழுதாலும் ஒரு பயனுமில்லை.

எனவே உலகில் அமைதியும் சாந்தியும் நிலவவேண்டில் சனாதன தர்மம் தழைக்க வேண்டும். அதற்கு அவசியம் அன்பு, வாக்கில் அன்பு, செயலில் அன்பு அவசியம் சட்டத் துறையாலென்ன, நீதித்துறையாலென்ன, வைத்தியத்துறையாலென்ன வர்த்தகத் துறையாலென்ன இக்கோட்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும். அப்படி நாம் செயற்பட்டால் விரைவில் ஓர் பொற்காலம் சத்தியயுகம் உதயமாகும் என்பது உறுதி.

# The Sadhana of Meditation

**Mr. Murugesu**
Senior Lawyer

There is a growing tradition in our country taking its roots from Hinduism – the Sanatana Dharma - based on the teachings of Sri Aurobindo, the Sage of Pondicherry, and his spiritual collaborator, the Mother . He postulated the Integral Yoga in which he said: "but it is no part of my Yoga to have nothing to do with the world or with life or to kill the senses or entirely inhibit their action. It is the object of my Yoga to transform life by bringing down into it the Light, Power and Bliss of the divine Truth and its dynamic certitudes. This Yoga is not a Yoga of world-shunning asceticism, but of divine life."

Sri Aurobindo, a graduate from the Cambridge University, was the pioneer of the Freedom Movement he led against the British in India in the beginning of the twentieth century and laid the seeds for India's Independence which with significance coincided with his Birth Anniversary on the 15th August. On trumpeted charges he was arrested and kept in the Alipore jail pending trial for one whole year. C.R.Das, who at the sacrifice of his lucrative practice and his health worked day and night to demolish the prosecution evidence and to prove Sri Aurobindo's innocence. In a masterly address to Court at the end of the trial he uttered these prophetic words:

"My appeal to you is this, that long after the controversy will be hushed in silence, long after this turmoil, the agitation will have ceased, long after he is dead and gone, he will be looked upon as the poet of patriotism, as the prophet of nationalism and the lover of humanity. Long after he is dead and gone, his words will be re-echoed, not only in India, but across distant seas and lands. Therefore, I say that the man in his position is not only standing before the bar of this Court, but before the bar of the High Court of History."

He had spiritual experiences while in jail and he has referred to these in his many writings. He shed his mortal frame on 5th December 1950.

Just after Sri Aurobindo's acquittal in the Alipore Bomb case he made his first public appearance at Uttarpara where he delivered a speech on the 30th May 1909 under the auspices of the Dharma Rakshini Sabha and he has recounted in it some of his experiences in jail. This is published as the *Uttarapara* Speech and it is of great spiritual value. He said he received certain messages while in seclusion, a period of meditation, from God. One of these he said was : "Something has been shown to you in this year of seclusion, something of which you had your doubts and it is the truth of the Hindu religion. It is this religion that I am raising up before the world, it is this that I have perfected and developed through the Rishis, saints and Avatars, and now it is going forth to do my work among the nations. I am raising up this nation to send forth my word. This is the Sanatana Dharma, this is the eternal religion which you did not really know before, but which I have now revealed to you."

Then in that message he was told what the Hindu religion is and he goes on to reveal what he received further. He said: "That which we call the Hindu religion is really the eternal religion, because it is the universal religion which embraces all others. If a religion is not universal it cannot be eternal. A narrow religion, a sectarian religion, an exclusive religion can live only for a limited time and a limited purpose. This is the one religion that can triumph over materialism by including and anticipating the discoveries of science and the speculations of philosophy. It is the one religion which impresses on mankind the closeness of God to us and embraces in its compass all the possible means by which man can approach God. It is the one religion which insists every moment on the truth which all religions acknowledge that He is in all men and all things and that in Him we move and have our being. It is the one religion which enables us not only to understand and believe this truth but to realise it with every part of our being." How do we achieve this? It is only by *Sadhana* which means spiritual discipline. One of these cardinal disciplines of extreme value to spiritual progress is MEDITATION.

Sri Aurobindo's was a great poet. He wrote a number of poems and one of these, his masterpiece, is Savitri, a spiritual poem in blank verse running into about 23,800 lines, based on the story of Savitri and Satyavan narrated in the Mahabharata. There are a few lines in Savitri which epitomises the essence of Meditation. It runs thus:-

"In moments when the inner lamps are lit And the life's cherished guests are left outside, Our spirit sits alone and speaks to its gulfs. (book One, Canto Four)

Meditation is a process, a movement. It is not done only for the sake of meditation as a kind of routine discipline but for its practical contents as it constitutes a liberation of our being while living and working in the world. Sri M. P. Pandit who was Secretary to the Mother of the Sri Aurobindo Ashram and was one of the best known exponents of the teachings of Sri Aurobindo and the Mother has explained the above lines thus:

"Man is normally preoccupied with his life-interests and his consciousness is ever turned outward attending to the call of the senses, the eternal pulls of desire and the constant flow of thoughts. Occasionally, he is drawn inward, the main part of his consciousness looks within suspending for the time being its outward activities. The inner parts of the being come to life and one communes, undistracted, with these profounder depths of the soul. One goes into meditation."

In a talk on Meditation which he (Sri M. P. Pandit) gave when in Sri Lanka, after dealing with the techniques of Meditation he has this to say:

"We must continue the attitude, the spirit of meditation in our day-to-day life. We prolong that poise as much as possible. We cannot separate periods of meditation from those of non-meditation. The spirit of meditation has to continue in the midst of work. Thus when we are in meditation we have a poise of purity, of dedication, of receptivity. Well, that attitude has to continue even afterwards. We may not sit in one place, but the background of meditative poise continues. Gradually we will be able to carry on our normal activity with this background of meditative detachment and peace. Whatever we do turns into a sacrament."

This state referred to above comes about when one has got accustomed to sitting in meditation in the shrine room each day in the morning and at night at a chosen time. To begin with it can be for fifteen minutes and later increased gradually to half an hour.

The ***Bhagavad Gita***, which every Hindu must find the time to read, contains certain verses relating to meditation. Here are a few: "Shutting out all external objects, fixing the vision between the eyebrows, making even the inward and the outward breaths moving within the nostrils, the sage who has controlled the senses, mind and understanding, who is intent on liberation, who has cast away desire, fear and anger, he is ever freed" (Ch.5, V. 27, 28). Let the Yogin try constantly to concentrate his mind (on the Supreme Self) remaining in solitude and alone, self-controlled free from desires and longing for possessions." (Ch 6, V. 10)

In ***The Imitation of Christ*** by Thomas A. Kempis there is a revealing passage that gives an insight into true meditation. "Seek a proper time to retire into yourself, and often think of the benefits of God. Let curiosities alone. Read such matters as may move you to compunction rather than give you occupation. If you will withdraw yourself from superfluous talk and idle visits, as also from listening to news and to reports, you will find sufficient and proper time to employ yourself in good meditations." (Book I, Chap. 20)

It has been said that when you sit in a particular place for meditation with regularity each day at the same time you create certain vibrations that are beneficial and help the process of meditation. The place becomes hallowed and builds a power. There is a story that has been narrated that a saint was walking through the jungles searching a place for meditation. He came to many places, lovely spots, silent and calm, but still he felt that there was something wanting. Later he came to a glade and there he observed a tiger and a deer seated together. It surprised him and he thought that that place must be a sanctified spot and because there was a reigning peace that affected and changed the nature of those two inveterate enemies. As he came closer to the place he felt a strong vibration of a dynamic peace and he thought that some years in the past a sage must have sat there in meditation. He selected that spot for his meditation undisturbed by any beast.

This is the effect of meditation. It envelops you with an inner power of peace and strength and storms may blow past you but yet you will remain unaffected and unperturbed and walk through life against any peril or disaster. A settled calm overtakes you. Meditation is a discipline which every Hindu must cultivate with regularity. As you go deeper into it you will see its beneficial results and a change in your life.

"Absorbed in a routine of daily acts,
Our eyes are fixed on an external scene;
We hear the crash of the wheels of circumstance
And wonder at the hidden cause of things.
Yet a foreseeing Knowledge might be ours
If we could take our spirit's stand within,
If we could hear the muffled deamon voice."
(Savitri Book One Canto Four)

V. Murugesu



# ஓம் என்னும் மந்திர செபத்தின் தெய்வீகம்

(சட்டத்தரணி ம. நாகரத்தினம் J. P. U. M
தலைவர்-திவ்ய ஜீவன் சங்கம், தேவாரப்பண்ணிசை மன்றம்)

மந்திரங்களென்பன சமஸ்கிருதத்திலுள்ள புனிதமான எழுத்துக்களாலோ அல்லது சொற்களாலோ ஆக்கப்பட்டன. அவைகள் தெய்வீக அலைகளை உண்டாக்கும் சக்தி வாய்ந்தன. பிரம்ம ஞானத்தை அடைந்த முனிவர்களாலும் மகான்களாலும் இவைகள் தரப்பட்டுள்ளன. மந்திரங்களுள் "ஓம்" என்னும் மந்திரமே கூடிய தெய்வீக அலை உள்ள மந்திரமாக விளங்குகின்றது. அதனாலேயே எல்லா மந்திரங்களுக்கும் முதலிலும் கடைசியிலும் அதைச் செபிக்கின்றனர். எந்த அர்ச்சனையும் "ஓம்" என்ற மந்திரத்துடனேயே ஆரம்பிக்கிறது. அண்டங்களெல்லாம் பிறந்ததும் தங்கி இருப்பதும் இந்த "ஓம்" என்னும் நாதத்திலேயேயாகும். சூக்கும ஓம் நாதத்திலிருந்தே ஐம்பூதங்களும் சராசரங்களும் தோன்றின. அதிலிருந்தே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கின்ற ஐந்தொழில்களைப் புரியும் அயன், அரி, அரன், ஆண்டான், அருளோன் ஆகிய ஐவரும் தோன்றினர். "ஓம்" என்பது பிரம்மமே. பிரம்மனை நாதமாக வழிபடுபவர் "ஓம்" என்னும் மந்திரத்தின் தெய்வீகநாத அலையை வழிபடுவர். திருமூல நாயனார் திருமந்திரத்தில்

"ஓங்காரத் துள்ளே யுதித்தஐம்
பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்"
ஆங்காரியாகியே ஐவரைப் பெற்றிட்டு
இரீங்காரத்துள்ளே யினிதிருந்தாளே"

எல்லாச் சத்தங்களுக்கும் அந்தமாயுள்ளது "ஓம்" என்னும் சொல். அந்தச்சொல் அ,உ,ம் என்னும் மூன்று புனிதமான எழுத்துக்களால் ஆக்கப்பட்டது "அ"வின் சத்தம் தொண்டையிலிருந்து பிறக்கும் அது நாக்கிலோ அண்நாக்கிலோ படாமல் சொல்லப்படும் கருத்து "உ"வின் சத்தம் வாயின் அடியிலிருந்து நடு விரையும் உருண்டு வரும் "ம" வின் சத்தம் மூக்கிலிருந்து வரும் மெல்லினமாகும் சுருங்கச் சொல்லின் "ஓம்" என்ற சொல் எல்லாச்சத்தப் பிறப்புக்கும் கருவூலமாகவுள்ளதாகும்.

"ஓம்" என்னும் மந்திரத்தை பிரம்மமாகக் கொண்டு 108 தரம் நம்பிக்கையுடன் செபிப்பீர்களானால் அதன் தெய்வீக அலைகள் உடம்பிலுள்ள நரம்புகள், இரத்த நாளங்கள், உயிர் அணுக்கள் எல்லாவற்றையும் ஊடுருவி சாதகனுக்கு ஆரோக்கியத்தையும் அமைதியையும் துரிய நிலையையும் அனந்தத்தையும் கொடுக்கும். ஒருவர் துரிய நிலையை அடையவேண்டுமென்றால் "ஓம்" என்னும் மந்திரத்தின் திவ்ய அலைகளில் தொடர்ந்து தாரணை செய்தல் வேண்டும்.

மேலும் "ஓம்" என்னும் மந்திரத்தைச் செபிக்கும் பொழுது சாதகனை தாமத ராஜச குணங்களிலிருந்து விடுவித்து அது சாத்வீக குணத்துக்குக் கொண்டு போவதுமட்டுமல்லாமல் சாக்கிர சொப்பன சுளுத்தி நிலைகளிலிருந்து துரிய நிலைக்குக் கொண்டு செல்லும். எப்பொழுது ஒருவருக்கு தீய எண்ணம் வருகின்றதோ அப்பொழுதெல்லாம் "ஓம்" என்ற மந்திரத்தை செபித்தால் அவ்வெண்ணங்கள் அவர் மனதை விட்டு நீங்கி விடும். "ஓம்" என்ற மந்திரத்தை 108 தரம் செபித்தால் சாதகனுடைய உடம்பு தெய்வீக சக்தியால் நிரப்பப்பட்டு அவனுக்குக்

களைப்பைப் போக்கி உற்சாகத்தையும் கொடுக்கும். மேலும் சாதகனை துரியாதீத நிலைக்குக் கொண்டு போய் பிரமத்தோடு சேர்க்கும்.

வாயாற் சொல்லி செபிக்கும் செபம் ஸ்தூல செபம் என்று சொல்லப்படும். வெளியில் கேட்காமல் நாவுக்கடியில் தொண்டைக்குள் தனக்கு மட்டும் கேட்கச் சொல்லும் செபம் சூக்கும செபம் என்று சொல்லப்படும். இந்த செபத்தின் பலன் ஸ்தூல செபத்திலும் பார்க்கக் கூடியதா யிருக்கும். இவைகளை விட மனதினால் செபிக்கும் செபம் எல்லாவற்றிலும் கூடிய பலனைத்தரும் அப்படி மனத்தால் செபிக்கப் பழகிய சாதகன் உடம்பில் எந்தப் பாகத்திலும் அப்படிச் செபித்து அவ்வவ் பாகங்களிலுள்ள வருத்தங்களை மாற்றிக் கொள்ளலாம்.

செபத்திலிருந்து முன்னேறி "ஓம்" இன் நாத அலையில் தாரணை தியானம் செய்யலாம். "ஓம்" இன் தெய்வ அலைகளில் ஐந்து நிமிடம் தாரணை செய்தால் ஒரு சாதகனின் கவலைகள், மனச்சோர்வு இரத்த அழுத்தம் முதலியவை நீங்கி சாதகன் துரியாதீத நிலையை அடைகின்றான். மேலும் சாதகன் சாதனையால் "ஓம்" இன் அலைகளின் அதிர்வெண்ணை (Frequency) கூட்டிக் கொள்ளாலாம். அப்படிக் கூட்டிக் கொண்டால் அதைக் கொண்டு வருத்தங்களை மாற்றும் ஆற்றலைச் சாதகன் பெறுவான்.

பிராணாயாம சாதனை செய்வதற்கும் "ஓம்" என்ற மந்திரம் சாதகனுக்கு உதவுகிறது. வலது மூக்குத் துவாரத்தை அடைத்துக் கொண்டு மூன்று "ஓம்" நேரத்துக்கு இடது மூக்கால் மூச்சை உள்ளிழுத்து பன்னிரெண்டு "ஓம்" நேரத்துக்கு உள் நிறுத்தி இடது மூக்குத்துவாரத்தால் ஆறு "ஓம்" நேரத்தில் வெளிவிட வேண்டும். அதன் பின் இடது மூச்சுத் துவாரத்தை அடைத்துக் கொண்டு மேற்கூறிய நேரத்தில் வலது மூக்குத் துவாரத்தால் மூச்சை இழுத்து உள்ளே நிறுத்தி வலது மூக்குத்துவாரத்தால் வெளியே விடவேண்டும். இவ்வாறு இடதும் வலதுமாய் மாறிமாறி காலையிலும் மாலையிலும் பத்துத் தரமாவது செய்ய வேண்டும். அப்டிச்செய்வதால் மூச்சு ஒழுங்குபடும் இரத்த அழுத்தம் குறையும். தெய்வ அலைகள் பூரகம் - பிராணவாயுவை (Oxygen) உள்ளிழுத்தல். கும்பகம் - பிராணவாயுவை (Oxygen) உள்நிறுத்தல ரேசகம் - கரிவாயுவை (Caban-di-Oxide) வெளிவிடுதல். உடம்பில் பாய்ந்து சாதகனுக்கு களைப்பின்மையையும் உற்சாகத்தையும் மன அமைதியையும் அளிக்கும். மேற்கூறியபடி சாதனை செய்பவர்கள் "ஓம்" என்னும் மந்திரத்தைச் செபித்தோ அல்லது தாரணை செய்தோ சாதிப்பவர்கள் தெய்வ அலைகளால் நிரப்பப்பட்ட காந்தக்கனல் போலாவார்கள், அவர்களோடு சேர்பவர்களும் அத்தெய்வீக அலைகளின் பயனை அடைவர். மேலும் "ஓம்" செபம் சாதகனை உருவ வழிபாட்டிலிருந்து மந்திர வழிபாட்டுக்குக் கொண்டுசெல்லும். அது மாத்திரமல்லாமல் புற வழிபாட்டிலிருந்து அக வழிபாட்டிற்கும் வழிவகுக்கும். சாதகனின் ஆத்மீகப் பார்வையில் உருவ வழிபாடு முதலாம் படியாகவும் மந்திர வழிபாடு இரண்டாம் படியாகவும் அமைகின்றன "ஓம்" எனும் நாமத்தை விட்டு அதன் செபத்தால் உண்டாக்கப்படும் நாத அலையில் சாதகன் தாரணை (Coscentration) செய்வானாயின் அது அவனை தியான நிலைக்குக் கொண்டு போவது திண்ணம். எனவே காலையும் மாலையும் "ஓம்" என்னும் மந்திரத்தைச் செபியுங்கள் உற்சாகத்தையும் களைப்பின்மையையும் மன அமைதியையும் தெய்வீகத் தன்மையையும் பெற்று இன்புற்று வாழுங்கள்.

# சைவசித்தாந்தமே உலகின் முதற் சமய சாஸ்திரம்

-அ. குமரகுரு,
சட்டத்தரணி-

திராவிட நாகரீகத்தின் தொன்மையையும் மேன்மையையும் உலகுக்குப் பறைசாற்றுவது திராவிடர்களின் சிந்தனைக் கருவூலமாகிய சைவசித்தாந்த சமய நெறியாகும்.

பிரபல தமிழ் அறிஞர் டாக்டர். ஜி. யூ. போக் வணக்கத்துக்குரிய கிறிஸ்தவ பாதிரியார். இந்திய மக்களிடையே கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் பணியாளராக இந்தியாவுக்குச் சென்ற இவரை தமிழ் தொழியும் சைவசித்தாந்தமும் பெரிதுங் கவர்ந்து விட்டன. தமிழ் மொழிக்கு இவர் செய்த தேவை அளப்பரியன. தமிழ் இலக்கண நூலை எழுதிப் புகழ் பெற்ற இவரை தமிழர்கள் "போப்பையர்" என்ற செல்லப் பெயரால் அழைத்தனர்.

திருவாசகத்தில் பொதிந்துள்ள ஆழமான, விஞ்ஞான அடிப்படையிலான இறை தத்துவங் களைக் கண்டு வியப்புற்றார் போப்பையர். திருவாசகத்தை மேற்கத்தைய சிந்தனையா ளர்களின் கவனத்துக்குக் கொண்டு வரும் நோக்குடன் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அந்நூலின் முகவுரையில் இவ்வாறு கூறுகிறார்.

"இந்தியாவில் தோன்றிய சமயங்களில் சைவசித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ளதைப் போன்ற விரிவான, நுணுக்கமான, ஆழமான தத்துவ நெறிகளைக் கொண்ட சமயம் வேறேதுமில்லை. சைவசமயம் சரித்திர காலத்துக்கும் வேத காலத்துக்கும் முற்பட்டது. தென்னிந்தியாவில் உள்ள தமிழர்களுக்கே உரியதான இச்சமயம் திராவிட சிந்தனையாளர்களின் பேரறிவு படைத்த கருவூலம்"

வண. பிதா டாக்டர். ஜோன். பயற் என்ற போதகாசிரியரும் தென்னிந்திய நாகரீகத்தைப் பற்றிய ஆய்வுகளைச் செய்து கருத்துரைகளை வெளியிட்டவர். அவர் "சைவசித்தாந்தம் தமிழனின் சிந்தனையில் உதித்த அற்புதமான தத்துவம்" என்று புகழாரம் சூட்டினார்.

இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பணிப்பாளராக 1921-22இல் இருந்த சேர். ஜோன். மார்ஷல் இந்துநதிப் பள்ளத்தாக்கில் செழிப்புற்றிருந்து பின்னர் அழிந்து போய்விட்ட உன்னத திராவிட நாகரீகத்தின் புதையுண்டு கிடந்த சின்னங்களையும் இடிபாடுகளையும் அகழ்ந்து, அவற்றை வெளியுலகுக்குக் காட்டி எமக்குப் பெருமை தேடித்தந்த சான்றோர்களில் முதன்மையானவர். அவர் சைவசித்தாந்தத்தின் பெருமையை இவ்வாறு விரிந்துரைக்கின்றார்.

"மொஹஞ்சதாரோ - ஹரப்பா நாகரீகம் மனித இனத்துக்கு அளித்த உன்னத வெளிப்பாடுகளில் தலையாயது என்னவெனில் சைவசமயம். எண்ணாயிரம் வருடங்கள் (CHALCOLITHIC AGE) தொன்மை வாய்ந்தது என்பது மாத்திரமல்ல, உலகிலேயே இன்னும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே ஒரு சமய நெறியும் அதுவே என்பதும் ஆகும்"

திராவிட நாகரீகம் இந்துநதிப் பள்ளத் தாக்கில் செழுமையுற்று இருந்ததற்கு முன்னரே கடல் கொண்டு விட்ட குமரிக் கண்டத்தில் வலிவுடன் திகழ்ந்ததென ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

பல பழம்பெருத் தமிழ் நூற்களில் இடைச்சங்கமிருந்த கபாடபுரம் கடல் கொள்ளப் பட்டதெனக் கூறக் கண்டுள்ளோம்.

நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளைக் கொண்ட குமரிக் கண்டம் கடல் கொள்ளப்பட்டது என்பதற்கு ஆதாரம் மிகப் பழங்காப்பியமான சிலப்பதிகாரத்தின் "காடு காண் காதை"யில் காணப்படுகிறது. இளங்கோவடிகள்

"வடிவேலெறிந்த வான்பகை பொறாது பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்று பாடினார்.

இக்காப்பியத்தின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் 'வேனிற்காதை'யில் வரும் 'நெடியோன் குன்றமுந்தொடியோன் பௌவமும்' என்ற சொற்றொடருக்கு உரை கூறுகையில் பஃறுளியாற்றுக்கும் குமரி என்னுமாற்றுக்குமிடையே எழுநூறு காவ்தம் (7000 மைல்கள்) இடைவெளியுண்டு என்றும் 49 நாடுகளாவன ஏழ் தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின்பாலைநாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ்குண காரைநாடும், ஏழ் குறும்பனை நாடும் என்றும் விவரித்துள்ளார்.

பாண்டிய மன்னன் முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் என்ற புலவர் "பஃறுளியாறு மணலினும் பலவாண்டுகள் வாழ்க" என்று வாழ்த்தினார் என்று புறநானூறு (பாட்டு 9) கூறுகிறது.

பெருநிலப்பரப்புகள் கடலில் அமிழ்ந்து போவது இயல்பு (CONTINENTAL DRIFT) என்றும் பல்லாயிரம் வருடங்களுக்கு ஒருமுறை அவ்வாறு நடைபெறும் என்றும் பல்லாயிரம் வருடங்களுக்கு ஒருமுறை அவ்வாறு நடைபெறும் என்றும் அல்பிறட் வெக்னர் என்ற பிரபல ஜேர்மானிய ஆராய்ச்சியாளர் விளக்கியுள்ளார்.

இந்து சமுத்திரத்தின் கற்பாதைகள் பூமியின் மிகப் பழைய பரிணாம நிலைகளைப் பிரதிபலிப்பதாகவும் கடல் கொண்டு விட்ட நாகரீகத்தின் எஞ்சிய பகுதியே இந்திய உபகண்டத்தின் இந்துநதிப் பள்ளத்தாக்கில் செறிந்திருக்க வேண்டும் என்றும் ஆராய்சிசியாளர்கள் கூறுகிறார்கள்.

இத்தகு பழைமை மிதுந்த சைவசித்தாந்தத் தத்துவங்கள் வேதகாலத்துக்கு முந்திய வையாதலால் ஆரியப் படையெடுப்புக்குப்பின் தமிழில் இருந்தவையெல்லாம் வடமொழியில் புகுந்து விட்டது மாத்திரமன்றி தமிழ் மூலங்களும் சுவடு தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கலாம். என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்று தமிழ் மக்களிடையே வழங்கி வரும் சைவசித்தாந்தக் கொள்கைகளுக்கு அடிப்படையாக அமைகின்ற நூல் மெய்கண்ட தேவரால் கி. பி. 13ம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சிவஞான போதமாகும்.

பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்ட இந்நூலில் அடங்கிய அதே கருத்துக்கள் "ரௌரவம்" என்ற வடமொழி ஆகமத்திலும் காணப்படுவதால் சிவஞான போதத்தின் மூலம் எது என்பதில் சர்ச்சை இருந்து வருகிறது.

கைலாய பரம்பரையைச் சேர்ந்த சந்தான குரவர்களில் 7வது பரம்பரையைச் சேர்ந்த பரம்சோதி முனிவர் தென்னிந்தியாவில் உள்ள திருவெண்ணை நல்லூர் என்ற கிராமத்தில் பிறந்த மெய்கண்ட தேவருக்கு சிவ ஆகமங்களை அவருடைய மூன்று வயதில் உபதேசஞ் செய்தார் என்பது ஐதீகம். இந்த உபதேசங்களே பிற்காலத்தில் சிவபோதமாக உருவெடுத்தது என்று கொள்வாரும் உளர்.

சைவ சித்தாந்தத்துக்கு முக்கிய பிரமாணமாக வேதங்கள் ஆகமங்கள் இரண்டுமே உள. வடமொழியில் உள்ள நான்கு வேதங்களும், 28 சைவ ஆகமங்களும் (198 உப ஆகமங்கள் உட்பட) பன்னிரு திருமுறைகளும் 14 மெய்கண்ட சாஸ்திரங்களும் பிரமாணங்களாகக் கொள்ளப்படுகின்றன. வேதங்களைப் பொது பிரமாணமாகவும் ஆகமங்களைச் சிறப்புப் பிரமாணமாகவும் கொள்வது மரபு.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் ஆதிகாலத்துத் தமிழ் நூல்களில் காணக் கூடியதாயுள்ளது. கி.பி. 2ம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியத்திலும் 3ம் நூற்றாண்டில் திருமூலரால் ஆக்கப்பட்டு (10ஆவது திருமுறையாகக் கொள்ளப்படுகினற) திருமந்திரத்திலும், அதே நூற்றாண்டில் மாணிக்கவாசகரால் பல ஸ்தலங்களில் பாடப்பட்ட (8ஆவது திருமுறை) திருவாசகத்திலும், 7ஆவது 9ஆவது நூற்றாண்டுகளில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய சமயகுரவர்கள் சிவாலயங்களில் பாடிய தேவாரங்களிலும், இன்னும் சில நாயன்மார்கள் பாடிய திருவிசைப்பா (9ஆவது

திருமுறை)விலும், பட்டினத்துப் பிள்ளை, நம்பியாண்டார் நம்பி ஆகியோர் பாடிய பதிகங்களிலும், 6ம் நூற்றாண்டில் கல்லாடரால் எழுதப்பட்ட 'கல்லாடம்' என்ற நூலிலும், திருவள்ளுவரின் திருக்குறளிலும், 12ம் நூற்றாண்டில் வாசீகர் எழுதிய ஞானாமிர்தத்திலும், சேக்கிழாரின் பெரியபுராணத்திலும் காணப்படுகின்றன.

சைவசித்தாந்தத்தை விஞ்ஞான அடிப்படையில் விளக்கும் நூல்கள் சிவஞானபோதம், சித்தியார், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்ப∴றொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்பநிகாரணம், மனவாசக கடந்தர் எழுதிய உண்மை விளக்கம், சங்கற்பநிகாரணம், மனவாசக கடந்தர் எழுதிய உண்மை விளக்கம் ஆகியன. இந்நூல்களில் அநேகமானவை சிவஞானபோதத்தின் விரிவாக்கலாகத் தோன்றியவையே.

மேற் சொல்லப்பட்ட நூல்களெல்லாம் சைவசித்தாந்தத்தைப் பேணிப்பாதுகாக்க விரும்பும் சான்றோர்களுக்குப் பரிச்சயமானவையேயொழிய உருவமற்ற கடவுளுக்குப் பல வடிவங்களைக் கொடுத்து நாமங்களைச் சூட்டி பக்தி மார்க்கத்தில் ஆன்ம ஈடேற்றம் பெற விளையும் எமக்குக் கிடைப்பவையல்ல. சைவசித்தாந்தம் வீடு பெற எண்ணும் சத்தினி பாதர்களுக்கே பலன் தருவது உலகாயத வாழ்வில் மூழ்கியுள்ள சாமான்யர்களுக்கு எட்டாத கனி என்று எண்ணுபவர்களும் உண்டு.

சைவசித்தாந்தத்துக்கும் வேதாந்தத்துக்கும் சிலவேறுபாடுகள் உள., பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கும் சிலவேறுபாடுகள் உள. பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கே மாலை முதற்காரணம் என்றும் மாயையைச் சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதிமாயை எனப் பாகுபடுத்தி, சுத்த மாயையோடு மட்டுமே இறைவனுக்கு நேரடித் தொடர்புண்டு என்றும் சைவசித்தாந்திகள் கூறுவர். ஆனால் வேதாந்திகள் மாயை, கயிறைப் பாம்பாக நினைப்பது போன்ற ஒரு பொய்த் தோற்றமே என்பர்.

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளைப் பற்றிப் பேசுகிறது. பதி என்றால் இறைவன். ஆன்மாவின் கட்டுண்ட நிலையையே 'பசு எனப்படுகிறது. ஆன்மா கட்டுண்டு கிடப்பது பாசத்தினால், ஆன்மா பரிபூரண நிலையை எய்துவதற்குத் தடையாயிருப்பது பாசம். பாசம் என்ற சொல் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும் குறிக்கும். வேதாந்திகள் பசுவையும் பாசத்தையும் தோற்றம் என ஒதுக்கி பதி மட்டுமே உண்மை என வாதிப்பர். இப்படிப் பல பேதங்கள் உள.

சொற்பிரயோகங்களும் வியாக்கியானங்களும் எவ்வழியில் சென்றாலும் 'இருப்பது ஒன்றே' என்ற முடிவுக்குத்தான் எல்லா மதங்களும் எம் போன்ற சாதாரண மனிதர்களை இட்டுச் செல்கிறது என்று நாம் உணரும் பொழுது தெளிவு பெறுகிறோம்.

"ஒன்று கண்டீர் உலகுக் கொருதெய்வம் ஒன்று கண்டீர் உலகுக்குயிர் ஆவது'' ஒன்று திருமந்திரம் கூறுகிறது.

மாணிக்கவாசக சுவாமிகள் கி.பி. 3ம் நூற்றாண்டில் பாடிய பின்வரும் திருவாசகம் ஆன்ம ஈடேற்றத்தின் பரிபாகத்தை எடுத்துரைப்ப தாயிருப்பதோடு, இவ்வுலகில் உள்ள சேதன, அசேதன வஸ்த்துகளின் பரிணாம வளர்ச்சியையும் எடுத்துரைக்கின்றது.

18ம் நூற்றாண்டில் பவன் (BUFFON) கான்ற் (KANT) லாப்லஸ் (டுயீடுயுஊநு) போன்ற ஆராய்ச்சியாளர்களும் 19ம் நூற்றாண்டில் டாவின் (DARWIN) போன்ற அறிஞர்களும் வெளியிட்ட கருத்துக்களைப் போல 1500 வருடங்களுக்கு முன்னரே மாணிக்கவாசகர் தாம் சிவானுபூதியில் பெற்ற பேரறிவைக் கொண்டு உலகின் பரிணமாத்தை வெளிப்படுத்தியது சைவசித்தாந் தத்தின் கருத்து ஆழத்தைக் காட்டுகிறது.

"புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப் பல் மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லா அநின்றவித்தாவர சங்கமத்து ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்''



# வாழ்வின் உயிர்நாடி சமயச் சார்பு

குமாரசாமி சோமசுந்தரம்
M.A Dip in Education

தத்துவம், சமயம், வாழ்க்கை நெறி ஆகிய மூன்று அம்சங்களையும் ஒருசேரப் பெற்றிருப்பது, சைவம். "சைவசமயமே, சமயம்" எனப் பெரியோர்கள் கூறியுள்ளமைக்கு இதுவும் காரணமாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், அதன்பின் இவற்றினின்று விடுதலை பெற்று வீடு பேற்றையடையவும் நமக்கு வழிகாட்டுவது சைவசமயம். எனவே, சைவம் முழுமைத்துவம் பெற்ற சமய நெறியாகத் தொன்று தொட்டு விளங்கி வருகிறது.

"சமயத்தினின்று தோன்றிய பொருளே பண்பாடு", என்ற அறிஞர் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. சமயச் சார்புடையவரே பண்பாடுடையவராகவும் திகழமுடியும், என்பது இதிலிருந்து பிறக்கும் கருத்து.

உலகின் மிகத் தொன்மையான சைவநெறி, இன்றும் வாழும் நெறியாக விளங்குதற்கு, முழுமைத்துவநிலையை அது பெற்றிருப்பதே காரணம். அதன்பின் தோன்றிய சமயங்களை, அது அவமதிப்பதோ, அவதூறு செய்வதோ கிடையாது. எல்லாச் சமயங்களும் கூறும் நல்லகருத்துக்கள் யாவும் சைவத்தில் உண்டு என்பதும் உணர்தற்பாலது

சமயம் பண்பாட்டை வளர்க்கிறது; பண்பாடு சமயத்திற்கு வலுவும் உரமும் தந்து நிலைபேறு உடையதாக்குகின்றது.

மனிதர்கள் ஒருவரோடொருவர் கூடி வாழவேண்டியவர்கள். அவர்கள் பிறருடன் நல்லுறவு பேணி, நல்லொழுக்கமுடையவர்களாக, இசைந்தும் இணங்கியும், ஒற்றுமையாக வாழும் போதே, உண்மையான மனிதவாழ்க்கையாக அது அமையும் நயக்கத்தக்க நாகரிகமும், பண்பாடும் வாழ்வில் மிளிரும்.

மனித மனம் தான் பண்பாடு மலர்வதற்கான மூலஸ்தானம். மனமது செம்மையானால், அனைத்தும் செம்மையாகிவிடும். பண்பாடு என்பது அகவளர்ச்சி, அகத்தின் அழகு நம்முடைய செய்காரியங்களில் வெளிப்படும். மனத்தைப் பக்குவப்படுத்தி, அழகு செய்து, அங்கு பண்பாட்டினை மலர்விப்பது சமயம். எனவே, சமயச் சார்பின்மை என்ற போர்வைக்குள் மறைந்து நின்று கொண்டு சமயத்தை மறுப்பது என்பது பண்பாடு நிறைந்த வாழ்க்கை வாழ்வதற்கு மறுப்பதாகும். "பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. எனவே, பண்பாட்டினை வளர்ப்பதற்கு மனிதர் சமயச் சார்புடையவர்களாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

மனிதர்கள் கூடிச் சமூகமாக வாழும் போது சட்டங்கள், விதிமுறைகளை அனுசரித்து வாழவேண்டிய தேவை எழுகிறது. சட்டங்கள் மதிக்கப்படாத பட்சத்தில் சமூகங்களில் குழப்பங்கள், வன்முறைகள், ஒழுங்கீனங்கள் ஏற்படுகின்றன. அரசினால் உருவாக்கப்பட்ட

சட்டங்கள் மதிக்கப்பட வேண்டியவை. எனினும் சிலர் அவற்றை உதாசீனஞ் செய்வதும் உண்டு. சமயச் சட்டங்கள், விதிகள் என்பன கடவுளால் உணர்த்தப்பட்டவை என்னும் நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கும் மக்கள், கடவுளுக்குப் பயந்து, அவற்றை மதித்து வாழவே செய்வர். அரச தண்டனைக்குத் தப்பினாலும் தெய்வ தண்டனைக்கு எவரும் தப்ப முடியாது, என்பதில் சமயச் சார்புடையோர் முழு நம்பிக்கை உடையவர்கள். ஒருவர் செய்த நல்வினைகள், தீவினைகளுக்கேற்ப அவற்றின் நற்பலன்கள், தீயபலன்கள் என்பவற்றை அனுபவித்தே தீரவேண்டும் என்பது சைவசித்தாந்தத்தின் நிலைப்பாடு. கன்மக் கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள் பாவங்களைத் தவிர்ப்பர். மேலும் அரச, சமூகச் சட்டங்களையும் பேணி வாழ்தலைச் சமயக் கடமையாக ஏற்றுக் கொள்ளும் போது, அவற்றையும் வாழ்வில் அனுசரித்து வாழ வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்த வகையில் சமயச்சார்புடைமை, மனித வாழ்க்கையைப் பலவிதங்களிலும், சிறப்புறச் செய்கின்றது.

ஒருமுறை பிரம்மா, நாரத முனிவரிடம், "உலகின் மிகச் சிறந்த அதிசயம் எது?", எனக் கேட்டார். அதற்கு நாரதர், "ஒவ்வொருவரும் பாவகாரியங்களைச் செய்கிறார்கள். பாவம் என்று தெரிந்த பின்பும் தொடர்ந்தும் அப்பாவங்களையே செய்கிறார்கள். ஆனால் பாவங்களின் விளைச்சல்களான துன்பங்களை அனுபவிக்க விரும்புகிறார்களில்லை. ஒவ்வொருவரும் இன்பத்தையே எப்பொழுதும் நுகரவிரும்புகிறார்கள். அதேவேளை இன்பத்தைப் பயன்களாகத்தரவல்ல புண்ணிய காரியங்களைச் செய்யவும், நீதிவழியில் நடக்கவும் மனிதர்கள் தயங்குகிறார்கள். மனிதரின் இந்த விசித்திரமான போக்கு உலகின் மிகச் சிறந்த அதிசயம் என்பது என் கருத்து" என்றார். இந்த அதிசயத்தை இக்கால மாந்தரிடம் மிகத்துல்லியமாகக் காணமுடிகிறது.

பூசினி விதையை விதைத்து விட்டுப் புடோலங்காய் காய்க்கும் என எதிர்ப்பார்ப்பது எத்துணை அறிவீனமோ, அத்துணை அறிவீனம் கெட்ட காரியங்களைச் செய்து கொண்டு இன்பத்தை எதிர்பார்ப்பது ஆகும். விதைத்ததையே அறுவடை செய்யலாம்; உழைப்பினாலேயே உயரலாம்; கடமை செய்பவர்க்கே உரிமையை அனுபவிக்கும் உரிமையுண்டு. நீதி தவறினால் வாழ்க்கையில் வழுக்கி விழுதல் உறுதியாகிவிடும். இவை வாழ்வியல் உண்மைகள். உண்மைகள் பொய்ப்பதில்லை. சமயம் காட்டும் பாதை இதுவே.

தன்னலம் கருதாது பிறர்நலம் பேணுதல்; தாம் உயிர் வாழ்வது பிறரைத்தாங்கி வாழ்தலுக்காகவே என்பதை உணர்ந்து செயற்படுதல்; எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதில் கரிசனை கொள்ளுதல்; அன்பு, கருணை, சாந்தம், இன்னுரை என்பவற்றையே பேணிவருதல் என்பன ஒருவரின் பண்பாட்டின் விளக்கமாகும். இதனையே சமய வாழ்வு என்பர். சைவம் சிவசம்பந்தமுடையது; சிவம் அன்பு சம்பந்தமுடையது. எனவே அன்பு வாழ்வே சைவ வாழ்வு, சிவநெறி வாழ்வு ஆகும். நீதியே சிவம். அந்த வகையில், நீதியினடிப்படையிலான வாழ்வு, சைவ வாழ்வு. உண்மையே சிவம். எனவே உண்மையை ஓம்பிவாழும் வாழ்வு சைவ வாழ்வு.

இந்த வகையில் பார்க்கும் போது, சைவசமயத்தில் பிறந்த ஒரு காரணத்தால் மட்டும், ஒருவன் சைவனாகி விடமுடியாது. நீதி வாழ்வு, அன்பு வாழ்வு, உண்மை வாழ்வு, ஒழுக்க வாழ்வு, அறவாழ்வு என்பவற்றை ஒருவன் வாழும் போதுதான் அவன் சைவன் ஆகின்றான். ஒவ்வொருவனும் சைவன் ஆகவேண்டும், அவ்வாறு ஆதல் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் இயலும். மனிதனால் இயலாத ஒன்றைச் செய் என்று சைவநெறி ஒரு போதும் கூறியதில்லை. அதனாலேயே சைவம், மெய்ச் சமயம் என்னும் பெயரைப் பெறுகிறது. "மெய்ப்பொருள் காண்பது

அறிவு," என்ற வகையில் சைவம், அறிவுச் சமயம் ஆகிறது. மெய்ப் பொருளாகிய பரம் பொருளை அடையச் சைவ சமயம் வழிகாட்டுகிறது. எல்லோருடனும் அன்பினைச் சொரிய வலியுறுத்துவது சைவம். சைவம் காட்டும் வாழ்க்கை நெறி, அன்பு நெறியாகும்.

சைவம் ஒருகூட்டத்தினரின் தனியுடைமை அன்று; அது உலகின் பொது உடைமை.

"தென்னாடுடையசிவன்", "எந்நாட்டவர்க்கும் இறைவன்", என மாணிக்கவாசக சுவாமிகள் அறிவிக்கிறார்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என்கிறார் சைவ அருளாளர் ஒருவர்.

சைவத்தின் உலகளாவிய நிலையை இவை உணர்த்துகின்றன.

"அன்பே சிவம்" என்கிறார் திருமூலர். சைவத்தின் தலைமகனாகிய திருநந்திதேவரிடம் பாடங்கேட்டவர். திருநந்திதேவரோ (தட்சிணாமூர்த்தி) முழுமுதற் பொருளாகிய சிவத்திடம் ஆகமங்கள் உணரப் பெற்றவர்.

அன்பும் சிவமும் இரண்டல்ல; இரண்டும் ஒன்றே என்ற திருமூலர் வாக்குக்கு மறுவாக்கு ஏது?

அன்பினை வேண்டிநில்லாதவர் என்று உலகில் எவரும் கிடையாது; எந்த உயிரும் இல்லை. அன்பினாலேயே உலகம் இயங்குகிறது. அன்பு, உலகமகாசக்தி. அன்பே சிவம். எனவே சிவத்தை வேண்டிநிற்பவரே அனைவரும்; வேண்டிநில்லாதவர் எவரும் கிடையாது என்ற முடிவு சரியானமுடிவாகும். சிவன், எந்நாட்டவர்க்கும் இறைவன், என மணிவாசகப் பெருமான் கூறியமை எத்துணை அற்புதம்.

சைவ சமயத்தவர்க்குச், சேக்கிழார் பெருமான் அருளி வழங்கிய திருத்தொண்டர் பெரியபுராணம் ஒரு பண்பாட்டுப் பெட்டகமாகவும், வாழ்வியல் நெறிகளை உணர்த்துவதாகவும் உள்ளது. செயற்கரிய செயல்களைத், தொண்டுகளைத், தியாகங்களைப் புரிந்த அறுபத்து மூன்று நாயன்மார்கள், மற்றும் ஒன்பது தனியடியார்கள் ஆகியோரின் பண்பட்ட சைவ வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

ஒரு சிறந்த நூல் நம்மிடம் உண்டு என்று பெருமை கொள்வதுடன் மட்டும் அமைந்து விடாது நூலில் கூறப்பட்டுள்ள சைவப்பண்பாட்டு ஒழுக்கங்களையும் விழுமியங்களையும் இயன்றளவு நமது வாழ்விற் கடைப்பிடித்து ஒழுகவும் வேண்டும்.

சொன்ன சொல்லைக் காத்தல், பணிவு, பிறர் நலனுக்காக ஈதல், தன்துயரை வெளிப்படுத்தாது மறைத்தல்; தாமே தம்மைக் கட்டுப்படுத்துதல்; நீதிக்குத் தலை வணங்குதல்; மகளிரை மதித்தல்; பிறருடன் பகிர்ந்துண்ணல்; ஒருவருக்கொருவர் உதவுதல்; நல்குரவைத் தாங்கிக் கொள்ளல்; சமயப் பொறை; பெரியோரைக் கடியாமை; மங்கலமாகப் பேசுதல்; மென்மையாக உரைத்தல்; பிறர்மனதைப் புண்படுத்தாமை; பிறர்மீது இரக்கம், கரிசனை கொள்ளல் முதலிய மனிதப் பண்பாடுகள், விழுமியங்களை அடியார்களின் வாழ்க்கையிலிருந்து சேக்கிழார் எடுத்துக்காட்டியுள்ளார்.

தெய்வநம்பிக்கை என்பது தனிமனித வாழ்க்கைக்கும் சமூக வாழ்க்கைக்கும் அச்சாணி போன்றது. சமயம் தெய்வநம்பிக்கையை மனிதரில் வளர்க்கின்றது. வாழ்க்கையில் துன்பங்கள், துயரங்கள் வரும்வரை அல்லது முதுமை எய்தும் வரை, தெய்வத்தில் நம்பிக்கை கொள்வதற்காகக் காத்திருக்கக் கூடாது. நம்பினார் கெடுவதில்லை என்பது வேதவாக்கு. திருத்தொண்டர் பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு அடியாரினதும் இறுதி வெற்றிக்கு அவர்களிடமிருந்த இறை நம்பிக்கையும், மன உறுதியுந்தான் காரணம் ஆகும்.

கடவுளை நம்பி வாழ்பவர்கள் வாழ்க்கையில் வெற்றியைத் தழுவுவர். கடவுளை நம்புதல் என்பது நீதியில் நம்பிக்கை வைத்தலாகும். வெற்றியை அடையும் வரை

பொறுமையாக இருக்காமல் மனந்தளர்ந்து, சோர்ந்து நம்பிக்கையைக் கைவிட நேரும் சந்தர்ப்பங்களிலேயே தோல்வியைத் தழுவநேரிடுகிறது. எதிலும் சலனம் ஆகாது.

குடும்பம் ஆக இருக்கலாம்; நட்பாக இருக்கலாம்; காதல் ஆக இருக்கலாம்; வேலைத்தலமாக இருக்கலாம்; பரஸ்பரம் நம்பிக்கையேதான் உயிர்ப்பாக விளங்குகின்றது நல்லுறவு நம்பிக்கையின் பாற்பட்டது. நம்பிக்கைக்கு இரண்டகம் செய்தல் உறவினை மலினப்படுத்துகின்றது. தெய்வத்தின் மீதும் நம்பிக்கை கொள்ளும் போதே, தெய்வத்திற்கும் நமக்கும இடையேயுள்ள உறவு, பிணைப்பு என்பன பலப்படுத்தப்படும். இதனைப் பக்தி என்போம். பக்திவலையில் படுபவன் இறைவன். இறைவனுடன் வாழும் போது, நாம் பண்பாடுடையவர்கள் ஆகிவிடுகின்றோம். இறைநம்பிக்கை, இறைசிந்தை, இறைபக்தி என்பனவற்றை வளர்ப்பது சமயம்.

சைவ நெறிப்படி ஒழுகுவதனால் வாழ்க்கையில் சமூக, பொருளாதார ஆதாயங்களைப் பெற்று இகசுகங்களை அடையமுடியாது என்று எண்ணுபவர்களும் உள்ளனர். இத்தகையவர்கள், சமயச் சடங்குகள், கிரியைகள், விழாக்கள் என்பவற்றிற்காகத் தாராளமாகப் பணத்தைச் செலவு செய்வார்கள். அதன் மூலம் தாமும் சமயிகள் தான் என்பதைக் காட்டிக் கொள்வார்கள். பணம் கொடுத்து வேண்டுமானால் மனிதரின் செல்வாக்குகளையும், பாராட்டுதல்களையும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் பணத்தினால் இறைவனின் திருவருளை வாங்கிவிட முடியாது.

இவ்வாறு கூறுவதனால், விழாக்கள், சடங்குகள், கிரியைகள் என்பன தேவையில்லை என்று நான் சொல்ல வரவில்லை. அவையுந் தேவைதான். ஆனால் நான் குறிப்பிட விரும்புவது என்னவெனில், சமய விழுமியங்கள், தருமநெறி என்பவற்றை வாழ்க்கையில் கைக்கொள்ளாமல் அவற்றை நீக்கிவிட்டு, சமய ஆசாரத்தையும் புறக்கணித்துவிட்டு; விழாக்கள், சடங்கு சம்பிரதாயங்கள், களியாட்டங்கள் என்பவற்றிற்குப் பணத்தை வாரி வழங்குவதால் மாத்திரம் அவர் சமய ஈடுபாடுடையவர் எனக்கணிக்கப்பட முடியாது என்பதையேயாகும். சைவ நெறிப்படி வாழும் போதே ஒருவர் சைவசமயி ஆகின்றார்; சைவசமயியாகப் பாத்திரம் ஏந்தி நடிக்கும் போதல்ல என்பதைக் கருத்தில் பதித்தல் அவசியம்.

ஒழுக்கம் கட்டுப்பாடற்ற வாழ்வு, பண்பாடான வாழ்வு ஆகாது. எனவே சமய வாழ்வும் ஆகாது. சமயமே வாழ்விற்குக் குறிக்கோளும், ஒழுங்கும், கட்டுப்பாடும், தந்து சீர்செய்கிறது. பூமிமுதலிய கோள்களை சூரியன் தனது இழுப்பாற்றலால் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்காவிட்டால், அவற்றின் ஒழுங்கு கெட்டிருக்கும். ஒன்றோடொன்று மோதி எப்பவோ அவற்றின் சீர் குலைந்திருக்கும். அவ்வாறே சமயம் தோன்றியிராவிட்டால் மனித வாழ்க்கையில் ஒழுங்கு, கட்டுப்பாடு, சீர், செம்மை, எல்லாமே இல்லாமல் போயிருக்கும்.

வாழ்க்கையில் சமயநெறி மேற்கொள்ளப்படும் போது மனிதர்களில் பண்பாடு மிளிரும்; வீட்டிலே இசைவும் இனிமையும் தோன்றும்; நாட்டிலே ஒழுங்கும் அமைதியும் ஏற்படும்; உலகில் சாந்திசமாதானம் ஓங்கும். நாளைய குடிமக்களும் மனித மேம்பாடுகளை அறிந்து வாழ்வர்.

சமயஞ் சார்ந்த வாழ்க்கையின் விழுப்பத்தை உணர்வோமாக.



# கம்பவாரிதியுடன் ஓர் நேர்காணல்

கம்பவாரிதி இ. ஜெயராஜ்
அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்

கம்பன் கழகத்தை இலங்கையிலே நிறுவி, கணக்கற்ற இரசிகர்களைக் கம்பனூடு தமிழன்னையைத் தரிசிக்கச் செய்தவரும் ஆற்றலும், ஆளுமையும் ஒருங்கே அமையப்பெற்றவரும் முன்னோர் விரும்பும் மாணவனாயும், பின்னோர் போற்றும் ஆசிரியனாயும் இருப்பவரும். இன்று, கடல் கடந்த தேசங்களில் அவர் பெற்றுவரும் புகழ் நம்மனைவர் தம் தலைகளையும் நிமிரச்செய்து "அழியா அழகு" படைத்த ஆசிரியருமான அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களுடன் இந்து சமயம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் முகங்கொடுக்கும் விமர்சனங்கள் பற்றி "நக்கீரம்" மலரிற்காக ஓர் நேர்காணல் இடம்பெற்றது.

கேள்வி :- தொன்மைமிக்க இந்து சமயம் விவேகானந்தரின் கருத்துக்களின் பின் நவீன மயமாகியுள்ளதாய் கருதப்படுகின்றது. இந்த நவீன மயம் இந்து சமயத்திற்கு நன்மை பயத்திருக்கிறதா? தீமை பயத்திருக்கிறதா?

பதில் :- இந்து மதம் என்றுமே காலமாற்றத்தை ஏற்று தன்னை புதுப்பிக்கத்தவறியதில்லை. பழையன கழிதலும் புதியன புகுதலும் இந்து மதத்தில் காலா காலமாய் நிகழ்வன. என்றுமே தன்னை விமர்சனத்துக்குட்படுத்த இந்து மதம் பின்னின்றதில்லை. எங்கிருந்து வந்தாலும் நல்லவற்றை உள்வாங்குவது இந்து மதத்தின் தனிச் சிறப்பு. "சார்பினுக்கெல்லாம் தகத்தக மாறி தன்மையும் தனது தர்மமும் மாறாது என்றும் ஓர் நிலையாய்" இருப்பதால்தான் இந்து மதம் முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையதாய், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாய் இன்றும் நிலைக்கிறது. காலா காலமாய் இந்து மதத்தைப் புதுப்பித்துவரும் ஞானிகள் வரிசையில் விவேகானந்தரும் ஒருவர். அவர்தம் கருத்துக்களால் இந்துமதம் புத்துயிர்ப்பு பெற்றமை உண்மையும், நன்மையுமாம். அதே வேளை அவர்தம் கருத்துக்களின் உண்மை புரியாமல், இன்றைய விஞ்ஞானஉலகோடு பொருந்தச் செய்வதே இந்து மதத்துக்கு பெருமையென நினைந்து, நம் மதத்தின் ஆழ வேரோட்டங்களை அறியாமல் வியாக்கியானம் செய்யப் புறப்பட்ட ஒரு சிலரால் தீமை ஏற்பட்டிருப்பதும் மறுக்க முடியாத உண்மையே.

கேள்வி :- இந்துக்களின் நீண்ட காலப் பாரம்பரிய வழிபாட்டுமுறை இந்த நூற்றாண்டில் பெரும் மாற்றத்துக்குள்ளாகி உள்ளது. பல சம்பிரதாயங்கள் வழக்கொழிந்து போயுள்ளன. அவை பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில் :- சரியை, கிரியை, யோகம், ஞானம் என நம் இந்துமதம் வழிபாட்டினை நான்கு பகுதிகளாகப் பிரிக்கும். இவற்றுள் யோக, ஞான வழிபாட்டில் என்றுமே மாற்றம் வர வாய்ப்பில்லை. சரியையில் சமூகவளர்ச

சிக்கேற்ப, செயற்பாடுகளில் மாற்றம் வரினும் தொண்டு எனும் அடிப்படை என்றுமே ஒன்றுதான். கிரியையில் வேத, ஆகமங்களால் வகுக்கப்பட்டவை தவிர, ஊர்வழக்கால் உட்புகுந்த பல வழக்கங்களும் உண்டு. அவை இடத்திற்கிடம் மாறுபடும். அவற்றிற்கு நிச்சயிக்கப்பட்ட பிரமாணங்கள் இல்லை. நீங்கள் வழக்கொழிந்ததாய் கருதும் சம்பிரதாயங்கள் இங்ஙனமாய் அமைந்தனவே. இவற்றால் இந்து மதத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

**கேள்வி :- இந்து மதத்தின் வழிவந்த குரு சிஷ்ய பாரம்பரியம் ஒழிந்தது நன்மையா? தீமையா?**

பதில் :- குரு சிஷ்ய பாரம்பரியம் ஒழிந்ததாகக் கூறப்படுவது தவறு. அப்பாரம்பரியம் மாற்றம் பெற்றிருப்பதே உண்மை. கற்பவன், கற்பிப்பவன், இவ்விருவர்க்கான தொடர்பு என்பன உலகுள்ளவரை இருக்கும். அத்தொடர்பு பற்றிய வழக்கங்களிலேயே மாற்றங்கள் ஏற்படும். இன்று ஏற்பட்டுள்ள மாற்றம் நன்மையா? தீமையா? என்று வேண்டுமானால் ஆராயலாம். சுருங்கச் சொன்னால் பழைய குருசிஷ்ய முறையில் மாணவனின் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஆசிரியனே பொறுப்பாளனாக இருந்தான். எனவே மாணவனின்மேலான ஆசிரியனின் அக்கறை மிக அதிகமாக இருந்தது.

இன்றோ, வெற்றி பெற்ற மாணவனுக்கு எல்லா ஆசிரியர்களும் பொறுப்பாளர்கள். தோல்வியுற்றவனுக்கு யாரும் பொறுப்பில்லை என்ற நிலை. இதனால் ஆசிரிய, மாணவர் உறவில் விரிசல். குரு பக்தி அற்றுப் போனதால் மாணவர்களுக்கு ஆசிரியர் மேல் மதிப்பில்லை. அதனால் ஆசிரியர்களால் மாணவர்களை நெறிப்படுத்த முடியவில்லை. விளைவு ஒழுக்கவீனம். இவையெல்லாம் நன்மையா? தீமையா? நீங்களே முடிவு செய்யுங்கள்.

**கேள்வி:- இன்று அந்தணர் பலர் வேறு. வேறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ளார்கள். இது பற்றி உங்கள் கருத்து**

பதில் :- உற்பத்தியாளன், வினியோகஸ்தன், நிர்வாகி, கல்வியாளன் என சமூகத்தை நான்கு பிரிவாய் வகுத்தனர் நம் ஆன்றோர். இப் பிரிவுகளே வருணங்கள் என்றழைக்கப்பட்டது. சூத்திரன், வைசிகன், சத்திரியன், பிராமணன் என இந் நான்கு வருணத்தவர்களும் அழைக்கப்பட்டனர். இவர்களுள் சமூகத்தின் அறிவுப் பொறுப்பை ஏற்றவர்களே பிராமணர்கள் என்போர். இவர்களை அறுதொழிலோர் என தமிழ் கூறும். வேட்டல், வேட்பித்தல், கற்றல், கற்பித்தல், ஈதல், ஏற்றல் எனும் அறு தொழிலும் இவர்களுக்கென வகுக்கப்பட்டது. பிரமத்தை நாடுவதால் பிராமணர்கள் என்றும் அழகிய தண்ணளியைப் பூண்டவர்கள் என்பதால் அந்தணர்கள் என்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

தமிழில் காரணப்பெயர், இடுகுறிப் பெயர் என இருவகைப் பெயர்கள் உண்டு. குறிப்பிட்ட காரணத்தால் அமைந்தவை காரணப் பெயர் என்றும் (நான்கு கால்களை உடைய காரணத்தால் வந்த நாற்காலி எனும் பெயர்) காரணம் ஏதுமின்றி ஒரு பொருளை சுட்டுதற்காய் மாத்திரம் அமைந்த பெயர் இடுகுறிப்பெயர் என்றும் (பூனை) சொல்லப்படுகின்றது. இவற்றுள் இடுகுறிப் பெயர் குறிப்பிட்ட பொருளுக்கு எக்காலத்தும் வழங்கப்படும். காரணப்பெயரோ அக்காரணம் இருக்கும் வரையே வழங்கப்படும். காரணம் நீங்கின் அப்பெயரும் நீங்கும்.

பரிமேலழகர் அந்தணர் எனும் இப்பெயரை காரணப் பெயர் என்கிறார். பிராமணர் எனும் பெயரும் அங்ஙனமே.

எனவே இப் பெயருக்கான காரணங்கள் உள்ளவர்களே பிராமணர்கள் என்றும், அந்தணர்கள் என்றும் அழைக்கத்தக் கவர்கள். அவை நீங்கின் அவர்கள் செய்யும் தொழிலுக்கேற்ப பெயர் பெறுவர்.

இது தவிர அவர்களைத் தனியே குற்றம் சாட்டுவதில் எனக்கு உடன்பாடில்லை அவர்கள் அங்ஙனமாய் பல தொழில் புரிவதற்கு நாமும் ஓர் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. அறவுலகிற்கும், அருளுலகிற்கும் சிறிதும் மதிப்புக்கொடாமல் பொருளுலகையே இலட்சியமாய்க் கொண்டு வாழும் இன்றைய சமுதாயத்தில் அவர்களும் வாழ வேண்டியிருப்பதால் இம் மாற்றங்களைக் கொள்கின்றனர் போலும். இவற்றையும் கடந்து இலட்சியத்தோடு வாழும் அந்தணர்கள் இன்றும் இல்லாமல் இல்லை. அவர்தம் பெருமை அளவிடற்கரியது.

**கேள்வி :-இந்து மதத்தின் பல கடவுள் கொள்கை, கட்டுப்பாடற்ற தன்மை முதலியவை விமர்சிக்கப்டுகின்றன அவை பற்றி உங்கள் கருத்துகளை கூற முடியுமா?**

பதில் :- பல கடவுட் கொள்கை என்பது இந்து மதத்தின் கொள்கையல்ல, கடவுள் ஒருவனே என்பதும் அவன் குணம், குறிகள் அற்றவன் என்பதும் அவன் நம் மனம், வாக்குக் கடந்தவன் என்பதும் இந்து மத்தில் தெளிவாய் கூறப்பட்டுள்ள செய்திகள். சிந்தை கடந்த அச் செம்பொருளை நாம் பற்றுதற்காய் அமைக்கப்பட்டதே அப்பல வடிவங்கள். ஒவ்வொருவர் இயல்பிற்கேற்ப ஈர்ப்பும் பேதப்படுகின்றது. எனவே அனைவரையும் ஈர்க்கும் நோக்கத்துடன் கடவுள் வடிவங்கள் பலவாகின. இப்பல வடிவங்கள் ஆத்ம ஈடேற்றத்திற்கான உபாயங்களாம். இவ்வுண்மை உணரின் பல கடவுள் வழிபாட்டின் உண்மை தானே புரியும்.

உடலளவில் ஒன்று படினும் உள் வளர்ச்சியிலும், ஆத்ம வளர்ச்சியிலும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டே நிற்கின்றனர். இந்நிலையில் பலவாய் பேதப்பட்டு நிற்கும் இவர்களுக்கு பொதுவான கட்டுப்பாடு விதித்தல் சாத்தியமில்லை. அங்ஙனமாய் விதிக்கப்படும் பொதுப்பட்ட கட்டுப்பாடுகள் குறிப்பிட்ட ஒரு சாராரையே உய்விக்கும். மற்றையோருக்கு அவை இடர் செய்யும். எனவேதான் இந்துமதம் பொதுக் கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. இக்கட் டுப்பாடு இன்மை ஆத்ம வளர்ச்சியில் தகுதியீனம் அன்று தகுதியே.

**கேள்வி :- இன்று மதமாற்றங்களால் இந்து மதம் நலிவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

பதில் :- உலகியலில் இருந்து விடுபடச் செய்வது இந்துமதத்தின் நோக்கம். உலகியலில் வெற்றி பெறச் செய்வது மற்றையோர் விருப்பம். தத்துவங்களை விரிவித்து பெருமைகொள்ள நினைக்கிறது இந்துமதம். தலைகளின் எண்ணிக்கையை விரிவித்து மகிழ நினைக்கின்றனர் மற்றையோர். இன்று நிகழும் மதமாற்றத்தின் அடிப்படை பொருளா தாரமே. அருளாதாரமன்று. மதங்களுக்குள் உயர்வு, தாழ்வு இல்லை தமிழர் தம் வாழ்வோடு இந்துமதம் இரண்டறக் கலந்தது. அதனை அறியாதார் அறியாதாரே. பொருளைக் காட்டி கணவனிடமிருந்து மனைவியைப் பிரிப்பதும், தாயிடமிருந்து பிள்ளையைப் பிரிப்பதும் எப்படி ஒழுக்கவீனமாகுமோ அங்ஙனமே பணம் காட்டி மதமாற்றம் செய்வதும் ஒழுக்கவீனமே. அப்படிச் செய்வோர் தண்டிக்கப்படவேண்டியவர்கள். மாற்றாளிடம் சென்றாலும் தன் மகனின் வாழ்வு கண்டு உண்மைத்தாயின் உள்ளம் மகிழும். இந்து மதத்தாயும் "மயங்கி" மதமாற்றத்தால் பிறசமயம் சென்ற தன் பிள்ளைகள் வாழ்வு கண்டு மகிழ்வாள். வசதி கண்டு ஓடிய பிள்ளைகள் வருத்தமுற்றதும் பெற்றதாயைத் தேடி வருமாற் போல மதம் மாறிச்

சென்றவர்களும் தம் தாய்மதமாம் இந்து மதத்தினைத் தேடி என்றோ வரப் போவது நிச்சயம்.

**கேள்வி :- தத்துவங்களில் உயர்ந்தது சித்தாந்தமா? வேதாந்தமா? எனக் கூறமுடியுமா?**

பதில் :- அனைத்து தத்துவங்களும் உயர்ந்தவைதான். சிந்தை கடந்த இறைவனை அனுமான அறிவாலும், யோகக் காட்சியாலும் காணத்தலைப்பட்ட ஞானிகளின் முயற்சியால் விளைந்தவையே தத்துவங்களாகும். எந்தத் தத்துவமும் முற்றுமுழுதாய் இறைவனை விளங்கப்படுத்தப் போவதில்லை. அங்ஙனம் ஏதேனும் ஒரு தத்துவம் இறைவனைப் பூரணமாகக் காட்டின் அறிவுக்குட்படாத ஆண்டவனின் இயல்பு மாசுறும். ஆண்டவனை முற்றாய் அறிதல் நம் சிற்றறிவுக்கு என்றும் சாத்தியமில்லை. ஞானிகள் தத்தம் ஆத்ம சக்திக்கேற்ப தாம் கண்டவற்றை வரையறை செய்தனர். அவை அனைத்தும் கடவுளைக் காட்ட முயலும் வழிகளே. இதில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்ற கேள்விக்கே இடமில்லை. தத்தம் மனதுக்கேற்ற தத்துவத்தை கைக்கொண்டு முன்னேற முயல வேண்டியதுதான். தத்துவப் போராட்டம் ஆணவத்தையே வளர்க்கும்.

**கேள்வி :- இளைஞர்களிடம் சமய நம்பிக்கை வளர்ந்துள்ளதா? தேய்ந்துள்ளதா?**

பதில் :- நிச்சயம் வளர்ந்துள்ளது. அவர்கள் வயதிற்கேயுரிய துடிதுடிப்பால் பாரம்பரிய வழக்கங்களை மறுக்கத்துணியலாம். அதைக் கொண்டு இளைஞர்களிடம் தெய்வ நம்பிக்கை தேய்ந்து விட்டதாய்க் கணிப்பது தவறு.

**கேள்வி :- இந்திய அரசியலில் சமயம் புகுந்திருப்பது பற்றி உங்கள் கருத்து?**

பதில் :- சமயம் மக்களை ஒன்று படுத்தவும், உயர்த்தவும் உதவினால் அரசியலில் புகுவதில் தவறில்லை. மக்களைப் பிரிக்கவும், தாழ்த்தவும் பயன்பட்டால் அது அரசியல் பக்கமே வரவேண்டாம். இந்தியாவில் பின் சொன்னதே நடைபெறுகின்றது.

**கேள்வி :- இந்தியா இந்துமதத்திற்கு உரிய நாடு என்பதில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?**

பதில் :- உண்டு

**கேள்வி :- நீங்கள் மதிக்கும் இந்து சமயப் பெரியார் யார்?**

பதில் :- சாதிக்கொடுமையால் சமூகத்தைப் பாகுபடுத்தி கோயிலுக்குள் வராதே என இந்துக்கள் தடுக்க, எங்கள் கோயிலுக்கு வாருங்கள் படிப்பும், பணமும், பதவியும் தருகிறோம் என் மற்றைய மதத்தவர்கள் வரவேற்க அவ்வழைப்பை நிராகரித்து கோயிலுக்கு வெளியே நின்றபடியேயே "காளியாச்சி" என கை கூப்பி இந்து மதத்தில் அசையாது நின்ற தாழ்த்தப்பட்ட மக்களே நான் மதிக்கும் இந்து சமயப் பெரியார்கள்.

**கேள்வி :- இந்துமதத்தில் வழிபாடு என்ற பெயரில் சிலர் தம்மை வருத்திக் கொள்வது சரியா?**

பதில் :- அன்பு மென்மைக்கு மட்டுமன்றி வன்மைக்கும் காரணமாம். வாகனத்தில் மோதப்பார்த்த பிள்ளையை காப்பாற்றிய தாய் பின் தான் அப்பிள்ளையை அடிப்பது அன்பின் வெளிப்பாடே. அவ்வன்பின் அடிப்படைதான் இவ்வன்மையான வழிபாடும்.

**கேள்வி :- உலகம் முழுவதும் நிறைந்திருக்கும் கடவுளைக் கும்பிட கோயில் தேவையா?**

பதில் :- நிலம் முழுவதும் நிறைந்திருக்கும் நீரைக் குடிக்க கிணறு தேவையா?

**கேள்வி :- பக்தியின் அடையாளம் என்ன?**

பதில் :- அன்பு

**கேள்வி :- சட்ட மாணவர்களுக்கான உங்கள் ஆலோசனை என்ன?**

பதில் :- சட்டத்தின் மூலம் சமூகத்தை தர்மத்தோடு பொருந்தச் செய்யுங்கள்.

# மாணவர் ஆக்கங்கள்

# தமிழ் ஈ(வீ)ரத்துள் நக்கீரம்

தயாள் ச. செபநாயகம் - பயிலுனர் ஆண்டு

தமிழெனும் ஈரத்துள்
அமிழ்ந்தெடுத்த
ஈரம் காயாத
நக்கீரமே........

குருதியின்
ஈரத்திலும் - அமிழாது
தீரத்துடன் உன் வரவு
கோரத்தை அடக்கட்டும்!

உண்மை உறங்காதிருக்க - நின் உடல்
வெண்மை சாம்பலானாலும்
என்மானத் தமிழை
தன்மானத் தமிழாக்கியவனே!

நக்கீரமே - நின்
சொற்கீரத்தால் வரும்
பொருட்கீரம் - தரும்
அருட்கீரமான ஆக்கம் நிலைக்கட்டும்.

ஈரமே உன்
சீரெடுத்து அதன்
தீரெடுத்து அவைகளை - மெல்லிய
நாரெடுத்து கோர்க்கிறோம் மாலையாக.

திகழ் பெருமை நேசா
இதழ் கொடுக்கும் வாசம் - தரும்
முதல் முறையுன் நேசம் வரும்
நடைமுறை தரும் பாசம் தொடரும்.

நக்கீரனேயுன்
மலர் வடித்த மரங்கள்
பலர் பிடித்த குடைகள்,
சிலர் விரித்த கரங்கள் மறவாதே!

கட்டையில் போகாத கவியரசு போல்
அட்டையில் நின் சிந்தனையோவியம்
முட்டுகையில் உன் - உடல்
பட்டகையில் கருத்தோவியம் மிளிர வேண்டும்.

துக்கங்கள் மறந்து நாம் தரும்
ஆக்கங்கள் மூட்டவேண்டும் - மனதின்
தாக்கங்களை - அதனால்
நோக்கங்களை அது காக்க வேண்டும்.

படியிலேற வேண்டும் - நீ
தடியின் துணையுடனல்ல
மடியின் கனமுள்ள - தரத்தின்
பிடியுடன்.

கமழ்திடும் நின்
இதழ்வாசம்
முதலிருந்து கடை வரை
வீறு நடை போடட்டும்.......

நக்கீரமே
சொற்கோர்த்த நின் இதழ்வாசம் - என்றும்
முக்காலத்து மூதுரை போல
பிற்காலத்தும் வாழ்க.... வாழ்க.....

சைவநீதி பேண - நீ
வைகின்ற வாஞ்சியர் - கை
வைத்த சிற்பியின்
மெய் தொட்ட குழந்தையென
வா... வா.... வா...

# இந்து மதத்தின் தத்துவம்

செல்வி க. ஆனந்தி - பயிலுனர் ஆண்டு

பூஜை புனஸ்காரங்களும், சடங்கு சம்பிரதாயங்களும் எண்ணற்ற தெய்வங்களும் கொண்ட ஒரு புரியாத புதிர் இந்து மதம் என்ற தவறான கருத்து பலரிடையே தற்போதும் நிலவி வருகிறது.

இந்து மதத்தின் உயிர்த்தத்துவங்கள் எவ்வளவு சத்தியமானவை, அறிவு பூர்வமானவை, விஞ்ஞான பூர்வமானவை, யதார்த்தமானவை என்பதை அனுபவபூர்வமாக கண்டறிந்தவர்கள் சங்கரரும், சைதன்யரும், பரமஹம்சரும் ஆவார்கள்.

''எந்த உருவில் என்னை ஒருவன் நாடினாலும் அவனை நான் சென்றடைகிறேன். இறுதியில் என் ஒருவனிடமே கொண்டு விடும் பாதைகளில் தான் எல்லா மக்களும் முயன்று கொண்டிருக்கிறார்கள்'' என்ற கீதையின் வாசகம் இந்து மதத்தின் உயிர் நாடி.

இந்து மதம் மட்டுமே இறைவனுக்கு "அபீ" என்ற அடைமொழியை அளித்துள்ளது. அதாவது "அச்சமற்றவர்" என்று பொருள். வாழ்க்கை என்ற குருஷேத்திரத்தில் வெற்றி பெற நினைப்பவர்கள் அச்சமற்றவர்களாக தமது கடமையைச் செய்து பலன் கருதாது வாழ வேண்டும் என்பது இந்து மதத் தத்துவங்களில் மிக முக்கியமான ஒன்றாகும்.

படகு தண்ணீரில் இருக்கலாம் ஆனால் டகில் தண்ணீர் இருக்கக் கூடாது என்பது போல் ருவன் இல்லறத்தில் இருக்கலாம் ஆனால் ல்லற உணர்வு அவனுள் புகக்கூடாது என்கிறது ந்து மதம். இல்லறத்தில் இருந்தாலும் றைவனை அடிக்கடி நினைத்துக்கொள்ள ண்டும் என்பதற்காகத் தான் இந்து மதம் ங்கு சம்பிரதாயம் என்ற வட்டத்துக்குள் துக்களைக் கட்டிப் போட்டிருக்கிறது.

குழந்தை பிறந்தால் அதன் தலைமுடியை இறைவனுக்கு காணிக்கையாக்குகிறோம். இறைவன் சந்நிதானத்தில் குழந்தைக்கு முதலில் அன்னம் ஊட்டிவிடுகிறோம். விஜயதசமியில் ஏடு தொடங்கிறோம். அக்கினி சாட்சியாக அம்மி மிதித்து அருந்ததி பார்த்து முக்கோடி தேவர்கள் சாட்சியாக திருமணம் நடக்கிறது. இறப்பின் போது ஆன்ம ஈடேற்றத்திற்காக பல கிரியைகளைச் செய்கிறோம். இப்படியாக வாழ்க்கையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் இறைவனுடன் இணைத்திருப்பது இந்து மதத் தத்துவங்களின் தனிச்சிறப்பாகும்.

லௌகீக வாழ்க்கையுடன் தொடர்புடைய பொருட்கள் கூட பரம்பொருளை நினைவூட்ட வேண்டும் என்பதற்காக பொன்னும், பொருளும் சுவர்ண லஷ்மியாகவும், உணவு அன்ன லஷ்மியாகவும், வீடு கிரகலஷ்மியாகவும், ஆயகலைகள் அறுபத்திநாலும் கலைவாணியா கவும், வீரம், ஆயுதம், போர் முதலியன துர்க்கையாகவும் உருவகப்படுத்தப்பட்டன; அனைத்திலும் நாம் இறைவனைக் காண வேண்டும், இறைவனை நினைக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

மிருகங்கள் பறவைகள் கூட பரம்பொருளை நினைவூட்ட வேண்டும் என்ற அடிப்படையில் காகம் சனீஸ்வரனையும், சிங்கம் துர்க்கையும், யானை பிள்ளையாரையும், கிளி காஞ்சி காமாட்சி அம்மனையும், சேவலும் மயிலும் முருகனையும் நமக்கு நினைவூட்டுகின்றன.

மரங்களில் வில்வத்தில் சிவனையும். துளசியில் விஷ்ணுவையும், வேப்பிலையில் அம்மனையும் காணாத இந்துக்கள் இருக்க முடியாது. மா, வாழை, பலா, எலுமிச்சம் போன்ற பழங்களும் தாமரை, கடப்ப புஷ்பம் போன்ற மலர்களும் பரம் பொருளை நினைவூட்டுகின்றன. உலகத்தோடு ஒன்றி வாழும் வாழ்க்கையில் ஒவ்வொரு பொருளும் இறைவனை நமக்கு

நினைவூட்டும் பொருட்டே நமது ரிஷிகள் இந்து மதத் தத்துவங்களை உருவாக்கியுள்ளார்கள்.

ஒவ்வொரு இந்துத் தெய்வத்தின் உருவ அமைப்பிலும் ஆழமான தத்துவ விளக்கங்கள் அடங்கியுள்ளன. பிள்ளையாரின் பேழை வயிறு ஒருவன் எத்தகைய அனுபவங்களையும் ஜீரணிக்கக் கூடியவனாக இருக்க வேண்டும் என்பதையும், தும்பிக்கை ஞானத்தையும் குறிக்கிறது. விருப்பு, வெறுப்பு, பிறப்பு, இறப்பு என்ற எதிர்மாறான குணங்களுக்கு நடுவே மனம் தடுமாறாமல் இருக்க வேண்டும் என்பதை ஒரு கையில் உடைக்கப்பட்ட நிலையிலிருக்கும் தந்தம் உணர்த்துகிறது. நிலத்தை தொட்டுக் கொண்டிருக்கும் ஒரு கால் உலக சம்பந்தமான விடயங்களுடன் தொடர்பையும், மடிக்கப்பட்ட மற்றொரு கால் பரமாத்மாவின் மீது மட்டும் நிலைத்திருக்கும் மனநிலையையும் காட்டுகிறது. அவர் முன் வைக்கப்பட்டிருக்கும் தின்பண்டங்கள் செல்வம், அதிகாரம், சுபீட்சம் என்பனவற்றையும் குறிக்கின்றது. மனித மனதுக்குள் புகுந்துவிடும் ஒரு சிறிய ஆசையானது நீண்ட நாட்கள் கஷ்டப்பட்டு பெற்ற லௌகீக ஆன்மீக செல்வங்களை அழிக்கக் கூடியது என்பதை பேராசையின் சின்னமாகக் கருதப்படும் சிறிய எலி காட்டி நிற்கிறது. பெரிய உருக் கொண்ட கணேசர் சிறிய எலி மீது அமர்ந்திருப்பது உடல், மனம், அறிவு என்ற மூன்றாலும் மனிதன் விளக்க முடியாத பரம்பொருளை விளக்க முற்படுவதைக் குறிக்கிறது. கணேசரின் நான்கு கரங்களும் மனம், புத்தி, ஆணவம், சித்தி என்ற நான்கையும் குறிக்கின்றது.

பிறப்பு, இறப்பு, அழிவு, ஆக்கம் அனைத்தும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. மழலைப் பருவத்தின் மறைவில் வாலிபத்தின் உதயமும், வாலிபத்தின் அழிவில் முதுமையின் பிறப்பும் தங்கியுள்ளது.

"எத்தனை ஜென்மங்களோ - முன்னம்
எடுத்தெடுத் தலுத்தோம்
எத்தனை ஜென்மங்களோ இன்னும்
எடுக்கப் போகின்றோம்"

என்ற கவிமணியின் வரிகள் "புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி....." என்ற மாணிக்கவாசகரின் திருவாசகத் தேனை நமக்கு நினைவூட்டுகின்றன.

அலைபாயும் மனதை அடக்கி ஆளும் பயிற்சியை யோகம் என்கிறது இந்து மதம். "ஸமத்துவம் யோக உச்யதே" அதாவது ஒரு பொருளை கவனிக்கும் போது எவ்வித சஞ்சலமோ சலிப்போ, பயமோ இன்றி ஆழ்ந்து கவனிப்பதாகிய பயிற்சி இதையே கீதை "யோகஸ்த குரு கர்மாணி" என்கிறது காண்பவை, காணும் பொருள், காட்சி அனைத்தும் பிரம்மம். "ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்" இது தான் அத்வைத நிலை. ஆரம்ப காலத்தில் அத்வைத கோட்பாட்டை ஏற்க மறுத்த சுவாமி விவேகானந்தர் கூட பரமஹம்சர் அருளால் அனுபவபூர்வமாக உணர்ந்த பின் அத்வைத தத்துவத்தை ஏற்றுக் கொண்டார்.

கிறிஸ்தவர்களுக்கு விவிலியம், பௌத்தர்களுக்கு தம்மபத, இஸ்லாமியருக்கு குர் ஆன் ஆனால் இந்துக்களைக் கேட்டால் சிலர் பிரம்ம சூத்திரம் என்பார்கள், வேறு சிலர் உபநிடதம் என்பார்கள், இன்னும் பலர் பகவத் கீதை என்பார்கள். "பிரஸ்தரத்ரகயம்" என்றழைக்கப்படும் இந்த மூன்று நூல்களுமே இந்து மத தத்துவச் சிறப்புக்களை விளக்குகின்றன.

மனித மனம் ஒரு குழம்பிய குட்டைக்குச் சமன். அவரவரது இயல்புக்கு ஏற்றவாறு விரும்பிய பாதையை பின்பற்றி மெய்ப்பொருளை அடைய ஏதுவாக இந்து மதத்தத்துவங்கள் வழி காட்டுகின்றன.

ஆம்! வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பது தான் சனாதன தர்மத்தின் தனிச் சிறப்பு.

# கோயிலில்லா ஊர்!

சிறுகதை படைப்பு
க. பிரபாகரன் – பயிலுனர் ஆண்டு

"ஒற்றை மருப்பு மோரிரண்டு கைத்தலமும்
வெற்றிபுனைந்த விழிமூன்றும் -
பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத்
தன்மனத்திலெப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று

பிள்ளையாரப்பா இண்டைக்காவது வழிகாட்டப்பா, விக்னேஸ்வர் மானசீகமாகப் பிரார்த்தித்து நின்றார். அந்தச் சின்னக்குடிசையில் பிள்ளையார் படம்வைக்கவோ, தீபம் கொழுத்தவோ இடம் ஏது? இடம் இருந்தாலும் பிள்ளையார் படத்துக்குத் தான் எங்குபோவது.

ஒருவாரத்துக்குமுன் அவங்கள் வாண வேடிக்கைகள், ஊர்திகளுடன் குடிமனைக்குள் புகக்கட்டியம் கூறிய போது......இப்படிப்பல முறை வாணவேடிக்கைகளை கண்டிருக்கிறார்கள் அவர்கள். ஆனால் இம்முறை முன் எப்போதையும் விட நிலைமை மோசமாகவே இருந்தது. இரண்டாம் கட்டைக் கடைக்காரர்கள் எல்லோரும் கடைகளை வீடுவாசல்களை அப்படியே விட்டுவிட்டு இடம் பெயர்ந்து குடும்பங்களுடன் வேறு இடங்கட்குச் சென்று விட்டிருந்தனர்.

"இஞ்சைபாருங்கோ! இந்தப்பிள்ளையார் என்னை படைச்சவர். அவர் எனக்கு ஒண்டும் வராமல் பாத்துக் கொள்ளுவார். நான் அந்தவீதியில இருக்கப்போறன். பிள்ளையார் கோயில் ஐயரும் அம்போ எண்டு விட்டுட்டுப் போட்டார். தான் பூசைசெய்யிற பிள்ளையார் தன்னைக் காப்பாத்துவாரெண்ட நம்பிக்கையே அவருக்கு இல்லாமல் போச்சு. ஆனா! எனக்கு நம்பிக்கை இருக்கு பிள்ளையார் அப்பாவின்ர காலில தஞ்சமடைஞ்சா எதுவும் நடக்காது. நீங்கள் இங்க இருக்கப் பயப்படுறதாலதான் உங்களை அனுப்பிறன். நான் வரயில்லை. என்னை வற்புறுத்தாதையுங்கோ"

எந்தச் சமாதானமும் அவரின் மனைவி மகள்மாரை திருப்பிப்படுத்தாததால் வேறுமார்க்கமின்றி மனச்சுமையுடன் பந்தங்கள் பாசங்கட்காக விக்னேஸ்வரரும் உருத்திரபுரம் நோக்கி இடம்பெயர்ந்தார்.

கிடுகுகளால் வேயப்பட்டு மண்சுவர் எழுப்பப்பட்ட சின்னக் குடிசையில் அவர்கள் வாழ்வு தொடங்கி நாட்கள் ஒரு வாரத்தைத் தொட்டு நின்றது.

'அது பொய்யாயிருக்கக்கூடாதா' அதுதான் அவரது அங்கலாய்ப்பு அவரால் அந்தச் செய்தியை நம்பமுடியவில்லை. அந்தச்செய்தி கேட்டது முதல் அமைதியாக இருக்கமுடியவில்லை. சிறுகச்சிறுகக் கட்டிஎழுப்பப்பட்டது அது. எத்தனை ஆண்டுகள், எத்தனை சந்ததியினரின் உழைப்பு அதில் இடப்பட்டது. இன்று அப்படி ஒன்றைக்கட்டுவது என்பது சிந்தித்தே பார்க்கமுடியாது. அது அந்தப் பிரதேச மக்களின், கமக்காரர்களின், வர்த்தகர்களின் வாழ்வின் ஜீவநாடி. எப்பொழுதும் எதையும் தொடங்க முன் அந்தப்பிள்ளையாரப்பாவின் முன் தோப்புக்கரணம் போட்டு; தேங்காய் அடித்துத்தான் ஆரம்பிப்பது வழக்கம். தினசரிவாழ்வு அதன் முன்றலில் இருந்துதான் ஆரம்பமாகும். எல்லோருமே முதலில் அந்தப் பிள்ளையாருக்கு ஒரு கும்பிடு போடுவதை தமது வழக்கமாகவே கொண்டிருந்தனர்.

"எங்களை எல்லாம்காப்பாற்றி பாதுகாப்பாக அனுப்பிவிட்டு தான்மட்டும் அங்கிருந்தாரே அது இதற்காகவா? ஓ ஊரே அழிந்துவிட்டதே! என்னால் கூட காக்கமுடியவில்லையே! என்னை நாளும்

வழிபடும் எனது அடியவர்களை ஒன்றுமில்லாதவர்களாக நான் எப்படிக்காணுவது என்று நினைத்துத்தான் நீங்களும்......... உங்களையும் அவங்கள்.....? இல்லை! இருக்காது இருக்கக்கூடாது. எப்படியும் எனக்கு நம்பிக்கை இருக்கு. எங்கடஅப்பனுக்கு எந்தமாசும் மறுவும் விழுந்திராது'' விக்னேஸ்வரரின் சிந்தனை சூறாவளியில் சிக்கிய சிறு துரும்பாக அலைக்கழிந்தது. அவரால் உண்ணமுடியவில்லை. உறங்கமுடியவில்லை.

அவருக்கு நல்ல ஞாபகமிருக்கிறது. அப்பு எப்பவும் சொல்லுவார் ''நீ பிள்ளையார் கொடுத்தபிள்ளையடா! எனக்கும் உன்ர கொம்மாவுக்கும் கலியாணமாகி ஏழு வருசமாப் பிள்ளையே இல்லையடா. கமம்வைச்சு இலட்சம் இலட்சமாக் காசு உழைச்சு இந்தப்பரந்தனிலேயே பெரிய மாளிகை கட்டினவன் நான் தான்ரா. ஆனா! எல்லாச் செல்வமும் இருந்தும் பிள்ளைச் செல்வம் இல்லாதகுறை.... கொம்மா உந்தப்பிள்ளையாரின்ர காலடியில தான் எப்பவும் அவளின்ர பிரார்த்தனை வீண் போகல்ல. நீ வந்துதித்தாய்'' என்று விக்னேஸ்வரரின் அப்பு அவரின் பிறப்பின் உண்மையைச் சொல்லுவார். பிள்ளையார் அருளை வியந்து சொல்வது. அவருக்கே ஒரு பெருமையாகத்தான் இருந்தது.

விக்னேஸ்வரர் தாயின் கரங்களில் தவழ்ந்த வண்ணம் நாற்பத்தோராம் நாள் அந்தப் பிள்ளையாரின் பாதங்களை வீரிட்டழுது வழிபட்டார். தாயின் வயிற்றிலிருந்து பூவுலகம் வந்தபின் அவர் முதன் முதலில் பயணித்த இடமும் அதுதான். காலம்கடக்க சோறு ஊட்ட வேண்டிய காலம் வந்தபோது, அந்தப் பிள்ளையாருக்குப் படைத்த நெய்வேத்தியத்தினை குருவானவர் ஊட்டி சோறு உண்ண ஆரம்பித்து வைத்ததும் அந்தத் திருத்தலத்தில் தான்.

கல்வியூட்ட வேண்டிய காலம் வந்தபோது ஒரு விஜயதசமிநாளில் தாம்பாளத்தில் பரப்பப்பட்ட சிகப்பரிசியில் 'அ', 'ஆ', 'இ'...... இனை குரு கைபிடித்து எழுதிவைத்ததையும், அப்போது இவர் அழுது எழுதமறுத்து அடம்பிடித்ததையும் அம்மா நினைவூட்டியிருக்கிறாள். ஒவ்வொரு வாழ்க்கைப்படியிலும் ஏறும்போதெல்லாம் அந்தப் பிள்ளையார் தான் அவருக்கு அடிகோலிக் கொடுத்துள்ளார். அவருக்கு நல்ல ஞாபகமிருக்கிறது சின்னவயது, தன்னறிவு வந்துவிட்ட காலம் தான் ஓடிவிளையாடிய கோயில் மணல்பரப்பு. அங்கு எத்தனை எத்தனை அனுபவங்கள். ஒவ்வொன்றும் ஆழமான பொருள் பொதிந்தவை. கோயில் என்பது வெறுமனே வழிபாடு மட்டும் இயற்றுமிடமல்ல என்பது அவரது ஆழமான நம்பிக்கை கமக்காரர்கள் இரவு நேரத்தில் கூடிஇருந்து எத்தனை விடயங்கள் குறித்து அங்கு பேசி இருக்கிறார்கள். விதைப்பு, களைஎடுப்பு, பசளை இடுதல், தண்ணிமுறை பற்றி..... தமக்குத் தெரிந்தவற்றை அனுபவசாலிகள் கூற புதியவர்கள் ஐயம் தெளிய வழிவகுத்தது அந்தக் கோயில் தானே. அவருக்கு நல்ல ஞாபகமிருக்கிறது. காங்கேயன் மாமாவும் சின்னத் தம்பிப்பெரியப்பாவும் தண்ணிமுறைக்காக மோதிக்கொண்டபோது அவர்களுக்கிடையில் சமரசம் பேசிவைத்ததும் இந்தக் கோயில் தானே.

பரீட்சைக்காக அப்போது விக்னேஸ்வர் புறப்படும் போது எல்லாம் ''மகனே பிள்ளையாரட்டைப் போய்ப் போடா'' என்று தாய் அன்புக் கட்டளை இடுவதும். " நீ பிள்ளையார் தந்த குழந்தையடா. பிள்ளையார் எங்கும் எதிலும் முதலில் பூசிக்கப்படுபவர். அவர் முதலவன். அதுபோல நீயும் இந்த உலகத்தில் எந்தக்காரியம் செய்தாலும் அதில் நீ முதலாவதா வரணும்டா! என அப்பு நம்பிக்கை ஊட்டி பிள்ளையார் கோயில்ல தேங்காய் உடைச்சு மகனைத் தனது 'டிராக்ரரில' பாடசாலையில் விட்டு விடுவதும் மறக்கவா முடியும்.

கோயில் திருவிழா என்றாலே போதும் பத்துநாட்களும் அப்பிரதேசமே களைகட்டிவிடும். கமக்காரரும், கடைக்காரர்களும் தம்மை வாழவைத்த தெய்வத்துக்கு நன்றிசொல்லி எடுக்கும் விழாக்கள் நீயா நானா பார்க்கலாம் எனப் போட்டிபோட்டு விழா நடாத்திக்காட்டுவர்.

இரவுமுழுவதும் கலைவிழாக்கள் களைகட்டும். யாழ்ப்பாணம் சென்று பிரபல நாதஸ்வர தவில் மேதைகளை தமது சொந்த வாகனத்தில் அழைத்துவந்து கச்சேரி நடாத்துவர். தனிக்குழுக்களாகவும், கூட்டுக்களாகவும் எழும் நாதம். போட்டியாக வாசிக்கும் போது அது சொல்லிலடங்காது. அவர்கள், இவர்கள் கேட்கும் பாடல்களை வாசிக்கும் போது தாமும் சேர்ந்து பாடி ஆடிக்கூத்தாடியது இப்போதும் பசுமையாக. வில்லுப்பாட்டுக் குழுக்கள் அளிக்கும் விருந்தோ தனி. நளன் தமயந்தி கதையை, சாவித்திரி சத்தியவான் கதையை, அகலிகையின் வரலாற்றை அவர்கள் மூலம்தானே அவர் கற்றுக் கொண்டார். இவைமட்டுமா கதாப்பிரசங்கங்கள், பட்டிமன்றங்கள் எத்தனை எத்தனை அரங்குகள். இராமாயணக் கதையை அக்குவேர் ஆணிவேராக அலசி ஆராய்ந்தது இந்தக் கோயில்வாசலில் தானே. கமக்காரரும் கடைக்காரரும் வெறும் கூலிகளும் தான் வாழும் இடம் அது என்று படித்தவர்கள் என்போர் சிலர் சொன்ன காலமது. அக்கருத்தை உடைத்து கலையை இரசிக்கவும் வளர்க்கவும் களம் தந்த கோயில் அது.

விக்னேஸ்வரருக்கு வயது இருபத்தைந்தைத் தாண்டிவிட்டிருந்தது. கல்வி எல்லாம் முடித்து தொழில் தொடங்கும் தீர்மானத்தில் பரந்தன் வந்த போது, கமத்தை நான் பார்க்கிறேன் நீ வியாபாரம் செய் எனத் தந்தை கடைபோட்டுக் கொடுத்த போது கூட..... அந்தமுதல் நாளில் இந்தக் கோயிலில்தானே தொழில் சிறக்க வேண்டி வழிபாடு இயற்றி தொழில் தொடங்கினார். அதனால்தானே வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்தார்.

அங்கு நடக்கும் சப்பறத்திருவிழா விக்னேஸ்வரருக்கு மறக்கமுடியாத திருவிழா. பலதிருவிழாக்கள் கண்டிருக்கிறார். ஆனால் இந்தச் சப்பறத்திருவிழாவில் தான் அந்த முதல் சந்திப்பு நடந்ததும்; அவர் வாழ்வில் இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றாகவே இணைந்தவிட்ட சரஸ்வதியை சந்தித்தும்; பின்பு பெரும்பிரளயமே நடாத்தி கடைசியில் ஊரே மெச்ச பெரும் விழாவாகவே திருமணம் நடாத்தி சரஸ்வதியை வாழ்வில் இணைத்துக் கொண்டதும்; இந்தத் திருத்தலத்தில்தானே.

வாழ்வின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் பிள்ளையார் சுழி போட்டு தொடங்கு நிச்சயம் நீ ஜெயிப்பாய். விக்னேஸ்வரரின் வாழ்வின் ஒவ்வொரு அத்தியாயமும் பிள்ளையாரோடு இணைந்தது. பிள்ளையாரின் வழிகாட்டலில்தான் தான் நடப்பதாக அவர் உறுதியாக நம்பினார். ஒரு உன்னதமான வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தார் எனின் அது அவன் கொடுத்த கொடை என்பதில் மனிதருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. கடந்தவாரம் நடந்த இடம்பெயர்வு அதன் பின் வந்த தொடரான செய்திகள் அவரைக்கலக்கமடைய வைத்துவிட்டது. எனினும் நம்பிக்கை இன்னும் அவன் மீது உறுதியாகவே நம்பிக்கை அவருக்கு.......

''விக்னேசண்ண! விக்னேசண்ண!.....'' அந்தப்பழைய நிகழ்வுகளில் மூழ்கிப் போயிருந்தவரை அருணாச்சலத்தின் குரல் இவ்வுலகுக்குக் கொண்டுவந்தது.

''அண்ணே! அவங்கள் அங்கால ஓராங்கட்டையால கிளிநொச்சிக்குத்தான் போறாங்களாம். நம்மடபக்கம் அவங்கள் வரேல்லையாம். நான் ஒருக்கா கடையைப் பாத்துப்போட்டு வருவம் எண்டு நினைக்கிறன். நேற்று மணியனும் ராசுவும் போட்டுவந்தவங்களாம். நீங்களும் வாறியளே! உங்கடகடைக்குள்ள ஏதும் எரிஞ்சதவிட மிச்சம் சொச்சம் இல்லாமலே போகப்போகுது. அதோட வீட்டையும் பாத்துப் போட்டுவரலாம்.''

"திண்ணையில் சாய்ந்திருந்தவர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார் முகத்தில் ஒரு பிரகாசம் ஒருமகிழ்ச்சி நிசமாகவோ! பிள்ளையார் கோயில்பக்கம் போனவங்களாமே.....? கோயிலுக்கு..... கேள்விப்பட்டது உண்மையே...?" விக்னேஸ்வரர். "அவங்கள் கடைக்கு மட்டும்தான் போனவங்களாம். கடைஉடைச்சு சாமான்களவு போய்க்கிடக்காம். மிச்சம் சொச்சமாகக் கிடந்ததை

எரிச்சுப்போட்டாங்கள் எண்டுமணியன் கவலைப்பட்டான். ராசுவின்ற கடைஇருந்த இடத்தில் கல்லுக்குவியல் தான் கிடக்காம். அவனின்ர வீட்டை உடைச்சு களவு எடுத்துப் போட்டுதுகள் எங்கட சனங்கள் மிச்சமாக்கிடந்ததுகளை "மெசினில் போட்டுக் கொண்டு வந்திருக்கிறானாம்'' அருணாச்சலம் தானறிந்தவற்றை ஒப்புவித்தான். "அப்படியே சங்கதி! எனக்கு இப்ப பிள்ளையாருக்கு என்னநடந்தது எண்டுதான் கவலை நானும் வாறன் கொஞ்சம் இரு. ஒரு தேத்தண்ணி குடிச்சிட்டுப் போவம்.'' என்று விக்னேஸ்வரர் அருணாச்சலத்துடன் இணைந்து கொண்டார்.

''தம்பி! அருணாச்சலம், வடிவா விசாரிச்சனியேடா? வயசான காலத்தில இவர தனியாவிட எனக்குமனசு கேக்கெல்லை. நீ கூட போறதாலதான் விடுறன். இவருக்குப் பிள்ளையாரின்ர நினைவுதான் இப்பவாழ்க்கை. எப்பபார்த்தாலும் அவரைதனிக்க விட்டுட்டன் என்று கவலைப்படுறார். அந்த இறைவனுக்கே அழிவுவந்தாச்சு. இவரை அண்டைக்கு அங்க விட்டிருந்தா இண்டைக்கு இவரின்ர பிணத்தைக் காகம்தான் தின்னும், கடவுளே! நினைக்கவே தலையைச்சுத்துது. அவங்களின்ர குண்டு யாரைத்தான் விட்டது, ஆனா ஒண்டு பிள்ளையாருக்குமேல கைவச்சவங்கள் ஒருகாலமும் நிம்மதியாக இருக்கமாட்டாங்கள். சரஸ்வதியின் மனக்குமுறல் சாபமாக வெளிப்பட்டது.

மோட்டார் சைக்கிள் பயணம் வழிநெடுக ஆட்கள் இரண்டாம் கட்டையை நோக்கிப்போவதும் வருவதுமாக இருந்தனர். நிலைமை கொஞ்சம் அமைதியாகத் தோன்றும் சூழலில் தமது உடைமைகட்கு என்ன நடந்தது என்பதனை அறியும்ஆவலில் கண்முன்னே ஆபத்தை வைத்துக் கொண்டு அவர்கள் பயணிக்கின்றனர். ஆனால் எல்லோர் முகத்திலும் ஒருபயம், ஒரு அச்சம், ஒருகவலை, ஒரு ஏமாற்றம் இழப்பதற்கு இனி எதுவுமே இல்லை என்கின்ற வெறுமைபேச்சில் சிறுகச் சிறுகக் கட்டிய வீடுகள் எல்லாம் சின்னாபின்னமாகிப் போச்சே என்ற ஆதங்கம்.

காடும் பற்றையுமாய் கிடந்தபூமியை எங்கள் மூதாதையர் எத்தனைகாலம் கஷ்டப்பட்டு வெட்டி வெளியாக்கி கலப்பைபூட்டிப் பண்படுத்தி, விதைத்து நீர்ப்பாய்ச்சி காட்டுவிலங்குகட்குக் காவல் கிடந்து பெருக்கியசெல்வம் கடைகளாக, வீடுகளாக மாற்றம் கண்டது. குடிகள்பெருகின. இத்துணை வளர்ச்சிக்கு எத்தனை ஆண்டுகள் வியர்வை சிந்தினோம். எல்லாம் இன்று ஒரு நொடியில் ..... ஐயோ! எத்தனை கொடுமை. எங்கள் எதிரிக்குக்கூட இத்துணை துன்பம்வரவே கூடாது.

இரண்டாம் கட்டையை அண்மிக்க அண்மிக்க விக்னேஸ்வரர் மனமும் அடிப்பது வேகம் பிடித்தது. "தம்பி, முதலில பிள்ளையாரின்ர பக்கம் போவமே?'' விக்னேஸ்வரர் தனது ஆசையை வெளிப்படுத்தினார்.

"அண்ணை! பிள்ளையாரட்ட தான் முதலில போறன். எங்கட உயிர் அங்க இருக்குது. அவரைப்பார்க்காமாலே? அண்ணை! எனக்கு ஒரு நம்பிக்கை உந்த ஆட்கள் சொல்லுறது முழுக்க முழுக்க உண்மையா இராது. சனங்கள் ஒண்டு எண்ட முன்னம் அதை ஒன்பதாச் சொல்லுறதுகள் ....'' அருணாச்சலம் விக்கேஸ்வரரின் ஆசையை ஆமோதித்தான்.

"தம்பி! அங்கபாரடா! கோயிலைச்சுத்தின மரங்கள் எல்லாம் இலையில்லாம வெறும் கறுத்தத் தடிகளாகக் கிடக்குது"

''அண்ணை பதட்டப்படாதையுங்கோ. முதலில கிட்டப் போவம் பிறகு தானே எல்லாம் தெரியவரும். விக்னேஸ்ரரை அமைதிப்படுத்த அருணாச்சலம் முயன்றான்.

"தம்பி, எனக்கு விளங்கீட்டுது. சனங்கள் சொன்னது பொய்யில்ல. எங்கட பிள்ளையார் கோயில் ... அங்கபார்! கோபுரத்தைக் காணேல்ல ......"

''அண்ணை நம்பிக்கையை

கைவிடாதைங்கோ. எதுவந்தாலும் பிள்ளையார் அப்படியே இருப்பார் எண்டு எங்களுக்கு எல்லாம் தெம்பூட்டின நீங்களே இப்படி....?

மோட்டார் சைக்கிள் தனது ஓலத்தைக் கோயிலின் முன் நிறுத்தியது. விக்னேஸ்வரருக்கும் அருணாச்சலத்திற்கும் கண்ணில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. விக்னேஸ்வரர் அருணாச்சலத்தின் தோளைப்பற்றிக் கொண்டார்.

"விக்னேசண்ண, எல்லாம் முடிஞ்சுபோச்சு, எங்கடபிள்ளையார் எங்களை விட்டுட்டுப் போட்டார்."

ஒரு பெரிய கல்லுக்கும்பி குவித்து விட்டது போல் கோபுரம் இடிந்து கிடந்தது. அவ்விடிபாடுகட்கு அப்பால்' உள்ளே எதுவுமே தெரியவில்லை. இடிபாடுகளைத் தாண்டி வீதியைச் சுற்றினர். உயர்ந்த சுற்றுமதில் இன்னும் அப்படியே நிலைத்திருந்தது. எங்கும் சன்னங்கள் புள்ளடி போட்டிருந்தன. வெளிவீதியில் பல பெரும் குழிகள் காணப்பட்டன. அத்தனை பெரும் குண்டுகட்கு மத்தியிலும் வெளிப்புற சுற்றுமதில் நிலைத்திருந்தது அதிசயம்தான். உள்வீதிக் கோப்பிசமரங்கள் தகரங்கள் சின்னாபின்னமாகித் தாறுமாறாக நிலைகுலைந்து போயிருந்தன. "தம்பி, உள்ளுக்குப் போய்ப்பார்ப்பமே, வடக்கு வீதிக் கதவு திறந்துதான் இருந்தது. அதன்வழியே உள்சென்றவர்கட்டு மேலும் அதிர்ச்சிகள் காத்துக்கிடந்தன. எல்லாம் இடிந்து துவைந்து போய்க்கிடந்தன. அவற்றை எல்லாம் தாண்டி முன்னேறினர். "தம்பி, அங்கபாரடா"...... விக்னேஸ்வரருக்கும் அருணாச்சலத்தாருக்கும் தங்கள் கண்களை நம்பமுடியவில்லை. மூலஸ்தானம் சிதைவு ஏதும் இன்றி இருந்தது. ஆனால் மூலஸ்தானக் கதவு உடைக்கப்பட்டிருந்தது. இத்தனை சேதம் விளைந்தபோது ஏற்பட்ட அதிர்வாலேயே அது திறந்திருக்க வேண்டும். மூலஸ்தானத்தை நெருங்கிக்கதவைத் திறந்த விக்னேஸ்வரருக்கு தன்னையே நம்பமுடியவில்லை "தான்பார்ப்பது நிஜமா....?" அங்கே பிள்ளையார் அழகாக வெள்ளி அங்கி அணிந்து அன்று மலர்ந்த பூக்கள் சூடி அழகாய்க் காட்சிதந்தார். விக்னேஸ்வரரும் அருணாச்சலத்தாரும் இருகரம்கூப்பி வணங்கினர்.

"பிள்ளையாரப்பா! நீங்கள் இன்னும் எங்களோட தான். எல்லாம் இழந்து போனம். உங்களையும் இழந்திட்டோம் எண்டு கலங்கினம் அப்பா. இப்பதான் நிம்மதி..... பிள்ளையாரப்பா! எப்பப்பா இந்தக் கொடுமைகள் நீங்கி மீண்டும் உன்ரவீதியில நாங்கள் ஆனந்தமாகக் கூடுறது" அவர்கள் பிரார்த்தித்து நின்றனர்.

"கவலைப்படாதைங்கோ. எல்லாம் நல்லபடியா நடக்கும் குரல்வந்ததிசையை நோக்கினர். குருக்கள் அங்கே நின்றிருந்தார். "ஐயா நீங்கள்...."

"நான் பெஞ்சாதி பிள்ளையளை விசுவமடுவில விட்டுட்டு அண்டைக்கே வந்திட்டன். நானும் பிள்ளையாரும் தான் இங்க இத்தனை அநியாயங்களையும் தாங்கிக் கொண்டு இருக்கிறம். பிள்ளையாரை யாரும் அசைக்கமுடியல்ல. எத்தனை தடவை மழைமாதிரிப் பொழிஞ்சவங்கள். எத்தனை அதிர்வுகள் என்றவாழ்க்கையில இதைப் போல ஒரு அனுபவம் இதுவரை கிடைச்சதே இல்ல. ஆனா, பிள்ளையாரப்பாவின்ர பாதமே தஞ்சம் எண்டு கிடந்தன். மூண்டு நாள் மூலஸ்தானத்துக்குள்ள அவரின்ரகாலில தான் பணிந்துகிடந்தன். அண்டைக்கு மார்கண்டேயருக்கு அருளினார் சிவபெருமான். இண்டைக்கு என்னைக் காப்பத்திப்போட்டார் அப்பன்"

குருக்கள் நடந்து முடிந்த பயங்கரமான அந்த அனுபவத்தைக் கூற இருவரும் மெய்சிலிர்த்து நின்றனர்.

முற்றும்.

(எத்தனை எத்தனை திருத்தலங்கள் அழிந்து போயின ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதை சொல்லும்.)

# இலங்கை ஒரு பௌத்த நாடா? அன்றேல் சர்வமத நாடா?

அ. பிரேமலிங்கம் - பயிலுனர் ஆண்டு

மதம் அல்லது சமயம் என வழங்கப்படும் பதம் தற்போதைய காலகட்டத்தில் பலராலும் துர்பிரயோகம் செய்யப்படுவதனை அவதானிக்க முடிகிறது. மத அது உணர்த்தும் அதி உன்னத கருததும் இவ்வுலக மக்களை நல்வழிப்படுத்தவும் கட்டுக்கோப்புடன் வாழவைக்கவும் பல்வேறு நடபடிமுறைகளை மதத்தை போதிக்கும் மதபிரசாரகர்கள் பின்பற்றி அதி சிறந்த சேவை செய்து வருகின்றனர். அவ்வாறான மத பிரசாரகர்களை சமூகமும் உலகமும் போற்றி தலை வணங்கும் அதேவேளை, அவர்களும் தம்பணியை செவ்வனே செய்ய வலியுறுத்தப்படுகின்றனர். (இதனகத்து பின் மதபிரசாரகர் என்பது மதத்தை போதிக்கும் துறவிகள், பிக்குகள், ஞானிகள், மௌலவிகள் என்ற கருத்தில் பயன்படுத்தப்படும்)

தற்கால நவீன உலகில் பல்வேறு மத சார்பு கொள்கைகளை மக்கள் பின்பற்றுகின்றனர். அவ்வாறான வேறுபட்ட மதசார்பு கொள்கைகளை மக்கள் பின்பற்றினாலும் இறைவன் ஒருவனே என்ற கொள்கையை ஏற்க முன் வருகின்றனர். யாவருக்கும் தலையாய இறைவன் இவ்வுலகை படைக்கும் போது, தன்னை மக்கள் நெருங்க வழிவகுக்குமுகமாக பல இறைதூதர்களை உலகிற்கு அனுப்பி சமய கொள்கைகளை பரப்ப விளையும் வேளையில், தலையாய இறைவனால் அனுப்பப்பட்ட இறை தூதர்கள் தமதுசமய போதனைகளைச் செய்யும் முகமாக வேறுபட்ட மதப் பிரிவுகட்கு தலைமை தாங்கத் தொடங்கினர். இவ்வாறாக உலகில் பல்வேறு மதப்பிரிவுகள் தோன்ற வழிவகுத்தன.

முழு உலகையையும் ஆராயுமிடத்து இயேசுகிறிஸ்துவை பின்பற்றும் மக்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும் மற்ற மதங்களும் இவ்வுலகில் செல்வாக்கு செலுத்துவதை நோக்கலாம்.

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இருந்தே மதத்தை பரப்ப அவர் முயன்ற போது, அவரது மதப்போதனைகளை அரசியல் ரீதியாக அவரது எதிரிகள் நோக்கினர். விளைவு எவ்வித குற்றமும் செய்யாத இயேசுபிரானை சிலுவையில் அறைந்து கொன்றனர். பின் அவர் உயிர்த்தெழுந்து உலகின் அநேக மக்களின் கடவுள் என போற்றப் படுகின்றார்.

இது போன்றே அல்லாவின் போதனைகளை உலகிற்கு பரப்ப அவரது இறை தூதராக அனுப்பப்பட்ட முகமது நபி பெருமானார், மக்காவுக்கும், மதினாவுக்குமாக அவரது அரசியல் எதிரிகளால் அலைக்கழிக்கப்பட்டார்.

அவ்வாறே எமது சமய குரவர்களும் பல சந்தர்ப்பங்களில் அவர்களது மத போதனைகளை முன்னெடுத்து செல்லும் வேளையில் மக்களாலும், அரசர்களாலும் தண்டிக்கப்பட்டனர். அப்பர் என அழைக்கப்படும் திருநாவுக்கரசர். சமணர்களின் அரச சபையிலே ஊழியராக வேலை செய்ய வேண்டிய கட்டத்தில் சமண மதத்திற்கு மாற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் அதிர்ச்சியுற்ற அவரது சகோதரி திலகவதியாரின் வேண்டுதலால் அப்பருக்கு சூலை நோய் ஏற்பட இறைவன் வழிவகுத்தான். சூலை நோயால் அவதியுற்ற அப்பர் சிவாலயம் சென்று "கூற்றாயினவாறு விலக்ககவீர்" என்ற தேவாரம் பாடி சூலை நோய் நீங்கப்பெற்று, மீண்டும்

சிவத்தொண்டன் ஆனார். இதனை பொறுக்க முடியாத சமண அரசன் அப்பரைக் கடும் துன்பத்திற்கு உள்ளாக்கினான். அப்பர் தனது இறைபக்தியால் அத்துன்பத்தை கடந்து, முற்றுமுழுதாக சமணர்களிடம் இருந்து விடுதலை பெற்று சைவத்தை வளர்க்கப்புறப்பட்டார்.

அவ்வாறே திருவாதவூரராக இருந்த மாணிக்கவாசகரும் பாண்டியனின் அரச சபையில் அமைச்சராக இருந்தவர். அவரது இறைபக்தியால் அரசனால் இழைக்கப்பட்ட துன்பங்களை எல்லாம் பொறுத்து சைவம் வளர்க்க புறப்பட்டார்.

இவ்வாறு இறைவனால் தமது தூதராக அனுப்பப்பட்ட இறை தூதர்கள் செய்யும் மதபோதனை பல கலவரங்களை மக்களிடையே தோற்றுவித்தன என்றால் அது மிகையாகாது.

இந்து சமுத்திரத்தின் முத்தாகிய இலங்கையை நோக்குவோமாயின், இங்கு பாரம்பரியமாக நான்கு வேறுபட்ட சமயங்களை இந்நாட்டு மக்கள் பின்பற்றுவதைக் காணலாம். இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய வற்றை பிரதானமாகக் குறிப்பிடலாம். இந்து மதத்தில் ஆறு உபமதப்பிரிவுகள் உண்டு, அவ்வாறே கிறிஸ்தவ மதத்தில் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து என மதப் பிரிவுகள் உண்டு. மேலும் இஸ்லாமிய மதத்தவர்கள் சியா, சுணி மதப்பிரிவுகளை பின்பற்றுகின்றனர். மேலோட்டமாக இலங்கையில் நான்கு பெரிய மதப்பிரிவுகள் உண்டு எனலாம்.

இந்நான்கு மதப்பிரிவுகளின் வரலாற்றையும், இலங்கையில் அது நுழைந்த காலப்பகுதியையும் ஆராய்தல் இவ்விடத்தில் பொருத்தமாகும். ஆதியும் அந்தமும் இல்லாத இந்து சமயத்தை தோற்றுவித்தவர்கள் யார்? என்பது இதுவரையில் அறியாத நிலையில் இராமன் வாழ்ந்த காலப்பகு தியிலேயே இலங்கையில் இந்துமதம்/சைவமதம் தழைத்தோங்கி பெருவளர்ச்சி கண்டதைக் காணலாம். கி.மு. 13-12 நூற்றாண்டு காலப் பகுதியிலேயே இராம-இராவண யுத்தம் இடம் பெற்றதாகவும், எனவே அக்காலப்பகுதியில் இலங்கையில் சைவமதம் பின்பற்றப்பட்டது என்பதற்கான ஆதாரபூர்வ சான்றுடன் நிருபிக்க முடிகிறது.

இராவணன் ஒரு சிவபக்தன் சிவனை இசையால் மயக்கிய ஒரு உன்னத புருஷன். அவன் ஆட்சியில் இருந்த இலங்கையும், இலங்கை மக்களும் சைவத்தை அக்காலத்தில் இருந்தே பின்பற்றினர். இராமரும் இந்து கடவுளாகவே போற்றப்படுகின்றார். இராவணனும், இலங்கை மக்களும் அரக்கர் குலமாக இருந்தாலும், அவர்கள் சைவப்பழம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்பின் கி.மு. 4ம் நூற்றாண்டில் இந்தியாவில் கலிங்கத்துப்போர் இடம் பெற்றது. நாடுகளை கைப்பற்றி ஆளவேண்டும் என்ற தீராத ஆசை கொண்ட மன்னன் அசோகன். இப்போரின் பின் பௌத்தனாக மாறி தனது மகன் மகிந்தனை இலங்கைக்கு அனுப்பிவைத்துப் பௌத்த மதத்தை பரப்ப ஊக்குவித்தான்.

15ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரேபியர்கள் இலங்கைக்கும் ஏனைய தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், வியாபார நோக்கமாக வர ஆரம்பித்தனர். அவர்கள் இலங்கைக்கு வந்து இலங்கைத் தமிழ் சிங்கள பெண்களை திருமணம் செய்து ஒரு இஸ்லாமிய மதப்பிரிவை உருவாக்கிச் சென்றனர்.

15ம் நூற்றாண்டின் பின் அடுத்தடுத்து இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி பீடம் ஏறிய மேற்கத்தையர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர், இந்த நாட்டை ஆண்டாலும் தமது அதிமுக்கிய நோக்கமான கிறிஸ்தவ மதத்தை பரப்பும் வேலைகளில் ஈடுபட்டனர். இதனால் பல தமிழர்களும் சிங்களவர்களும் கிறிஸ்தவர்களாக தொழிலுக்காக மதம்மாற்றப்பட்டனர். இந்த

கூட்டத்துள் தம்மை சிங்கள பௌத்தர் என சொல்லி கொள்ளும் எமது முன்னாள் பிரதமர் ஒருவரின் தந்தையாரும் அடங்குவார். அவர் தனது பெயரையும் ஆங்கிலேய மோகத்தின் பேரில் மாற்றி இலங்கைக்கு "பெருமை" சேர்த்தார்.

வரலாற்று நோக்கின்படியும், வரலாற்று ஆசிரியரின் எண்ணத்தின் படியும், கைவசம் உள்ள ஆவணத்தின் நிருபணம் மூலமும் சைவ சமயமே இலங்கையின் ஆதி மதமாகும். என்பது எமது தாழ்மையான கருத்தாகும்.

இலங்கையின் தற்போதைய நிலையில் இலங்கையின் அதி வலுவான மதமாக பௌத்தமதம் அரசியலமைப்பு அந்தஸ்து பெற்றுள்ளது. இலங்கை குடியரசு பௌத்த மதத்தையும், பௌத்த சாசனத்தையும் பாதுகாக்கும் கடமைப்பாடு உடையது என அரசியலமைப்பில் ஏற்பாடு உண்டு, அவ்வாறே ஏனைய மதத்தினரும் அவர்களுக்கு விரும்பிய மதத்தை பின்பற்றும் உரிமை உண்டு என்றும், ஆனால் அவரசகால நிலையின் கீழ் இவ்வுரிமை கட்டுப்படுத்தப்படும் என அரசியலமைப்பு கூறுகிறது.

அரசியலமைப்பு ரீதியாக குறித்த ஒரு மதம் முன்னிலைப்படுத்தப்படும் ஏற்பாடு எமது நாடு போன்ற சிறியநாட்டுக்கு ஏற்றதா? இதற்கு பதில் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

அரசியலமைப்பில் பௌத்த மதம் முன்னிலைப்படுத்தப்படும் போது இலங்கையின் அரசியல் அரங்கில் பௌத்த மத பிரசாரகர்கள் என கூறிக்கொள்ளும் பிக்குகள் உள்நுழைய ஏதுவாகின்றது. ஏறத்தாழ நூறுவித பௌத்த பிக்குகள் இனரீதியாக எல்லாவற்றையும் நோக்கும் நிலையில் உள்ளனர். அவர்களின் கைப்பொம் மையாக இலங்கையின் அதிகாரம் பெற்ற அரசியலாளர்கள் காணப்படுகின்றனர். அரசிய லாளர்களும் குறித்த பெரும் பான்மை பிக்குகளின் நோக்குக்கு அமைய எண்ணிக்கையில் சிறுபான்மையான மத மக்களை கொச்சைப்படுத்தும் தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். அவ்வாறான தீர்மானத்தை எடுத்த கடந்த கால ஆட்சியாளர்களால் தூபமிடப்பட்டு இந்த ஆட்சியாளரால் முன்னெடுத்து செல்லப்படும் யுத்தத்தை நிறுத்தும் வழிவகைகளை குறித்த பிக்குகள் கூறத்தவறியுள்ளனர். இந்த யுத்தம் ஒருவகையில் அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு முதன்மை ஸ்தானம் வழங்கியதால் ஏற்பட்டது எனக்கொள்ளலாம். அசியலமைப்பின் பிரகாரம், பௌத்த சாசனத்திற்கும் குடியரசிற்கும் எத் தொடர்பும் இல்லை எனில் பௌத்த பிக்குகள் தனிமைப்படுத்தப்படுவர். அவர்களை பின்பற்றும் ஏனையோரும் அவர்களை விட்டு விலகுவர். ஆட்சியாளர்கள் சுயாதின தீர்மானத்தை எடுக்க ஏதுவாகும். ஆட்சியாளர்கள் பாராளுமன்றத்திற்குப் பதில் சொல்லும் கடமைமட்டும் உடையவர்களாக விளங்கும் வேளையில், தற்போதைய ஆட்சியாளர் எந்தமுடிவு எடுத்தாலும் அதனை அஸ்கிரிய, மலவத்த பீடாதிபதிகட்கு அறிவித்தே நடைமுறைப்படுத்துவதை காண்கின்றோம் இது இலங்கையின் ஜனநாயகத்துக்கு நன்றல்ல எனலாம்.

இலங்கை ஒரு பௌத்த நாடா? உண்மையில் பௌத்த மதத்தின் ஊற்றுக் கூட இந்து மதத்தில் இருந்து தோன்றியது எனலாம். சித்தார்த்தன் எனப்படும் புத்தர், இந்துவாக இருந்து சுகபோக வாழ்வில் திளைத்து இருந்து, பின் துறவி ஆனார். அத்துறவியே பௌத்த மதக் கோட்பாட்டைத் தோற்றுவித்தார்.

பௌத்த மதத்தை பின்பற்றுவோர் எண்ணிக்கையில் கூடினாலும், இலங்கை பௌத்த நாடு எனச்சொல்லும் கூற்று ஏற்றுகொள் ளப்படமுடியாது. புத்தர் பிறந்த புத்தகாயா பகுதியிலும் அதன் வடக்கே அமைந்த நேபாளத்திலும், இந்துமதம் செங்கோலாச்சும் அதேவேளை பௌத்த மதத்தை வாங்கிக் கொண்ட நாடான இலங்கை ஒரு பௌத்த நாடு

என்பதை ஏற்றுகொள்ள முடியாதிருக்கிறது.

இலங்கை ஒரு மத சார்பற்ற சர்வமதநாடு என்பதே சரியான முடிவாகும். அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு அளிக்கப்பட்ட அதி உன்னத இடம் நீக்கப்படவேண்டும். அன்றேல் ஏனைய மூன்று மதத்திற்கும் அரசியலமைப்பில் சமமான இடம் தரப்படவேண்டும். பௌத்த மதமும் இந்து மதமும் ஒரே கலாச்சாரத்தையே உணர்த்து கின்றன. பஞ்சமாபாதகம், பசுக்கொலை என்பவற்றை இரு மதமும் கண்டிக்கின்றன. ஒரே கலாச்சாரத்தையும் கொள்கையையும் உணர்த்தும் இம் மதங்களில் ஏற்றத்தாழ்வு என்பது கிடையாது மக்கள் தொகை அடிப்படையில் மதத்தை வேறுபடுத்தி பார்ப்பது வெறுக்கத்தக்கது.

கட்டுரை ஆசிரியரின் சொந்த கருத்தின்படி இலங்கையில் குறித்த நான்கு மதங்களும் சமவுரிமை பெற்று விளங்க வேண்டும். கட்டுரை அசிரியர் அவதானிப்பு ஒன்றின்படி கொழும்பில் வெள்ளவத்தை மயூராவீதியில் நான்கு மதமும் ஒன்று சேரும் அதி உன்னத சூழ்நிலை காணப்படுகிறது. இவ்வீதியில் மயூராபதி அம்மன் கோயிலும், அதற்கு சற்று தள்ளி பள்ளிவாசல் ஒன்றும், அதற்கும் அப்பால் தேவாலயம் ஒன்றும், மயூராவீதி முன்றலில் தியான நிலையில் இருக்கும் புத்தரின் சிலையும் ஒருங்கே அமைந்திருப்பது, சர்வமதங்களும் ஒருங்கிணைய ஏதுவாகின்றது.

பௌத்த பேரினவாதிகளின் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்தே ஆகவேண்டும் அதாவது கொழும்பில் தமிழர்கள் தமது எண்ணத்திற்கு இந்து ஆலயம் அமைக்க முடிகிறது. ஆனால் சிங்களவர் யாழ்ப்பாணத்தில் அவ்வாறு புத்தகோவில் அமைக்க முடியவில்லையே? என்பது ஒரு ஆதங்கம். கொழும்பில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் தாமாக கொள்வனவு செய்த நிலத்தில் குடியேறிய பின்பு, தமது இஷ்ட தெய்வத்தை வழிபட கோயில் அமைக்கின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் நிலைமை வேறு, குடியேற்றம் என்ற நோக்கோடு தாதுகோபம் அமைக்கப்படும். பின் அக்கோயிலை சுற்றி தமிழ்மக்கள் வெளியேற்றப்பட்டு பலாத்காரமாக குடியேற்றம் நிகழும். இங்கு தமிழ்மக்கள் தமது நிம்மதிக்காக கோயில் கட்டுகின்றனர். அங்கு தமிழ் மக்களின் நிம்மதியை குலைக்க ஏனையோர் தாதுகோபம் கட்டுகின்றனர். இங்கு இந்து கோயில் கட்டுவதால் பௌத்த மக்களின் வழிபாட்டு உரிமைக்கு எவ் ஆபத்தும் கிடையாது, ஆனால் அங்கு தாதுகோபம் அமைத்தால் தமிழ் மக்களின் வாழ்வுரிமையே கேள்விக்கு உள்ளாகும். இந்த தாற்பரியத்தை சகலரும் விளங்கிக் கொள்ளவேண்டும். எந்த ஒரு பின்னோக்கிய திட்டமும் இன்றி தமது தேவைக்கு யாழ்ப்பாணத்தில் புத்தகோயில் அமைப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது. தற்போது அங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் தமது சமய கடமையைப் பூர்த்தி செய்ய புத்தர் சிலைகளை எழுப்பி உள்ளனர். அதனை தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை.

பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொண்டால், பௌத்தர்கள் செய்யும் அட்டகாசத்தையும் ஏற்றுக் கொள்வதாக முடியு.ம் யாழில் சென்.பிற்றர்ஸ் தேவாலயம் அழிக்கப்பட்டது, செல்வச்சந்நதி முருகனுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், சிவராத்திரி ஹஜ்ஜுப் பெருநாளை வேலைநாள் ஆக்கியமை என்பது ஏனைய மதத்திற்கு எதிரான தான்தோன்றித்தனமான முடிவுகள் ஆகும்.

எனவே இயற்கைச் செல்வம் பூத்துக் குலுங்கும் எமது நாட்டில் இடம் பெறும் அர்த்தமற்ற யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, இலங்கை பௌத்தநாடு அல்ல என்றும் இது சர்வமத வழிபாடு இடம்பெறும் அமைதி குடிகொள்ளும் நாடாக விளங்க எல்லாம் வல்ல இறைவனை பிராத்திப்போமாக.

# இந்துமதம் நிறுவனமயப்படுத்தப் படவேண்டியதன் அவசியம்

**சு. நிலக்ஷன் – இறுதியாண்டு**

இருபத்தோராம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்க இன்னும் விரல்விட்டு எண்ணக்கூடிய நாட்களே இருக்கின்ற வேளையில், புதிய நூற்றாண்டின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் எமது சமயம் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டியது அவசிய மாகும். காலத்தால் அழியாத மதம், ஆரம்பமே தெரியாத மதம் என்றெல்லாம் எமது மதத்தின் பெருமைகளை மட்டும் பேசிக் கொண்டு நாம் வளாவிருக்க முடியாது! எமது மதத்தின் விசேட அம்சங்களையிட்டு நாம் பெருமை கொள்ளத்தான் வேண்டும். அதை மறுப்பதற்கில்லை. ஆயின், எதிர்வருங்காலத்தில் அப் பெருமைகள் நிலைநிறு த்தப்படவும் எம் மதத்தைப் பினபற்றுபவர்கள் சுதந்திரமாகவும் அச்சுறுத்தல்களேதுமின்றியும் தம் வாழ்வை முன்னெடுத்துச் செல்லவும் கூடிய நடவடிக்கைளை ஒவ்வொரு இந்துக் குடிமகனும் மேற்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.

இன்றைய நிலையில் பொதுவாக உலகளாவிய ரீதியிலும் குறிப்பாக இலங்கையிலும் பல்வேறு காரணிகளால் இந்து மத கலாச்சார விழுமியங்கள் சிதைக்கப் படுவதுடன் சுதந்திரமான வழிபாட்டுரிமையும் தடுக்கப்பட்டு வருவது நாமறிந்ததே! மேலைத்தேய நாகரிக மோகமும் ஊடுருவலும் எமது பண்பாட்டு கோலங்கள் சிதைந்து செல்வதற்குக் காரணமாக இருப்பதாகப் பலரும் விசனந் தெரிவிக்கின்றனர். இது உலகளாவிய ரீதியில் இந்து மதம் எதிர்நோக்கும் அச்சுறுத்தலின் ஒரு தோற்றப்பாடு.

இலங்கையைப் பொறுத்தளவில், இனவாத மதவாத சக்திகளால் முடுக்கிவிடப்பட்டுள்ள யுத்த நடவடிக்கைகளால் இந்து மக்கள் பெரும் அவலங்களையும் அச்சுறுத்தல்களையும் சந்தித்து வருகின்றனர். விருந்தோம்பி வேளாண்மை செய்தற்காய் இருந்தோம்பிய இந்துப் பெருமக்கள், இன்று ஒரு வேளைச் சோற்றுக்கு வழியின்றி அகதிகளாயும் பஞ்சப்பராரிகளாயும் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இத் தொடர்ச்சியான அவலங்கள் காரணமாகச் சிறிது சிறிதாக அவர்களது மனவுறுதி குலைக்கப்பட்டு, மத நம்பிக்கையும் சிதைக்கப்படுகின்றது.

இக்கட்டான இக்காலகட்டத்தில், எமது மக்களின் மனவுறுதி தளராது பேணப் படவும் வளர்த்தெடுக்கப்படவும் இந்து மதத்தை ஒரு நிறுவனப் படுத்தப்பட்ட முறையினூடு செல்ல வைக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாக எம்மீது திணிக்கப்பட்டுள்ள ஒரு பெரும்பணியாக இருக்கின்றது.

விமர்சனங்களை விருப்புடன் ஏற்றுக் கருத்துச் சுதந்திரத்திற்குப் பூரண இடமளித்து குறிப்பாகக் கூறுவதானால் விமர்சனங்களாலேயே வரையறையற்ற வளர்ச்சி கண்டு ஆழமாக வேரூன்றியுள்ள இந்துமதம், ஏனையோரின் கருத்துச்சாடல்களாலும் கண்டனங்களாலும் ஒரு போதும் பாதிக்கப்படப் போவதில்லை. ஆயின், இத் துணிவால், எமது இந்துச் சகோதரர்கள் படும் இன்னல்களையும் அச்சுறுத்தல்களையும் நாம் கருத்திற் கொள்ளாதிருக்க முடியாது.

இன்று இலங்கையின் வட கிழக்குப் பகுதிகளில் தொடர்ச்சியான யுத்தத்தால் இந்துக் கோவில்கள் பல முற்றாகவும் பகுதியாகவும் அழிக்கப்பட்டுள்ளன. ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக அல்லற் படுகின்றனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்து சமயிகளை மதமாற்றஞ் செய்யும் கைங்கரியங்களும் நடைபெறுவதாகப் பலரும் கவலை தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் பழம்பெரும் முருகன் ஆலயங்களில் ஒன்றான மாவைக் கந்தன் ஆலயப் பிரதம குரு மகாராஜா ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் இது குறித்து எழுதியிருந்த சில கருத்துக்களை இவ்விடயத்தில் கூறுதல் பொருத்தம்.

"கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பழமையான ஆலயங்களை இடித்தும் சேதமாக்கியும் அங்குள்ள பொருட்களைத் திருடியும் தமது வருவாயைப் பெருக்கிக் கொள்வதுடன் எமது சமய நம்பிக்கைகளை மக்கள் மனதிலிருந்து அகற்றுவதும் சமய ஊடுருவல் புரிவோரது சித்தமாயிருக்கின்றது. ஒரு பகுதியினர் இவ்வாறு ஆலயங்களை அழித்து

மக்களை மனந்தளர வைத்துக் கொண்டிருக்க, மறுபுறம் பிறிதொரு சாரார் அகதி நிவாரணமென ஓர் பிடிஅரிசியையும் பத்து கிராம் பருப்பையுயம் கால் லீற்றர் மண்ணெண்ணெயையும் கொடுத்து ஏழைகளைத் தம்பால் ஈர்த்துத் தமது மதச் செல்வாக்கை விரிவுபடுத்தித் தமது ஈனத்தனத் தைக் காண்பித்துக் கொண்டிருக் கிறார்கள். வீடு வீடாகச் சென்று வலுக்கட்டா யமாகப் பிரசுரங் களைக் கொடுத்து பிரசங்கமும் செய்து வருவதைப் பொறுமையுடன் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். இதுவும் ஒரு வகை அழிப்பு வேலைதான்''

இவ்வாறு இந்து மக்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களைக் கவலையுடன் மாவையாதீனகர்த்தா எடுத்துரைத்திருக்கிறார்.

எம்மக்கள் இலகுவில் மதமாற்றத்திற் குட்படக் காரணம் என்ன? வறுமை தான் காரணமா? இல்லை - ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் இந்து மதத்தின் போதனைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லாமையும் இந்து சமய அமைப்புகள் ஒன்றுபட்டு நிறுவனப்படுத் தப்பட்ட முறையில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்காமையுமே இதற்கான காரணமாகும்.

அண்மையில் இலங்கை வந்திருந்த 'விஸ்வ இந்து பரிஷத்' அமைப்பின் அகில இந்தியப் பிரதிநிதிகளுடன் உரையாடுகையில் அவர்கள் எழுப்பிய கேள்வி இதனை வலியுறுத்துவதாக உள்ளது. "வறுமையினாலும் வசதியின்மை யினாலும் தான் இந்துக்கள் இலகுவில் மதம்மாற்றப் படுவதாகக் கூறுகின்றீர்கள். அவ்வாறானால் மிகுந்த கீழ் நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு இஸ்லாமியரை எவராவது மதமாற்றத்திற குட்படுத்த முடியுமா?" என்று கேள்வியெழுப்பிய அவர்கள், "எமது இந்து சமயிகள் மனவுறுதியற் றவர்களாகவும் மதத்தில் ஆழ்ந்த பற்றுக் கொள்ளாதவர்களாயிருப்பதுமே அவர்கள் இலகுவில் மதம் மாறிச் செல்லக் காரணமாயிருக் கிறது எனக் குறிப்பிட்டனர்.

அப்படியாயின் தவறு எங்கே? வெறுமனே தத்துவம் பேசுவதிலும் பிரசங்கம் செய்வதிலும் ஆலயங்களில் அலங்காரமாகத் திருவிழாக்கள் கொண்டாடுவதிலும் அக்கறை செலுத்தும் நாம், வறுமையில் வாடும் எம் சகோதரர்களைக் கருத்திலெடுக்கின்றோமா? உருப்படியான செயற்திட்டங்களை முன்னெடுக்க எம்மிடம் நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புமுறை உள்ளதா? கிராமந்தோறும் இன்னலுக்குட் படுவோர்களது விபரங்கள் அனைத்தையும் திரட்டி அவர்களுக்குரிய உதவிகளைச் செய்யக் கூடிய வல்லமையுடைய அமைப்பு முறை ஏதேனும் எம்மிடம் உள்ளதா? இந்து சமயிகளான நாங்கள் வெறுமனே ஒரு "சாமியார் மதமாக" இதனைப் பேணாமல், "சமூகத்துடன் ஒன்றிய மதமாக" மாற்றுதல் வேண்டும், எம்மவர்களின் இன்னல் களைத் தீர்ப்பதில் நாம் ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்தால், அடுத்தவர் கரங்களை அவர்கள் எதிர்பார்க்கும் நிலை உருவாகா தல்லவா?

எமது புராதன ஆலயங்கள் பலவும் இன்று பக்தர்களினால் அணுகமுடியாதபடி, ஆயுதப்படை யினரின் கட்டுப்பாட்டில் அதி தீவிர பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பாக எழுச்சியுடன் குரல் கொடுக்கவல்ல, சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்த்துத் தாக்கத்தை ஏற்படுத்தவல்ல அமைப்புமுறை எம்மிடம் உள்ளதா? அண்மையில் வன்னிப் பகுதியில் உள்ள மடுமாதா தேவாலயத்தை ஆயுதப்படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தாலும், புனிதப் பிரதேசமான அவ் ஆலயச் சூழலிலிருந்து ஆயுதந் தாங்கியவர்கள் விலத்திக் கொள்ளப் படவேண்டும் என்று வத்திக் கானிலிருந்து கூடக் குரல் எழுப்பப்பட்டமை யாமறிந்தது. இவ்விடயத்தில் இன வேறுபாடின்றி அத்தனை கத்தோலிக்க ஆயர்களும் உறுதியாகத் தமது கோரிக்கையில் பிடிவாதமாக நின்றார்களே! அவ்விதம் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்கும் மனோநிலை எம்மவரிடம் உள்ளதா? குறைந்த பட்சம் அண்டையயல் நாடுகளிலுள்ள அழுத்தங் கொடுக்கவல்ல இந்துத் தலைவர்கள், அமைப்புக்களின் கவனத்தையாவது ஈர்த்திட எம்மால் முடிந்ததா? துணிகரமாக உண்மை நிலைவரத்தை எடுத்துக் கூறிய இந்துக்கள் படும் அவலங்களை வெளிக்கொணரும் வல்லமை மிகு சக்தி ஏதேனும் எம்மிடம் உண்டா? இது குறித்து அண்மையில் மாவட்ட நீதவான் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் "இந்துக்களிடம் நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பு முறை இல்லாமையே இத்தகைய இயலாமைகளுக்கு முக்கிய காரணமாக உள்ளது'' எனக் கூறியமை குறிப்பிடத்தக்கது.

காசி விஸ்வநாத ஸ்வாமியை முன்வை த்துக் காசி இந்துப் பல்கலைக் கழகத்தை

நிறுவிய பண்டித மாளவியாவின் கருத்துக்களும் இவ்விடத்தில் மனங்கொள்ளத் தக்கவை

''மனித வர்க்கத்தோடு இந்து கலாசாரத்திற்கும் மதத்திற்கும் ஆபத்து வந்து விட்டது. இந்து மக்கள் அனைவரும் ஒரு முகமாக ஐக்கியப்பட்டுக் கிடைக்கக் கூடிய உதவிகள், சகாயங்கள் மூலம் தற்காப்புச் செய்து கொள்வதோடு சுய உரிமைகளையும் நிலைபெறச் செய்ய வேண்டும். அவரசமாகவும் அவசியமாகவும் இது நிச்சயம் செய்யப்பட்டு ஒழுங்காற்றப்படல் வேண்டும்.''

என்றோ எழுந்து விட்ட மேற்சொன்ன பண்டித மாளவியாவின் கருத்துக்கு இன்னும் வடிவங் கொடுக்கப்படவில்லை. இந்துக்கள் இந் நாட்டில் காலகாலமாக அனுபவித்து வந்த சிவராத்திரி விடுமுறை தினம், சில ஆண்டுகளுக்கு முன்னர் இரத்துச் செய்யப்பட்டது. இது தொடர்பில் ஒவ்வொரு அமைப்புக்களும் அரசியல் தலைவர்களும் பத்திரிகைகளுக்கு அறிக்கை அனுப்பவும் ஜனாதிபதிக்குத் தந்தி அனுப்பவும் முடிந்ததே தவிர இழந்த உரிமைகளை மீளப்பெற முடியவில்லை. அரசியலமைப்பு ரீதியாக ஓரிடத்தில் சகல மதங்களுக்கும் சமவுரிமை உண்டென்று உறுதிப்படுத்தப் பட்டிருந்தாலும், பௌத்த மதத்திற்கு மேலாண்மை வழங்கும் உறுப்புரிமையும் காணப்படுகிறது. இதனால் இந்துக்கள் இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கணிக்கப்படுகின்றார்கள் என்பதும் தெளிவு. இவற்றையெல்லாம் எடுத்துக் கூறி எமது நிலையை உலக மக்களுக்குத் தெளிவு படுத்துவதற்காகவும் நிறுவனமயப்படுத்தப் பட்ட அமைப்பு முறை அவசியமாக வேண்டப் படுகின்றது. அண்மையில் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்குப் பகுதியை இராணுவத் தேவைகளுக்காகச் சுவீகரிக்கும் முயற்சிகள் நடைபெறுவதாகத் தகவல்கள் வெளியாகின, கடுமையான கண்டனக் குரல்கள் எழுந் ததையடுத்து இத்திட்டம் 'தற்காலிகமாக' கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், எந்த நேரத்திலும் இக் கைங்கரியம் மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. இவ்வாறாக இப் பிரதேசம் சுவீகரிக்கப் படுமானால் சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவைக் கந்தன் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் என்பவை பறிபோகும் ஆபத்து உள்ளது. ஏலவே திருக்கோணேசர் ஆலயமும், திருக்கேதீஸ்வர ஆலயமும் அதியுயர் பாதுகாப்பு வலயமாக் கப்பட்டு, மக்களின் சுதந்திரமான நடமாட்டம் தடுக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் தட்டிக் கேட்கவோ தடுத்து நிறுத்தவோ கூடியவல்லமை மிகு அமைப்பு இந்துக்களிடம் உண்டா? அரசியல மைப்பில் வலியுறுத்தப்படும் சுதந்திரமாக இலங்கையின் எப்பிரதேசத்திலும் இருப்பிடத்தை அமைக்கும் உரிமை, வழிபாடியியற்றும் உரிமை என்பவையெல்லாம் மறுக்கப் பட்டுள்ள நிலையில், சட்டரீதியாக இந்துக்கள் சார்பில் இவற்றைக் கேள்விக்குட்படுத்தி நீதி பெறக் கூடிய ஒரு ஸ்தாபனத்தை எம்மால் ஏன் உருவாக்க முடியாமல் போயிற்று? இருக்கின்ற ஒரு சில அமைப்புகளிலும் போட்டி, பொறாமை காரணத் தினால் சச்சரவுகளும் பதவிச் சண்டைகளுமே மேலோங்கி நிற்கின்றன. பாரிய செயற்திட்டங்களை முன்னெடுக்கப் போதுமான நிதிவசதியும் இவ் அமைப்புகளிடம் இல்லை.

இவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு, ஒழுங்கமைக்கப் பட்டுச்செயற்படுகையில் அதிக நிதியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும். அண்மையில் அகில இலங்கை இந்து மாமன்றம் பல அமைப்புகளையும் ஒன்றிணைத்து மேற்கொண்ட செயற்திட்டங்களான வன்னிப்பகுதி அகதிகளுக்கான நிவாரண உதவி, கூட்டுப் பிரார்த்தனை என்பவை கணிசமானளவு வெற்றி கண்டமை நினைவு கூரத்தக்கன.

எனவே எதிர் வரும் நூற்றாண்டின் சவால் களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையிலும் அச்சுறுத்தல்களை முறியடிக்கக் கூடிய வகையிலும், இந்து மதத்தை நிறுவனமயப் படுத்தப்பட்ட அமைப்பு முறையினூடாக வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகும். வெள்ளம் வருமுன்னரே அணைகட்டப்பட்டிருக்க வேண்டும்! எனினும் காலதாமதமானாலும் கூட, காலத்தின் தேவையையுணர்ந்து உடனடி நடவடிக்கைகளை எடுக்க இந்துப் பெருமக்கள் துணிந்து செயற்படுவார்களானால், அது ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வாகப் பொறிக்கப்படும்.

# தூதுவராண்மை
## Diplomatic Immunity

செல்வி அ. சந்திரவதனி – இறுதியாண்டு

இன்றைய உலகில் ஏற்பட்டுள்ள அரசியல் வளர்ச்சி காரணமாக நாடுகள் தம்மிடையேயான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் முகமாக இராஜதந்திர தூதுவர்களை அந்த நாட்டின் அரசினை பிரதிநிதிப்படுத்தும் நோக்கத்துடன் பரிமாறிக் கொள்கின்றன. இவர் வாணிப தூதுவர்கள், அரசியல் தூதுவர்கள் என இருவகையாய் பிரிக்கலாம். இவர்கள் தம்மை அனுப்பிய நாடுகள் சார்பாக உடன்படிக்கைகளை செய்து கொள்ளல் (receiving State) பற்றிய தகவல்களை தமது நாட்டிற்கு அனுப்புதல், சுநஉநளைவைெ ளுவயவந ல் உள்ள தமது நாட்டு குடிமக்களின் நலன் பேணுதல் போன்றவிடயங்களில் ஈடுபடுவார்கள்.

இத்தகைய ஏற்றுக்கொள்ளப்பட்ட (receiving state)ல் தூதுக்குழு நிரலில் அடங்குவோர் யாவரும் தாங்கள் கடமைபுரியும் நாட்டில் தூதுவராண்மைக் காப்புரிமையைக் கோர உரித்துடையவர்கள். இத்தகைய தூதுவராண்மை காப்புரிமை என்றால் கடமைபுரியும் நாட்டில் குற்றவியல் குடியியல் குற்றங்களில் இருந்து விடுபாட்டுரிமை பெறுவதாகும். இவர்களுக்குரிய இக்காப்புரிமை, ஒரு நாட்டின் தலைவரைப் போன்று முழுமையானதல்ல. இவர்களுக்கு இக் காப்புரிமை நிர்வாக, நியாயாதிக்கம் தொடர்பில் கிடையாது..

இராஜதந்திர விடுபாட்டு உரிமை விதிகள் சாதாரண மக்களைப் பொறுத்தவரை ஆச்சரியமானதாய் இருக்கலாம். அரசுகள் எப்போதும் இத்தகைய விடுபாட்டு உரிமைகளை வழங்கிவருகின்றன. 1961, 1963 வியட்னாம் உடன்படிக்கைகள் Diplomatic relations இன்று இது தொடர்பான பல்வேறு விதிகளையும் தொகுப்பாய் கூறுகின்றது. அரசு ஒன்று உள்நாட்டு அழுத்தம் காரணமாய் இத்தகைய விடுபாட்டு உரிமைகளை குறைக்குமாறு. தூண்டப்படலாம். ஆனால் அரசு இதற்கு செவி சாய்ப்பது இல்லை. ஏனெனில் அதனது சொந்த இராஜாங்க தூதுவர்கள் வெளிநாட்டில் இதேவிதப் பிரச்சினையை எதிர்நோக்குவர். என்பதனால். இதில் எல்லாநாடுகளும் Sending state என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அதே போல சில நாடுகள் தமக்கு விருப்பமான நாட்டுத் தூதுவர்களை அழைப்பது தொடர்பில் மட்டுப்பாடுகள் செய்வதானால் அவ்விதத்திலும் அரசு ஒன்று பாதிக்கப்படும் இதனால் தான் ராஜாதந்திர தூதராண்மை மிகச்சுமுகமாய் செய்யப்படுகிறன்றது.

உ+ம; USA vs Iraque (CJ Renulation 1980)

வழக்கில் குறிப்பிடப்பட்டது யாதெனில் அரசுகளுக்கிடையில் கலாச்சாரம், அரசியல் வேறுபாடுகள் எவ்வாறு இருப்பினும் உறவுகளை பேணுதல் அவசியமானது. இந்த உறவுகளில் மீறல்கள் அடிக்கடி நிகழ்வதில்லை. ஆனால் ஒரு சில மீறல்கள் மிகவும் பிரபல்யம் அடைந்து விடுகின்றன. Diplomatic Immunity தொட நவீன சட்டம் 1961ம் ஆண்டு Vienna Convention. மூலம் காணப்படுகிறது. 150க்கு மேற்பட்ட நாடுகள் இந்த Convention யை உறுதிப்படுத்தியுள்ளன. இந்த Convention ல் உள்ள ஏற்பாடுகள் யாவும் வழக்காற்றுச் சட்ட ஏற்பாடுகள் என்பதனால் Convention யை அங்கீகரிக்காத நாடுகளைக் கூட இது கட்டுப்படுத்துகிறது.

இருமையியல் கொள்கையின்படி சில நாடுகள் இந்த உடன்படிக்கை ஏற்பாடுகளை தமக்கு ஏற்புடையதாக்குவதற்கு உள்நாட்டுச் சட்டங்களை நிறைவேற்றியுள்ளன. Diplomatic privilege Act (1964) இதன்படி ஒரு வெளிநாட்டு அமைச்சு வழங்கும் பத்திரம் ஒருவரை ராஜாங்க உத்தியோகத்தர் எனக் காட்டப்போதுமானது.

Iran vs U.S.A. வழக்கில் இந்த விடுபாட்டுரிமை தொடர்பில் பின்வருமாறு கூறப்பட்டதை அவதானிக்கலாம். "தூதவராலயம்" எனும் நிறுவனம் அதனுடைய சிறப்பான உரிமைகள் என்பவற்றோடு சேர்ந்து பல நூற்றாண்டுக்காலம் தாக்குப் பிடித்து சர்வதேச

சமூகத்தின் வலுவான ஒத்துழைப்பிற்கு அவசியமானதாய் தன்னை நிருபித்துள்ளது. நாடுகள் தமது அரசியலமைப்பு சமூக முறைமை எனும் வேறுபாடுகளுக்கு அப்பால் பரஸ்பர புரிந்துணர்வையும் பிணக்குகளைச் சமாதானமாய் தீர்க்கும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளன. ஒரு அரசு இன்னொரு அரசுடன் இராஜாங்க உறவினை மேற்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட முடியாது. அதேவேளை இயன்ற Convention ன்கீழ் உள்ளதான கடப்பாடுகள் அங்கீகரித்தலில் இருந்து தப்பவும் முடியாது.

தூதுவராண்மை விடுபாட்டுரிமைக்கு யார் உரித்துடையவர்கள் என்பதை தீர்மானிப்பதில் சில பிரச்சினைகள் எழுந்தாலும் 1961 Convention பின்னர், தூதுவர்கள், அவரது குடும்பம் காரியதரிசிகள் Diplomatic list யிலுள்ள எல்லாருக்கும் இது ஏற்புடையது என விதிகள் ஏற்படுத்தப்பட்டன.

In Re Reinhaidt வழக்கில் Rome நீதிமன்றம் தூதுவரின் இப்பணியாளருக்கும் இக்காப்புரிமை வழங்கப்படவேண்டும் என தீர்த்தது. இலங்கையில் கூட Appuhamy vs Gregory வழக்கில் நீதிமன்றம் இக்காப்புரிமை தூதுக் குழுவின் குடும்பத்துக்கும் பணியாளருக்கும் வழங்கப்படவேண்டும் எனத்தீர்த்தது.

இத்தகைய Diplomats க்கு வரிகளில் விதிவிலக்களிப்பு வழங்கப்பட்டும். ஆனால் தனிப்பட்ட சொத்துக்கள் வருமானம் என்பன வற்றின் மேல் வரியுண்டு. சொந்தப் பாவனைக்கான திறக்கப்படமுடியாது. இக்காப்புரிமை காரணமாய் தூதுவராலய வளவும், தூதுவர்களும், உணவும் தேடப்படமுடியாது. கைப்பற்றவும் முடியாது. ஆவணம் போன்ற செய்தி தொடர்புகள் இடையூறின்றி செயல்பட விலக்களிக்கப்பட வேண்டும். அரசியல் புகலிடம் தவிர்ந்த ஏனைய குற்றவாளிகள் தூதுவராலய வளவில் தஞ்சம் கோரினால் அவர்கள் Diplomat யால் ஒரு இராஜதந்திரி விரும்பின் விடுபாட்டுரிமையை கைதுறக்கலாம். இதன் போது அவருக்கு எதிராய் நீதிமன்றம் வழக்கு தொடரலாம் அவ்வாறு இல்லாமல் அவர் மீது வழக்கு தொடரப்படின் அவர் Plaint மூலம் காப்புரிமையை கோரலாம். மேலும் விடுபாட்டுரிமை அவருக்கு உள்ளது என்பது அவர் யார்மீதும் வழக்கு தொடுப்பதைத் தடைசெய்யாது.

Vienna Convention Art. 9 இன் படி "Persona Non Grata" காரணங்கள் வலிதானதாய் இருக்கதேவையில்லை.

U.S.Hostages case ல் Iran மாணவர்கள் U.S.A ஊழியர்கள் Iran ற்கு எதிராய் சதி செய்தனர். எனவே தமது செயல் வலிதானது என வாதிட்ட போதும் தூதுவராண்மை ஊழியர்கள் காப்புரிமை உடையவர்கள் என்பதனால் அவர்களது செயல்கள் நியாயப்படுத்தப்பட வில்லை. இக்காப்புரிமை குற்றவியல், குடியியல் விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்படுள்ளது ஆயினும் ஏதாவது காப்புரிமை காரணமாக இழப்பேற்பட்டால் சம்பந்தப்பட்ட நாட்டிற்கு மறைப்பாடு செய்து நஸ்டஈட்டை பெறலாம் மற்றும் மரண சாதன வழக்கு மரபுரிமையாளர் வழக்கில் Diplomat ஒருவர் திறத்தவராய் இருக்கலாம் அவர்கள் செய்யும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு எதிராய் வழக்கு தொடரப்படலாம்.

Art 29படி தூதுவரை பாதுகாக்கும் கடமை அவரை பெறும் ஒவ்வொரு நாட்டிற்குரியது இதே கருத்து Norway - Russian Embassy குண்டு வீச்சு விவகாரத்திலும் தனிக்கவனத்துடன் பாதுகாக்கப்படவேண்டும் என கூறப்பட்டது.

இக்காப்புரிமை இராஜதந்திர அந்தஸ்தை ஒருவர் இழந்தவுடன் முடிவுக்கு கொண்டுவரப்படும். அல்லது அவர் சட்ட முரணாக நடந்தார் உள்ளக விவகாரங்களில் தலையிட்டார் "ஏற்புடையவர்கள் அல்லர்" என திருப்பி அனுப்பும் ஒரு விளம்பல் கோட்பாடு மூலம் முடிவுக்கு கொண்டுவரப்படும். எனினும் இவர் செயலாற்றிய காலத்திலுள் விடயங்கள் காப்புரிமை பெறும் இவர்களின் பயணத்தின் போது பயண வழியிலுள்ள நாடுகளும் இக்காப்புரிமையை வழங்க கடமைப்பட்டன (உ+ம்) Davids Glaxon எனும் ரு.மு Diplomat பிரேமதாசாவின் அரசாங்கத்தால் திருப்பி அனுப்பப்பட்டமை. எனினும் இறுதியாக பேணப்படும் இவ்வுறவு முறை சிறந்த ஒரு அம்சம் என்றே கூறவேண்டும்.

# தேசவழமையில் முன்வாங்குரிமை

வி. சசிதரன் - இறுதியாண்டு

"விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றும் செய்ததில்லை சொத்தை ஆக்கினீர்
ஏற்றுக் கடிகேன் எண்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே"

(சுந்தரமூர்த்தி நாயன்மார் திருமுறை - 7)

சுந்தரரின் தேவாரம் "முன்வாங்குரிமை" (Pre-emption) எனும் சட்டக்கோட்பாட்டைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. இதில், தான் சிவபெருமானின் தனிச்சொத்தென்றும் 'ஒற்றி ஈடு' (Otti mortgage) என்ற வகையில் தம்மீது வேறு எவருக்கும் எவ்வகையினதுமான உரிமையும் கிடையாது என்பதை சமய குரவரான சுந்தரர் பாடியுள்ளார். பழைய தேசவழமைச் சட்டத்தின் கீழ் ஒற்றிஈடு வைத்த ஒருவருக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் மீது முன்வாங்குரிமை உண்டு. ஆகவே முன்வாங்குரிமை என்ற கோட்பாடானது ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு வருமுன்பே நிலவி வந்தது என்பது வெள்ளிடை மலை.

முன்வாங்குரிமை என்னும் உரிமையானது பின்வரும் மூன்று வகையைச் சேர்ந்தவர்களுக்கு அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் ஏனையோர்களை விட முன்னுரிமை உடையதாகும் அவர்கள்:-

1. ஆதனத்தின் கூட்டுச்சொந்தக்காரர்கள் (Co-owners)
2. பின்னுரிமையாளர்கள் (மரபுரிமையாளர்கள்.'.வாரிசுகள்) (Heirs)
3. ஆதனத்தின் மீது ஈட்டைக் கொண்டுள்ளவர்களும், அவ்வீடு வைக்கப்பட்ட ஆதனத்தின் அடுத்துள்ள ஆதனத்தின் சொந்தக்காரர்களுமாவார்.

ஆனால் தற்போதைய சட்டத்தின்கீழ் இச்சிறப்புரிமையானது இருவகையைச் சேர்ந்த ஆட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள்.

1. கூட்டுச் சொந்தக்காரர்கள்
2. பின்னுரிமையாளர்கள்

1947ம் ஆண்டின் 59ம் இலக்க முன்வாங்குரிமைச் சட்டம் 1948ம் ஆண்டு ஆடி மாதம் முதலாம் திகதி (01-07-1948) அமுலுக்கு வந்தது.

Spencer Vs Rajaratnam (36 NLR 321) இல் தேசவழமைச் சட்டமானது இலங்கையிலுள்ள முழுத்தமிழ் மக்களுக்கும் ஏற்புடையதான ஒரு தனிநபர் சட்டமல்ல. ஆனால் வடமாகாணத்தின் 'வாசிகள்' எனச் சொல்லப்படும் தமிழர்களுக்கு மாத்திரமே உரித்தான சட்டமாகும் எனத் தீர்க்கப்பட்டது. இங்கு 'வாசிகள்' எனப்படுவது, வடமாகாணத்தில் வாழுமிடம் என்ற தன்மையில் நிரந்தர வசிப்பிடமொன்றைக் கொண்டிருந்தவர்கள் என்றவாறு பொருள் கொள்ளப்படும் என்று Vellupillai Vs Sivakamipillai ( 13 NLR 74) இல் விளக்கப்பட்டது.

தேசவழமைச்சட்டமானது வடமாகாணத்துக் குள்ளேயோ அல்லது அதற்கு வெளியேயுள்ள அசைவற்ற ஆதனத்திற்கிடையே வேறுபாட்டைக் காட்டவில்லை.

தேசவழமை முன்வாங்குரிமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இன் படி தேசவழமை சட்டத்திற்கு அமையவுள்ள அசைவற்ற ஆதனத்தை விற்குமிடத்து, உத்தேசிக்கப்பட்ட விலைக்கு அல்லது சந்தைப் பெறுமதிக்கு அவ்வாதனத்தை வாங்க முன்வருகின்றவர்களுக்கு மேலாக அவ்வாதனத்தின் மீதான முன்வாங்குரிமையானது பின்வரும் ஆட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

1. கூட்டுச் சொந்தக்காரர்களுள் ஒருவர் ஆதனத்தை விற்குமிடத்து, அதை மற்ற கூட்டுச்சொந்தக்காரர் ஒருவர் வாங்கும் முன்னுரிமை உண்டு.

2. விற்பவர் மரணசாதனமில்லாமல் இறக்கும் பட்சத்தில் அவரின் பின்னுரிமையாளர்களான ஆட்கள்.

பிரிவு 4 இன் பிரகாரம் முன்வாங்குரிமையானது, பிரிக்கப்படாத பங்கு அல்லது அப்பங்கில் உரிமை ஒன்றைக் கொண்டிருக்கும் ஆதனம் தொடர்பாக மட்டுமே பிரயோகிக்கப்படல் வேண்டும் முழுக்காணிக்கும் ஒருவரே சொந்தக்காரராக இருப்பின் அக்காணி விற்கும் போது முன்வாங்குரிமையை பிரயோகிக்க இயலாது.

பிரிவு 5 ஆனது, ஆதனத்தினை விற்கும் போது, விற்பவரினால் விற்பனை பற்றிய அறிவித்தலானது. பிரசித்த நொத்தாரிசு (Notary Public) ஒருவர் முன் ஒப்பமிடப்படுவதுடன் அதன் 3 பிரதிகள் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். ஆனால் காணி பதியத் தேவையில்லை.

பிரிவு 5இன் கீழ் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள், ஒன்றில் அதற்கான பணத்தொகையைக் கொடுத்து ஆதனத்தை வாங்க வேண்டும் அல்லது அதை வாங்க உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளல் வேண்டுமென 6ம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Mangaleswari Vs Selvadurai (63 NLR 88) வழக்கில் றோமன் டச்சுச்சட்டமோ அல்லது முஸ்லிம் சட்டமோ தேசவழமைச் சட்டத்தின் பகுதி ஒன்றாக இருக்கவில்லை எனவும், ஆனால் முன்வாங்குரிமை தொடர்பில் அச்சட்ட முறைமைகளிலிருக்கின்ற சட்டங்களிலிருந்து ஆதாரம் பெறுகிறது. அவை தேசவழமைக் கோட்பாடுகளோடு முரண்பட்டு இருக்காதவிடத்து அனுமதிக்கப்படலாம் எனத்தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

முன்வாங்குரிமையானது இல்லாதொழியும் சந்தர்ப்பங்களாவன:

1. முன்வாங்குரிமை கோருபவருக்கு ஆதனம் கைமாற்றப்படும் போது

2. உரிமையைக் கைவிடும் போது (Waiver)

3. இழப்பிப்பு (Forfeiture)

4. விற்பனை ஒப்பந்தம் நிலைகுலையும் போது.

5. ஆட்சியுரிமை (காலவிதிப்பு) வழக்கெழு காரணத் திகதியிலுருந்து மூன்று ஆண்டுகளிற்குப் பின்னர் முன்வாங்குரிமை நிலவமுடியாது.

6. இணைப்பு (Merger)

7. நீதிபதியினால் ஆக்கப்படும் சட்டத்தின் கீழ் எழக்கூடிய வேறு எவையேனும் மட்டுப்பாடுகள்.

இதிலிருந்து தேதவழமை முன்வாங் குரிமைச் சட்டத்தினால் ஒரு சிலர் சிறப்புரிமைகளை அனுபவித்தாலும், அதிகம் கட்டுப் பாடுகள் காணப்படுகிறது.

# மனித வாழ்வில் சட்டமும் சமயமும்

எமது மன்றத்தின் 1999க்கான S. நடேசன் Q.C ஞாபகார்த்த கேடயத்திற்கான எழுந்தமான கட்டுரைப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற ஆக்கம்

**க. ஜெயநிதி - இடைநிலை ஆண்டு**

உலகில் தன்னலமற்ற தவதர்ம காரியங்கள் செய்து, முத்தியின்பத்தை அடைய உதவக் கூடிய ஒரேயொரு பிறப்பு மானிடப் பிறப்பு.

அவ்வரிய மானிடப் பிறப்பினைப் பெற்ற நாம் அதனை உரிய முறையில் எமது ஆன்ம ஈடேற்றத்திற்குப் பயன்படுத்துதல் வேண்டும்.

மனிதனைப் போலவே விலங்கினங்களுக்கும் பசி, தாகம், காமம் எல்லாம் உண்டு; மனிதனைப் போலவே விலங்குகளும் இனவிருத்தி செய்வன.

ஆயினும் இவை எல்லாவற்றிலும் கட்டுப்பாடு, தர்மம் ஆகிய நெறிகள் மனிதனுக்கு மட்டுமே உண்டு; விலங்குகளுக்கு இல்லை.

அத்தகைய உயரிய மானிடப் பிறப்பினைப் பெற்ற மனிதன் இன்றைய இயந்திர உலகில் ''இப்படித்தான் வாழவேண்டும்'' என்ற இலட்சியத்தைக் கைவிட்டு "எப்படியும் வாழலாம்" என்ற தவறான வழியில் செல்லத் தலைப்படுகின்றான்.

ஒவ்வொரு மனிதனும் ஏதோ அகத்தியர் காலத்திலிருந்து வாழ்ந்து கொண்டிருப்பது போலவும், தான் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து விடுவது போலவும் எண்ணிக் கொண்டிருக்கின்றான்.

"பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி குறிக்கின்றதென்பது மெய் தானே" என்ற பொருள் பொதிந்த கவி வரியும், "ஆடி அடங்குகின்ற வாழ்க்கையடா; ஆறடி நிலமே சொந்தமடா'' என்றும் பாடல் வரியும் நீர்க்குமிழி அன்ன நிலையற்ற வாழ்க்கையின் தத்துவம் கூறுவன. ஆடி அடங்குகின்ற அந்த வாழ்க்கையிலே அழியாத, அசைக்க முடியாத சில கருவூலங்களைப் படைக்க மனுதனுக்கு வழிகாட்டியாக அமைவது சமயமாகும்.

ஆயின் சமயம் என்ற ஒன்றுஇல்லாமல் மனிதன் வாழ்க்கையில் முன்னேற முடியாதா? என்ற கேள்வி எம்மனதில் தோன்றுதல் இயல்பே.

சமயம் என்பது, மனிதனைச் சமநிலையில் வளரச் செய்தல் (Horizontal)இ மேலே மேலே அவனை, உயரக் கொண்டு போவது (Vertical) ஆகிய இரு வேறு முறைகளில் வழிப்படுத்துகிறது.

இவற்றுள் முன்னயது மனிதனைக் கடமை உணர்வு உள்ள, சமூகத்துக்கு உபயோகப் படக்கூடியவனாகச் செய்கிறது. இது உலகியல் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத சமூக ஒற்றுமை, பரஸ்பரம் நல்லுறவு, கட்டுபாட்டை வளர்ப்பது போன்ற நற்பண்புகளின் இருப்பிடமாக அவனை ஆக்குகின்றது.

இதனால் சாதாரண நிலையிலிருந்த மனிதன் சிறப்பான நிலைக்கு உயருகின்றான்.

பின்னய முறையானது ஆன்மீக வழிகளை அவனுக்கு உணர்த்துகிறது. சாதாரண வாழ்க்கையின் சுகபோக அலங்கார வேட்கையின் மூழ்கி அடங்குவதற்கு மேலாக உயர்வு பெறுவதற்கான நிலையான உண்மைகள், இந்த உலக வாழ்க்கைக்கு அப்பால் இருப்பதை உணரச் செய்கிறது. அதை மேலுலகத்திலேயே பெறமுடியும் என்பதையும் அறிவித்து அகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக மனிதன் தன்னைத் தானே உணர்ந்து கொள்ள (Realization) வழி செய்கிறது.

சுருங்கக் கூறின் சமயமானது தனி மனித ஈடேற்றத்திற்கு வழி செய்வதோடல்லாது சமூக முன்னேற்றத்திற்கும் அடித்தளத்தை இட்டுச் செல்கிறது எனலாம்.

எனினும் இன்றைய வாழ்க்கையில் சமயத்தின் காரணமாக சண்டை சச்சரவுகளும் இல்லாமல் இல்லை. சமயம் இல்லாமல் இருந்தால் நாட்டில் ஒற்றுமை நிலவக்கூடும் என்ற எண்ணமும் உண்டு.

சமயங்கள் எல்லாமே இறைவனை நாம் அடைவதற்குத்தான் உதவுகின்றன. அவை நம்முடைய நம்பிக்கைக்கும் சக்திக்கும் இயல்புக்கும் ஏற்பப் பிரிவுபட்டிருக்கின்றன.

சமயங்களின் கொள்கைகள் வேறுபட்டும் ஒன்றுக்கொன்று முரணாகவும் கூடத் தோன்றிடினும் சமய மனப்பான்மை என்பது ஒன்றே. கொள்கைகளால் பிரிவுபட்டிருப்பினும் பக்தி உணர்வு ஒன்றே. நாம் அனைவரும் ஒரே கடவுளின் படைப்புக்கள் என்பதையும் "மனிதர்கள் என்னைப் பலவாறாக எந்த ரூபத்திலும், எப்படி வணங்கினாலும் அவரவர்களுடைய பக்தியை நான் வேரூன்றச் செய்திருக்கின்றேன்!" என்ற கீதாவுபதேசத்தையும் உணர்ந்தவர்கள் சமயச் சச்சரவுகளின் மூலத்தை அறிந்து, அவற்றை நீக்க முற்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

மனிதனின் அகவாழ்வும் புறவாழ்வும் சமய நூல்களால் நெறிப்படுத்தப்பட்டன. ஆட்சி முறையிலும் சமுதாயக் கட்டுக் கோப்பிலும் சமயத்ததின் செல்வாக்கு ஆழமாக வேர்விட்டி ருந்தது. சமய வழியில நிற்கும் சான்றோர்களே சகல மக்களிடத்தும் மதிப்புப் பெற்றவர்களாக விளங்கினர். சமுதாய வாழ்வில் சமயத்தின் பிடிப்பு மிக அழுத்தமாக இருந்த அந் நாட்களில் தோன்றிய சட்டங்கள் பெரும்பாலும் சமயத்தோடு பின்னிப் பிணைந்து காணப்பட்டன.

உலகின் தொன்மையான சட்டவியல்களுள் ஒன்றான இந்து சட்டம் என்னும் மகத்தான பாரம்பரியத்தை ஆழ்ந்து கற்போர்க்கு "சட்டம் சமயத்தின் சாயல் இல்லாமல் தனித்து இயங்க முடிவதில்லை" என்ற உண்மை புலனாகும்.

அரசு எந்தக் கொள்கைகளின் தொகுப்பை அங்கீகரித்துச் சட்டநிர்வாகத்தில் செயல்படுத்துகிறதோ அது தான் சட்டம்" (Salmond's Theory of Law) என்று சட்டத்திற்கு ஒரு விளக்கம் உண்டு.

ஆயினும் இந் நாளில் சட்டங்கள் நிறை வேற்றப்படுவது போல அந்நாளில் முறையான ஆட்சி மன்றம் வைத்து இந்துச் சட்டம் இயற்றப்பட வில்லை. அத்துடன் அன்று ஆட்சி செலுத்திய மன்னரும் வெளிப்படையாக அதனைப் பிரகடனப் படுத்தவுமில்லை.

பல்வேறு நூல்களிலிருந்து குறிப்பாகத் தர்மசாஸ்திரங்களிலிருந்து தான் இந்துச் சட்டக் கோட்பாடுகள் திரட்டித் தொகுக்கப்பட்டன. அதனால் சமயத்தின் பிடிப்பும் ஒழுக்க நெறிகளும் மிகுந்துள்ள ஒரு சட்டவியலாக அது விளங்குகின்றது.

அத்துடன் நவீன சட்டத்தின் பல்வேறு கூறுகள் விரவிக் காணப்படும் ஒரு சிறந்த சட்டமாகவும் அங்கீகாரம் பெற்றுள்ளது.

உதாரணமாக தர்மம் என்பது பரந்த பொருளுடைய ஒரு சொல். அது வெறுமனே ஒழுக்க விதிகளையும் ஆன்மீக நெறிகளையும் மட்டும் குறிப்பதன்று. மாறாக நீதியையும் சட்டத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்ட ஒரு பரந்த் சொல்.

பழங்கால தர்ம சாஸ்திரங்கள் தர்மம் என்ற சொல்லுக்கு கொடுக்கும் பொருள் மேற்கூறிய சட்டம் பற்றிய விளக்கத்திற்கு பொருந்தி வருவதைக் கொண்டு பழைய நூல்களிலும் சாஸ்திரங்களிலும் சட்டம் இருக்கிறது என்று கூறுவது தவறாகாது. குற்றவியல் (Criminal Law), உரிமையியல் (Civil Law), நடைமுறைச் சட்டம் (Procedural Law), நிலையமுறைச் சட்டம் (Substantive Law) ஆகிய அத்தனையும் அவற்றில் உள்ளன.

ஆயினும் தர்ம சாஸ்திரங்களிலிருந்து பகுத்துணரப்படும் 'இந்து சட்டம்' இன்று முழுவதுமாகப் பின்பற்றப்படுவதில்லை. ஆட்சிமன்றங்கள் நிறைவேற்றிய சட்டங்களால் பழையன கழிந்து புதியன புகுந்துள்ளன. உதாரணமாக குற்றவியல், உரிமையியல், சான்றியல் (Evidence Ordinance), ஒப்பந்தம் (Contract) முதலியவற்றுக்குத் தனிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன. பழைய இந்துச் சட்டத்தில் காணப்படுவன இன்று பயனற்று விட்டன. இந்துக்களின் திருமணம், தத்துஎடுத்தல் சொத்துரிமை ஆதகியவை மட்டுமே இந்துச் சட்டத்தின் கீழ் வருவன.

மேலும் "சட்டம் என்பது சுதந்திர அரசால் ஆணையிட்டு அமுலாக்கப்பட வேண்டும்" (Austin) என்னும் ஆஸ்டினின் விதிப்படி இந்துச் சட்டத்தை சட்டமாக ஏற்றுக் கொள்வதில் சிக்கல்கள் இருப்பினும், எத்தனையோ அரசர்கள் ஆண்டும் எத்தனையோ ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தும் இச் சட்டம் மாறாததாக, மாற்றப்படமுடியாததாக, புறக்கணிக்கப்பட முடியாததாக இருந்து வருகிறது என்ற உண்மையை உணரும் போது அது நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக அரச அங்கிகாரம் பெற்று அமுலாக்கப்பட்டு வந்திருக்கின்ற காரணத்தினால் மேற்படி விதிக்கு ஏற்ப சட்டம் என்ற அந்தஸ்து (Status) பெறுகிறது எனலாம்.

எனவே சமயத்தின் சாயலுடன் படைக்கப் பட்ட சட்டங்களும் சமயத்தைப் போலவே தனிமனித மேம்பாட்டுடன் சமுதாய முன்னேற்றத் தையும் வலியுறுத்தும் பண்பைக் கொண்டுள்ளன.

மனிதன் தனித்து வாழ முடியாதன். கூடிவா முதல் அவனது இயல்பு. அதனால் "மனிதன் ஒரு சமூகப்பிராணி" (Man is a social being - Plato) என்பர் சமூகவியல் அறிஞர்.சமூகத்தின் தேவைகளை, நிரம்பல் செய்வது மனிதனின் சமூகவியல் கடப்பாடாகின்றது. அதற்கிணங்கவே "சமூக நீதி யின்" நிலைப் பேறு அமையும். சமுதாயத்தின் அங்கத் தவனான மனிதன் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையிலேயே தனது தேவைகளையும் சமூகத்தின் தேவைகளையும் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளான். இச் செயன் முறையில் அவன் சமூகத்திற்கு விரோதமாக நடந்து கொள்ளாமல் சமூக அங்கீகாரத்துடன் வாழ நெறிப்படுத்தும் பல்வேறு நெறிமுறைகளில் மிகவும் பாரிய செல்வாக்குச் செலுத்துவது சட்டமாகும்.

இவ்வாறாகச் சட்டமும் சமயமும் மனித வாழ்வில் பின்னிப் பிணைந்து காணப்படினும் "பிரயோக முறை"யில் இரண்டும் ஒன்றிலிருந்து மற்றது வேறுபாட்டைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"அறம் செய்ய விரும்பு" என்பது சமயப் பண்பு கொண்ட ஒவ்வொரு மனிதனுக்கும் சொல்லப்பட்ட உபதேசம். இங்கு "அறம் செய்" என்று கட்டளை விதிக்கப்படவுமில்லை; அறம் செய்யாமல் போனால் தண்டனை அடைவாய் என்று அச்சுறுத்தல் விடுக்கப்படவுமில்லை. மாறாக "விரும்பு" என்று தான் சொல்லப்பட்டுள்ளது. விரும்புதல் மனத்தின் செயல். ஒரு நல்ல காரியத்தைச் செய்ய நினைப்பதுவே அதைச் செய்து முடித்ததற்குச் சமமான பலனைத் தரும் என்பது சமயத்தின் கருத்து.

அத்துடன் "மனம்" தான் அனைத்திற்கும் அடிப்படையானது. ஒருவன் மனத் தூயவனாயின் அவனால் சமூகத்திற்கு எந்தவித தீமையும் விளைய முடியாது.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்து அறன் ஆகுல நீர பிற - குறள் 34 -

(அறன் வலியுறுத்தல்)

தீமை ஒன்று நிகழ்ந்து விட முன்பே அதைத் தடுக்க நினைப்பது சமயம். தீமை நிகழாமல் எச்சரித்து நடந்த தீமைக்குப் பரிகாரமோ அல்லது தண்டனையோ பெற்றுத்தரச் செய்வது சட்டம்.

தண்டனை என்பது சட்டவியலாளர் பலரால் விமர்சனத்துக்குள்ளான ஒன்று. "தண்டனை என்பது சட்டரீதியான கடமையொன்றின் செயற்பாட்டுக்கு முக்கியமானது" (Austin). தண்டனைப் பயமே சட்ட ரீதியான கடமைகளைச் செய்யத் தூண்டுகிறது". (Proffessor Dicey)

எனவே இவற்றினடிப்படையில் நோக்குமிடத்து தண்டனை என்பது கடமை தவறுதலை அடிப்படையாகக் கொண்டது. எது எப்படியிருப்பினும் பெருகி வரும் குற்றச் செயல்களை இத் தண்டனை முறைகளால் குறைக்க முடியவில்லை என்ற நிலையில் சட்டத்தின் செயற்படும் தன்மையில் சிறிது பின்னடைவு ஏற்படத் தான் செய்கிறது. இந்நிலையில் சமயத்தின் அணுகுமுறை சிந்திக்கற்பாலது.

வெள்ளத்து அனைய மலர் நீட்டம்; மாந்தர் தம்
உள்ளத்து அனையது உயர்வு - குறள் 595
(ஊக்கம் உடைமை)

சமயத்தின் பார்வை எப்போதும் "அகவளர்ச்சி"யை அடிப்படையாகக் கொண்டமைந்தது. அதுவே நிலையான "புறவளர்ச்சி"யை எட்டச் செய்யும் என்ற கருத்தைக் கொண்டது.

குற்றவியல் வழக்குகளில் குற்றம் (Offence) என்ற பதத்திற்கு அவசியமான இரண்டு கூறுகளில் "குற்றமனம்" என்பது மேற்படி சமயக் கோட்பாட்டின் சாயலில் சிந்தித்தற்குரியது. "குற்றமனமின்றிக் குற்றச் செயல் நடைபெற முடியாது" (Actus non facit reum nisi mens sit rea) என்பது ஒரு உளமாகும். குற்றமனம் ஒன்றிற்கு குற்றமனத்தினைப் பற்றிய கோட்பாடு மனத்தின் செல்வாக்கை குற்ற நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் எவ்வளவு முக்கிய மானதாகக் கருதுகிறது என்பது புலனாகும்.

"உன்னைத் திருத்திக் கொள்; சமூகம் தானாகத் திருந்திவிடும்" என்பதும் "உன் கண்ணிலுள்ள விட்டத்தைக் கவனியாமல் உன் சகோதரன் கண்ணிலுள்ள துரும்பைப் பார்ப்பதேன்?" என்னும் பொருள் பொதிந்த கேள்விக்கு அவாவி நிற்கும் விடை யாதெனில் தனிமனித "மனமாற்றமே" ஒட்டு மொத்த சமூகத்தின் மேம்பாட்டுக்கும் வழிகோலும் என்ற பேருண்மையாகும்.

குற்றவாளிகள் சமூகத்தில் உருவாவதைத் தடுக்க வெறுமனே சட்டமும் தண்டனை முறைகளும் மட்டும் போதாது. தண்டனை முறைகள் கூட ஒவ்வொரு நாட்டின் சட்டமுறைகள், தண்டனை வழங்கும் நோக்கம், தண்டனைக் குட்படவிருக்கும் நபரின் உடல் நிலை, மனநிலை, பொருளாதார, சமூகநிலை, சூழல் போன்றவற்றிற்கேற்ப மாறுபட வேண்டும்.

அன்றேல்

"திட்டம் போட்டுத் திருடுற கூட்டம்
திருடிக் கொண்டே இருக்கும் - அதைச்
சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம்
தடுத்துக் கொண்டே இருக்கும்.
திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால்
திருட்டை ஒழிக்க முடியாது."

நிறைவாக மனித வாழ்வில் பிரிக்கமுடியா தவாறு பின்னிப்பிணைந்துள்ள சமயமும் சட்டமும் இரண்டும் ஒருங்கு சேர்ந்து கைக் கொள்ளப் பட்டாலே மனித இனத்திற்கு விடிவு கிட்டும்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன் - குறள் 294
(வாய்மை)

# சிந்துவெளி நாகரிகம் மீதான கண்ணோட்டம்

செல்வி சி. மஞ்சு -
இடைநிலை ஆண்டு

இந்தியாவின் வடமேற்கு எல்லையிலே, சிந்துநதி பாயும் பள்ளத்தாக்கிலே (இப்பிரதேசம் இப்போது பாகிஸ்தானில் இடம்பெற்றுவிட்டது) இந்தியாவின் கடந்தகாலத்தைப்பற்றிய முதல் தகவல் சிந்து மாகாணத்திலிருக்கும் மொகஞ்சதாரோவிலும் தென் பஞ்சாப்பில் இருக்கும் ஹரப்பாவிலும் அகழ்வாராய்ச்சியின் போது கண்டு பிடித்த இடிபாடுகள் மூலம்தான் கிடைத்தன. ஜவஹர்லால் நேருவின் கருத்துப்படி தொன்மையான வரலாற்றின் போக்கையே இக்கண்டுபிடிப்புகள் மாற்றின. எனினும் பணமுடக்கம், இரண்டாம் உலகமகாயுத்தம் காரணமாக இவ்வாராய்ச்சிகள் இடைநிறுத்தப் பட்டன.

ஏறத்தாழ ஆயிரம் மைல் இடைவெளியில் அமைந்திருக்கும் இவ்விரு நகரங்களும் ஒரே வகையான அமைப்புடையனவாய் இருந்தமையால் இவை பரந்து கிடந்த ஒரு பேரரசின் இரு தலைநகரங்களாக விளங்கியிருந்தல் வேண்டும் என்பது ஊகம். மேலும் மேற்கே கத்தியவாரிலும் வடக்கே அம்பாலாவிலும் இந்நாகரீக சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இந்நாகரீகம் கங்கைச்சமவெளியிலும் பரவி அது சிந்துவெளி நாகரீகமாக மட்டுமில்லாமல் அதைவிடப் பரந்து விரிந்த நாகரீகமாய் கருதப்படலாம்.

இவ்வாறு பல்லாயிரம் ஆண்டுகள் வளர்ச்சிக்கு பின்னரே அடைந்திருக்கக்கூடிய இந்நாகரீகம் பற்றி சர் ஜான் மார்ஷல் (Sir John Marshall) பின்வருமாறு கூறுகின்றார்.

"மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகங்களைப் பார்க்கிறபோது, அவை சமீபகாலத்தவை அல்ல என்பதும், மிகப்பழமையானவை என்பதும் இந்திய மண்ணிலே பலநூறு ஆண்டுகளாய் வேரூன்றியவை என்பதும் தெளிவாய்ப் புலனாகின்றன. பாரசீக, மெசொபொடேமியா, எகிப்திய நாகரீகங்களைப் போல இந்த இந்திய நாகரீகமும் மிகவும் வளர்ந்த ஓர் சிறந்த நாகரீகமே. அதிலும் சிறப்பாக பஞ்சாபிய, சிந்து மாநிலங்கள் மிகவும் சிறப்பான நாகரீக வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றிருந்தன என்பதும் சமகாலத்திய எகிப்து, பாரசீக நாகரீகங்களை ஒத்தும் பலவிடயங்களில் அவற்றைவிட மேன்மையுற்றும் இருந்தன என்பதும் தெளிவாகின்றன".

சிந்துவெளியில் வாழ்ந்த மக்கள் சுமேரிய நாகரீகத்துடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதை குடியிருப்புகள், உற்பத்திப்பொருட்கள், கலைப்பொருட்கள், குளியலறை சாதனங்கள் எடுத்துக்காட்டின. மேலும் இன்றைய பொருளாதாரங்களில் காணப்படுகின்ற ஏற்றுமதி-இறக்குமதி முறை அக்காலத்தில் நிலவியதைக் கார்டன் சைல்ட் (Gordon Child) என்ற வரலாற்று ஆசிரியர் மொகஞ்சதோராவின் உணவுத்தே வையை அரேபியக் கடல் பகுதியிலிருந்து அன்றாட மீன் ஏற்றுமதி நிறைவு செய்திருக்கிறது என்றார்.

சிந்துவெளி நாகரீகம் ஏனைய நாகரீகங்களை விட எவ்வகையில மேன்மை பெற்றிருந்தது என்பதை மார்ஷல், கார்டனின் உதவியுடன் ஆராய்வோமானால்

(1) இக்காலகட்டத்தில் இந்தியாவில் மட்டுமே பருத்தி பயன்படுத்தப்பட்டது. இங்கு பாவனைக்கு வந்து 2000 ஆண்டுகளின் பின்னரே பருத்தியின் உபயோகம் மேல்நாடுகளை ஆக்கிரமித்தது.

(2) எகிப்திய, மெசொபொடேமிய ஆகிய மேற்காசிய நாடுகளில் அரசமாளிகைகளும், கோயில்களும் மிகப்பாரிய கட்டிட அமைப்புகளாக அமைந்த போதிலும் பொதுமக்கள் சிறிய மண்குடில்களிலே வசித்தனர். ஆனால் இதற்கு மாறாக சரித்திரம் காணாத வகையில் மொஹஞ்சதாரோவில் மக்கள் மனைகள் வசதியாகவும், மிக நேர்த்தியான வகையில் கட்டப்பட்டிருந்தது.

(3) பொது கழிவறைகள், சிறப்பான கழிவுநீர் வடிகால் அமைப்புகள் இங்கு அமைந்திருந்தது. அவற்றைப் பேணவும் திறமையான உள்ளூராட்சி நிர்வாகம் இருந்தது.

(4) மேலும் கட்டிட அமைப்பில் புதிய உத்திகளை புகுத்தியிருப்பதனை நன்கு சுடப்பட்ட செங்கற்களிலான குளியல றைகள், இரண்டு மாடிக்கட்டிடங்கள், வேலைக்காரர் இருப்பிடமும் குடியிருப்புகள், பெரிய வீடுகளையொட்டிப் பொருட்களை பாதுகாத்து வைக்கும் பெரும் அறைகள் என்பன காட்டுகின்றன. மேலும் இவை வெள்ளப்பெருக்கிற்கு ஏற்றவாறு கட்டப்பட்டிருந்தது.

(5) இந்நாகரீகம் நகரத்தின் பாற்பட்ட ஒன்றாய் அமைந்துள்ளது. இங்கு வணிகர்கள் செல்வந்தர்களாயிருந்தார்கள். இங்கு காணப்பட்ட நீண்ட கடைத்தெருக்கள் தற்போதுள்ள இந்திய கடைத்தெருக்களை ஒத்திருந்தன. மேலும் விற்பனைக்காகவே பொருட்களைத் தயார் செய்யும் முறையும் இங்கு நிலவியது.

முன்னோடி ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி இந்நாகரீகம் பல்வேறு இந்தியக் கலாச்சாரங்களுக்கு முன்னோடியாக திகழ்ந் திருக்கிறது என்றாலும் அது மதச்சார் பில்லாததாகவே இருந்திருக்கிறது. ஆனால் சிந்துவெளி அகழ்வாராய்ச்சியை முன்னின்று நடாத்திய மார்ஷலின் கூற்றுப்படி "கலை, மதம் ஆகிய இரண்டு துறைகளிலும் இந்நாகரீகம் முற்றிலும் ஒரு தனித்தன்மை வாய்ந்தது'' என்பதை நாம் அறியலாம். அகழ்வாராய்ச்சியில் பெறப்பட்ட செம்மறி ஆடுகள், நாய்கள் மற்றும் மிருகங்களின் மண்வடிவங்கள், பல முத்திரைகளில் செதுக்கப்பட்ட வேலைப்பாடுகள் (குறிப்பாக குட்டைக்கொம்புள்ள மாடுகள்), ஹரப்பாவின் கலைநுணுக்கம் வாய்ந்த இரண்டு பெண் உருவங்கள் இன்றைய சிவநெறியின் கருவைச் சித்தரிக்கின்றன. இங்கு இலச்சினைகளிற் பொறிக்கப்பட்டுள்ள யோகிபோல அமர்ந்திருக்கும் கொம்புடைய கடவுளின் உருவம் சிவனுக்கு பிற்காலத்தில் வழங்கப்பட்ட முந்துசிவன், நக்கன், யோகீசுவரன், பசுபதி போன்ற பெயர்களை விளக்கும் தன்மை கொண்டதாக அமைகின்றது. இங்கு சக்தியை தாய்த்தெய்வமாகவோ, நிலத் தெய்வமாகவோ,இயற்கை தெய்வமாகவோ வழிபட்டனர். இங்கு கண்டெடுக்கப்பட்ட இலச்சினையிலே பெண் தெய்வத்தின் கருப்பையிலிருந்து செடியொன்று வளருவதாக பொறிக்கப்பட்டுள்ளமை "புவி ஏழையும் பூத்தவள்" என்ற ஆழ்ந்த மெய்யியற் கருத்தை விளக்குகின்றது. இவை தவிர பிற்கால சைவசமயத்திலே காணப்படும் சிறப்பு அம்சங்களான புனித நீராடல் (தீர்த்தம்), அரசு போன்ற மரங்களை வழிபடல் (தலவிருட்சம்), காளைமாட்டை வழிபடல் (நந்தி), பாம்புவழிபாடு (நாகதம்பிரான்) என்பவை இச்சமவெளி மக்களின் சமய வாழ்க்கையில் இடம்பெற்றிருக்கின்றன. இவ்வாறு இந்நாகரீகத்தின் மதம் முற்றிலும் இந்தியச்சார்புடையதாக அமைவதுடன் மட்டுமல்லாது அது இன்றிருக்கின்ற இந்து மதத்தினோடும் ஒத்துப்போவது குறிப்பிடத்தக்கது.

அன்றைய சிந்துவெளி நாகரீகத்திற்கும் இன்றைய பாரதத்திற்கும் பரந்த கால இடைவெளி உள்ளது. இவ்விடைவெளியில் இக்காலங்களுக் கிடையிலான தொடர்பை பூரணமாக விளங்கிக் கொள்ள முடியாமலிருக்கின்றது. சிந்துவெளியிலே கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளில் ஒரு வகைச்சித்திர எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இது தமிழின் தொன்மையான வடிவமாயிருக்கலாம் என அறிஞர் பலர் கருதுகின்றனர். ஆயினும் இன்றுவரை அது அறுதியாக வாசிக்கப்பட வில்லை. அவ்வாறு வாசிக்கப்படுமேயானால் பல வியத்தகு செய்திகளை உலகு அறியக் கூடியதாயிருக்கும். ஆறாயிரம் அல்லது ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த சிந்துவெளி நாகரீகத்திற்கும் இன்றைய பாரதத்திற்கும் ஏதோவொரு உள்ளார்ந்த உறவுப்பாலம் அமைவது புலனாகின்றது. இவ்வாராய்ச்சிகள் மீண்டும் தொடரப்படுமானால் தொன்மையான கலாசார நேர்த்திகள், கைவினை மேன்மை, பழக்கவழக்கங்கள், அணிகலன்கள் முதலியன தெரியவரின் இத்தொடர்பை நாம் மேலும் உறுதிப்படுத்தி இந்நாகரீகம் மேற்காசியாவை எவ்வளவு தூரம் பாதித்தது என அறியலாம்.

சிந்துவெளி நாகரீகத்தின் தோற்றுவாய்கள் யார் என்பது இன்றும் ஓர் புரியாத புதிராகவே உள்ளது. ஆனால் நடைமுறை ஆதாரங்களைக் கொண்டு நோக்கின் அது ஓர் இந்திய நாகரிகமாகவே தென்படுகின்றது அதாவது அது இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்ட ஒன்றல்ல. இந்நாகரீகம் இருக்குவேதம் காட்டும் ஆரியர் நாகரீகத்தினின்று முற்றாக வேறுபட்டிருப்பினும் தென்னிந்தியாவிலுள்ள திராவிடருடைய நாகரீகத்துடன் பெரிதும் ஒத்துப்போவதால்

இந்நாகரீகத்தின் தோற்றுவாளர்களாக இவர்கள் இருந்திருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்நாகரீகம் எவ்வாறு அற்றுப்போனது என்பது தொடர்பில் ஒரு சாரார் திடீரென தோன்றிய பிரளயத்தினால் அழிந்தது எனவும் மறு சாரார் தட்பவெப்பநிலையில் ஏற்பட்ட மாறுதல்களால் அவ்விடம் பாலைவனமாயிருக்கலாம் எனக்கருது கின்றனர். தோண்டுதல்கள் காட்டுவது யாதெனில் ஒவ்வொரு மட்டமாய் மணற் படிவங்கள் இருப்பதால் தரை சிறிது மேடிட்டிருப்பதையும் இன்றைய சிந்துமாநிலம் தொன்மையான காலத்தில் மிக செழிப்பாக இருந்து இடைக்காலத்திலே பாலைவன மாயிருக்கின்றது எனவும் கருதப்படுகிறது.

சிந்துவெளி நாகரீகத்திற்கும் மற்றைய கால நாகரீகங்களுக்கும் ஒரு தொடர்ச்சி இருக்கிறதாயினும் நீண்ட இடைவெளிகளும் இல்லாமல் இல்லை. சிந்துவெளிக்குப் பின்னரான நாகரீகங்கள் விவசாயத்தை சார்ந்தமைந் தமைக்குக் காரணம் ஆரியர் குடியேற்றமே. இந்நாகரீகத்தைக் கடைப்பிடித்து வந்த திராவிடர்களுடன் குடியேறிய ஆரியர்கள் ஒன்றிணைந்தமையால் ஒரு நாகரிகப் பரிமாற்றம் உருவாயிற்று. இக்கலவையின் பிரதிபலிப்பே இவ்விரு குணாதிசியங்களும் கொண்ட ஓர் இந்திய இனமும் கலாச்சாரமும். பின்னர் குடியேறிய ஈரானியர், கிறிஸ்தவர், யூதர்கள், கிரேக்கர்கள், துருக்கியர் போன்ற பல்லினத்தவர்கள் இந்தியாவுடன் இரண்டறக் கலந்தனர். இதனையே டாட்வெல் (Dodwell) "இந்தியா பிறரை ஏற்கும் குணத்தில் கடலை நிகர்த்திருக்கின்றது" என்றார். இவ்வாறு இந்தியா பிறநாகரிகங்களையும் கலாச்சாரங்களையும் தன்னுள் கரைத்துக் கொண்டமை வியப்பிற்குரிய விடயம். அதேவேளை இச்சிறப்பினாலே தன்னுடைய திறத்தையும், துடிப்பினையும் இந்தியா பாதுகாத்துக் கொண்டது. இதனையே வின்சட் ஸ்மித் (Vincent Smith) "இஸ்லாமியத் துருக்கியர் இந்தியா வந்ததும், மற்ற இனத்தினரைப் போலவே இந்தியாவின் வியத்தகு ஒருங்கிணைத்தேற்கும் திறத்திற்கு இணங்கினார்கள். விரைவில் இந்துத்தனத்தை கொண்டார்கள்" என்றார்.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் "இந்துத்தனம்" "இந்துவாக்கப்படுதல்" போன்று வின்சென்ட் பாவித்த சொற்கள் இந்திய நாகரீகத்தின் விரிவான இயல்பில் பயன்படுத்தப்பட்டனவே ஒழிய வேறு இயல்பில் இல்லை. இன்று அச்சொற்கள் குறிப்பிட்ட மதத்தினைச்சார்ந்த விடயங்களையே குறிப்பிடு கின்றது. தொன்மையான இலக்கியங்களில் "இந்து" என்ற வார்த்தை பயன்படுத்தப்படவே யில்லை. முதன்முதலில் கி. பி. 8ம் நூற்றாண்டில் "தந்திரமுறைகள்" என்ற நூலிலே பயன்படுத்தப் பட்டதாக ஜவஹர்லால் நேரு கருதுகின்றார். இங்கு இச்சொல் மதச்சார்பற்ற முறையில் ஒரு இனத்தைக்குறிக்க பயன்படுத்தப்படுகின்றது. இச்சொல் மிகத்தொன்மையானது என்பதில் ஐயமில்லை. புராதனமான பாரசீகத்திலும் மத்திய மேற்காசிய நாடுகளிலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் இந்திய நாட்டைக்குறிக்கும் சொல்லாகப் பயன்பட்டது. இச்சொல் சிந்து என்ற சொல்லின் திரிபுதான். அதாவது சிந்து என்ற சொல்லில் இருந்துதான "இந்து", "இந்துஸ்தான்" என்பன தோன்றியிருத்தல் வேண்டும். அவ்வாறே "சிவன்" என்னும் பெயர் செந்நிறமுடையோன் எனப்பொருள்படுவதால் "சிவ" (சிவத்தல், சிவப்பு, சிவலை, செம்மை, செம்பு ஆகிய தமிழ் சொற்களின் அடி) என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்திருத்தல் கூடும் என்றும், இச்சொல் சிந்துவெளி மக்களின் மொழியில் உளதாதல் வேண்டும் என்றும் அறிஞர் கூறுகின்றனர்.

இச்சிறிய கட்டுரையில் சிந்துவெளி நாகரீகத்தின் தோற்றம், அதன் இடிபாடுகள், சிவநெறியுடனான தொடர்பு, இதன் சிறப்புகள், எவ்வாறு ஏனைய இனத்தவர்கள் இந்தியாவுடன் இணைந்து இந்நாகரீகம் பரிணாமம் அடைந்தது, இந்து என்ற சொல் தொடர்பிலான ஆய்வு என்பவற்றை நோக்கினோம். எனவே, இன்று வரை எமக்கு கிடைத்துள்ள சான்றுகளை வைத்து நோக்குமிடத்து, சிவ வழிபாடு-அதாவது முழுமுதற் கடவுளை அம்மையப்பராக வழிபடும் சிவநெறி-இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளியில் தோன்றி நிலவியது என்பது உறுதியாகின்றது. இதனால் சிந்துவெளிநாகரீகம் எமது சமய வழிபாடுகளுக்கு தொட்டிலாக விளங்கியது என்பத வெள்ளிடைமலையாகும்.

**உசாத்துணை:-** ஜவஹர்லால் நேருவின் "கண்டுணர்ந்த இந்தியா"

# அரங்கேறும் பதக்கங்கள்

# அமரர் செல்வி கலாநிதி கந்தையா ஞாபகார்த்த தங்கப் பதக்கம்

சட்டமாணவர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இடையில் ஓர் உறவு பாலத்தை ஏற்படுத்தும் முகமாகவும் பாடசாலை மாணவர்களுக்கும் சட்டக்கல்லூரி புகுமுகப் பரீட்சையினை அறிமுகப்படுத்தும் நிகழ்வாகவும் (யுறயசநநௌள °சழபசயஅஅந) பாடசாலை மாணவ மாணவியர்களுக்கிடையில் தேவாரப்பண்ணிசைப்போட்டியை 09-05-1999 அன்று தமிழ்ச்சங்கத்தில் நடாத்தியது. 1999ம் ஆண்டிலிருந்து சட்டமாணவர் இந்துமகாசபை முதன்முறையாக இப்பதக்கத்தினை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் அடைகின்றது.

இவ்விருதுகள் அமரர் செல்வி கலாநிதி கந்தையா அவர்களின் நினைவாக அவரது சகோதரர் சட்டத்தரணி க. ஜெயகிருஷ்ணனால் வழங்கப்படுகின்றது.

## அமரரைப்பற்றி.........

சைவ வேளாள மரபில் உதித்த மயில்வாகனம் கந்தையா சிங்கரத்தினம் தபோநிதியை மணந்து பெற்ற பிள்ளைகள் நால்வருள் முதலாவது மகளாக 11. 10. 46ல் கலாநிதி கந்தையா தோன்றினார். அவரது சகோதரர்கள் ஜெயக்கிருஷ்ணன் (சட்டத்தரணி), வாமதேவன் (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, திருகோணமலை) ஜெயரூபினி ஆகியோர் ஆவார்.

செல்வி. கலாநிதி தொண்டைமானாறு இந்துக்கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்றுப் பின் வடமராட்சி மகளிர் கல்லூரியிலும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

பின் வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற செல்வி. கலாநிதி, தந்தையாரின் விருப்பத்திற்கிணங்க சட்டக்கல்வியை ஏற்று இலங்கைச் சட்டக் கல்லூரியில் மாணவியாகச் சேர்ந்தார். சட்டக் கல்லூரி பரீட்சையில் சித்தி பெற்றபின் சட்டத்தரணியானார். சட்டத்தரணி பயிற்சியை, புகழ்பூத்த சட்டமேதையாகிய இராணி வழக்குரைஞர் இரங்கநாதனுடன் பெற்றார். அவரது திறமையால் கவரப்பட்ட திரு. இரங்கநாதன் பயிற்சி முடிந்தபின் அவரைத் தனது இளைய சட்டத்தரணியாக ஏற்றார். திரு. இரங்கநாதனுடன் உயர் நீதி மன்றத்தில் பல ஆண்டுகள் ஆஜராகித் தொழில் புரிந்த கலாநிதி அவரின் மறைவுக்குப் பிறகு தமது சகோதரருடன் பல நீதி மன்றங்களில் ஆஜராகி வாதாடி வந்தார். சிறிது காலம் நோயுற்றிருந்த அவர் 3.2.97ல் அமரத்துவம் அடைந்தார்.

# Late Miss. Kalanithi Kandiah Memorial Award - Winners

## THEVARA RECITAL COMPETITION

| | | | | |
|---|---|---|---|---|
| **Gold Medal** | - | Miss. K. Pavithra | - | C/Ramanathan Hindu Ladies College. |
| **Silver Medal** | - | Miss. S. Hemasutha | - | Vivehananda College |
| **Bronze Medal** | - | Miss. K. Nithya | - | C/Ramanathan Hindu Ladies College. |

**Consolation Prizes**

| | | | |
|---|---|---|---|
| - | Miss. K.Ianthareswary | - | Vivehananda College. |
| - | Mas. P. Kumares | - | Ratmalana Hindu College |
| - | Miss. P. Arjanaa | - | Wellawatta Hindu Ladies College. |
| - | Miss. S. Thakshayanee | - | C/St' Clares' College. |
| - | Miss. M. Saruhashini | - | Good Shepherd Govt. Tamil Girls' Vidyalayam |
| - | Miss. K. Nirjany | - | Dehiwela Tamil Vidyalayam |
| - | Mas. G. Jayakaran | - | C/Kanapathy Vidyalayam. |
| - | Mas. S. Arunan | - | Royal College, Colombo. |
| - | Miss. S. Sinthuja | - | C/Ramanathan Hindu Ladies College. |
| - | Mas. Y. Laharinjan | - | Royal College, Colombo. |

**Appreciation Prizes**

| | | | |
|---|---|---|---|
| - | Mas. S. Vithushanan | - | Royal College |
| - | Mas. P. Yathukulan | - | Ratmalana Hindu College |
| - | Miss. R. Jani | - | Wellawatte Hindu Ladies |
| - | Miss. S. Priyanthi | - | Dehiwela Tamil Vidyalayam |
| - | Mas. R. Dharshan | - | Thondar Tamil Vidyalayam |
| - | Miss. S. Usha | - | Thondar Tamil Vidyalayam |

# மகத்தான சாதனையாளர் விருது '99

# Award for Outstanding All Round Achievement '99

சட்டக்கல்லூரியில் மூன்று ஆண்டுகளும் கல்வி, விளையாட்டு, கலைத்திறன் போட்டிகளில் மற்றும் இதர துறைகளில் சாதனை நிலை நாட்டிய மாணவர் ஒருவருக்கு பயிலுனர் ஆண்டில் மகத்தான சாதனையாளர் விருது **அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் Q. C.** அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது மகன் சட்டத்தரணி திரு. குமார் பொன்னம்பலம் அவர்களினால் இவ்வாண்டில் இருந்து வழங்கப்படுகின்றது.

**அமரரைப்பற்றி.........**

யாழ்ப்பாணத்தில அல்வாயை பிறப்பிடமாக கொண்ட இவர் தனது மேற்படிப்பை இங்கிலாந்தின் தலை சிறந்த பல்கலைக்கழகமான கேம்பிரிட்ஜில் மேற்கொண்டார்.

சிறந்த பேச்சாளரான இவர் சர்வதேச ரீதியில் எல்லோராலும் போற்றப்பட்ட ஒரு குற்றவியல் வழக்குரைஞராக திகழ்ந்தார். அனைத்து உலக நாடுகளிலுள்ள நீதிமன்றங்களில் தோற்றும் தகுதி பெற்ற இருவரில் ஒருவராவார்.

இலங்கை நீதித்துறையில் முக்கியத்துவம் பெற்ற அரச சதி முயற்சி வழக்கில் வாதாடியதுடன் Trial - at - bar முறையை அறிமுகப்படுத்தியவருமாவார். சோல்பரி அரசியலமைப்பில் உறுப்புரை 29(2) புகுத்த காரணமானவர்களில் இவரும் ஒருவர். இவற்றுடன் நீதித்துறை, அமைச்சராகவும் பதவி வகித்து அரசியலிலும் தனது முத்திரையை பதித்துள்ளார். மேலும் பாராளுமன்றத்தில் தமிழருக்கு 50% உரிமை கோரும் முகமாக Queen Elizabeth ஐ நான்குமுறை தன் சொந்த செலவில் சந்தித்து குரல் எழுப்பியவராவார்.

இலங்கையில் பல தொழிற்சாலைகளை நிறுவியதன் மூலம் சட்டத்துறைக்கு மட்டுமல்லாது பொருளாதாரத்திற்கும் தனது பங்களிப்பை ஆற்றியுள்ளார். இத்துறைகளுடன் மருத்துவத்துறை தொடர்பாகவும் பரந்த அறிவு இவரிடம் காணப்பட்டது.

**மகத்தான சாதனையாளர் விருது '99 யை பெறுபவர்**
**விக்னேஸ்வரன் நிர்மலகுகன்**

**G.G. Ponnambalam Q.C. Memorial Award for**
**Outstanding All Round Achievement '99**
**Vigneswaran Nirmalakugan**

# ஆறுமுகநாவலர் புலமைப்பரிசு - 1999

எமது இந்து மகா சபை இவ்வருடம் முதல் இலங்கை சட்டக்கல்லூரி பரீட்சைகளில் முதலாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஆறுமுகநாவலர் புலமைப்பரிசில்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது. எதிர்வரும் பரீட்சைகளில் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளை பெற்று கல்வியில் சிறந்து விளங்க, இவ்வருடம் அறிமுகப்படுத்தப்படும் இப்புலமைப்பரிசு வழிவகுக்கும் என்பதை எமது சபை திடமாக நம்புகின்றது.

இவ்வருடம் இப்பரிசில்களை தட்டிக்கொள்ளும் மாணவர்களுக்கு எமது சபை இதயங்கனிந்த பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றது.

**இடைநிலைஆண்டு**

சு. நிலக்ஷன்,

செல்வி ர. றொஷானா

செல்வி அ. சந்திரவதனி

**இறுதியாண்டு**

வி. நிர்மலகுகன்,

ப. சந்திர மௌலீஸ்வரன்

அ. பிரேமலிங்கம்,

# அன்னை ஸ்ரீ சாரதாதேவி புலமைப்பரிசு '99

எமது இந்து மகா சபை இவ்வருடத்திலிருந்து வறுமையினாலும் குடும்பச் சூழலினாலும் படிப்பைத் தொடரமுடியாத திறமையான மாணவர் ஒருவருக்கு உதவி செய்யும் முகமாக அன்னை ஸ்ரீ சாரதாதேவி புலமைப்பரிசு அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

மேலும் இதற்கான ஏற்பாடுகளை செய்து இப்புலமைப்பரிசிற்கு நம்பிக்கைப் பொறுப்பாளராய் விளங்கும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணானந்தாஜி அவர்களுக்கு எமது நன்றிகள்

இதற்கு ஆதரவு வழங்கும் அனுசரணையாளருக்கு தனது நன்றிகளை இந்து மகா சபை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வருடம் ரொக்கத்தணை ஹாலி-எல இடத்தைச் சேர்ந்த செல்வி சு. ராதிகா என்ற மாணவிக்கு இப்புலமைப்பரிசு வழங்கப்படுகிறது.

> என் அருமைச் சகோதரர்களே! நாம் கூறும் அறிவுரையை ஏற்பீர்களாக! கல்லூரிப் படிப்பு முடிந்ததும் ஏழை மக்கள் தொண்டில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். விலைமதிப்பற்ற செல்வம், நிறைந்த பொக்கிஷமே கிடைத்தாலும் இந்தத் தொண்டினால் கிடைக்கும் ஆனந்தத்திற்கு ஈடு இணை இல்லை என்பேன்.
>
> **- சுவாமி விவேகானந்தர்**

# இந்து மகாசபையைப் பெருமையுடன் வழிநடத்திய பெருந்தகைகள்

பலப்பல இடர்பாடுகளுக்கிடையிலும் சுயநலம் பாராது அறுபதுகளிலிருந்து இற்றைவரை இந்துமகா சபையை இனிதே வழிநடத்தியவர்களின் பட்டியல்

| ஆண்டு | தலைவர் | செயலாளர் |
|---|---|---|
| 1963 - | ஏ. மயில்வாகனம் | ரீ. யோகநாதன் |
| 1964 - 65 | என். அருணாசலம் | எம். காசி விஸ்வநாதன் |
| 1965 - 66 | ஆர். ஸ்ரீநிவாசன் | பி. சிவலோகநாதன் |
| 1966 - 67 | சிவா பாலேந்திரன் | எஸ். என். ஜீவலோகநாதன் |
| 1967 - 68 | எம். திருநாவுக்கரசு | ஏ. வி. கே. நீலகண்டன் |
| 1968 - 69 | ஏ. வி. கே. நீலகண்டன் | ஏ. தம்பாப்பிள்ளை |
| 1969 - 70 | கே. வி. மகாதேவன் | எஸ். எம். சண்முகநாதன் |
| 1970 - 71 | கே. வெற்றிவேல் | கே. கணேசயோகன் |
| 1971 - 72 | திருமதி. எம். சின்னத்துரை | எஸ். பகீரதன் |
| 1972 - 73 | ஆர். மாசிலாமணி | செல்வி. வி. சிங்காரம் |
| 1973 - 74 | கே. ஜெயகிருஷ்ணன் | எஸ். திருஞானம் |
| 1974 - 75 | கே. ஜெயகிருஷ்ணன் | எஸ். திருஞானம் |
| 1975 - 76 | கே. ஜெயகிருஷ்ணன் | எஸ். திருஞானம் |
| 1976 - 77 | கே. நவரேந்திரன் | என். ரஞ்சிதகுமாரன் |
| 1977 - 78 | ஆர். ரீ. விக்கினராஜா | வி. ரீ. சித்தேஸ்வரன் |
| 1978 - 79 | ------------------------ | ------------------------ |
| 1979 - 80 | ஏ. தெய்வேந்திரன் | எம். விமலேந்திரன் |
| 1980 - 81 | எஸ். விக்னேஸ்வரன் | எஸ். செல்வமுருகானந்தம் |
| 1981 - 82 | எஸ். கணபதிப்பிள்ளை | செல்வி. எஸ். விஜயரட்னம் |
| 1982 - 83 | ------------------------ | ------------------------ |
| 1983 - 84 | ------------------------ | ------------------------ |
| 1984 | ------------------------ | ------------------------ |
| 1985 | எஸ். முத்துலிங்கம் | செல்வி. எஸ். செல்லையா |
| 1986 | ந. இரவிராஜ் | எஸ். இராஜரட்ணம் |
| 1987 | எஸ். துரைராஜா | செல்வி. எஸ். மாதவராஜா |
| 1988 | பாலக்குமார் | செல்வி. எஸ். பாலச்சந்திரன் |
| 1989 | என். சுரேஷ்குமார் | செல்வி. டீ. சம்பந்தபிள்ளை |
| 1990 | செல்வி. டீ. சம்பந்தபிள்ளை | ஏ. பிரேம்சங்கர் |
| 1991 | செல்வி. எல். காசிப்பிள்ளை | செல்வி. சி. சிவதாசன் |
| 1992 | சி. சிவதாசன் | பெ. ரவீந்திரன் |
| 1993 | வி. வி. தேவதாஸ் | எஸ். குணநாதன் |
| 1994 | செல்வி. வி. நடராஜா | சின்னத்துரை மயூரன் |
| 1995 | செல்வி. எஸ். துரைராஜா | கு. சாந்தகுமார் |
| 1996 | செல்வி. கீ. தாமோதரம்பிள்ளை | செ. பிருந்தாபன் |
| 1997 | செ. பிருந்தாபன் | மோகன் பாலேந்திரா |
| 1998 | ------------------------ | ப. ச. மௌலீஸ்வரன் |
| 1999 | அ. சந்திரவதனி | கு. செல்வேந்திரன். |

# Members of the Law Students' Hindu Maha Sabha '99

**PRELIMINARY YEAR**

N. Kandeepan

**INTERMEDIATE YEAR**

Miss. N. Mathivathani

Miss. S. Manju

Miss. N. Thirumahal

K. Selvendiran

B. Kathirkamanathan

S. Thavagunarajasingam

**FINAL YEAR**

Miss. A. Chandravathani

Mrs. K. Saradha

S. V. R. Vethanayagam

S. Nilakshan

V. Sasitharan

R. SasiKumar

**APPRENTICE YEAR**

Miss. K. Anandhi

Mrs. R. Devaki

Miss. V. Vijayaluxmi

Miss. V. Luxmi

K. Pirabakaran

W. Nirmalakugan

A. Premalingam

K. V. Sri Ganesharajan

P. C. Moulieswaran

S. Pulendiran

N. Thavaseelan

S. Selvaratnam

# இதழ் படைத்த இதழாசிரியர்கள்

| | | |
|---|---|---|
| 1967~68 | சைவநீதி | விமல் சொக்கநாதன் |
| 1968~69 | சைவநீதி | சு. சி. தவராஜா |
| 1970~71 | சைவநீதி | ச.லோகேஸ்வரன் |
| ** | | |
| 1995 | நக்கீரம் | ப. பா. கௌதமன் |
| 1997 | நக்கீரம் | ப. பா. கௌதமன் |
| 1999 | நக்கீரம் | செல்வி ந. மதிவதனி |

**பின்னோக்கி ......**

அரசாங்கங்களும் அரசும் எமக்குக் கண்கட்டு வித்தை காட்டியது போதும்! எங்கள் மதத்தை, மொழியை கலாச்சாரத்தை நாங்களே கட்டிப் பேணிப் பாதுகாத்திடுவோம் ....... "ஒரு தமிழனாகவோ ஓர் இந்துவாகவோ ஒரு சிறுபான்மை சமூகத்தவனாகவோ பிறப்பது ஒரு குற்றமல்ல"

**ஆசிரியர் தலையங்கம் சைவநீதி 1968/69**

நேர்மையும் நீதியும் நிலைத்திட, ஒற்றுமையும், நம்பிக்கையும் தழைத்திட சக்திமிகு சைவ சமுதாயத்தை ஏற்படுத்த, இளைஞராகிய நாம் அணி திரள்வோமாக. நம்மத்தியில் போட்டியும்., பொறாமையும் தவிர்க்கப்பட வேண்டும். அருளும், அறனும் தழைக்க சைவம் உலகெலாம் மணம் பரப்ப இளைஞர் சமுதாயம் வழி சமைக்க வேண்டும்.

**ஆசிரியர் தலையங்கம் சைவநீதி 1970/71**

சக்திப்பெட்டகங்களே! உன்னதமான இலட்சியங்களை உடையவர்களாவோம். மகத்தான காரியங்களை சாதிக்கப் பிறந்தவர்கள் நாம் என நம்புவோம். அவற்றை அடைய முடியும் என நிச்சயமாக எண்ணுவோம் ஏனெனில் எம் எண்ணங்களே நாமாகின்றோம். பிறர்க்கும் வழங்கக்கூடிய அளவிற்கு தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வோம். இனியவர்களே வாருங்கள் கடமைக்குத் தோள் கொடுப்போம்.

**ஆசிரியர் தலையங்கம் நக்கீரம் 1995**

பிறப்புரிமை சிறப்புரிமை என உரக்கக் குரல் கொடுக்கும் நாம் அவற்றிற்கு அடிப்படையான கடமைகளை மறந்ததேன்? எம் உரிமைக்கு ஊறுவிளையின் ஆவேசமாகப் பொங்கியெழும் நாம் இச்சமன்பாட்டின் மறுபக்கமான கடமைகளை கைகழுவி விட்டதேன்?

**ஆசிரியர் தலையங்கம் நக்கீரம் 1997**

# Prize Winners 1999



**Seated ( Left to Right) :** Mrs. K. Nagendra (Senior Treasurer), Hon. G. P. S. de Silva (Chief Justice) Miss. A. Chandravathani (President), Mr. H. J. F. Silva (Principal), K. Selvendiran (General Secretary)

**Standing (Left to Right) :** Miss. N. Mathivathani (Editor), S. Nilakshan, Miss K. Anandhi, Miss S. Manju

# இந்து மகா சபைப்போட்டி முடிவுகள் 1999

இவ்வாண்டு பல போட்டிகள் மன்ற அங்கத்தவரிடையே நடாத்தப்பட்டன. இப்போட்டியில் நடுவர்களாகக் கடமையாற்றியவர்களுக்கும் விருதுகளை அன்பளிப்புச் செய்பவர்களுக்கும் மன்றம் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றது.

---

**அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்**
**ஞாபகார்த்த சுழற் கேடயத்திற்கான விவாத அணி.**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வி. ஆனந்தி கனகரத்தினம் |
| உபதலைவர் | : | சுவர்ணராஜா நிலக்ஷன் |
| உறுப்பினர்கள் | : | சித்திரவேல் புலேந்திரன் |
| | | செல்வி. மதிவதனி நடராஜன் |
| மேலதிக உறுப்பினர் | : | |

---

**மாலினி சின்னத்துரை**
**ஞாபகார்த்த கேடயத் திற்கான எழுந்தமான பேச்சுப் போட்டி**

| | | |
|---|---|---|
| முதலாமிடம் | : | சுவர்ணராஜா நிலக்ஷன் |
| இரண்டாம் | : | செல்வி. ஆனந்தி கனகரத்தினம் |
| மூன்றாமிடம் | : | செல்வி. மதிவதனி நடராஜன் |

---

**எஸ். நடேசன் Q. C.**
**ஞாபகார்த்த கேடயத்திற்கான எழுந்தமான கட்டுரைப் போட்டி**

| | | |
|---|---|---|
| முதலாமிடம் | : | கருணாநிதி ஜெயநிதி |
| இரண்டாம் | : | செல்வி. மஞ்சு சிதம்பரம் |
| மூன்றாமிடம் | : | செல்வி. மதிவதனி நடராஜன் |

# சட்டக்கல்லூரி இந்து மகாசபை பொதுச் செயலாளரின் ஆண்டறிக்கை 1999

மனித சிந்தனைகளும் செயற்பாடுகளும் இயங்குவதற்கு எவ்வாறு தனிமனித உணர்வு காரணமாக இருக்கிறதோ அதே போன்று இந்த அகிலத்தை இயக்குவதற்கு காரணமாக இருக்கும். சிந்தனைக்கு அப்பாற்பட்ட மகாசக்தியை கடவுள் என்று போற்றுகின்றோம். இதனை உலகிற்கு முதலில் உணர்த்திய மதம் இந்துமதமே ஆகும். இத்தகைய இந்துமதமும் வழிபாடுகளும் ஈழத்தில் யுத்த நிலை காரணமாக பாதிப்படைந்துள்ளன. இந்து மக்களின் ஆத்ம பலத்தை சிதறடிக்க திட்டமிட்ட பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்து மக்களின் ஆத்மீக பலத்தை பெருக்க வேண்டியது இந்து சமயத்தை வழி நடாத்தும் மன்றங்கள் சபைகள் பெரியார்களின் கடமையாகும். அங்ஙனம் சட்டக்கல்லூரி இந்துமகாசபை சொற்ப உறுப்பினர்களையே கொண்டிருந்தாலும் தனது சக்திக்கு மேலாக செயற்பட்டுள்ளது. என்பதனை பெருமையுடன் கூறலாம்.

1998 கார்த்திகை திங்கள் 20ம் திகதி இந்துமகா சபையின் பொதுக் கூட்டம் பெரும் பொருளாளரும் எமது விரிவுரையாளருமான திருமதி க. நாகேந்திராவின் தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தின் முடிவில் எமது செயற்குழு ('99) சபையின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது.

நக்கீரம் இதழின் இரண்டாவது கணை 1997ல் வெளியிடப்பட்டது கடந்த வருடம் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளியிட முடியாது போனது. எமது ஆண்டு மலர் இவ்வருடம் செயற்குழுவின் தளரா முயற்சி காரணமாய் தனது மூன்றாவது கணையை "சர்வமத ஒற்றுமை" எனும் மையக்கருவில் இன்று எய்கிறது.

**எமது மகாசபையின் ஏனைய செயற்பாடுகளை நாம் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.**

1999 ஆண்டு செயற்குழுவின் கால்கோள் விழாவும் சட்டக்கல்லூரியின் வருடாந்த சிவராத்திரி விழாவும் ஒருங்கே மாசித்திங்கள் 14ம் திகதி அன்று கொட்டாஞ்சேனை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர ஆலயத்தில் நடைபெற்றது. சிறப்பு அதிதியாக பிரதம நீதியரசர் G. P. S. de Silva மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சி. வி. விக்கினேஸ்வரன், முன்னாள் பிரதம நீதியரசர் சு. சர்வானந்தா, கொழும்பு மாவட்ட நீதிபதி யோகசிகாமணி, அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன், சட்டக்கல்லூரி அதிபர் H. J. F. சில்வா அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், தமிழ் சங்கத்தலைவர் சு. சிவகுருநாதன், விரிவுரையாளர் திருமதி க. நாகேந்திரா, சட்டத்தரணிகள் மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைத்து சமூக சட்ட மாணவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டமை பெருமைப்படவேண்டிய விடயமாகும்.

இப்பூசைக்கு சகலவிதத்திலும் சிறப்பான ஏற்பாடுகளை செய்து தந்த திரு. னு.ஆ. சுவாமிநாதன் அவர்கட்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

அடுத்ததாக 18-3-1999 அன்று ஞ. நடேசன் ஞ. ஊ. ஞாபகார்த்த கேடய எழுந்தமான கட்டுரைப் போட்டி நடாத்தப்பட்டது இதற்கு நடுவராகப் பணியாற்றிய ஆசிரியை திருமதி பாலதயாளன் அவர்கட்கு எமது நன்றிகள் என்றென்றும் உரித்தாகட்டும்.

எமது 1999 இந்துமகாசபையின் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஞாபகார்த்த வெற்றி கேடயத்திற்கான விவாத அணி தேர்வுப்போட்டி 26-3-1999ல் நடைபெற்றது. இப்போட்டிக்கு நடுவர்களாக கடமையாற்றிய கொழும்பு மாவட்ட நீதிபதி யோகசிகாமணி, சிரேஸ்ட சட்டத்தரணி திரு. மு. ஜெயகிருஸ்ணன், செல்வி லிங்கேஸ்வரி காசிப்பிள்ளை ஆகியோருக்கு எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் ஊடான எமது செயற்பாட்டில் எமது சட்டமாணவர் இந்துமகாசபை ஒரு விவாத அரங்கு ஒன்றை 19-4-99 அன்று "சிறப்பான திருமண வாழ்க்கைக்கு இந்துசமய கலாச்சாரம் வற்புறுத்தவது மனப்பொருத்தமா ஜாதகப் பொருத்தமா" எனும் தலைப்பில் இலங்கை ரூபவாகினி, தமிழ் நிகழ்ச்சிகளுக்கு தொகுத்து வழங்கியது. இதற்கு நடுவராகப் பணியாற்றிய பம்பலப்பிட்டி இந்துக்கல்லாரி உபஅதிபர் திரு. சிவா கிருஸ்ணமூர்த்திக்கும் பங்கு கொண்ட மாணவர்களுக்கு எமது மன்றத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது சபை முதன் முறையாக சட்டத்தரணி கலாநிதி கந்தையா ஞாபகார்த்த தங்கப் பதக்கத்திற்கான தேவாரத் திருமுறைப் போட்டி ஒன்றினையும், சட்டத்தரணி திரு. மு. ஜெயகிருஸ்ணனின் அனுசரணையுடன் 16 வயதிற்குட்பட்ட கொழும்பு மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தியது. இது சட்டக் கல்லூரியுடன் மாணவர்களை இணைக்கும் உறவுப்பாலம் ஒன்றை ஏற்படுத்தவும் விழிப்புணர்வை (awareness) உருவாக்கும் முகமாகவும் கருத்தரங்குடன் கூடிய தேவார திருமுறைப் போட்டியை ஒழுங்கு செய்ததில் எமது மன்றம் பெருமையடைகிறது. இந்நிகழ்வு 9-5-99 அன்று கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம் பெற்றது. இப்போட்டிக்கு நடுவர்களாக கலந்து சிறப்பித்த சட்டத்தரணியும் புகழ்பெற்ற பண்ணிசைக் கலைஞர் திரு. ஆ. நாகரத்தினம், இலங்கை வானொலி புகழ் கலைஞர் திரு. S. மாணிக்கவேல், இந்தியா வானொலி புகழ் திரு. ஏ. இராமன் அவர்களுக்கும் மண்டபத்தை இலவசமாக தந்துதவிய தமிழ்ச்சங்க தலைவரும் எமது விரிவுரையாளருமான திரு. சு. சிவகுருநாதனுக்கும், விருதுகளை தந்துதவிய சட்டத்தரணி திரு. மு. ஜெயகிருஸ்ணன் அவர்களுக்கும் எமது இதயத்தால் நன்றிகளை இயம்புகிறோம்.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளின் பிரதிநிதியாக செயற்படுவதால் எமது மக்களின் பிரதிநிதியாய் விளங்கும் ஜனாதிபதி சட்டத்தரணி திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் பெறுமதிமிக்க ஜீ. ஜீ. பொன்னம்பலம் Q.C. மகத்தான சாதனையாளர் விருது ஒன்றினை முதன்முறையாய் எமது சபைக்கு வழங்க முன்வந்திருக்கிறார். இது இவ்வருடம் முதல் அமுலுக்கு வருகிறது. இவ்விருதினை வழங்கிய திரு. குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு எமது நன்றிகளை சிரம் தாழ்த்தி தெரிவித்துக் கொள்கிறோம்.

சட்டக்கல்லூரி இந்து மகா சபை இந்த ஆண்டு பொறுப்பேற்றதில் இருந்து கடைசிவரை எமக்கு பக்கபலமாக நின்று ஆலோசனைகள் வழங்கிய எமது பெரும் பொருளாளரும், விரிவுரையாளருமான திருமதி. கமலா நாகேந்திரா அவர்களுக்கு எமது விசேட நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

எங்கள் சபை இம்முறை ஒரு வறிய மாணவிக்கு க.பொ.த. உயர்தரம் பயிலுவதற்கான 15000/= பெறுமதியான புலமைப் பரிசில் ஒன்றை வழங்குவதில் பூரிப்படைகிறது. இது அன்னை ஸ்ரீ சாரதாதேவி புலமைப் பரிசில் எனும் பெயரில் வழங்கப்படுகிறது இதற்கான சகல உதவிகளையும் ஏற்பாடுகளையும் செய்து தந்த இராமகிருஷ்ண சுவாமி ஆத்மகணானந்தா அவர்களுக்கும் அனுசரணை வழங்கியவருக்கும் எமது பணிவான நன்றிகள்.

இவற்றுடன் வன்னியில் இடம் பெயர்ந்து அகதி முகாமில் வாழும் மக்களுக்கு 40,000/= பெறுமதியான நன்கொடை ஒன்றை இந்துமகாசபை வழங்குவதில் சந்தோசமடைகிறது. இப்பணியை செய்ய முன் நின்று வழிநடத்திய அனைத்து தயாள உள்ளங்களுக்கும் இவ்விடத்தில் நன்றி கூறுகிறோம்.

கதிரேசன் மண்டபத்தை எமக்கு அளித்து உதவிய அனுசரணையாளருக்கு சபையின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

நடனநிகழ்ச்சியினை ஒழுங்கு செய்து பல ஆலோசனைகளையும் வழங்கிய திருமதி வினோதன் அவர்களுக்கு எமது நன்றிகள். எமது கலைவிழாவில் சிற்றுண்டிகளை தந்துதவிய சாந்தி விஹார் உரிமையாளர் திருமதி சாந்தி பாலசுப்ரமணியத்திற்கு எமது மனப்பூர்வமான நன்றிகள்.

இதை விட எமது சபையின் சகல நிகழ்வுகளிலும் எமது தோள்களுடன் தோள் கொடுத்த கடந்த ஆண்டின் உபதலைவருக்கு எமது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக, எமது கலைவிழாவையும், மலர் வெளியீட்டையும் சிறப்புற நடாத்த தமது பங்களிப்பை செய்த சட்டத்தரணிகள், விளம்பர நண்பர்கள், விரிவுரையாளர்கள், பிரமுகர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், சட்டக்கல்லூரி அதிபர், மாணவர்களுக்கு எமது மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தவிரவும் எங்களின் செயற்பாடுகளை பத்திரிகைகளில் பிரசுரித்த பத்திரிகையாளர்களுக்கும், ஒலிபரப்பு செய்து உதவிய வானொலி நிலையங்களுக்கும் எமது நன்றிகள்

இந்த வருடம் நக்கீரம் சமயம் சார்ந்த கட்டுரைகளை மட்டும் உள்ளடக்காது எமது மாணவர்களுக்கும் மக்களுக்கும் பல வகையிலும் உதவக் கூடிய சட்ட அரசியல் கட்டுரைகளை தாங்கிப் புதிய பரிமாணத்துடன் வெளிவருகிறது. மேலும் வளர்ச்சியடைந்து அடுத்து வரும் ஆண்டுகளில் மேலும் சிறப்புறவும் அடுத்த ஆண்டில் பணியினை துடிப்புடன் பொறுப்பேற்க இருக்கும் சகமாணவர்களுக்கும் எமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக எமது செயற்குழுவின் இவ்வருட செயற்பாடுகள் சிறப்புற நடைபெற வழிசமைத்த எல்லாம் வல்ல இறைவனை இரு கரங்கூப்பி வணங்குகின்றோம்.

*With Best Compliments From*

**Lanka Vinyal Ltd.**
**Vinyl Products (Pvt) Ltd**

**Regid Plastic Industries (Pvt) Ltd.**

***Manufacture's & Exporters of PVC Leather Cloth,***
***PVC Sheeting, Film Carpets and Rigid Sheets Etc.***

*Office 320180, 435006 Fax 439656*
*Factory 83, Maithree Mawatha, Ekala, Ja Ela. Tele : 236829, 232393*
*208, Sea Street, Colomb 11. Telex : 22871 VINYl CE*

*With Best Compliments From*

**Lanka Lether Products**
**(Pvt) Limited**

*P. O. Box 1846, 196, 246, Sea Street, Colombo 11, Sri Lanka.*
*Tele : 433762, 074-714098 (Direct) Fax : 94-1-452228 Telex : 22871 Vinyl CE,*
*E-mail: vinyl@sri.lanka.net*

*With Best Compliments From*

**Champion Traders**

***General Hardware Merchants & Importers***

*307, Old Moor Street, Colombo 12.*
*Phone : 421893*

*With Best Compliments From*

**Omega Traders**

*62A, Old Moor Street, Colombo 12.*
*Phone : 341747, 432350*

*With Best Compliments From*

A. H. Gold House

***Dealers in Sovereign***
***Gold Jewellery Clocks, Wrist Watches &***
***Eversilver Ware***

*25, Perakumba Street,*
*Kurunegala.*
*Tel: 037-23521*

*With Best Compliments From*

**KANDY**
**Electronecs,**
**Hardware, Electrical**

*No. 4, 6, 6A, 27, Godapola Road, Matale.*
*Tel: 066-22106, 066-32692*
*Res. 066-23273*
*Cell. 077-801018*
*Fax. 08-32342*
*Pager. 08-34837*
*Pager. 08-58177*

*With Best Compliments From*

# *Jayanthi Textile*

**Importers, Wholesale & Commission Agents**

*134, Keyzer Street, Colombo 11, Sri Lanka.*
*Phone : 327937, 434566*

*With Best Compliments From*

# Salcalink Communications

*Branches: Galewela. 066-9441, 9429, 9472*
*Alawathugoda - 066-3547*

*20/B, Nain Street, Matale.*
*Tel: 066-4180, 41811, Fax: 0094 66 3777*
*Email thowseen@sre.Lanka.net*

*With Best Compliments From*

# Achala Home Needs

**Dealers in Grocery & Provissions**

*No. 2E, Gedapola Road, Matale.*
*Tel: 066-32455*

*With Best Compliments From*

# *Rasi Silks*

*No. 6 & 10, 53rd Lane (off HAMPDEN LANDE)*
*Wellawatte, Colombo 6.*
*Phone : 500973*

With Best Compliments From

# Maiyura Textiles

**Importers & Wholesale Dealers in Textiles**

*149, Keyzer Street, Colombo 11.*
*Phone : 324060*

With Best Compliments From

# Modern Hardware Centre

**Dealers and Stockist of Iron and Steel**

*43, Abdul Jabbar Mawatha, Colombo 12, Sri Lanka.*
*Phone : 435468, 328614, 436537 Fax : 0094 1 431890*

*With Best Compliments From*

# Thurka Traders

**General Merchants**


*454, Main Street, Matale*
*Tel: 066-30336*

*With Best Compliments From*

# New Kalayani Stores

**Dealers in Groceries**

*528, Main Street, Matale.*
*Tel: 066-30157*



*With Best Compliments From*

# Micom

*College of Business & Computer Studies*

## Computer Courses

- Diploma in Computer Studies
- MicroSoft Office 97
- Visual Basic 6.0
- Visual C++ 6.0
- Fox Pro 2.6
- Ms Publisher 98
- Money 98
- Corel Draw 7
- Page Maker 6.5
- turbo Pascal 7
- Web Designing
- Accpace
- Oracle
- Computer HardWare

**Micom International**

College of Business & Computer Studies
242 3/1 Galle Road, Colombo 6.
Tel : 588264

*With Best Compliments From*

# Aizen Institute of Information Technology

*(Sangam Building)*
*No. 07, 57th Lane*
*(off Rudra Mawatha)*
*Wellawatte.*
*Phone : 556381*

*With Best Compliments From*

**Asian Hardware**

*35, 3rd Cross Street, Colombo 11.*
*Tel: 435884, 454339*

*With Best Compliments From*

# Overseas Cargo Consultants

***International Freight Forwarders Custom House Agent***

*96 2/1, Consistory Bldg Front Street, Colombo 11.*
*Tel/Fax : 423679, 335564, 075-342136-7*

*With Best Compliments From*

**Computer Microsoft 2000 Applications**

**Microsoft Officed**
**2000**

**Course Modules**

MS Access 2000
MS Excel 2000
MS Out Look 2000
MS Power Point 2000
MS Photo Draw 2000
MS Publisher 2000

**C++ Rrogramming**
**MS Visual C++ Programming**
**Visual Basic V6.0**
**Visual Foxpro Programming**

**DCS**

**College of Computer Technology**

No. 399 1-3 Galle Road, Colombo 04.
(Opp. Union Bank) Tel: 589899

Registrated
With Tertiary &
Vocational
Education Commission of
Sri Lanka

Recomended
Training Centre for
SLCDL

Member of
ACTOS

Medium : Tamil/Enghish/Sinhala

*With Best Compliments From*

# Green Global Services

**Customs Clearing & Forwarding Agents imports & Exports**

*237, 4th Floor, Main Street,*
*Colombo 11, Sri Landa*
*Tel: 434716 Fax: 342886*

*With Best Compliments From*

**Sangam Academy**

**Computer Training Centre**
**(Registered with the Engineering Council**
**(u.k.) & Pitman Institute (u.k.)**

*Rudra Mawatha, Wellawatte.*
*Phone : 556381*

*With Best Compliments From*

**S. V. M. (Pvt) Ltd.**

**Distributors for**
**New Zealand Milk Products**
**Tmol Lanka (Pvt) Ltd**
**I.C.L. Marketing (Pvt) Ltd.**

*122, Dam Street, Colombo 12, Sri Lanka.*
*Phone : 342388, 449512, 334151*
*Fax : 342388*

*With Best Compliments From*

**Sangam**

**LAW ENTRNACE CLASSES**

*7, 57th Lane (Off Rudra Mawatha)*
*Colombo 6.*

*With Best Compliments From*

Nithyakalyani Jewellery

**Manufacturers & Exporters of**
**Gems & Jewellery**

*230, Galle Road, Colombo 06, Sri Lanka.*
*Tel : 583392, 585427 Fax : 94-1-585944.*
*E-mail : nithkal@slt.lk*

*With Best Compliments From*

**Genuine Parts**

# Standard Automobiles

***Importers and Dealers in Motor Spares***
***Speacialist in V. W. Audi Peugeot & Toyota***

*331, Sri Sangaraja Mawatha, Colombo 10.*
*Phone : 449018*

*With Best Compliments From*

*For Geuine 22 Carer Jewellery Latest Designs.*

# *New Lalitha Gold House*

***KITTANGI***
*42, Colombo Road, Galle.*
*Tel: 09-41940*

*With Best Compliments From*

# Hill Top Tea Trader

**Wholesale Dealer & Exporter**

# Sky Lark Builder

**Building Contractor, Property Devolopper**
**Building Material Supplier, Architect & Engineer.**

*No. 100/55, Nanning Market, Olcott Mawatha, Colombo 12.*
*Tel : 725645,*
*Mobile : 078-41919, 072-667137*

*With Best Compliments From*

Serendib

**Clearing & Forwarding Agency**

*67, Jayantha Weerasekera Mawatha, Colombo 10.*

*With Best Compliments From*

# Design Textile Centre

**Importers & Wholesale Dealers in Textiles**

*153, Keyzer Street, Colombo 11, Sri Lanka.*
*Phone : 323621, 325738 Fax : 430604*
*Tlx : 22094 DEETEX CE Cable : Design Tex*

*With Best Compliments From*

**Tradenet International Excel Lanka (Pvt) Ltd.**

*67, Jayantha Weerasekera Mawatha, Colombo 10.*

*With Best Compliments From*

# Cambridge Traders

*22E, Quarry Road, Colombo 12, Sri Lanka.*
*Phone : 432187, 422206, 437785 (Dir)*
*Telex : 21583 TELECO Attn : Cambridge Fax : 423153*

# நன்றி! நன்றி!! நன்றி!!!

நக்கீரம் மலர் உங்கள் கைகளில் பூத்துக்குலுங்க உரமூட்டி தண்ணீரிட்டு வளர்த்தவர் பலர். அவர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது இந்து மகாசபையின் வளர்ச்சியிலும் அதன் நடவடிக்கைகளிலும் அக்கறையுடன் செயற்படும் மன்ற

- ☆ பெரும் பொருளாளர் திருமதி. க. நாகேந்திரா அவர்களுக்கும்.
- ☆ மாணவர் ஆக்கங்களை தரம்பிரித்து தந்த திரு. மகாலிங்கசிவம் அவர்களுக்கும்.
- ☆ தரமிகு ஆக்கங்களால் மலரின் அழகை மெருகேற்றிய நீதிபதிகள், பேராசிரியர்கள், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள், சமயப்பெருந்தகைகள் அனைவருக்கும்.
- ☆ தமது பெருமைமிகு கருத்துக்களை பேட்டியில் வழங்கிய கம்பவாரிதி இ. ஜெயராஜ் மற்றும் Dr. ராதிகா குமாரசுவாமி அவர்களுக்கும்.
- ☆ உசாத்துணைக்கு பெறுமதிமிகு நூல்கள் தந்துதவிய இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணானந்த அவர்களுக்கும்.
- ☆ ஆக்கங்களை மனமுவந்தளித்த மாணவர்களுக்கும்.
- ☆ நக்கீரம் மலர் வெளிவரவும் எமது கலை விழா சிறப்புடன் நிகழவும் நிதியுதவி வழங்கிய சட்டத்தரணிகளுக்கும்.
- ☆ மனங்கோணாது எமக்கு வாரி வழங்கிய நலன்விரும்பிகள், விளம்பரதாரர்களுக்கும்.
- ☆ இம்மலர் சிறப்புடன் வெளிவர முகம் கோணாது எங்களோடு ஒத்துழைத்த அச்சக நிறுவகத்தாருக்கும்
- ☆ எமது கலைவிழாவையும் மலர் வெளியீட்டையும் விளம்பரப்படுத்திய வெகுஜனதொடர்பு சாதனத்தைச் சார்ந்தவர்களுக்கும்.
- ☆ எம்முடன் கைகோர்த்து செயற்பட்ட சிரேஷ்ட, கனிஷ்ட மாணவ மாணவியர் அனைவருக்கும்.
- ☆ உதவி வழங்கிய ஆனால் குறிப்பிட மறந்த அனைவருக்கும்

**நன்றி! நன்றி!! நன்றி!!!**

**ஆக்கியோரே தத்தம் ஆக்கங்களுக்கு பொறுப்பாவார்**

*S. Nadesan's*

# History of the Up-Country Tamil People in Sri Lanka


Mr. Nadesan's book on history of the exploitation of these workers and their battles for economic and political rights is the first study of its kind and is a pioneer contribution to a people's history of Sri Lanka.



This valuable book should be read by all those interested in the recent history of our country. The plantation people's militant and courageous actions to achieve a better life, has been well documented by Mr. Nadesan and will be an important source book for both the general reader and the specialist. The book should be translated into Tamil and Sinhala and also issued in popular form so that the Tamil and Sinhala and also issued in popular form so that the Tamil and Sinhala people be made aware of the contribution of the plantation workers to the fight for economic justice and social change in Sri Lanka.

— *Dr. Kumari Jayawardena*


***Publishers :***
Nandalala,
131 1/1, Dimbulla Road, Hatton, Sri Lanka.
Phone : 0512-2316


Visit for better
Jewellery
New
Rathna Mahal
JEWELLERS (PVT) LTD
97, Sea Street, Colombo 11.
431357